2871

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XI NO: 4

July 4th 1985

V211.31 N85
N85.11.4
136413

903/86

வெளியீடு 21-3-1986 Issued 21—3—1986

2871

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜூலை 4, 1985 - தொகுதி XI எண் 4
Thursday, the 4th July 1985 - Volume XI No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly, Secretariat, Fort St. George.**
**Madras - 600009**

விலை: ரூ. 3-00 காசுகள்] [Price Rs. 3-00 paise

136413
சென்னை-600 008.

# உள்ளடக்கம்

## 4 - 7 - 1985

பக்கங்கள்

1. வினாக்கள் — விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் .. 505—536

2. தகவல் கோரல் :

(அ) அவை நடந்து கொண்டிருக்கும்போது அவையில் அறிவிக்காது புது மின்சாரத் திட்டங்கள் குறித்த தகவல்களை பத்திரிகையாளர்களுக்கு துறை அதிகாரி அறிவித்திருப்பது குறித்து. 536—538

(ஆ) மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுதல். 538

(இ) காங்கிரஸ் நூற்றாண்டு விழாவையொட்டி கதர்த் துணிக்கு தள்ளுபடி அளித்தல் 538

3. ஒத்திவைப்புத் தீர்மானம் :

புகளூர் அரசு காகிதத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தும் நட்டமும். 539—541

4. அறிக்கை அளித்தல் :

112—வது விதியின்கீழ் தொழில் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை. 541—542

5. கவன ஈர்ப்பு :

(அ) கோவையில் மின் கட்டண வரி உயர்வு காரணமாக சிறிய தொழிற்சாலைகள் பாதிப்பு. 542—545

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் அதிகமான ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டியதன் அவசியம். 545—547

128—198—1

பக்கங்கள்

6. வரவு–செலவுத் திட்டம், 1985–86, வாக்கெடுப்பு:

(அ) கோரிக்கை எண். 48–ஊரகத் தொழில்கள். 547—649

(ஆ) கோரிக்கை எண். 57–ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் 547—549, 614—648

திரு. ந. சிவஞானம் 549—556

*திரு. கே. உச்சி 556—560

திரு. ரா. சின்னசாமி 560—566

*திரு. மு. மாரிமுத்து 566—570

*திரு. த. பழனி 570—576

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 576—585

திரு. க. நரசிம்மபல்லவன் 585—588

*திரு. கு. சுப்பராயன் 588—598

*திரு. எம். அண்ணாநாதன் 598—606

திரு. எஸ். என். இராமசாமி 606—609

*திரு. டி. வெங்கடரெட்டி 609—614

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, ஜூலை 4, வியாழக்கிழமை.

ஆனி 20, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு—2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
தன்குடையான் கட்டே தெளிவு ".

அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாக உடையவனைத் தெளியலாம்.

## 1. வினாக்கள்—விடைகள் :

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### காடம்பாறை மின்நிலையப் பணியாளர்கள்.

494 (*வினா எண் 1075)—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில் அங்குள்ள மலைஜாதி மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.
(ஆ) எழவில்லை.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலுள்ள காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில், அங்குள்ள மலைஜாதி மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கனவே வாக்குறுதி அளித்திருக்கிறார். இப்பொழுது காடம்பாறை நீரேற்று மின் நிலைய வேலைகள் முடிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன, வீடுகள் காலியாக இருக்கின்றன.

ஆகவே, அந்த வீடுகள் அந்த மலைஜாதி மக்களுக்கு வழங்கப்படுவதற்கும் வேலை வாய்ப்பை அங்குள்ள மலைஜாதி மக்களுக்கு வழங்குவதற்கும் அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, காடம்பாறை நீரேற்று மின்நிலையத்தில் மின்சாரத் துறையின் இயந்திரங்களிலும் மற்றவிதமான காரியங்களிலும் வேலை செய்வதற்கு ஓரளவுக்குப் பயிற்சி உள்ள தொழிலாளர்கள் தேவை. ஆனால், மலை ஜாதி மக்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தக் கடுமையான பணிகளில் முன்னுரிமை கொடுத்து, வேலையில் அமர்த்த சாத்தியப்பாடு உள்ளதா? அதைச் செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு ஏற்படுகிற பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

## மேல் கோதையாறு மின் திட்டம்.

495 (*வினா எண் 1718)—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேல் கோதையாறு மின் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மேல்கோதையாற்றில் நீர் மின் திட்டம் அமைக்கும் கருத்துரு எதுவும் இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறு மேல் தங்கலில் உருவாக்கப்பட்டிருக்கும் பவர் ஹவுசிலிருந்து கீழ்த் தங்கலில் உள்ள பவர்ஹவுசுக்கு வர வேண்டிய தண்ணீர் பைப் லைனில் லீக்கேஜ் ஏற்பட்டு, அந்தத் தண்ணீர் சரியான முறையில் வரவில்லை என்பது அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா; அப்படியானால் அதைச் சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, என்னுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்னது வரவில்லை. சின்னக் குட்டியாறு அணைத் திட்டத்திலேயிருந்து



தண்ணீரை பம்ப் செய்து அனுப்புகின்ற இரண்டு பம்பில் ஒன்று ரிப்பேர் ஆகியிருந்தது. அதனால் சில சங்கடங்கள் ஏற்பட்டன. இருந்தாலும் தண்ணீர் வருவதில் எந்தக் குறையும் இல்லையென்ற தகவல் என்னிடத்தில் தரப்பட்டிருக்கிறது.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலுள்ள நீராறு மின் திட்டம் என்று சொல்லக்கூடிய திட்டத்தையும் நல்லாறு மின் திட்டம் என்று சொல்லக்கூடிய திட்டத்தையும் சுமார் ரூ. 200 கோடியிலே நிறைவேற்றுவதாக நான் பத்திரிகை வாயிலாக அறிந்தேன். அப்படிப்பட்ட திட்டங்களை உடனே அமுல் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்திலே விவரம் இல்லை.

## கல்பாக்கம் நிலையத்திலிருந்து வரும் மின்சக்தி.

496—(*வினா எண் 1919)—திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கம் அணுமின் நிலையம் மூலம் கிடைக்கும் மின்சாரம் முழுமையும் தமிழகத்திற்கே கிடைக்கவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின்நிலைய இரு பிரிவுகளில் உற்பத்தியாகும் முழு மின்சாரத்தையும் தமிழகத்திற்கே வழங்கிட வேண்டுமென்று இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. ஆனால் மத்திய அரசு, கல்பாக்கம் அணுமின் நிலையம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தென் மாநிலங்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டுமென சுட்டிக்காட்டி மேற்கூறிய அணு மின் நிலைய முதல் பிரிவின் முழு மின்சாரத்தையும் இரண்டாவது பிரிவின் 50% மின்சாரத்தையும் தமிழகத்திற்கு கொடுக்க முடிவு செய்துள்ளது.

திரு. ம. ஆபிரகாம் : தலைவரவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையம் மூலம் கிடைக்கிற மின்சாரம் முழுவதையும் தமிழ் நாட்டிற்கு கொடுக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்ற கேள்வி கேட்டிருப்பதாகச் சொல்லியிருக்

கிறார்கள், மகிழ்ச்சி. ஆனால் நம்முடைய உரிமையை வற்புறுத்தி மத்திய அரசிடம் மீண்டும் மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ர் மானிக் உப்பட்டது என்று சொன்னேன்; கேட்டிருப்பதாகச் சொல்லவில்லைல உண்மையைச் சொல்லப்போனால் கல்பாக்கம் அணுமின் நிலையத்கல் இரண்டு பிரிவுகளிலிருந்தும் உற்பத்தியாகக்கூடியன்மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டிற்கே கொடுக்கப்படவேண்டுமென்று வெகு நாளாகக் கேட்டார்கள். 1975 ஆம் ஆண்டு அது முடியாது, தென்னகம் முழுமைக்கும் சொந்தம் என்று மத்திய அரசிலிருந்து பதில் வந்து விட்டது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பிரதமருக்கு எழுதி, இப்போது வந்திருப்பது முதல் யூனிட்டில் உற்பத்தியாகக்கூடிய மின்சாரம் முழுவதும், இரண்டாவது யூனிட்டில் உற்பத்தியாவதில் பாதி நமக்குக் கிடைக்கும். இரண்டாவது யூனிட்டிலுள்ள பாதியை மட்டும் மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்தால் போதும் என்ற வகையில் மாற்று உத்தரவை புரட்சித் தலைவர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, மாநிலப் பகுதிகளில் அமைக்கப்படும் மத்திய அரசின் பொறுப்பிலுள்ள அனல், அணு மின் நிலையங்களிலிருந்து எந்த அடிப்படையில் மாநிலங்களுக்கு மின்சாரத்தைப் பிரித்துத் தருகிறார்கள்? மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறாத, பற்றாக்குறை இருக்கிற மாநிலங்களுக்கு அந்த மாநில எல்லைக்குள் இருக்கிற மின் வசதியைப் பயன்படுத்திக்கொள்ள மத்திய அரசை தமிழக அரசு இணங்க வைக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகிலிருக்கிற பெரும் பேரனல் மின் நிலையங்களை மத்திய அரசு அமைக்கிறது. உதாரணமாக, ஆந்திரத்தில் இராமகுண்டத்தில் அமைத்திருக்கிறார்கள். தென் பிராந்தியங்களான 4 மாநிலங்களுக்கு இதிலிருந்து மின்சாரம் என்று பிரித்துத் தரப்படுகிறது. அப்படித் தரும்போது ஏற்செனவே கடந்த ஆண்டுகளில் எவ்வளவு மின்சாரத்தை ஒவ்வொரு மாநிலமும் பயன்படுத்தியது என்ற கணக்கையும்; மத்திய நிதியை காட்கில் ஃபார்முலாப்படி எப்படித் தருகிறதோ அந்த அடிப்படையிலேயும் பிரித்துக் கொடுக்கிறார்கள். இந்த இரண்டு வகைகளிலும் தமிழகம் பாதிக்கப்படுகிறது. நாம் இந்திய அரசைக் கேட்டுவருவது அந்தப் பகுதியிலே உள்ள மாநிலங்களில் உண்மையான பற்றாக்குறையை (ஜெனுயின் டெஃபிசிட்) வைத்து பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று. இருந்தாலும் இந்தியா முழுவதற்கும் இந்தக் கொள்கை அமுல்படுத்தப்பட்டிருப்பதால் நாம் கேட்டதை ஏற்றுக் கொள்ள இயலாது என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.



திரு. கு. சுப்பராயன் : தலைவரவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் வருகிற 10-ந் தேதி முதல் தங்களுடைய நியாயமான, ஒப்புக் கொள்ளக்கூடிய கோரிக்கைகளை அரசு புறக்கணித்து வருவதைக் கண்டிக்கின்ற வகையில் வேலை நிறுத்தம் செய்யவிருக்கிறார்களே, அதை தவிர்க்கின்ற முறையில் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அங்கீகரிக்க, உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, என்னுடைய இலாகா இன்னும் என்னிடம்தான் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சரிடம் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும்.

திரு. கே. குப்புசாமி : தலைவரவர்களே, எதிர்காலத்தில் அமைய இருக்கும் அணு மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்குப் பெறுவதற்கான வழி வகைகளை தமிழக அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒன்றுக்கு முக்காலாக இப்போது கொடுத்திருக்கிறார்கள். அதுவே போதும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் முதல் பகுதி எவ்வளவு உற்பத்தி செய்கிறது? இரண்டாவது பகுதியில்(யூனிட்) எவ்வளவு உற்பத்தியாகும் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, முதல் யூனிட் 235 மெகாவாட் உற்பத்தி செய்யும். அது இப்போது உற்பத்தியைத் தொடங்கி நடைமுறையில் இருக்கிறது. இரண்டாவது யூனிட் 235 மெகாவாட் உற்பத்தி செய்யும். ஆனால் இன்னும் உற்பத்தியைத் தொடங்கவில்லை. இந்த ஆண்டு தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. த. பழனி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்குத் தேவையான மின்சாரம் எப்போது கிடைக்கும்? மின்சாரத்தில் நிரந்தரமான தன்னிறைவு பெறுவதற்கு தமிழக அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின் தேவை பசியைப் போன்றது. பசி தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். அதைப்போன்று மின் தேவையும் வளர்ந்து கொண்டேதான் இருக்கும்.

(முற்பகல் 9–10)

**திரு. மா. மணிமாறன் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் விநியோகத்தில் 1975 ஆம் ஆண்டு வரையில் இடர்ப்பாடு என்று சொன்னார்கள். கல்பாக்கத்தில் அந்த நிலையத்தைத் தொடங்கும் வரையில் இடர்ப்பாடுதான் இருந்தது. எதிர்பாராத வகையில் தந்துவிட்டார்கள். அமைச்சரவர்களும் நன்றாக அறிவார்கள். அதைப்பற்றி அங்கிருந்து வழங்கப்படும் மின்சாரத்தை எந்த விலைக்குத் தருகிறார்கள்? மற்ற அனல் மின் நிலையங்களிலிருந்து வழங் கப்படும் விலைக்குச் சமமாக இருக்கிறதா அல்லது கூடுதல் விலைக்குக் கொடுக்கிறதா? அதிகமான விலை என்றால் அது பற்றி அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, யூனிட் 39 காசு என்ற வீதத்தில் பெறுகிறோம். மற்ற அனல் மின் நிலையங்களில் கொடுப்பதைவிட இது குறைவுதான். இதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டாமல் இருப்பதே நல்லது.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகின்றபொழுது கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத் தைப் பொறுத்தவரையில் முதல் பிரிவின் முழு மின்சாரத்தையும், இரண்டாவது பிரிவின் பாதியையும், மீதியுள்ள பாதியை மற்ற மாநிலங்களுக்கும் தர வேண்டுமென்று மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறுகிறார்கள். அதைப்போல வேறு மாநிலங் களில் உற்பத்தியாகும் மின்சாரம் பங்கீட்டு முறையிலே தமிழகத் திற்குக் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்திய அரசு நிறுவியுள்ள இராமகுண்டம் பெரும்பேறு அனல் மின் நிலையத்தின் உற்பத்தியிலிருந்து நமக்குப் பங்கு உண்டு.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் ஒரு யூனிட் மின் சாரத்தைத் தயாரிப்பதற்கு மொத்தம் எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அந்த ஆவல் தேவையில்லை.



**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் தற்போது எவ் வளவு மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது? இந்த மின் நிலையம் ஆரம்பிக்கப்படும்பொழுது தமிழகத்திற்கு இதில் உற் பத்தியாகும் மின்சாரத்தில் 75 சதவீதம் அளிக்கப்படும் என்று மத்திய அரசின் வாக்குறுதி உறுதி என்று பெறப்பட்டதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மத்திய அரசு ஆரம்பத்திலே அப்படிச் சொன்னார்கள். ஆனால் அந்தத் திட்டம் அமலுக்கு வருகின்றபொழுது, 1975 ஆம் ஆண்டு நம்முடைய அரசு கேட்டபொழுது, இல்லை என்று சொல்லிவிட் டார்கள், மறுத்துவிட்டார்கள். அவ்வப்பொழுது உள்ள நிலைமை களைப் பொறுத்து, அதிலே உற்பத்தியாகும் மின்சாரம் தென்பகுதி யில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் தரப்படும் என்ற நிலையை எடுத்தார்கள். எனவே, மீண்டும் நாம் வற்புறுத்தி, ஏற்கனவே தெரிவித்ததைப்போல, நம்முடைய முதல்வரவர்கள் பாரதப் பிரதமரிடத்தில் சொல்லி, அதற்குப் பிறகுதான் இன்றைக்கு ஒன் றுக்கு முக்காலாக நமக்கு அந்த வீதம் கிடைத்திருக்கிறது. 235 மெகாவாட் சாதாரணமாக உற்பத்தி செய்கிறார்கள். இது வரையில் கல்பாக்கம் அணுமின் நிலையத்திலிருந்து பெற்றிருப்பது 166 கோடி யூனிட்டுகள்.

**Thiru T. Venkata Reddy :** Mr. Speaker Sir, power is most important. The industrial areas—especially in Hosur area—experience acute power shortage. Will the Hon'ble Minister come forward to say whether there is any proposal pending with the Government to have a joint Sector Unit, comprising of Government and the Private Sector to produ.e power in the Industrial area ?

**Hon. Thiru S. Ramachandran :** Sir, I want notice.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் ;** மாண்புமிகு தலைவர் அவர் களே, தமிழகத்திலே உள்ள மின் நிலையத்தில் தயாரிக்கப்படும் மின்சாரம் வெளிமாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படுவதைப் போன்று, இராமகுண்டத்தில் தயாரிக்கப்படும் மின்சாரம் தமிழ கத்திற்குத் தரப்படுகிறது என்ற செய்தியை—அகில இந்திய ஒற்றுமைக்கு அடையாளமாக இருக்கின்ற செய்தியை—மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள், இராமகுண்டத்தில் உற்பத்தி யாகும் மின்சாரத்தில் எத்தனை சதவீதம் தமிழகத்திற்குத் தரப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தற்போது விவரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 497 மற்றும் 498 மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கவும், வினா எண்கள் 499 மற்றும் 500 மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கவும் ஒத்திவைக்கப்பெறுகின்றன.

நாச்சியார் கோயில் கிராமத்தில் பித்தளைத் தொழிற்சாலை.

501—(*வினா எண் 1473)—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுக்கா நாச்சியார் கோவில் கிராமத்தில் பித்தளையை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாச்சியார்கோவிலிலும், அந்தச் சுற்றுயுள்ள பகுதிகளிலும் பல தனியார்கள் பித்தளைத் தொழிலை இலாபகரமாக நடத்திவருகிறார்கள் தஞ்சை மாவட்டத்தில் அரசுத் தொழில் நிறுவனங்கள் ஒன்றும் இல்லாததால், அரசு அங்கே பித்தளையை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தனியார் துறையிலே யாராவது அப்படிப்பட்ட தொழில் செய்ய முன் வந்தால் அதற்கு உதவி செய்யத் தயார். அரசே அப்படிப்பட்ட ஒரு நிறுவனத்தை நிறுவுவதாக இப்பொழுது உத்தேசம் இல்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் பெரிய தொழில்களை ஆரம்பித்தால் அரசு உதவுவதாக அறிவித்தார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், தஞ்சை மாவட்டத்தைத் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்து, அதற்கு உண்டான உதவிகளைச் செய்ய அரசு தயாராக இருக்கிறதா ? அப்படி அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் முழுவதையும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கின்ற உத்தேசம் தற்போது இல்லை. நாச்சியார் கோயில் பின் தங்கிய பகுதியாக இருப்பதால் 10 சதவீதம் மானியமாக அரசு தரத் தயாராக இருக்கின்றது.

வெள்ளைக்கல்மேட்டில் இரும்புத் தொழிற்சாலை.

502—(*வினா எண் 1762)—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடியை அடுத்த வெள்ளைக்கல்மேடு என்னுமிடத்தில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடியை அடுத்து இருக்கின்ற வெள்ளக்கல்மேடு என்னும் இடத்தில் ஏறக்குறைய ஒரு மாத காலத்திற்கு முன்பு ஸ்டீல் ப்ராஜக்ட் லிமிடெட் என்ற போர்ட் போடப்பட்டிருந்தது. ஆனால், நேற்று முன்தினம் போய்ப் பார்த்தால் வேலூர் பொறியியல் கல்லூரி என்று அந்த போர்டிலே எழுதப்பட்டிருக்கின்றது. அது அரசுக்குச் சொந்தமான இடம். அந்தக் கல்லூரியைத் தனிப்பட்ட நபர்கள் ஆரம்பிப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு வேலூர் பொறியியல் கல்லூரி என்று அங்கே பெயரிடப்பட்டது அரசுக்குத் தெரியுமா? அங்கே ஸ்டீல் ப்ராஜக்ட் ஆரம்பிக்கும் திட்டம் ஏன் நிறுத்தப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். அதனை மீண்டும் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுகளுக்கு முன்னாலே எவர்சில்வர் சாமான்களை உற்பத்தி செய்வதற்காக தனியாரிடத்திலே அந்த இடத்தை வாங்கியிருந்தார்கள். 20 ஆண்டுகளாகத் தொழிற்சாலை வரவில்லை. அதற்குப் பிறகு அந்த இடத்தைப் பொறியியல் கல்லூரிக்காகக் கேட்டார்கள். அவர்களுக்கு அந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. கோ. இரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டீல் ப்ராஜக்ட் என்ற தொழிலைத் தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்க இருந்ததாகக் கூறினார்கள் மாண்புமிகு அமைச்சர்

அவர்கள். அந்த இடம் அரசின் மூலமாகப் பல தொழில்களை ஆரம்பிக்க மிகவும் வசதியான இடமாகும். காட்பாடி இரயில்வே நிலையத்திற்குப் பக்கத்திலேயும் சென்னை செல்லும் சாலைக்குப் பக்கத்திலேயும் அந்த இடம் அமைந்திருக்கின்றது. எனவே அங்கே அரசின் மூலமாகத் தொழிலை ஆரம்பிக்கின்ற நல்ல சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆனால் தனிப்பட்ட நபர்கள் பொறியியல் கல்லூரியை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த இடத்தை அரசு விலைக்குக் கொடுத்திருக்கின்றதா ? அப்படியானால் அதை மாற்றி மீண்டும் அங்கே அரசின் மூலமாக அந்த அரசு நிலத்தில் தொழில் ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடிக்குப் பக்கத்திலே நிறைய இடங்கள் இருக்கின்றன. எனவே இந்த இடம் பொறியியல் கல்லூரி ஆரம்பிப்பதற்காக விலைக்குத் தரப்பட்டிருக்கின்றது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை பகுதியில் இரும்புத்தாது இருப்பதாக வல்லுநர் குழு அறிவித்திருக்கின்றது. அந்தப் பகுதியில் இரும்புத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, இரும்புத் தாது தமிழகத்தில் பல இடங்களில் கிடைக்கின்றன. சேலம் மாவட்டத்தில் கஞ்சமலைப் பகுதியில் கூட இருக்கின்றது. இப்படி எடுப்பதற்கான சாத்தியக் கூறுகளைப் பொறுத்தவரையில் நாம் பல இடங்களைக் கோடிட்டுக் காட்டலாம். எனவே தற்போது திருவண்ணாமலையில் தொழிற்சாலை உருவாக்குகின்ற உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. பாண்டுரங்கன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் கிடைக்கும் இரும்புத் தாது மிக நல்ல இரும்பு என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே தயவுசெய்து அதை மீண்டும் பரிசீலனை செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, இரும்பு கிடைத்தால் அது நல்ல இரும்பாகத்தான் இருக்கும்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலூர் இன்ஜினியரிங் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலத்திற்கு அரசு என்ன விகிதத்தில் அதற்கான ரேட்டை ஃபிக்ஸ் செய்திருக்கின்றது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விடை தருகிறேன்.



திரு. வி. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரும்புத் தாது மற்றும் இருக்கக்கூடிய கனி வளங்கள் கொட்டிக் கிடக்கின்றன பூமிக்கடியில், அவற்றை வெட்டி எடுக்க வழியில்லை என்று சொல்லிக்கொண்டுதான் இருக்கிறோம். தனியார் வெட்டி எடுக்க முயற்சித்தாலும் அதற்கு அரசு ஒத்துழைப்பு தரவில்லை. இப்படி கொட்டிக் கிடக்கக்கூடிய இரும்பை வெட்டி எடுக்கத் தனியார் துறைக்கு அரசு அனுமதி வழங்குமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டிக் கிடக்கின்ற இரும்பை வெட்டி எடுக்க முடியும். நான் ஏற்கெனவே சொன்னதுபோல் சேலம் மாவட்டத்தில் கூட இரும்புத்தாது இருக்கின்றது. மத்திய அரசின் உத்தரவு வந்தால் கொட்டிக்கிடக்கின்ற இரும்பை வெட்டி எடுக்கலாம். வெட்டி எடுத்த இரும்பை உருக்கலாம். உருக்கிய இரும்பை விற்கவும் செய்யலாம்.

**ஆர். எஸ். மங்கலம் ஒன்றியக் கடலோரப் பகுதிக்குக் குடிநீர்.**

*503—(*வினா எண் 1696)*—**திரு. பொ. அன்பழகன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி தொகுதி, ஆர். எஸ். மங்கலம் ஒன்றியத்தில் கடலோரத்தில் இருந்து 8 மைல் சுற்றளவில் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடையாது என ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆர். எஸ். மங்கலம் முழுவதுமே உப்புத்தண்ணீர் பகுதியிலேயே அமைந்துள்ளது. அந்தப் பகுதியில் மைய நிலநீர் வாரியம் (Central Ground Water Board) ஆய்வு செய்ததில், ஒரு சில இடங்களைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் உப்புநீரே கிடைத்துள்ளது. திருவாடானைக்கு வடக்குப் பகுதியில் தோண்டப்பட்ட சில ஆழ்துளைக் கிணறுகளில் மட்டும் நல்ல தண்ணீர் கிடைப்பதாக அந்த ஆய்வு அறிக்கை கூறுகிறது. அந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் ஆர். எஸ். மங்கலம் ஒன்றியத்தில் மொத்தமுள்ள 221 குடியிருப்புகளில் 112 குடியிருப்புகளுக்கு

குடிநீர் வழங்குவதற்காக நில நீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்படி திருவாடானைக்கு வடக்குப் பகுதியில் முதற் கட்டமாக ஆழ்துளைக் கிணறு தோண்டும் வேலை நடந்து வருகிறது.

(முற்பகல் 9–20)

திரு. பொ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது குடிநீர் வடிகால் வாரியத்தினர் ஆர். எஸ். மங்கலம் ஒன்றியத்தில் பல இடங்களில் நல்ல தண்ணீர் கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் மைய நிலநீர் வாரியம் உப்புத் தண்ணீர் தான் கிடைக்கிறது என்று சொல்லிய காரணத்தினால் வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? ஆர். எஸ். மங்கலம் ஒன்றியத்தில் ஆங்காங்கே எத்தனை குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய நில நீர் வாரியம் எடுத்து தெரிவித்த அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் நாம் அந்த ஆய்வை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதிலே ஏதாவது தவறு இருக்குமேயானால் மீண்டும் அதை நாமும் ஆய்வு செய்யலாம். அதிலே ஒன்றும் தப்பில்லை. ஆர். எஸ். மங்கலம் ஒன்றியத்தில் இருக்கிற 221 குடியிருப்புகளுக்கு 12 குடியிருப்புகளில் மட்டுமே குடிநீர் பிரச்சனை என்பது இல்லாமல் இருக்கிறது. மீதம் உள்ள 209 குடியிருப்புகளில் 76 குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 133 குடியிருப்புகளுக்கு குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. பொ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தாவரம், மேலப்படுமனூர், காட்டுநல்லூர் போன்ற பகுதிகளில் உப்பு நீரை நல்ல நீர் ஆக்குகின்ற ஆராய்ச்சி நடைபெறுவதைப் போன்று ஆர். எஸ். மங்கலம் பகுதியிலும் உப்பு நீரை நல்ல நீர் ஆக்குகின்ற ஆராய்ச்சி பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டத்தில் தோல் தொழிற்சாலையில் உள்ள கழிவுநீரால் பல பகுதிகளில் உள்ள குடிதண்ணீரின் தரம் கெட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான கிராமங்களில் அடி ஊற்று நீரே உப்புநீராக இருப்பதால்......(மணியடிக்கப் பெற்றது)



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லாம் குடிநீர் வாரியத்திற்குச் சம்பந்தப்பட்டது இல்லை. மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தப்பட்டது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியை ஒட்டி, இதுபோன்ற சுகாதாரக் கேடுகள் விளைந்திருக்கின்ற தண்ணீரையும், கடுமையாக இருக்கின்ற தண்ணீரையும், உப்பு நீர் கலந்திருக்கின்ற தண்ணீரையும் மாற்றி அமைத்து தூய்மைப்படுத்துகின்ற வகையில் டி–சலைனைசேஷன் பிளான் எனப்படும் 3 திட்டங்கள் இப்போது மைய அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டங்களில் கடுமைத் தண்ணீரை நல்ல தண்ணீராக ஆக்குகின்ற திட்டமும், தூய்மைக் கேடு விளைந்த தண்ணீரை சுத்திகரிக்கின்ற திட்டமும் அரசினுடைய கவனத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : கவனத்தில் இருக்கிறது.

பெரியார் மாவட்டத்திற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

504—(*வினா எண் 1789)—திரு. ச. பாலகிருஷ்ணன், டாக்டர் அ. பொன்னுசாமி மற்றும் திரு. யு. பி. மாதையன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருந்து பெரியார் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் பிரித்துத் தனியாக அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே ஆம்.

டாக்டர் அ. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, எப்பொழுது ஆரம்பிக்கப்படும்? அதற்குத் தேவையான இடம் தேர்ந்து எடுக்கப் பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இடத்தை நாம் ஆய்ந்து, கொண்டிருக்கிறோம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் விரைவிலே ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள்

சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியார் மாவட்டத்திலே தற்போது ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் எத்தனை எங்கே இயங்கி வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஈரோடு, சிவகிரி, கொடுமுடி, பெருந்துறை, குன்னத்தூர், கோபிச் செட்டிப் பாளையம், கவுந்தம்பாடி, சத்தியமங்கலம், தாளவாடி, அந்தியூர், சித்தோடு, வெள்ளக்கோவில், மூலனூர், காங்கேயம், தாராபுரம், அம்மாபேட்டை, புஞ்சை புளியம்பட்டி, நம்பியூர், மைலப்பாடி, அவல்பூந்துறை மற்றும் பவானியிலும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

திரு. யு. பி. மாதையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக பல பெயர்களைச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அதைச் சற்று விளக்கமாக மீண்டும் தெரிவிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அவர்கள் இங்கே வந்தால் முழுவதுமாக எழுதி வாங்கிக் கொண்டே போய் விடலாம்.

திரு. க. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே சில ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களிலே வருகிற விளைபொருட்களுக்கு மற்ற எந்தப் பகுதிலேயும் இல்லாத வகையிலே செஸ் விதிக்கப்படுகிறது. அதற்கு வியாபாரிகள் எதிர்ப்பு தெரிவித்து பல இடங்களிலே தருவதற்கும் மறுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட செய்தி அரசுக்கு வந்திருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட வேண்டும்.

### திருவொற்றியூர் பகுதிக்குக் குடிநீர் வழங்கல்.

505—(*வினா எண் 1876)—திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி பஞ்சாயத்து கிராமத்தில் இருந்தும் மேலூரில் இருந்தும் திருவொற்றியூர் வழியாக சென்னைக்கு வரும் குடிநீரை திருவொற்றியூர் பகுதிக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1962-ம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட குடிநீர்த்திட்டத்தின் நீர் ஊற்றுக்குழாயில் உப்பு நீர் ஊடுருவல் காரணமாகக் குடிப்பதற்கு அருகதையற்றதாயிற்று. எனவே குடிநீர்த் தட்டுபாட்டைப் போக்க பஞ்சட்டி கிணற்றுப் பகுதியிலிருந்து குடிநீர் கொணரும் குழாயிலிருந்து இப்பகுதிக்குத் தண்ணீர் எடுப்பதற்கான திட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டு மணலி தொழிற்சாலைக்குச் செல்லும் நிலத்தடி நீரில் 9 லட்சம் லிட்டர் குடிநீர் அளிப்பது செயற்பாட்டில் உள்ளது. தற்சமயம் இதனை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் பக்கத்திலே கடல் சூழ்ந்திருக்கின்ற காரணத்தினால், நிலத்தடி நீர் கடலில் ஈர்க்கப்படுவதால், அங்கே தண்ணீரை சுவையாக மாற்றித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை நாம் முழுமையாகச் செய்ய இயலாது. ஓரளவுக்கு நிலத்தடி நீர் எங்கெங்கு நல்லதாகக் கிடைக்கின்றதோ, அங்கே வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் வழியாக சென்னைக்குச் சுவையான தண்ணீர் செல்கின்றது. நாங்கள் அந்தத் தண்ணீரைக் குடிப்பதற்கு தகுதி அற்றவர்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தகுதி உள்ளவர்கள்.

### திருமங்கலம் பகுதியில் குடிநீர் வழங்கல்.

506—(*வினா எண் 1991)—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதியில் தேங்கல்பட்டிக்கு அருகே வடபுறம் உள்ள மலைச்சரிவில் வளமான நீர் ஊற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு ஆழ்துளைக் கிணறு மூலமாக தண்ணீர் எடுத்து ஆலம்பட்டி, செக்கானூரணி, புளியங்குளம், K. பாறைப்பட்டி, சிக்கம்பட்டி, கிண்ணிமங்கலம் ஆகிய ஊர்களுக்குக் குடிநீர் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத்
தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியில் தேங்கல்பட்டிக்கு
அருகே வடபுறம் உள்ள மலைச்சரிவில் வளமான நீர் ஊற்று இருப்
பதாக நம்பகமான செய்தியைப் பெற்ற பின்னர் நான் இந்தக்
கேள்வியைத் தொடுத்திருக்கிறேன். ஒருவேளை குடிநீர் வடிகால்
வாரிய அதிகாரிகள் இதைப்பரிசீலனை செய்யாமல் இருந்திருக்கலாம்.
எனவே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை
கேட்டுக் கொள்வதெல்லாம், இந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு
நன்கு தெரியும். குற்றப் பரம்பரை என்று ஒதுக்கப்பட்ட,
அழுத்தப்பட்ட பிறமலைக் கள்ளர் வாழ்கின்ற பகுதி, அந்த வாடி
வதங்கிய இந்தச் சமுதாய மக்களுக்கு அங்கே அதிகமான நீர் ஊற்று
செல்லுகின்ற காரணத்தினால், இந்த அரசு இந்த ஆராய்ச்சியை
எடுத்துக் கொள்ளுமானால், அதன் மூலம் அந்தப் பகுதியிலே வாழ்
கின்ற மக்களுக்கு நல்ல தண்ணீரைக் கொடுக்க முடியும். எனவே,
இனிமேலாவது இதைப் பரிசீலனை செய்வதற்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே,
இல்லை என்ற தகவலை எனக்குத் தந்திருக்கிறார்கள். பொறுப்பு
மிக்க மாண்புமிகு உறுப்பினர் நம்பகமான தகவலின் அடிப்படையில்
சொல்லுகின்ற காரணத்தால், அரசு மீண்டும் ஆராய்ச்சி செய்வ
தற்கு ஆவன செய்யப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத்
தலைவர் அவர்களே, என்னுடைய மூலக் கேள்வியில் ஆ.
கொக்குளம், செக்கானூரணி, புளியங்குளம், கே. பாறைப்பட்டி,
சிக்கம்பட்டி, கிண்ணிமங்கலம் ஆகிய இந்த ஊர்களின் வழியாக
திருமங்கலத்திற்கு இப்போது ஒரு கோடி ரூபாய் செலவில் சோழ
வந்தான் வழியாக குழாய் வந்து கொண்டிருக்கிறது. இந்தத்
திட்டம் நிறைவேற்றப்பட்டு, ஏறத்தாழ 6, 10 மாதங்கள் ஆகி
விட்டது. இன்னும் தண்ணீர் வரவில்லை. வருகின்ற வழியில் நீர்க்
கசிவு ஏற்படுவதாகவும், குழாய்கள் வெடித்து விட்டிருப்பதாகவும்
சொல்லப்படுகிறது. எனவே, இதிலே அமைச்சர் அவர்கள் உடனடி
யாகத் தலையிட்டு, கடுமையான குடிநீர் பற்றாக்குறை இருக்கும்
இந்த நேரத்தில், வறட்சியான இந்தப் பகுதிக்கு மேலும் தண்ணீர்
வர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே,
அந்த ஊரின் வழியாக வருகின்ற காரணத்தினால், அந்த ஊருக்கு
குடிநீர் தரவேண்டுமென்பதல்ல. குடிநீர் பற்றாக்குறை நிலவுமானால்,
அங்கே தருவதற்கு ஏற்பாடு செய்யலாம். இப்போது ஆ. கொக்
குளம், செக்கானூரணி, புளியங்குளம், கே. பாறைப்பட்டி—சிக்கம்
பட்டி, கிண்ணிமங்கலம் ஆகிய ஊர்களுக்குக் குடிநீர் தருவதற்கான
ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தகவல் இருக்கிறது. பற்றாக்
குறை நிலவுமானால் அதிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு அரசு
ஆவன செய்யும்.

### திண்டிவனம் குடிநீர் வழங்கு திட்டம்.

507—(*வினா எண் 2872) திரு. கே.எம். தங்கமணி: மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரில் இரண்டாம் குடிநீர்த்தேக்கம்
கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்தத் திட்டம் துவங்கும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே,
(அ) மற்றும் (ஆ), திண்டிவனம், செஞ்சி மற்றும் அனந்தபுரம்
ஆகிய மூன்று நகரங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 1150
லட்சம் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த்திட்டம் தமிழ்நாடு
குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சாதாரண நேரங்களில்கூட, திண்டிவனத்திலுள்ள
மக்கள் தண்ணீருக்கு அல்லல்படுவது வாடிக்கையான ஒன்றாக
இருக்கிறது. கடுமையான வறட்சியுள்ள கோடைகாலத்திலே
அங்குள்ள தாய்மார்கள் தண்ணீர் எடுப்பதற்கு பற்றாக்குறையின்
காரணமாக மிகவும் அல்லல்படுகிறார்கள். இந்த நிலையை
உணர்ந்து, திருவெண்ணைநல்லூர் ஆற்றுப் படுகையிலிருந்து
சுற்றியுள்ள அனந்தபுரம், செஞ்சி ஆகிய ஊர்களுக்கு தண்ணீர்
தரயிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை இந்த
ஆண்டாவது எடுத்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் அனுமதிப்
பார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே,
இந்த ஆண்டிலே எடுத்துக் கொள்ளத்தக்க அளவிற்கு விரைவு
படுத்தப்படும்.

(முற்பகல் 9-30)

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

508—(*வினா எண் 1247)—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீப்புண் சிகிச்சைக்கு தீவிர சிகிச்சை பிரிவு ஒன்று ஏற்படுத்த செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தீக்காயம் பிரிவு 6–3–85 முதல் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் தொடங்கப்பெற்று செயல்பட்டு வருகிறது.

கழிவு நீரில் பயிராக்கப்படும் காய்கறிகள்.

509—(*வினா எண் 1053)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் மற்றும் திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கழிவு நீரிலிருந்து பயிராக்கப்படும் காய்கறிகளால் வயிற்றுப் போக்குநோய் அதிகரித்து உள்ளதாக புகார் ஏதேனும் அரசு கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன தடுப்பு நடவடிக்கை எடுத்து உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, (அ) இது சம்பந்தமாக புகார் ஏதும் அரசின் கவனத்திற்கு வரவில்லை. (ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய அடிப்படையே சமீபத்திலே பத்திரிகையிலே வந்த செய்தியிலே பெங்களூர் நகரத்திலே இதுபோன்ற கழிவு நீரால் விளைவிக்கப்பட்ட காய்கறிகளினால் காலரா நோய் பெருகியிருந்தது என்று செய்தி வந்தது. இன்றைக்குப் பத்திரிகையிலேகூட தமிழகத்திலே காலரா நோய் அதிகமாக, தலை தூக்குவதாகச் செய்தி வந்திருக்கிறது, நான் அமைச்சர் அவர்களிடத்திலே இதைப் பற்றி விவாதித்து இருக்கிறேன். அப்படித் தகவல் வந்ததன் காரணமாகத்தான் இந்தக் கேள்வியே எழுந்தது. அந்த அடிப்படையில் என்ற முறையிலே கழிவு நீரிலிருந்து விளைவிக்கப்படுகிற



காய்கறி உற்பத்தித் திட்டத்தைத் தீவிரமாகத் தமிழகத்திலே செயல்படுத்துகிற காரணத்தினாலே இந்தப் புதிய ஆராய்ச்சியைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே S wage farms உள்ள கழிவு நீர் மூலமாக விளைவிக்கப்படுகிற காய்கறிகளைப் பொறுத்தவரையில் அதன் மூலமாக உற்பத்தி செய்வது அவ்வளவு நல்லதல்ல என்பதை நாம் மக்களுக்குப் பிரச்சாரம் மூலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதிலே infection என்பது superficial ஆக போய் ஒட்டிக்கொள்ளும். ஆகவே எல்லாக் காய்கறிகளையும் பயன்படுத்துவதற்கு முன்பு ரன்னிங் வாட்டரிலே அவைகளைச் சுத்தப்படுத்தியதற்குப் பிறகுதான் பயன்படுத்தவேண்டுமென்று சொல்வதற்கு இந்தக் கேள்விக்குத் தகவல் அளிப்பதன் மூலமாக அதற்குப் பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற சுகாதாரக் கேடுகள் உள்ள தண்ணீரில் வளர்ப்பது சரியல்ல என்று மக்களுக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக விளம்பரம் செய்யப்படுமா ? அல்லது அதற்கான திட்டங்கள் அரசிடம் ஏதாவது தற்போது இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, விளம்பரம் செய்யப்படுவதில்லை. விளம்பரம் செய்வதற்கு செலவாகும். அதற்கென்று வாய்ப்புக் கிடைக்கிறபோது பிரைமரிஹெல்த் சென்டர்கள் மூலமாக அல்லது மற்ற இடங்களாக இருந்தாலும் அவைகள் மூலமாக இருக்கிற டாக்டர்கள் சொல்லிவருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி விளம்பரம் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். காய்கறிகளைப் பயன்படுத்துகிற நேரத்திலே—பெர்டிலைசர்ஸ் பயன்படுத்துகிறோம், அந்த நேரத்திலே காய்கறிகள் எப்படி இருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும், அதேபோன்று பூச்சிக் கொல்லி மருந்து அடிக்கிற காரணத்தினால் அதிலே இருக்கிற பாய்ஸன் அந்தக் காய்கறிகளிலே இருக்கிற வாய்ப்பு இருக்கிறது. All over the country பூச்சி கொல்லி மருந்து பயன்படுத்தியதற்குப் பிறகு அதிலே இருக்கிற பாய்ஸன் காய்கறிகளுக்கு உள்ளே இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது,—ஆகவே எல்லாக் காய்கறிகளையும் ரன்னிங் வாட்டரிலே கழுவிய பிறகுதான் பயன்படுத்தவேண்டும் அதைத்தான் நாம் சொல்லி வருகிறோம்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, கழிவுநீரிலே புரடியூஸ் பண்ணுவதை டெஸ்ட் பண்ணி மக்களுக்குக் கொடுப்பதற்கு ஏதாவது அரசு திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, காய்கறிகளை டெஸ்ட் செய்து கொடுக்கமுடியாது ஏனென்றால். It is a massive scale காய்கறிகளைப் பயன்படுத்துவதற்கு முன்பு பிரச்சாரம் மூலம் மக்களுக்குச் சொல்வது ரன்னிங் வாட்டரிலே அவைகளைக் கழுவி விட்டுப் பயன்படுத்தவேண்டும். இல்லா விட்டால் பக்கெட்டிலே உள்ள தண்ணீரிலே 15 நிமிடங்கள் போட்டுக் கழுவிய பிறகுதான் பயன்படுத்த வேண்டும். இந்தப் பதிலை நான் சட்டமன்றப் பேரவையிலே சொல்வதன் மூலமாக பெரிய பிரச்சாரம் கிடைக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, காய்கறிகள் மற்றும் உணவுப்பொருள்கள் இப்போதுள்ள ரசாயனப் பொருள்கள் பூச்சி மருந்துகள் போன்றவை அடிப்பதால் அவற்றில் ஒரு விஷத் தன்மைக் கலப்பதன் காரணமாக, பல புதிய வியாதிகள் வரத் துவங்குவதாக நாங்கள் அறிகிறோம். இரண்டாவது, இப்போது உரங்களைப் போடுவதிலே காய்கனிகளுடைய ருசி மாறி, அதனுடைய தித்திப்புத் தன்மை குறைக்கப்படுவதாக சொல்கிறார்களே, அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்பது பெஸ்டிசைட்சா அல்லது பெர்டிலைசர்சா என்று தெரியவில்லை. பெஸ்டிசைட்ஸ் போடுவதால் ருசி குறைவது கிடையாது. பெஸ்டிசைட்ஸ் என்பதைத்தான் பூச்சிக்கொல்லி மருந்து என்று சொல்கிறோம். அதுவே பாய்சன். அது நம்மை பாதிக்கக்கூடாது என்பதற்காகத்தான் காய்கனிகளை சுத்தமாகக் கழுவி பிறகு அவைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : தலைவர் அவர்களே, கழிவு நீரில் பயிராகிற தென்னைகள் கூட சுவையாகத் தண்ணீரைத் தருவதாக இலக்கியங்கள் சொல்கின்றன. அப்படி இருக்கிற போது அதில் விளைகின்ற காய்கனிகள் மட்டும் ஏன் சுவையாக இருப்பதில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அதிலே இரண்டு வகையான காய்கனிகள் இருக்கின்றன. தரைக்குப் பக்கத்திலே, கொஞ்சம் உயரமாகப் பயிராகிற காய்கனிகள். When it is very close to the ground it attracts poison much faster. If underground crops (tuber and root) and low growing vegetables or short stature plants are grown they may carry infection on their surfaces-example greens, raddish, sweet potatoe, pumpkins, gourds, brinjal, etc. The putrefactive bacteria do not generally penetrate through the heavy skin of the vegetables but superficial infection persists; even with repeated washing with pure water.



When we grow underground crops or short stature plants we have to be extra careful.

திரு. இரா. தாமரைக்கனி . தலைவர் அவர்களே, **

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது உறுப்பினர் கேட்ட கேள்வியும், அதற்கு அளிக்கப்பட்ட பதிலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

Thiru T. Venkata Reddy : Mr. Speaker Sir, We are growing vegetables for improving the health of the people. It is said that the house-wives cut the vegetables and then clean them up. That is a bad practice. Will the Hon. Minister propagate that we must clean the vegetables before they are cut. The Hon. Minister should come forward to propagate this procedure so that the vitamin wealth of the vegetables will be safeguarded.

Hon. Dr. H.V. Hande : Mr. Speaker, I will like to tell the Hon. Member that it is exactly why I said that the vegetables before they are cut, should be thoruoghly washed either by keeping them in a bucket full of water for about fifteen minutes or by cleaning them in running water under tap. They should be washed thoroughly first and then only cut. I hope and trust that the discussion by means of the questions and answers that take place in this House will definitely be useful in educating the housewives outside.

திரு. வி. தங்கவேலு : தலைவர் அவர்களே, தற்போது கழிவு நீரிலிருந்து பயிரிடப்படும் காய்கனிகளில் முருங்கைக்காய் அதிகமான சத்தான காயாக இருக்கிறது. ஆகவே முருங்கைக்காயை மேலும் சத்தானதாகச் செய்து கழிவுநீரில் அதிகமாகப் பயிரிடப்படுமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முருங்கைகாயைப் பொறுத்தவரையிலும் அது இந்த லிஸ்டிலே வரவில்லை. Short stature plants—underground crops என்ற பட்டியலில் முருங்கைகாய் வரவில்லை. ஏன் என்றால் உயரமாக உள்ள இடத்திலே, அந்த மரத்திலே வருவதால், இன்பெக்சன் அங்கே போய் தொடுவதற்கு வாய்ப்பில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஹீமோடையாலிஸிஸ் கருவிகள்.

510—(*வினா எண் 1786) திரு. ச. பாலகிருஷ்ணன் மற்றும் டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, மதுரை, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு (Haemo Dialysis) ஹீமோ டையலிஸிஸ் கருவிகள் இருக்கின்றனவா ?

(ஆ) அவை எப்போது வாங்கப்பட்டன ?

(இ) எத்தனை நோயாளிகளுக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே

(அ) ஆம்

(ஆ) மார்ச்சு 1984ல் வாங்கப்பட்டது.

(இ) மேற்கண்ட கருவிகள் இப்போது பயன்படுத்தப் படுகின்றன.

டாக்டர் அ. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை, மற்றும் ராயப்பேட்டை மருத்துவ மனைகளில் எத்தனை ஹீமோடையலிசிஸ் கருவிகள் உள்ளன. அவற்றில் எத்தனை இயங்கும் நிலையில் உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கோவை, மதுரை, தஞ்சை மருத்துவமனைகளைப் பற்றியது. ஆகவே அந்தப் பட்டியல் என்னிடத்தில் இல்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கிற மக்களும் பயன் அடைகின்ற வகையில் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள அரசுத் தலைமை மருத்துவமனைகளில் இந்த ஹீமோடையலிசிஸ் கருவிகள் வாங்கப்படுமா ? என்பதை அறிய விரும்புகிறேன். ஆம் எனில், அந்தக் கருவிகள் அந்த மருத்துவமனைகளுக்கு எப்போது வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, முதலிலே எல்லா மருத்துவக் கல்லூரிகளோடும் இணைக்கப்பட்டு இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு அதை ஏற்படுத்த இருக்கிறோம். அதற்குப் பிறகு செங்கற்பட்டிலே இன்னும் ஏற்படுத்தவில்லை. இவைகள் முடிந்த பிறகு, படிப்படியாக எல்லா மாவட்டத் தலை நகரங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு அங்கே வருகின்ற புற நோயாளிகளின் எண்ணிக்கையையும், அங்கே அனுமதிக்கப்படுகின்ற உள் நோயாளிகளின் எண்ணிக்கையையும் பொறுத்த, அந்த அடிப்படையில் நாம் அதை வாங்கிச் செயல்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் நாம் செயல்படவேண்டியிருக்கிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே கோவை, மதுரை, தஞ்சை மருத்துவமனைகளுக்கு இந்தக் கருவிகள் 1984 மார்ச் மாதத்திலே வாங்கப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி வாங்கப்பட்ட நாளிலேயிருந்து அந்தக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவா ? இல்லையெனில், அந்தக் கருவிகள் இத்தனை நாட்களாக பயன்படுத்தப் படாமல் வைக்கப்பட்டு இருந்ததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நமக்கு மிக முக்கியமாக இருக்கும் பகுதி பியூர் வாட்டர். ஆகவே இந்த பியூர் வாட்டர் மூலமாகத்தான் நாம் ஹீமோடையலிசிஸ் நடத்த முடியும். அந்த பார்ட்டிகுலர் ஸ்பெசிபிகேசன் ஆப் வாட்டர் கிடைக்கவில்லை என்றால் அதற்கு இன்னொரு இயந்திரத்தை நாம் ஆக்சசரியாக பொருத்த ஏற்பாடு செய்யவேண்டும். அந்த ஆக்சசரி கிடைப்பதற்கு தாமதமாவதால் தான் இந்தத் தாமதம் ஏற்படுகிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருவிகளை இயக்குவதற்கு பயிற்சி பெற்றவர்கள் அரசு மருத்துவமனைகளில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றனவா ? ஆமெனில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இதிலே வந்து நெப்ராலஜிஸ்ட் என்று இருக்கிறார்கள். அந்த நெப்ராலஜிஸ்ட் அத்தனை பேர்களும் இதற்காகப் பயிற்சிக்கு உரியவர்கள். அதுமட்டுமல்லாமல் இப்போது எம். டி. படித்தவர்களுக்கும் கூட இதைப் பயன்படுத்துவது பற்றி நாம் நெப்ராலஜி டிபார்ட்மெண்ட் மூலமாக சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் அதுமட்டுமல்லாமல், டெக்னீசியன்களை நாம் தயார் செய்து கொண்டு இருக்கிறோம்.

[1985 ஜுலை 4

டாக்டர் ந. மாசிலாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு கல்வி ஆண்டிலிருந்து சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே மருத்துவக் கல்லூரியைத் துவங்க இருப்பதாக அறிவித் திருக்கிறார்கள். அந்த மருத்துவக் கல்லூரிக்காக, சிதம்பரம், கடலூர், நெய்வேலி போன்ற மருத்துவமனைகளில் அவர்கள் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுத்து இருப்பதாகத் தெரிகிறது. எனவே அப்படிப்பட்ட மருத்துவமனைகளில் இப்படிப்பட்ட ஹிமோடைய லிசிஸ் கருவிகள் வைக்கவேண்டும் என்று அந்த மருத்துவக்கல்லூரி நடத்துபவர்களை அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் வைக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்த முடியாது. ஆனால் மெடிக்கல் கவுன்சில் ஆப் இந்தியா வினுடைய சில சட்டதிட்டங்கள், கைட்லைன்களை அவர்கள் அமுல் படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையில் மெடிக்கல் கவுன்சில் ஆப் இந்தியா நிச்சயமாக வற்புறுத்தும் என்று நினைக்கிறேன்.

டாக்டர் த. முகம்மது சலீம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகளில் எத்தனை ஹிமோடையலிசிஸ் கருவிகள் இருக்கின்றன? அவைகள் ஒழுங்காக இயங்குகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை யைப் பற்றி அரசு பதில் சொல்ல முடியாது.

திரு ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருவி வாங்கி 1½ வருடம் ஆகிறது. பயிற்சி எல்லாம் தரப்பட்டு இருக்கிறது. ஏதோ பியூரிபைடு வாட்டர், ஸ்பெசல் வாட்டர் வேண்டும் என்பதற்காக இதுவரை அது பயன் படுத்தப்படாமல் இருக்கிறது. 3 மருத்துவ மனைகளில் அதை வைத்தும் கடந்த 15 மாதங்கள் ஆகியும் பயன்படுத்தப்படாமல் காலதாமதம் ஆவதைத் தடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரித நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டு இந்த அக்ஸசரிஸ் எல்லாம் வந்து செயல்பட ஆரம்பித்து இருக்கிறது.

திரு டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சமீப காலத்தில் நாம் எல்லாம் பத்திரிகையின் வாயிலாகப் பார்க்கிறோம். சிறுநீரக வியாதி அதிக





மாக ஏற்படுகிறது என்று. இதை கருத்தில் கொண்டு இப்போது கூட அந்த ஹிமோடையலைஸிஸ் கருவி வைக்கப்பட்டு இருக் கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு கருவிக்கு என்ன செலவு ஆகிறது? அந்த அக்ஸசரீஸ் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கும் அரசு என்ன தொகை செலவழிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹிமோடையலைஸிஸ் கருவிக்குச் செலவு 1 லட்சத்து 61 ஆயிரத்து 674 ரூபாய் 52 பைசா ஆகும்.

திரு. ஜி கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹிமோடையலைஸிஸ் என்று சொல்லுகின்ற அந்த கருவியானது ரத்தத்தில் இருக்கின்ற உப்பை மட்டும் பிரிக்கின்றதா? அல்லது ரத்தத்தில் கலந்து உள்ள வேறு பொருட் களையும் பிரிக்கின்றதா? அதே நேரத்தில் அந்த ஹிமோடைய லைஸிஸ் கருவியை தமிழகம் ஏன் இந்தியா முழுவதும் உள்ள எல்லா ஏழை எளிய மக்களும் அறிந்து கொள்ள காரணமாக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எல்லோருக்கும் நன்மை செய்கின்ற அந்த கருவியை கண்டுபிடித்தவர்களை அரசு பாராட்டுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹிமோடையலைஸிஸ் கருவியைப் பொறுத்தவரையில் It is called artificial kidney நம்முடைய கிட்னி என்ன வேலை செய்கிறதோ அந்த வேலையை இந்த ஹிமோடையலைஸிஸ் கருவி செய்கிறது என்றால் ரத்தத்தில் இருக்கக்கூடிய சுத்திகரிக்க வேண்டிய அந்த பொருட்களை சுத்திகரிக்கக்கூடிய அந்த ஆற்றல் மிக்க ஒரு கருவி தான் அந்த ஹிமோடையலைஸிஸ்.

திரு. ம. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மருத்துவ கல்லூரி இல்லை. எங்கள் தலைமை மருத்துவமனையாக நாகர்கோவிலில் உள்ளதற்கு இத்தகைய கருவியை பொருத்துவதற்கு அரசு பிரை யாரிட்டி கொடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது போல் on the basis of number of outpatients and number of inpatients என்ற வகை யில் நாம் பிரையாரிட்டி கொடுக்க முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமாக அந்த அடிப்படை யில் நாகர்கோவிலில் உள்ள மாவட்ட மருத்துவ மனை கவனிக் கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1985 ஜூலை 4

திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை வியாதியை கண்டுபிடிக்கும் மிஷினைப் பற்றி சொன்னார்கள். ஆனால் ஒவ்வொரு ஊரிலும் சர்க்கரை வியாதி இன்று சராசரியாக 40 சதவீதம் வந்து விட்டது. இந்தநிலை யில் ஒவ்வொரு தாலுக்கா மருத்துவ மனையிலும் அந்த ரத்தத்தில் இருக்கக்கூடிய சர்க்கரையை, உப்பை கண்டுபிடிக்கக்கூடிய கருவியை— அது கூட 750 ரூபாய் 1000 ரூபாய் தான் இருக்கும் என்று நினைக் கிறேன்—எல்லா இடங்களிலும் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ரத்தத்தில் எவ்வளவு சர்க்கரை, உப்பு இருக்கிறது என்பதை கண்டுபிடிப்பதற்கு ஏகப்பட்ட ரத்தத்தை ஒவ்வொருவரிடமிருந்தும் எடுத்து கண்டுபிடிக்கிறார்கள். அதனால் மனிதனுடைய ரத்தம் எல்லாம் போய்விடுகிறது. ஆகவே, ஊசியால் குத்தி கொஞ்சமாக ரத்தம் எடுத்து பரிசோதனை செய்யக்கூடிய முறை தலைமை மருத்துவமனையில் இருப்பதை போல் அந்த குறைந்த கட்டணத்தில் உள்ள அந்த மிஷின் எல்லா தாலுக்கா மருத்துவ மனைகளிலும் அமைக்கப்படுமா என அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப் பியது நியாயமான ஒரு கேள்வி. ரத்தப் பரிசோதனைச் செய்வ தற்கு தாலுக்கா மருத்துவ மனைகளுக்கு ஒரு இயந்திரம் நாம் தர வேண்டியது மிகவும் அவசியம். அந்த அடிப்படையில் தான் சென்ற ஆண்டு 94 தாலுக்கா எட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைகளுக்கு நாம் Texto meters என்ற கருவியின் மூலமாக அரை சொட்டு ரத்தத்தில் நாம் சர்க்கரையை கண்டுபிடிக்கக்கூடிய கருவியை கொடுத்து இருக்கிறோம். அவைகள் நன்கு செயல்பட்டுக் கொண்டு வருகின்றன.

(முற்பகல் 9-50)

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தஞ்சை மருத்துவக் கல்லூரியிலே இந்த ஹீமோ டயலிஸிஸ் கருவி வேலை செய்யவில்லை என்று புகார் இருக்கின்றது. அதற்கு என்ன காரணம் என்பதை அறிவதோடு, இந்த ஹீமோ டயலிஸிஸ் ஏழை மக்களுக்கு இலவசமாக செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கூட நான் தஞ்சைக்கு போன் போட்டுக் கேட்டேன். வேலை செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அக்சௌரி இடைப்பதில் தான் தாமதம் என்று நான் மூலக் கேள்விக்கு பதில் சொல்கிற நேரத்திலேயே சொன்னேன். இது ஏழைகளுக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது.



1985 ஜூலை 4]

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஹீமோ டயலிஸிஸ் கருவிகள், 84-லே வாங்கப்பட்டதாகச் சொன் னார்கள். இந்தக் கருவிகளுக்கு எத்தனை ஆண்டுகளுக்கு கேரண்டி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த கேரண்டி பீரியட் முடிவதற் குள்ளாக அவை பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது செயல்பட ஆரம்பித்ததற்குப் பிறகு, 5 ஆண்டு களுக்கு காரண்டி அதற்குக் கொடுக்கிறார்கள்.

திரு. கூடலூர் இ. ஸ். வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தினுடைய தலைநகராக இருக்கிற சேலத்தில் மருத்துவக் கல்லூரியை புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே துவக்க இருக்கிறார்கள். அதே போன்று, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலேயும் மருத்துவக் கல்லூரி துவக்குகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹீமோ டயலிஸிஸ் என்று சொல்லக்கூடிய இந்த மருத்துவமுறையானது, பணக்காரர்களுக்கு பஞ்சி மெத்தை யாகவும், ஏழைகளுக்கு எட்டாத கனியாகவும் இருக்கிறது. இந்த ஹீமோ டயலிஸிஸ் என்று சொல்லக்கூடிய அந்த முறைக்கு, சித்த மருத்துவ முறையிலேயும் எளிமையான முறையிலும் ஏழைகளுக்கு பயன்படக்கூடிய அளவுக்கு ஏதாவது புதிய வழிகளைக் கண்டு பிடித்துச் சொல்வார்களா அல்லது அரசு அதை அமல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவ முறையிலே, இந்த சிறுநீரக வியாதியின் மூலமாக வருகின்ற சில பிரச்சினைகளுக்கு ஹீமோ டயலிஸிஸ் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இன்னும் பல வேலை களுக்கு அதாவது, மூட்டைப் பூச்சி மருந்து போன்ற மருந்துகளை சாப்பிட்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சி எடுக்கும்போது அந்த பாய்சனை, உடம்பிலுள்ள விஷப்பொருட்களை எடுக்கக்கூட, இந்த ஹீமோ டயலிஸிஸ் பயன்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல், ஹீமோ டயலிஸிஸ் பயன்படுத்தப்பட வேண்டிய அளவுக்கு ஏற்படுகின்ற பல வியாதிகளுக்கு சித்த மருத்துவ முறையிலேயே மருந்துகள் இருக்கின்றன. ஆகவே, இப்போது நிறைய இடங்களிலே சித்த வைத்திய முறையை நாம் ஆரம்பித்திருக்கிறோம்.

[1985 ஜூலை 4

தாலூகா மருத்துவமனைகளில் சி. டி. ஸ்கேனர்கள் அமைத்தல்.

511—(*வினா எண் 1892)—திரு. மு. தங்கமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தலையின் உட்பகுதியை துல்லியமாக காட்டும் சி. டி. ஸ்கேனர் கருவி தாலூகா மருத்துவமனையில் அமைக்க ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, சி. டி. ஸ்கேனர் கருவி இதுவரை எந்த மாவட்ட மருத்துவமனைகளிலும், தாலூகா மருத்துவமனைகளிலும் அமைக்கப்படவில்லை. அதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் தற்பொழுது விலையுயர்ந்த இக்கருவி சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலும், தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் மட்டும்தான் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சி.டி. ஸ்கேனர் மற்ற மாவட்டத் தலைநகரங்களிலும், தாலூகா மருத்துவமனைகளிலும் அமைக்கின்ற செயற்குறிப்பு இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய விலை எவ்வளவு? இதனால் மருத்துவத் துறைக்கு அதிகமான செலவுத் தொகை ஏற்படுமா? கிராமப்புறங்களிலும், மற்றும் பல்வேறு இடங்களிலும், ஹெட் இன்ஜுரி ஆகிறவர்களுக்கு, இந்த ஸ்கேனர் இல்லாத காரணத்தினால், அதிக அளவுக்கு உயிர்சேதம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். இதைக் கருத்திற் கொண்டு, மாவட்டத் தலைநகரங்களில் அதனை அமைக்கின்ற பணியாவது அரசு மேற்கொள்ளுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இல்லை என்றுதான் சொன்னேன். ஏற்கனவே, நம்முடைய மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒப்புதலுடன் அவருடைய ஆணையின் பேரில் இங்கே ஒரு அறிவிப்பைக் கொடுத்தேன். ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனையிலேயும் கூட, இதை ஏற்படுத்தி, ஹெட் இன்ஜுரி டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி, சி. டி. ஸ்கேனர் கொடுக்கப்பட்டு, அது நல்ல வகையில் செயல்படுத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறோம். இது படிப்படியாக ஃபேஸ்டு மேனரில் தான் செய்ய முடியும். எவ்வளவு செலவு என்று கேட்டார்கள். ஏற்கனவே வாங்கிய சி.டி. ஸ்கேனரைப் பொறுத்தவரையில், ஹெட் ஸ்கேனர் 41 இலட்சம் ரூபாய், டோட்டல் பாடி ஸ்கேனர்





என்பது 108 இலட்சம் ரூபாய். இப்போது சில நாட்களாக இந்த ஸ்கேனருடைய விலை குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அது குறைந்திருக்கிறதா என்ற அந்த விவரம் தெரிந்து கொண்ட பிறகு தான் அதைப் பற்றிச் சொல்ல முடியும்.

டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விலை உயர்ந்த சி. டி. ஸ்கேனர் வாங்கும்போது, தலை தப்பினால் போதும் என்று ஹெட் ஸ்கேனர் மட்டும் வாங்கி விடுகிறார்கள். ஒரு சில இடங்களில், உடல் முழுவதும் பயன்படும், இன்னும் சிறப்பான அதிக விலை உடைய டோட்டல் பாடி ஸ்கேனர் இனிமேல் வாங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த டோட்டல்பாடி ஸ்கேனருக்கும், ஹெட் ஸ்கேனருக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஹெட் ஸ்கேனர் என்பது, திடீரென்று ஆபத்து ஏற்படும் நேரத்தில் பயன்படுத்த வேண்டியது. எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் பாடி ஸ்கேனர் வாங்குவது என்பது, 'Total body scanner is economically not possible' அமெரிக்கா போன்ற நாடுகளிலேகூட எல்லாயிடங்களிலேயும் கிடையாது. ஹெட் ஸ்கேனர் என்பது, திடீரென்று ஹெட் இன்ஜுரி ஏற்பட்டால், உடனடியாகப் பார்ப்பதற்காகப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அல்ட்ராசானிக் ஸ்கேனிங் என்பது, நமக்குத் தெரியும். ஒரு வாரத்திற்குப் பிறகு கூட கண்டுபிடிக்க வாய்ப்பு இருக்கிறது. பாடி ஸ்கேனர் என்பது ஓரிரு இடத்தில் இருந்தால் போதும்; வளர்ந்த நாடுகளில்கூட அப்படித்தான் செய்கிறார்கள். ஆனால் ஹெட் ஸ்கேனர் என்பதை நிறைய ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இந்த ஸ்கேனிங் மெஷின்களைப் பொறுத்தவரையில், ஹெட் ஸ்கேனராக இருந்தாலும் சரி, அல்லது முழு உடலையும் பார்க்கக்கூடிய அந்த ஸ்கேனராக இருந்தாலும் சரி, இதற்கான இயந்திரங்கள், இப்பொழுது சென்னையிலே இருக்கும் பெரிய மருத்துவமனையைத் தவிர, மற்றும் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைத் தவிர வேறு எந்த மாவட்ட மருத்துவமனைகளிலும் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மருத்துவக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு, அவர்கள் தங்களுடைய பயிற்சியைப் பெறுகின்ற வகையில், மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவமனைகளிலேயாவது, அது என்னதான் விலையானாலும் அந்த மெஷின் இல்லாமல் இருப்பது ஒரு குறையாக இருப்பது அமைச்சருக்குத் தெரியாதா? கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஹேமோடயலிசஸ் மெஷின் இல்லாமல் இருந்து, அண்மையில்தான் வாங்கப்பட்டது. ஆனால் இப்பொழுது சொல்லப்பட்ட அந்த இரண்டு மெஷின்களும் அங்கே இல்லை.

இவைகள் இருந்தால் மருத்துவக் கல்லூரியில் படிக்கின்றவர்களுக்குப் பயிற்சி கிடைக்கும். நேற்றைக்குக்கூட, கர்ப்பிணிப் பெண் தன்னுடைய வயிற்றில் இருக்கும் குழந்தை எப்படியிருக்கிறது என்று பரிசோதித்துப் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு அந்த ஆஸ்பத்திரிக்குப் போய் அங்கே ஸ்கேனிங் மெஷின் இல்லாத காரணத்தால், தனியார் மருத்துவமனையில் சென்று 100 ரூபாய் சார்ஜ் கொடுத்துப் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதை நான் என் கண்களால் பார்த்தேன். ஆகவே, உடனடியாக, மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்த மருத்துவமனைகளிலேயாவது, பயிற்சியை உத்தேசித்து, இந்த மெஷின்களை, செலவு பார்க்காமல் அரசு வாங்கி வைக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு விஷயங்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இந்த ஸ்கேனரைப் பொறுத்தவரையில், மருத்துவக் கல்லூரிகளோடு இணைக்கப்பட்ட எல்லா மருத்துவமனைகளிலேயும் வாங்கி வைக்க வேண்டுமென்பது தான் நம்முடைய கொள்கை. அதைத்தான் இப்பொழுது நான் சொன்னேன். அதுமட்டுமல்லாமல், மாவட்ட மருத்துவமனைகளில் வாங்க வேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமை எந்த மாநிலத்திலேயும் இல்லை. ஆனால், நமக்கிருக்கின்ற நிதிநிலைமையைப் பொறுத்துத்தான் இவைகளை நாம் வாங்க முடியும். இப்பொழுது சென்னையில் ஒரு இடத்தில் வாங்கி இருக்கிறோம். அதுகூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேரடியாக வாங்க வேண்டுமென்று ஆணையிட்டதன் காரணமாகத்தான் வாங்க முடிந்தது. ஏனென்றால், சாதாரணமாக எந்த மாநிலமாக இருந்தாலும், கொஞ்சம் பைனான்ஷியல் கன்ஸ்ட்ரெயின்ஸ் என்ற நிலை வரத்தான் செய்யும். அந்த கன்ஸ்ட்ரெயின்ஸைப் பார்க்க வேண்டாமென்றும், இது முக்கியமான கருவி, இதைத் தாராளமாக வாங்கலாம் என்று உத்தரவு போட்டதன் காரணத்தால் மூன்று ஸ்கேனர்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆகவே, நல்ல முன்னேற்றம் என்றுதான் சொல்ல வேண்டும். கோவையைப் பொறுத்தவரையில், கோவை மருத்துவக் கல்லூரியோடு இணைந்த அந்த மருத்துவமனைக்குக்கூட வெகு விரைவில் கிடைக்கும். மூன்றாவதாக, கர்ப்பிணிப் பெண்ணைப் பற்றிச் சொன்னார்கள். கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஸ்கேனிங் செய்யக் கூடாது.

‘Body scanning should not be done for Pregnant lady. Ultrasonic scanning will be done.’

Ultrasonic scaning தான் செய்ய வேண்டும். யாராவது டாக்டர் ஸ்கேனிங் செய்து நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ரூபாய்களை வாங்கியிருந்தால் அந்த பேஷண்டை டாக்டர் ஏமாற்றியிருக்கிறார் என்றுதான் பொருள்.



டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலேயும் இந்த ஹெட் ஸ்கேனர்களை அமைக்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்கள். இந்த நடப்பு நிதியாண்டிற்குள்ளேயே அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலேயும் அது வைக்கப்படுமா? அதை இயக்குவதற்கு இதற்கு முன் நியூரோ சர்ஜன்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்களா? அல்லது இவைகளை வைத்தபிறகுதான் பயிற்சி அளிக்கப்படுமா? இதுசம்பந்தமாக டெக்னிஷியன்களுக்குத் தமிழக அரசு பயிற்சி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆண்டுதோறும் நாம் நியூரோ சர்ஜன்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம், தேவைப்படும் அளவிற்கு, தேவைக்கேற்ப நியூரோ சர்ஜன்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும், பேஸ்ட் புரோகிராமாக, நிதி நிலைமைக்கு ஏற்ப, அந்த எல்லைக்குள்ளே எச்சரிக்கையாகச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், வேகமாகச் செயல்படுத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள், விடைகள் நேரம் சிறிது நீடிக்கப்பெறுகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கர்ப்பிணிப் பெண்ணை ஸ்கேனிங் செய்யவில்லை, அல்ட்ராசோனிக் தான் செய்யமுடியுமென்று அமைச்சர் சொன்னார், இருக்கலாம். எனக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாது. நான் ஒரு ‘லேமேன்’. எனக்குக் கிடைக்கிற விஷயத்தை வைத்துதான் நான் சொல்கிறேன். அந்தப் படங்களையும் நான் பார்த்தேன். கர்ப்பப் பையிலே சிசு எப்படி ஒட்டி இருக்கிறது என்று நானே பார்த்தேன். ஒருவேளை, அது அல்ட்ராசோனிக் ஆக இருக்கலாம். கோவை மருத்துவக் கல்லூரியோடு இணைந்த டாக்டர்களுக்கு பயிற்சி கொடுக்கிற நிலையத்தில் அக்கருவி இல்லையென்று சொன்னேன். அதுதான் பிரச்சினை. நான் ஸ்கேனிங்கா என்ற அந்தப் பிரச்சனைக்கு வரவில்லை. அந்த டெக்னிக்கலாட்டீசுக்குள் போகவில்லை. இல்லை என்ற பிரச்சனைக்குத்தான் வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதற்காகச் சொன்னேன் என்றால், எப்படி நம்மை அறியாமல், அநாவசியமாக நாம் வதந்தியைப் பரப்புகிறோம் என்பதற்காகத்தான். ஸ்கேனிங்கில் உருவமே தெரியாது.

ஸ்கேனிங்கில் டாட், டாட், டாட்டாகத்தான் தெரியுமே தவிர, உருவமே தெரியாது. அதற்காகத்தான் நான் சொன்னேன். அல்ட்ராசோனிக் என்று தான் நான் சொன்னேன். அதற்கும் இதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அல்டராசோனிக் கருவியின் விலை ரொம்பவும் குறைவு. அல்ட்ராசோனிக் எக்குவிப்மென்ட் ஆங்காங்கு வைக்க இருக்கிறோம். அதற்காகத் தான் நான் சொல்கின்ற நேரத்தில், அரசு ஆஸ்பத்திரிகளில் ஸ்கேனிங் இல்லை, தனியார் மருத்துவமனைகளில் இருக்கிறது என்று விளம்பரத்திற்குப் பயன்படுத்துவார்கள்; அதற்கு நம்மை ஆட்படுத்திவிட வேண்டாமென்பதற்காகத்தான் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று சொல்கிறேன். அநாவசியமாக, அரசாங்க மருத்துவமனையைப் பற்றித் தவறாகச் சொல்ல வேண்டியதில்லை. தனியார் மருத்துவமனையை விட, அரசாங்க மருத்துவ மனையிலே நல்லமுறையிலே செய்கிறார்கள். ஆனால், விளம்பரம் இல்லை. தனியார்கள் விளம்பரம் செய்து அரசு மருத்துவமனைகளுக்கு மாசு சற்பிக்குமாறு செய்கிறார்கள். ஆகவே, அதற்காகச் சொன்னேன். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 512 மற்றும் 513 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

**வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.**

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

(அ) அவை நடந்து கொண்டிருக்கும்போது அவையில் அறிவிக்காது, புது மின்சாரத் திட்டங்கள் குறித்த தகவல்களை பத்திரிகையாளர்களுக்கு துறை அதிகாரி அறிவித்திருப்பது குறித்து.

திரு என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை அண்மைக் காலத்திலே இருந்து கொண்டிருக்கிறது. மின்சாரப் பற்றாக் குறையைப் போக்கவேண்டும், புதிய திட்டங்கள் கொண்டு வர வேண்டுமென்பதிலே இந்த மாமன்றத்திலே இருக்கிற அமைச்சர் பெருமக்களும் உறுப்பினர்களும் ஒரே அணியிலே, நாங்கள் இருக்கிறோம். அண்மைக் காலங்களிலே, இந்த மின்சார அபிவிருத்தி சம்பந்தமான இரண்டு திட்டங்களைப் பற்றிய செய்திகளை நான் செய்தி ஏடுகளிலே பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் பார்த்திருப்பார்கள். சடந்த மாதம் ரூ. 356 கோடி செலவிலே 210 மெகாவாட் மின்சாரம் தயாரிப்





பதற்கான ஒரு திட்டம், தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலே விரிவாக்கத் திட்டத்தின் மூலமாக, இந்த அரசாலே அனுப்பப்பட்டு திட்டக் குழு ஏற்றுக் கொண்டதாக ஒரு செய்தியைச் செய்தி ஏடுகளிலே பார்த்தேன்.

அதைப் போலவே, இன்றைக்குச் செய்தி ஏடுகள் மூலமாக, நம்முடைய வடசென்னை எண்ணூரிலே, அனல் மின்சார நிலையம் ரூ. 548 கோடி செலவிலே 630 மெகாவாட் மின்சாரம் தயாரிப் பதற்கான திட்டத்திற்கு திட்டக் குழு ஒப்புதல் அளித்திருப்பதாக ஒரு செய்தியைப் பார்த்தேன்.

சட்டமன்றப் பேரவை சடந்த சில வாரங்களாகவே கூடிக் கொண்டிருக்கிறது. முக்கிய அறிவிப்புகள், தமிழகத்தில் எதிர் காலத்தைப் பொறுத்தவரையிலும், அதுவும் இதுபோன்ற நல்ல அறிவிப்புகளை எல்லாம் சபைக்குத்தான் முன்னால் அறிவிக்க வேண்டுமென்ற மரபு இருந்துங்கூட இங்கே மின்சாரத் துறை அமைச்சர் நாள்தோறும் சட்டசபைக்கு வந்து மின்சார நிலைப் பற்றி நாங்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்டு, அதற்கு பதில் சொல்கின்ற இந்த நேரத்திலும், இதுமாதிரியான செய்திகளைச் சபைக்குச் சொல்வது மரபாகும். அப்படியில்லாமல், வெளியிலே சில பத்திரிகையாளர்களை மட்டும் கூப்பிட்டு அதிகாரிகள் அறிவிப்பது நல்ல ஜனநாயக மரபாகுமா? சபைக்கு முதலில் அறிவிக்கிற மரபு இனிமேல் தொடர்ந்து கடைபிடிக்கப்படுமா என்பதை உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காலையில் பத்திரிகையைப் பார்த்தபொழுதே இந்தப் பிரச்னை வரும் என நான் எதிர்பார்த்தேன். மாண்புமிகு சித்தன் அவர்கள் சொன்னதைப் போல, இத்தகைய முக்கியமான அறிவிப்புகளைப் பேரவை கூடுகிறபொழுது, பேரவையிலே அறிவிப்பதுதான் பொருத்தம். இந்தத் திட்டங்கள் திட்டக் குழுவினால் அனுமதிக்கப் பட்டன என்ற தகவல் அடிப்படையிலே மட்டும் ஒருவேளை மின் வாரியத் தலைவர் இந்தச் செய்தியைத் தெரிவித்து இருக்கிறாரா என்று தெரியவில்லை. ஏனென்றால், அதற்கான கடிதங்கள் ஒன்றும் என்னிடத்திலே இன்னும் வரவில்லை. ஒருவேளை, அவர்கள் டெல்லியிலே சென்ற போது பெற்ற தகவலைச் சொல்லியிருப்பார்களோ என்று கருதுகிறேன். ஒன்று அது உண்மையிலே அனுமதிக்கப்பட்டிருக்குமானால் அந்தத் தகவல் கிடைத்தால், அவைக்குத் தெரிவிக்கிறேன். அப்படி அனுமதிக்கப்படாமல், அல்லது அனுமதிக்கப்பட்டு எனக்குத் தெரிவிக்கப்படாமல் வெளியிலே அதிகாரிகள் இப்படி அறிவித்திருப்பார்களானால் அது தவறு. அந்தத் தவறு வராமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளும்.

128—198—3A

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்பொழுதுதான் எங்களுக்கு ரொம்பச் சந்தேகமாக இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த பிரச்னையாக இருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே எழுந்து சொல்ல வேண்டுமென்று இருந்தேன். ஒரு கடிதம் வந்திருந்தால் அமைச்சரிடம் கொடுக்க வேண்டும். அமைச்சர் தான் எந்த அவையிலே அறிவிப்பதாக இருந்தாலும் அறிவிக்கவேண்டும். ஜனநாயகத்திலே அமைச்சர் மூலமாகத்தான் எந்த பாலிசி ஸ்டேட்மெண்டும் வெளியே வருகிறது. அதிகாரிகள் மக்களால் தேர்ந்[illegible]வர்கள் அல்ல. அவர்கள் மாதச் சம்பளம் வா[illegible] மக்களுக்கு வேலை செய்பவர்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து அவர்களுக்கு ஏதாவது கடிதம் வந்தால் கூட அதை அமைச்சர்களிடம்தான் கொடுக்கவேண்டும். அவர்கள் இப்படி பத்திரிகையில் போட்டதை அமைச்சர் சார்பிலும் சபையின் சார்பிலும் கண்டிக்கிறேன், The Officers have no business to go to the Press and issue Policy statements. They are bureaucrats and we are democrats.

(ஆ) மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுதல்.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே குறுவை சாகுபடி விரைவாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் மேட்டூர் அணையில் தண்ணீர் அதிகமாக உயர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எப்போது மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும்? அதை இந்த மாமன்றத்தின் மூலம் காவேரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அறிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தற்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கே இல்லை.

(இ) காங்கிரஸ் நூற்றாண்டு விழாவையொட்டி கதர்த் துணிக்கு தள்ளுபடி அளித்தல்.

திரு. தி.கே. ஜெ.பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியா விடுதலை பெறுவதற்கு காரணமாக இருந்த காங்கிரஸ் தோற்றத்திற்கு தமிழ்நாடு ஒரு காரணமாக இருந்தது. பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் பிறந்த தமிழகத்தில் வருகிற 15-ந் தேதி முதல் காங்கிரஸ் நூற்றாண்டு விழா நடைபெறவிருக்கிறது. அதையொட்டி, இந்தியா விடுதலைப் பெறுவதற்கு காரணமாக இருந்த தியாகிகளின் நினைவாக கதர் துணி விற்பனைக்கு அதிகமான தள்ளுபடி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி தனியாக அரசினருக்குத் தெரியப்படுத்திக் கொண்டுவாருங்கள்,



## ஒத்திவைப்புத் தீர்மானம்.

புகளூர் அரசு காகிதத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தும் நட்டமும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி, ஜெ. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து ஆகியோர் ''தமிழக அரசுக்குச் சொந்தமான புகளூர் காகிதத் தொழிற்சாலையில் நேற்றிரவு ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில் ரூபாய் ஒரு கோடி மதிப்புள்ள பத்திரிகைக் காகிதம் (நியூஸ் பிரிண்ட்) எரிந்து சாம்பலானது குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தமிழக அரசுக்குச் சொந்தமான இந்த பெரிய காகிதத் தொழிற்சாலை தமிழ்நாட்டில் ஒரு பெரிய நிறுவனம். நாம் எல்லாம் மகிழ்ச்சி அடையக்கூடிய முறையில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மூலதனத்தில் நடத்தக்கூடிய ஒரு பெரிய தொழிற்சாலை அது. அதன் கட்டுமான வேலை முடிந்து அண்மையில்தான் உற்பத்தியைத் தொடங்கியது. இன்னும் முழுமையாகக் கட்டுமான வேலை முடியவில்லை. போன 29-ந்தேதி திருச்சியிலிருந்து திரும்பி வரும்போது வெளியிலே இருந்து அந்தத் தொழிற்சாலையைப் பார்த்தேன். அந்தத் தொழிற்சாலையில் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான தீ விபத்து [illegible] ஏற்பட்டது என்பது கவலைக்குரிய ஒரு விஷயம். அது [illegible] செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட [illegible] தேவைப்பட்ட மூலப்பொருளான Pulp முழுமையாக எரிந்துவிட்டது என்று ஒரு செய்தி சொல்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

2500 டன் காகிதம் உற்பத்தி ஆகி, ஸ்டாக் வைக்கப்பட்டிருந்தது. அது எல்லாம் எரிந்துவிட்டது என்று இன்னொரு செய்தி சொல்கிறது. பத்திரிகையில் வந்திருக்கிற ஒரு ' அலார்மிங் நியூஸ் ' என்னவென்றால் 40 கோடி ரூபாய் மதிப்புக்குமேல் அந்தத் தொழிற்சாலையின் ஒரு பெரும் பகுதி நெருப்பு பிடித்து எரிந்து நாசமாகிவிட்டது என்பது. இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் [illegible] நாங்கள் அதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரமாக ஏற்படுத்த வேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில் இந்தப் பெரிய தொழிற்சாலையில் பாதுகாப்பு குறைவாக இருந்து, அதன் [illegible]

இந்த விபத்து ஏற்பட்டதா? இந்த அரசாங்கத் தொழிற்சாலையில் இப்படி கவனக் குறைவு ஏற்பட்டு அதன் காரணமாக நெருப்புப் பிடித்துக்கொண்டதா? ஏன் இந்த விபத்து ஏற்பட்டது, எப்படி இந்த தீ விபத்து ஏற்பட்டது என்பதுபற்றி பரிபூரணமாக நாம் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 10—10)

அத்தோடு காகிதத் தொழிற்சாலையில் இவ்வளவு பெரிய தீ விபத்து ஏற்பட்டால் அதிலே உழைப்பாளிகள் கூட சிக்கிக்கொண்டு கஷ்டத்திற்கு ஆளாகக்கூடிய சூழ்நிலை உள்ள அவ்வளவு பெரிய தொழிற்சாலையாகும் அது. எனவே அந்தத் தொழிற்சாலையிலே இன்னும் எக்ஸ்ட்ராடினரி கேர் எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டிய அவசியம் இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு இடத்தில் கூட இவ்வளவு கவனக் குறைவாக இப்படி ஒரு தீ விபத்து ஏற்பட்டு அதன் காரணத்தால் கோடிக்கணக்கான பணம் நஷ்டம் அடையக் கூடிய நிலைமை வந்திருக்கின்றது. எனவே இதற்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிய வேண்டி இருக்கின்றது. ஒரு தொழிற்சாலை உருவாக்கப்படுகின்றது என்றால் நாட்டு மக்களின் பணத்தை மூல தனமாகப் போட்டு சமுதாயத்திற்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்து சீக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு காரியத்தில் பொறுப்பாக இருக்கக்கூடிய நிர்வாகிகள் பொறுப் பாக இருந்தால்தான் அந்தத் தொழிற்சாலையில் மேன்மையும், வளர்ச்சியும் ஏற்படும். ஆகவே அவர்கள் ஏதோ ஸ்லாக்னஸ் என்ற வகையிலே கவனக் குறைவாக இருந்திருக்கிறார்களா என்பதை அறிய வேண்டி இருக்கின்றது. அப்படிப்பட்ட முக்கியமான விஷயம் இந்த நெருப்பு பற்றிய பிரச்சினையாகும். எனவே இது பற்றி எல்லாம் கண்டறிய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும் இருக்கின்றது, நம் எல்லோருக்கும் இருக்கின்றது.

மேலும் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட ஆபத்துகள் மேற் கொண்டும் வராமல் தடுக்க நாம் இனிமேல் முன்ஜாக்கிரதை நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கின்றது. ஆகவே இந்த விவரங்களை எல்லாம் நாம் விளக்கமாக எதிர்காலம் பாதுகாப்பை உத்தேசித்து விவாதிக்கவேண்டியிருப்பதால் இந்த அவையில் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இதுகுறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் புகளூரில் உள்ள தமிழ் நாடு அரசுக்குச் சொந்தமான காகிதத் தொழிற்சாலையில் 2—7—1985 அன்று திடீரென தீ பிடித்தது குறித்து அரசுக்கு இது வரையில் கிடைத்த தகவல்களை இந்தப் பேரவைக்கு அளிக்க விரும்புகிறேன். நானே நாளைக்கு அந்தக் காகிதத் தொழிற்





சாலைக்கு நேரில் சென்று பார்வையிட இருக்கிறேன். புகளூர் காகிதத் தொழிற்சாலையில் திறந்தவெளிக் கிடங்கில் வைக்கப்பட் டிருந்த இறக்குமதி செய்யப்பட்ட காகிதக் கூழ் 2,500 டன் என்ற அளவுக்கு தீயில் நாசம் ஆகியுள்ளது. 2—7—85 இரவு 9-40 மணி அளவில் தீ பிடித்தது. மறுநாள் 3—7—85 அதிகாலை 5 மணி அளவில் 13 தீயணைப்பு வண்டிகள் தீயை அணைத்தன. இதனால் சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரையிலும் நஷ்டம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. அவை யெல்லாம் இன்ஷ்யூர் செய்து வைக்கப்பட்டிருக்கின்றது. தீ பிடித்த தற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. அந்தத் தகவல் கிடைத்தவுடன் நானே அங்கே நிர்வாக இயக்குனரை நேற்று முன் தினம் அனுப்பியிருக்கிறேன். அவர்கள் சென்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

புகளூரை நேரடியாகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள இயலாத காரணத்தால் நேரடியாக விவரங்களை அறிய முடியவில்லை. எனவே திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவரிடத்திலே கேட்டு அங்கே எவ்வளவு தூரம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை விசாரித்தேன். திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டது போல் 2, 3, பத்திரிகைகள் 2, 3 விதமான செய்திகளைப் பிரசுரித்திருக்கின்றன. 40 கோடி ரூபாய் நஷ்டம் என்ற செய்தியைப் பார்த்தவுடன் எனக்கே அதிர்ச்சியாகத் தான் இருந்தது. அங்கே நேரடியாக விசாரித்துப் பார்த்ததில் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயிருந்து செய்தியைப் பெற்றிருக்கிறேன். ஒன்றரைக் கோடி அளவுக்குத்தான் நஷ்டம் இருக்க முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக செய்தியைப் பெற்றிருக்கிறேன். இன்று மாலையில் நான் அங்கே இருக்கிறேன். இப்போது கூட தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு தகவல் வந்தால் உடனடியாக இந்த அவைக்கு அதனை அறிவிக்கிறேன். நாளை மறுதினம் இந்த அவைக்கு நான் அதைத் தரத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. அறிக்கை அளித்தல்.

### 112-வது விதியின் கீழ் தொழில் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சோ. அழகர்சாமி, எம்.எல்.ஏ. அவர்கள் ஆலங் குளம் சிமிண்டு ஆலையில் கழிவுப் புகையால் அந்த ஆலையை அடுத்துள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள்

அதிகமான நஷ்டத்திற்குள்ளாகியுள்ளது. அரசுக்குத் தெரியுமா என்பது குறித்து விடுத்த உடுக்குறியிட்ட வினா எண் 239 (பழைய எண் 19599)-க்கு அமைச்சர் (சட்டம் மற்றும் தொழில்) அவர்கள் 9—3—1984-ஆம் தேதியன்று சட்ட மன்றப் பேரவையில் அளித்த பதிலுக்குரிய திருத்த அறிக்கை பின்வருமாறு :—

''தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்தின் ஆலங்குளம் சிமிண்டு ஆலையில் மின்னியல் தூசி தடுப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் தூசிகள் தடுக்கப்பட்டு கழிவுப் புகையால் விவசாய நிலங்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை. ஆலங்குளம் சிமிண்டு ஆலையில் இரண்டு சூளைகளில் தூசி பரவாவண்ணம் தடுக்கும் பொருட்டு உயரமான புகை போக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த முறை தற்போது நம் நாட்டிலேயே தயாரிக்கப்படும் மின்னியல் தூசி தடுப்பான் (எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர்) முறையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் திறன் குறைந்து காணப் படுகிறது. எனவே, தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் மேற்சொன்ன மின்னியல் தூசி தடுப்பான்களை (இ.எஸ்.பி.) ஆலங்குளம் சிமிண்டு ஆலையில் சூளைகளிலும் அரவை இயந்திரங்களிலும் பொருத்தி தூசி பரவாது தடுக்க சரியான நடவடிக்கைகள் எடுத்துள்ளது. மின்னியல் தூசி தடுப்பான்கள் ஆலங்குளம் சிமிண்டு ஆலையின் சூளைகளிலும், அரவை இயந்திரங்களிலும் பொருத்தும் பணி முழுவதும் முடிவடைந்து விட்டது. இதன் பயனாக ஆலையிலிருந்து தூசி வெளிப்படுவதும் மற்றும் ஆலையில் சுற்றுப் புறங்களிலுள்ள காற்று அசுத்தப்படுத்தப்படுவதும் முழுவதும் நிறுத்தப்பட்டு விட்டது. எனவே, ஆலங்குளம் சிமிண்டு ஆலையின் கழிவு புகையால் அந்த ஆலையை அடுத்துள்ள விவசாய நிலங்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) கோவையில் மின்கட்டணவரி உயர்வு காரணமாக சிறிய தொழிற் சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் மு. இராமநாதன், மா. சின்னராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அறிக்கை கொடுத்த இரண்டு உறுப்பினர்களும் அவையில் இல்லாததால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கே. பி. இராமலிங்கம் அவர்கள் அதனை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.





டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியில் நிர்வாகம் புதிதாக விதித்துள்ள மின் கட்டண வரி உயர்வு காரணமாக 5000-த்திற்கும் மேற்பட்ட சிறிய தொழிற்சாலைகள் பாதிக்கப் பட்டுள்ளநிலை குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

25—5—85-நாளிட்ட அரசு ஆணை (நிலை) (பொதுப்பணித் துறை) எண் 793-ல் 1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதியி லிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழகம் முழுவதும் வழங்கப் படும் மின்சார விநியோகத்திற்காக வசூலிக்கப்படும் கட்டண விகி தங்களை உயர்த்தியுள்ளது. வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்சா ரத்திற்கான கட்டண விகிதத்தில் எவ்வித மாறுதலும் இல்லையென் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2. சிறு தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டிலும், 5 குதிரை மின் சக்தி வரையுள்ள மோட்டார்கள் உபயோகிக்கும் சிறு தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மின்சார விநியோகத்திற்கு ஏற்கனவே வசூலிக்கப்படும் கட்டணம் போல் யூனிட் ஒன்றுக்கு 55 பைசாவாகவே இருக்கும். 5 குதிரை மின் சக்தியை விட கூடுத லாக உபயோகிக்கும் சிறு தொழிற்சாலைகளுக்கு சென்னை மாநகர் நீங்கலாக, மற்றப் பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சார விநியோகத் திற்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 71 பைசாவிலிருந்து 80 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து கோயம்புத்தூர் மாநகராட்சி மின்சாரத்தை மொத்தமாக வாங்கி சிறு தொழிற் சாலைகளுக்கு வழங்குகிறது. பொதுவாக யூனிட் ஒன்றுக்கு 90 பைசா விதம் தற்போது வசூலிக்கிறது. முதல் 20 யூனிட்டுகளுக்கு ரூ. 25-ம், அதற்கு மேல் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 90 பைசா வீத மும் வசூல் செய்கிறது. ஜூலை மாதம் 1-ஆம் தேதி முதல் இந்த மின் கட்டண வீதத்தை உயர்த்துவதற்கு மாநகராட்சி மன்றம் தீர் மானித்துள்ளது. முதல் 20 யூனிட்டுகளுக்கு ரூ. 30/-என வசூலிக் கப்படும். அதற்கு மேல் ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ. 1—20 வீதம் வசூலிக்கப்படும். ஒரு குதிரை மின் சக்தியும் அதற்கு குறைந்த சக்தியும் உள்ள மோட்டார்களுக்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ. 15 ஆக இருக்கிறது. இது ஜூலை 1-ஆம் தேதி முதல் ரூ. 20 என்ற வீதத்தில் வசூலிக்கப்படும்.

[1985 ஜூலை 4

4. வெல்டிங் செட் (Welding Set) வைத்திருப்பவர்களிடமிருந்து இதுவரை முதல் 15 யூனிட்களுக்கு ரூ. 25 வீதம் வசூலிக்கப்படுகிறது. அதற்கு மேல் யூனிட் ஒன்றுக்கு ரூ. 1-10 வீதம் வசூலிக்கப்படுகிறது. கே. வி. ஏ. ஒன்றுக்கும், அதற்கும் குறைந்ததற்கும், குறைந்தபட்சமாக ரூ. 25 வசூலிக்கப்படுகிறது. ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து வெல்டிங் செட் ஒன்றுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ. 1-44 வீதம், முதல் 20 யூனிட்டுகளுக்கு ரூ. 36 என வசூலிக்கப்படும். அதற்கு மேல் ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ. 1.44 வீதம் வசூலிக்கப்படும். கே. வி. ஏ. ஒன்றுக்கும் அதற்கும் குறைந்ததற்கும் குறைந்த பட்சமாக ரூ. 24 வசூலிக்கப்படும்.

5. மின்சார உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போவதால் உற்பத்திச் செலவு (Overall cost) உயர்ந்துள்ளது. இதனால் இழப்பு கூடுதலாகிறது. மின்சார வாரியம் இழப்பை ஈடுசெய்ய மின்சார விநியோகத்திற்காக வசூலிக்கப்படும் கட்டணங்களை மேற்கண்டவாறு உயர்த்த கொள்கையளவில் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி 25-5-85 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மின்சார வாரியத்திடமிருந்து மொத்தமாக மின்சாரத்தை வாங்கி கோயம்புத்தூர் மாநகராட்சி தனது எல்லைக்குள் மின்சாரம் உபயோகப்படுத்தும் பல்வேறு வாடிக்கையாளருக்கு வழங்குகிறது. மின்சார வாரியம் மின் கட்டணத்தை உயர்த்தியிருப்பதால், கோயம்புத்தூர் மாநகராட்சியும் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வீடுகளுக்கு பயன்படுத்தும் குறைந்த அழுத்த மின்சாரத்திற்காக கட்டண விகிதம் யூனிட் 1-க்கு 65 பைசா என்றிருப்பதில் மாற்றம் எதுவும் செய்யவில்லை. வாரியத்தின் கட்டண உயர்வினால் ஏற்படக்கூடிய இழப்பை ஈடு செய்வதற்காக தொழில்களுக்கு பயன்படுத்தப்படும் உயர் மின் அழுத்த மின்சாரக் கட்டணத்தை மாநகராட்சி உயர்த்த தீர்மானித்துள்ளது.

6. 1-7-85 முதல் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் புதிய கட்டண விகிதங்கள் தொழிற்சாலைகள், தொழிற்சாலை அல்லாதவை ஆகிய பிரிவுகளுக்கு கீழ்க்கண்டவாறு இருக்கும்:—

| | | |
|---|---|---|
| அ. தொழிற்சாலைகள் | .. | ஒவ்வொரு கே. வி. ஏ. க்கு ரூ. 65/- யூனிட் ஒன்றுக்கு 60 பைசா. |
| இ. தொழிற்சாலை அல்லாதவை. | | ஒவ்வொரு கே. வி. ஏ. க்கு ரூ. 65/- யூனிட் ஒன்றுக்கு 80 பைசா. |



1985 ஜூலை 4]

கோயம்புத்தூர் மாநகராட்சி விநியோகிக்கும் மின்சாரத்தைப் பெறும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை.

| | | வாடிக்கையாளர் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. குறைந்த மின் அழுத்த மின்சாரம் பயன்படுத்துவோர். (வீட்டு உபயோகம் மற்றும் சிறுதொழில்கள்) | .. | 55,123 |
| 2. உயர் மின் அழுத்த மின்சாரம் பயன்படுத்தும் பெரும் தொழில்கள் | .. | 27 |
| மொத்தம் | .. | 55,150 |

குறைந்த மின் அழுத்த மின்சாரம் வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்துவதால் கட்டண உயர்வு எதுவும் பொது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு செய்யப்படவில்லை.

எனவே, உயர் மின் அழுத்த மின்சாரம் பயன்படுத்தும் தொழில்களிடமிருந்து வசூலிக்கும் கட்டண விகிதத்தை உயர்த்த மாநகராட்சி உத்தேசித்துள்ளது.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் அதிகமான ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டிய அவசியம்.

திரு. மா. பணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் 1983-84-ல் 5,000 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கவிருந்த திட்டத்தில், 3,000-தான் அமைக்கப்பட்டது. தென்மேற்கு பருவக் காற்று, காலத்தில் தொடங்காத இன்றைய நிலையில் மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாததாலும், ஆற்று நீரை நம்பி இருந்த தஞ்சை மாவட்ட விவசாயிகள் இன்றைக்கு ஆழ்குழாய் கிணற்று நீரை நம்ப வேண்டியுள்ளதால், அவற்றை அமைக்கும் வேலை தஞ்சையில் துரிதமாக மேற்கொள்ளாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அரசு, வறட்சிப் பணி திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் 5,000 வடிமுனைக் குழாய் கிணறுகளை 1982-83 மற்றும் 1983-84-ல் ரூ. 7.50 கோடி செலவில் அமைக்கும் ஒரு சிறப்பு விரைவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வடிமுனைக்குழாய் கிணறுகள் அமைக்க நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டு வேளாண்மை பொறியியல் துறையால் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இத்திட்டம் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவாளர் மற்றும் வேளாண் பொறியியல் துறையால் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை பெறப்பட்ட விண்ணப்பங்கள் 3,578. அவற்றில் எடுத்துக் கொள்ளப்பட்டவை 3,409. அமைக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை 3,090. பயனற்றவை 81. ஆக இதுவரை அமைக்கப்பட்ட பயனுள்ள கிணறுகள் 3,009 ஆகும். இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 4.50 கோடி. இதற்கிடையில் வறட்சிப்பணிகள் முடிவடைந்துவிட்ட காரணத்தினால், இத்திட்டத்தை 1984-85லும் தொடர்ந்து விரைவுத் திட்டமாகச் செயல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி இத்திட்டத்தை மேற்கொண்டு வேளாண்மைப் பொறியியல் துறையின்கீழ் இயங்கும் இதரத் திட்டங்களுள் ஒன்றாக செயல்படுத்துமாறு வேளாண்மைப் பொறியியல் தலைமைப் பொறியாளருக்கு அறிவுரைகள் வழங்கியது. தஞ்சை மாவட்ட ஆட்சியாளர், இந்த 5,000 வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டத்தை எஞ்சியுள்ள 1,991 கிணறுகளையும், அமைத்து முடிக்கும் வண்ணம் மீண்டும் தொடர்ந்து செயல்பட ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டார். வறட்சிப்பணிகள் ஏற்கனவே முடிந்து விட்ட காரணத்தால் சிறப்புத் திட்டமாகத் தொடர இயலாது என்பதால் தேவையானால் புதியதாக இத்திட்டம் செயல்பட செயற்குறிப்புகள் அனுப்புமாறு அவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இதற்கிடையில் தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் இத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களில் நிலவள வங்கிகளில் கடன் பெற தேவையான நடவடிக்கைகள் முடிக்கப் பெற்றுள்ள 191 விண்ணப்பதாரர்களுக்கு விரைவில் கிணறுகள் அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புத் திட்டம் வறட்சியின் காரணமாகத்தான் தஞ்சை மாவட்டத்தில் கொண்டு வரப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறட்சி என்பது, ஜூன் மாதம் 12 ஆம் தேதி முதல், மேட்டூர் அணை என்றைக்கு திறந்துவிடப்படவில்லையோ அன்றையிலிருந்து வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. அங்கே ஏரி பாசனம் கிடையாது. கிணற்றுப் பாசனம் கிடையாது. மேட்டூர் அணையிலிருந்து வரும் காவிரி



தண்ணீரை நம்பித்தான் விவசாயிகள் விவசாயம் செய்துக் கொண்டிருக்கக் கூடிய நிலை. ரூ. 7.50 கோடி செலவில் ஆரம்பிக்கப்பட்டதற்கு 4.50 கோடி தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேட்டூர் தண்ணீர் திறந்து விடப்படாத நிலையில், இத்திட்டத்தில் எஞ்சியுள்ள 1,991 கிணறுகளையும் முடித்துக் கொடுப்பதோடு, அரசின் ஆய்வில் உள்ள 191 விண்ணப்பதாரர்களுக்கும் உடனடியாக கிணறுகள் அமைத்துக் கொடுக்க, இந்தச் சிறப்பு திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற அரசு துரித நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் வரக்கூடிய நிலையில்தான் இருக்கிறது. ஆகவே, தஞ்சை மாவட்டத்தில் வறட்சி வரக்கூடிய நிலை ஏற்படாது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற மற்றக் கருத்துக்கள் அரசின் தீவிர ஆய்வில் இருந்துக் கொண்டிருக்கின்றன.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு சிறப்பாக ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது என்பதிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் இரண்டு ஆண்டுகாலமாக ஆராய்வதை சற்று விரைவிலே ஆய்ந்து, தண்ணீர் இப்போது வந்திருந்தாலும் கூட, தண்ணீர் பாயாத பகுதிகளும் இருக்கும். எனவே அந்த வகையில், இந்த ஜூலை மாதத்திலேயே அந்தப் பணிகளை விரைவாகத் தொடங்கி மீதம் உள்ள 191 பேர்களுக்கும் கிணறுகளை அமைத்துக் கொடுத்து, தயவுசெய்து கொஞ்சம் சிரமப்பட்டாவது அந்த விவசாயிகளுக்கு அந்த திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி தந்து உதவி செய்வதற்கு அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 10—20)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அரசு அதைக் கனிவோடு பரிசீலிக்கும்.

6 வரவு செலவுத் திட்டம், 1985—86 வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 48 — ஊரகத் தொழில்கள்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 48-ஊரகத் தொழில்கள்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,30,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்,"

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,30,27,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. எஸ்.என். இராமசாமி : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, சாத்தான்குளம் வட்டம், பன்னம்பாறையில் சுண்ணாம்பு கற்கள் மிகுதியாக உள்ளதால் சிறிய அளவிலான சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,30,27,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

(ஆ) கோரிக்கை எண் 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,37,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

திரு. கே.எம். தங்கமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,37,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள், சிறுதொழில்கள் சம்பந்தமான கொள்கைக் *குறிப்புகள் அச்சடித்து புத்தக வடிவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

* 147–172-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



அவற்றை நான் படித்ததாக குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்ததற்குப் பின்னால் நான் இறுதியாக என்னுடைய பதில் விளக்கத்தை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் குறித்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு உலகத்தை எடுத்துக் கொண்டால் ஜப்பான் நாட்டிலே தான் சிறு சிறு தொழில்கள் அதிகமாக நடந்து அந்தப் பொருள்கள் எல்லாம் உலக நாடுகளில் விற்பனைக்கு வருவதை நாம் பார்க்கிறோம். அதற்கு முக்கிய காரணம் அந்த நாட்டிலே சிறு தொழில்களுக்கு கொடுக்கிற பல்வேறு ஊக்கங்களும், சலுகைகளும் தான். அது மட்டுமல்லாமல், ஜப்பானுடைய கடுமையான உழைப்பின் காரணமாகத்தான் அந்த நாட்டில் தயாராகிற பொருள்கள் சிங்கப்பூரிலும், பல்வேறு நாடுகளிலும், ஏன் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலும் கூட விற்பனைக்கு வருகின்றன. இதனை பார்க்கிறபோது ஜப்பானில் சிறு தொழில்களாக செய்யப்படுகிற பல்வேறு பொருள்கள் பெருவாரியாக விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தியாவை நாம் பார்த்தால் பஞ்சாப் மாநிலத்தில் சிறு தொழில்கள் நன்றாக நடைபெறுகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நம்முடைய மரியாதைக்குரிய துணை ஜனாதிபதி மாண்புமிகு வெங்கட்ராமன் அவர்கள் தொழில் அமைச்சராக இருந்தபோது தமிழகம் தொழில் துறையில் எல்லா மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது. அப்படிப்பட்ட நிலையை தமிழகம் மீண்டும் எய்த வேண்டுமென்று தான் காங்கிரஸ் கட்சி விரும்புகிறது. அப்படிப்பட்ட நிலையை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில், நம்முடைய அரசு ஊரகத் தொழில்கள் குறித்த கொள்கைக் குறிப்பிலே பல்வேறு திட்டங்களை தெரிவித்திருக்கிறது.

இத்தகைய துறையில் மிக அதிக முக்கியத்துவம் கொடுத்து மேலும் தொழில்களுக்கு வாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெரிய தொழில்கள் என்று இருந்தாலும், சிறு சிறு தொழில்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது மிகமிக அவசியம். அப்படிப்பட்ட நிலையை நாம் உருவாக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசில் இப்போது தொழில் துறைக்கு பல்வேறு வசதி வாய்ப்புகளை செய்து கொடுக்கிறார்கள். குறிப்பாக வரிச் சலுகைகளைக் கொடுத்து வருகிறார்கள். நவீன எலக்ட்ரானிக்ஸ் துறை

(திரு. ந. சிவஞானம்) [1985 ஜூலை 4

யில் பல தொழில்களை உருவாக்க வேண்டுமென்று, முனைப்பாக, செயல்பட வேண்டுமென்று பாரத பிரதமர் மரியாதைக்குரிய இராஜீவ் காந்தி அவர்கள் இந்தத் துறையில் பல சலுகைகளை வழங்கி வருகிறார்கள். அதைப் பின்பற்றி இந்த அரசும் தனியார் துறையிலும், பொது நிறுவனங்களிலும் அதனைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சிறுதொழில் முதலீட்டுக் கழகம் நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறை மிக நுணுக்கமாக குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய நிலையில் உள்ள மக்க[illegible] வசதிகளைப் பெருக்குவதற்காக பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். திறமையான அதிகாரிகள் பலர் அங்கே இருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன்.

1983-84 ஆம் ஆண்டில் சிறுதொழில்களுக்காக 41.11 கோடி ரூபாயும், 1984-85-ல் 48.6 கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பதாக இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். எனவே இதை 60 கோடி ரூபாய்க்கு மேல் என்று ஒதுக்கி, பின்தங்கிய நிலையில் உள்ள பகுதிகளில் தொழில்களை ஆரம்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டம் விவசாயத்தை நம்பியிருக்கின்ற மாவட்டம். அங்கே விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் கிடையாது. தொழில் என்றால் என்ன என்பதைப் பற்றித் தெரியாத இடமாக இருப்பதால், அதைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே அந்த மாவட்டத்தில் தொழில் துவங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஒரத்த நாடு, பேராவூரணி போன்ற பகுதிகள் பின்தங்கிய தாலுக்காக் களாக அறிவிக்கப்பட்டு உள்ளன. எனவே இந்த முதலீட்டுக் கழகத்தின் சார்பாக பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்து பின்தங்கிய மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் பின்தங்கிய மக்கள் இருக்கின்ற இடங்களில் பல்வேறு வசதிகளை இந்தக் கழகம் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல் சமீபத்திலே நம்முடைய மறைந்த பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்த திட்டம் மிக நல்ல திட்டம், படித்த பட்டதாரிகளுக்கு, மிக நல்லமுறையில் உதவி செய்து, அவர்கள் சுயமாக வேலைகளைத் துவங்குவதற்கு தேசியமய மாக்கப்பட்ட வங்கிகளின் உதவியைக் கொண்டு, இந்த திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். குறிப்பாக நம்முடைய மத்திய அரசும், தமிழக அரசும், ஒன்றாக இணைந்து



1985 ஜூலை 4] [திரு. ந. சிவஞானம்]

இப்படிப்பட்ட வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு, அவர்கள் சிறு சிறு தொழில்களை செய்வதற்கு ஆங்காங்கே பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கிறோம். அப்படிச் செய்யும்போது; குறிப்பாக மாவட்டத் தொழில் மையங்களில் சில குறைகள் இருக்கின்றன. அங்கே நேரடியாக இன்டர்வியூவிற்குச் செல்லுகின்ற போது, நல்லமுறையில் படித்த இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்காமல், சாதாரணமாக படித்து இருக்கின்றவர்களுக்கு வாய்ப்புக்களைக் கொடுக்கிறார்கள். உதாரணமாக பி.எஸ்.ஸி. கெமிக்கல்ஸ், பிசிக்ஸ் படித்துவிட்டு வருகின்ற மாணவர்களுக்கு கொடுக்காமல், சாதாரணமாக எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு வருகின்ற மாணவர்களுக்கு அந்தச் சலுகைகளைக் கொடுப்பது என்று சொல்கிறார்கள்.

இப்படிப்பட்ட குறைகள் பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே படித்தவர்களுக்கு தகுந்த அளவிற்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு இந்தத் தொழில் மையங்களில் உள்ள அதிகாரிகள் சரிவர நடந்து கொள்ளவில்லை என்ற புகார்கள் பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களில் அவர்கள் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு சிறு சிறு கையூட்டுக்களை வாங்குகின்ற நிலைமைகள் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தொழில் மையங்களில் உள்ள அதிகாரிகள் இதைச் சற்று யோசித்து, நல்ல முறையில் செயல்படவேண்டும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தைக் கருத்திலே கொண்டு வேலையில்லாப் பட்டதாரிகள், வேலையில்லாமல் இருக்கிறவர்கள் போன்றவர்களுக்கு பல்வேறு வகையிலே இதிலே ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்தத் துறையில் உள்ள அதிகாரிகள் நல்லமுறையில் செயல்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டான்சி நிறுவனம் நல்லமுறையில் பல்வேறு வேலைகளைச் செய்து வருகின்றது. குறிப்பாக மத்திய அரசாங்கத் திற்குச் சொந்தமான ரயில்வேத் துறைக்கு பல உறுப்புக்களைச் செய்து கொடுக்கிறது. இதைப்போல் இன்னும் நாட்டிலே இருக்கின்ற பல்வேறு தொழில்களுக்கு வேண்டிய உறுப்புகளை இவர்கள் செய்துகொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக சூரிய சக்தி மூலம் இயங்கும் பல்வேறு தொழில் சாதனங்களை செய்து கொடுத்திருப்பதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். எனவே பல்வேறு சாதனங்களைச் செய்யக் கூடிய சிறுதொழில்களை ஆங்காங்கு ஏற்படுத்தி, நாட்டு மக்களுக்கும், குறிப்பாக படித்துவிட்டு வேலை வாய்ப்பு யில்லாமல் இருக்கின்ற பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கின்ற முறையில், நீங்கள் உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு மொபட் நிறுவனம், இது அரசு நிறுவனமாக இருந்தாலும், இதிலே எந்தவிதமான வேலையும் இல்லை என்ற புகார் இருக்கிறது. இது ஏன் என்று தெரியவில்லை. தற்போது எங்கு பார்த்தாலும், டி.வி.எஸ். 50, சுவேகா, மற்றும் பஜாஜ் 50 போன்ற பல்வேறு மொபட்கள் மிகவும் குறைந்த விலையில் கிடைத்துக்கொண்டு இருக்கின்றன. அவற்றை நடுத்தர மக்களும் ஏழை எளிய மக்களும் வாங்கி, குறைவான செலவில் அதிக தூரம் போகக் கூடிய வகையில் அதைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அந்த நிறுவனங்கள் எல்லாம் பல்வேறு வகையான வண்டிகளை உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நிறுவனத்தில் ஏன் [illegible] செய்யவில்லை என்னும்போது, பொருளாதார ரீதியில் சாத்தியப்படக்கூடிய வகையில் இவற்றை உற்பத்தி செய்ய முடியவில்லை, கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறார்கள். தனியார்கள் இதைச் செய்யும்போது, அரசாங்கமும், இவற்றைச் செய்வதற்கு பெருமுயற்சி எடுத்து, செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதிலே பொருளாதாரப் பிரச்சனை என்று இருந்தாலும், அரசாங்கம் அந்தக் குறையைப் போக்கி, மானியம் என்ற முறையிலாவது பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்து, இந்த மொபட் வாகனங்களை நீங்கள் உற்பத்தி செய்யவேண்டும். அதன் மூலம் பல்வேறு படித்துவிட்டு இருக்கின்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். இப்படிச் செய்தால், அரசாங்கம் செய்து கொடுக்கின்ற வாகனம் நல்லமுறையில் இருக்கிறது என்று சொல்லி, அத்தனை பேர்களும் இதை வாங்குவதற்கு முன்வருவார்கள், எனவே அப்படிப்பட்ட வகையில் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

அடுத்து, வேளாண்மைத் துறையோடு இணைந்த ஒரு தொழில் தான் பட்டு வளர்ப்புத் திட்டம். இந்தத் திட்டம் கர்நாடக மாநிலத்திற்கு அடுத்து நம்முடைய மாநிலத்தில்தான் சிறந்த முறையில் நடக்கிறது. இதற்கு வேண்டிய வசதி வாய்ப்புகளைச் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு முசுக்கொட்டைச் செடி மிகவும் அவசியம். கோடைக்காலத்தில் இந்தச் செடிகளுக்கு தண்ணீர் போதிய அளவுக்கு இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஆழ் குழாய் கிணறுகளைப் போட்டு அரசு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இப்படி செய்து கோடைக்காலத்தில் அந்த செடிகளை காப்பாற்ற வேண்டிய அவசியம் இருப்பதால் நீர் பாசனத்திற்கு வேண்டிய உதவிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





என்னுடைய தொகுதியான திருவோணம் தொகுதியில் சென்னிய விடுதி, நாஞ்சிக்கோட்டை போன்ற இடங்களில் பட்டுப் புழு வளர்ப்பதற்கு வேண்டிய முசுக்கொட்டைச் செடி வளர்க்கப் பட்டு அவைகள் காய்ந்தும் காயாமலும் இருக்கின்றன. இதற்கு காரணம் அங்கே உள்ள ஆழ் குழாய் கிணறுகள் மூலம் தண்ணீர் வராமல் சில இடங்களில் தண்ணீரை குழாய்கள் மூலம் மேலே கொண்டுச் செல்ல முடியாமல் அந்தச் செடிகள் காய்ந்து கொண்டு இருக்கின்றன. அவற்றை காப்பாற்றுவதற்கு அரசு பல் வேறு நடவடிக்கைகளை எடுத்து ஆழ் குழாய் கிணறுகளை பல்வேறு இடங்களில் போட்டுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக சிறு சிறு விவசாயிகளுக்கு பல்வேறு வசதி வாய்ப்புகளைச் செய்து கொடுப்பதற்கு அந்த முசுக்கொட்டை மூட்டையிலிருந்து எப்படி செய்யவேண்டும் என்பதை சொல்லிக் கொடுப்பதற்கு தொழில் நுட்ப அதிகாரியை அரசே இனாமாக கொடுத்தால் நன்றாக இருக்கும். அப்படி வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இங்கே கொள்கைக் குறிப்பில் 1985–86-ல் 1.70 கோடி ரூபாய்க்கு அத்தகைய உத்தேசம் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டத்திலே ஏழை எளிய மக்களுக்கு நாள் பூராவும், இரவு பூராவும் அந்தத் தொழிலில் ஈடுபட்டால்தான் வருமானம் வரும் என்ற லட்சியத்தில் ஈடுபட்டு இருக்கிற அந்த ஏழை எளிய மக்களுக்கு வேளாண்மைத் துறையோடு இணைந்து இருக்கின்ற தொழிலான அந்தத் தொழிலுக்கு பல்வேறு வசதிகளை நிச்சயமாக செய்து கொடுப்பதற்கு இந்த 1.70 கோடி ரூபாய் போதாது என்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டம் தொழிலில் பின்தங்கிய பகுதி: சமீபத்தில் நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்களும், வணிகத் துறை அமைச்சர் அவர்களும் பட்டுக்கோட்டையில் நடந்த ஒரு கருத்து அரங்கில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். தென்னையிலிருந்து வரும் மூலப்பொருட்களை வைத்துக் கொண்டு தொழில் நடத்தவேண்டும் என்றும் உப்பில் இருந்து பல்வேறு தொழிலை நடத்தவேண்டும் என்றும் அந்த பட்டுக் கோட்டையில் நடந்த கருத்து அரங்கில் தெரிவித்து இருக் கிறார்கள்.

தஞ்சை மாவட்டம் தொழிலில் மிகவும் பின் தங்கிய பகுதி மட்டும் அல்லாமல் வேளாண்மையையே நம்பி இருப்பவர்கள். உழைப்பவனுக்கு அதிலும் குறிப்பாக உழக்கு கூட மிஞ்சாத கால கட்டத்தில் கடனையே தன்னுடைய சொத்தாக வைத்து இருப் பவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1985 ஜூலை 4

அங்கே பெரிய தொழிலை ஏற்படுத்துவதைவிட சிறு சிறு
தொழில்களை ஏற்படுத்துவது அவசியம். தென்னை நாற்றில்
இருந்து பல்வேறு வகையான தொழில்களை செய்து கொடுக்க
வேண்டும். அதிலும் கயிறு செய்தல் கேரளாவுக்கு அடுத்தபடி
யாக இன்றைக்கு தமிழ்நாட்டில் தான் தென்னை உற்பத்தி அதிக
மாக செய்யப்படுகிறது. ஏன் இன்னும் சொல்லப்போனால்
கேரளாவைவிட நம்முடைய தமிழ்நாட்டில் தான் அதிகமாக
தென்னை மரங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட மூலப்பொருட்
களை வைத்து பல்வேறு தொழில்களை செய்ய அரசு வசதிகளை
செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது
தனியார் தொழிலாக இருந்தாலும், பொது நிறுவனங்களாக
இருந்தாலும் இப்படிப்பட்ட வசதி வாய்ப்புகளை நிச்சயமாக
செய்து தர வேண்டும் என்றும் இது பின்தங்கிய மாவட்டமாக
இருப்பதால் இதற்கு என்று பிரத்தியேகமாக பல்வேறு முனைப்
பான-எப்படி புதுக்கோட்டை மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம்
வறட்சியாக இருந்தாலும் தொழில் துறையில் பல்வேறு வசதி
வாய்ப்புகளை இன்றைக்கு மத்திய அரசின், மாநில அரசின் மூலம்
கொடுக்கிறதோ—அப்படிப்பட்ட வகையில் எந்த தொழிலும்
இல்லாத தஞ்சை மாவட்டத்திற்கு பல்வேறு வசதி வாய்ப்புகளை
செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக தென்னை, உப்பின் மூலப்பொருட்களை வைத்துக்
கொண்டு பல்வேறு தொழில்களைச் செய்ய அரசு வசதிகளை
செய்து கொடுக்க வேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்
கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் பூ அதிகமாக விளைகிறது. அதிலும்
குறிப்பாக மல்லிகைப் பூ விலிருந்து தைலம் தயாரிக்கும் தொழிற்
சாலையை அங்கே அமைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன். அதனால் அன்னிய செலாவணி நமக்கு
நன்றாக கிடைக்கும். அப்படிப்பட்ட தொழில்களை தஞ்சையில்
ஏற்படுத்தவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய தஞ்சைக்கு அருகே உள்ள வல்லம்,
நாஞ்சிக்கோட்டை, திருவோணம், ஒரத்தநாடு ஆகிய பகுதிகளில்
தொழில் அமைப்பதற்கு பல்வேறு வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன.
தஞ்சைக்கு அருகிலும் இருக்கிறது. இப்படிப்பட்ட வறட்சியான
பகுதியிலே அங்கே தொழில் பேட்டையை அமைப்பதற்கு மிக
அதிகமான முயற்சிகளை இந்த அரசு எடுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

ஒரத்தநாட்டில் ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிக்க
வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையை வலியுறுத்த ஆசைப்
படுகிறேன்,



1985 ஜூலை 4] (திரு. ந. சிவஞானம்)

அதேபோல், வல்லத்தில் இருக்கின்ற பல்வேறு வாய்ப்புக்கள்—
நிலக்கடலை—சாதாரணமாக மணிலா பயிர்கள் அதிகமாக விளை
கின்ற பகுதி—அதற்கு பல்வேறு வசதி வாய்ப்புக்கள் இருக்கின்றன.
எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பெரிய ஆலையை நம்
அரசாங்கமாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும்
ஊக்கம் அளித்தால், நிச்சயம் ஆரம்பிக்க வாய்ப்புக்கள் இருக்கின்ற
காரணத்தால், அதனை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

நேபாள தறி என்று டான்சி நிறுவனத்திலே செய்து கொடுக்
கிறார்கள். கிராமப்புறத்திலே இத்தகைய வசதிகள் செய்து
கொடுத்தால் மிக நன்றாக இருக்கும். குறிப்பாக கதர் இலாகா
மட்டும் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதை
வாரகத் தொழிலோடு இணைத்துக் கொண்டு, ஆதி திராவிட
மக்களுக்கும், பொருளாதாரத்திலே நலிவுற்ற மக்களுக்கும், தாழ்த்
தப்பட்ட சமுதாய மக்களுக்கும், தொழிலிலே பின்தங்கிய பகுதி
களுக்கும் அப்படிப்பட்ட தறிகளை விஸ்தரித்து, சிறு, சிறு தொழில்
களாக நேபாள தறிகளைப்போல், பல்வேறு இடங்களில் இந்த
வாரகத் தொழில் துறை மூலம் செய்தால் மிக நன்றாக இருக்கும்
என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்தியாவிலே தமிழகத்தில் தொழில் துறையில்
மிக நல்லமுறையில் வளர்ந்து ஓங்க வேண்டும் என்ற
இலட்சியத்தோடு இந்த அரசு பாடுபட்டு வந்தாலும், தொழிற்
சாலை இங்கு துவங்குவதிலே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.
தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்க வேண்டும்.

தஞ்சைக்கு அருகே நாஞ்சிக் கோட்டைக்கு அருகே பல்வேறு
இடங்கள் இருக்கின்ற காரணத்தால், ஒரு காலத்தில் காகித
தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்று போர்டுகள் இருந்
தாலும், இப்படிப்பட்ட இடங்களில் ஆரம்பிக்கப்படாத காரணத்
தால், அங்கே தொழிற்பேட்டைகள், காகித தொழிற்சாலையாக
இருந்தாலும், மற்றவையாக இருந்தாலும், நாஞ்சிக்கோட்டைக்கு
அருகில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பக்கத்திலே உள்ள சர்க்கரை ஆலை, தஞ்சைக்கு
அருகிலே உள்ள அந்த ஆலையின் கழிவு நீரினால் பல்வேறு
கிராமங்களுக்கு, கால்நடைகளுக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன. இது
ஆபத்தாக இருக்கின்றது. ஆகவே, அந்தக் கழிவுநீரை அகற்று
வதற்கும், தொழிற்சாலைகளுக்கு தகுந்த முறையில் அதற்கான
ஏற்பாட்டை, சிறு தொழிலாக இருந்தாலும், பெரும் தொழிலாக
இருந்தாலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்ய வேண்டும்.

பின் தங்கிய பகுதியாக இருக்கின்ற அத்தனை மாவட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, தமிழக மக்களுக்கு, பின்தங்கியவர்களுக்கு வேலைவாய்ப்புகளை கொடுப்பதற்கும், படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் கொடுக்கும் அளவிலும் வசதி வாய்ப்புக்களை இந்த அரசு, தொழில்கள் தொடங்கி, ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து எப்படி இப்போது பல்வேறு காரியங்கள் செய்யப்படுகின்றனவோ, அதைப் போல, எந்தத் தொழிலும் இல்லாத கஞ்சை மாவட்டத்திற்கு ஒரு தொழிற்பேட்டையை, தொழிற்சாலைகளைத் துவக்கி, தனியார் துறையாக இருந்தாலும் பொது நிறுவனத் துறையாக இருந்தாலும் அரசாங்கம் ஊக்குவிப்பு கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் நம்முடைய புகளூரிலே காகித தொழிற்சாலை பெரிய அளவிலே ஏறத்தாழ 200 கோடி ரூபாயிலே துவக்கப்பட்டது. கார்டு போர்டு அட்டையிலே சிறு, சிறு தொழில்கள் செய்ய ஊக்குவிக்க ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் பெரும் பொறுப்பு எடுத்துக் கொண்டு செய்தால், ஆங்காங்கே படித்த மக்களுக்கு பல்வேறு வாய்ப்புக்கள் ஏற்படும். குறிப்பாக, பெண்கள் அதைச் செய்தால் நன்றாக இருக்கும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதுபோன்ற சிறு, சிறு அட்டைப் பெட்டி செய்யும் பல்வேறு வசதிகளை செய்ய, அரசு கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு, அதை நடைமுறைப் படுத்தவேண்டும் என்பதை தெரிவித்துக் கொண்டு, வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது அதனை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பபட்ட சிறு தொழில்களின் எண்ணிக்கை 1979–ம் ஆண்டு 18,789–லிருந்து, 1984 மார்ச்சில் 49,920 ஆக உயர்ந்து, 1985 மார்ச்சில் 60,250–ஆக உயர்ந்துள்ளது. இது பொதுவாக தமிழக மக்கள் எந்த அளவுக்கு சிறு தொழிலில் நாட்டம் செலுத்துகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அதே நேரத்தில் தமிழக அரசும், சிறு தொழில்களை மேம்படுத்துவதற்கு, இந்தச் சிறு தொழில்கள் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டி வருகிறது. இந்த இயக்கத்தில் மற்றொரு பிரிவு தொழில் கூட்டுறவு அமைப்புக்களைக் கவனித்துக் கொள்கிறது.





(முற்பகல் 10–40)

இக்கூட்டுறவுகளின்கீழ், தேயிலை தயாரித்தல், தீப்பெட்டி, தேங்காய் நார், பாலிதீன் பைகள், ஆட்டோ முதலிய தொழில் துறைகள் உள்ளன.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குன்னூர் வட்டத்தை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அரசு அறிவித் திருப்பதை வரவேற்கிறேன். ஆனால், அதேநேரத்தில், அந்த வட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவித்திருந்தாலும் இதுவரை எந்தச் சிறுதொழிலும் அங்கே ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அரசுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அதில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வில்லை என்றுதான் நான் கருதுகிறேன். அதனால், அப்பகுதி தொழிலில் பின்தங்கிய பகுதி என அறிவித்திருப்பதில் எந்தப் பலனும், அப்பகுதி மக்களுக்கு, அத்தொகுதி மக்களுக்குக் கிடைக்க வில்லை என்பதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். எனவே அரசு அதிகாரிகள் வரும் ஆண்டிலாவது அங்குள்ள மக்கள் பலன் பெறும் அளவிற்கு நல்ல பல தொழில்களில் அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வரும் ஆண்டில் கோத்தகிரி வட்டத்தையோ, அல்லது கூடலூர் வட்டத்தையோ தொழிலில் பின் தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டுமென்றும் கோருகிறேன்.

இவைகளெல்லாம் அங்கே தனித்துச் செயல்பட வேண்டுமென் றால், அதற்கு வசதியாக நீலகிரி மாவட்டத்தில் தனித்து ஒரு மாவட்டத் தொழில் மையம் இல்லை. அது கோவை தொழில் மையத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் தனியொரு தொழில் மையம் வேண்டும் என்பது அங்குள்ள மக்களின் கோரிக்கையாகும். அவ்வாறு இல்லாமல் இருப்பதால் அங்குள்ள மக்களுக்கு நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற குறையைப் போக்க வேண்டுமென்று அரசு அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தேயிலைத் தொழிலில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அதிக வளர்ச்சி பெற்றிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

ஏற்கனவே 13 தேயிலை கூட்டுறவு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இவ்வாண்டில் ஏற்கனவே செயல்பட்டு வந்துள்ள சங்கங்களை ஒருங்கிணைத்து அவற்றை வலுப்படுத்து வதற்கு அதிக முக்கியத்துவம் காட்டப்படுகின்றது.

தேயிலைத் தொழில் கூட்டுறவு தொழிற்சாலைகள் செயல் படுவது கணிசமான அளவு முன்னேறி உள்ளது. கூடலூரில் முதன் முதலாக நிறுவப்பட்டுள்ள தேயிலைத் தொழிற்சாலையை 17.40 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தும் திட்டத்தை மேற் கொண்டுள்ளது பாராட்டுக்குரியது.

அதைப்போல, ஒவ்வொரு ஆண்டும் இரு தொழிற்சாலைகள் என்ற விகிதத்தில் இரண்டு தொழிற்சாலைகளை நவீனப்படுத்தும் திட்டம் குறித்து மாநில அரசு பரிசீலனை செய்து வருவதாக அறிகிறேன். அந்தப் பரிசீலனையில் அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் கூடலூர் தாலுக்காவில், எருமாடு என்ற இடத்தில் கட்டப்பட்டு வரும் தேயிலை தொழிற்சாலை கட்டத் திட்ட மூன்றாண்டுகள் ஆகியும் அந்தக் கட்டுமானப் பணிகள் முடிக் கப் பெறாமல் உள்ளது வருந்தத்தக்கது. அதிலேயும் அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூடலூர் பகுதியில் ஒட்டுப் பலகைத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாகும். ஆனால் அந்தக் கட்டுமானப் பணிகள் நாளது வரையில் முடிக்கப் படாமல் இருப்பது வருந்தத்தக்கது. அதிலும் அரசு அதிகாரிகள் அதிக கவனம் செலுத்தி, ஒட்டுப் பலகை தொழிற்சாலையை விரை வில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடலூர் பகுதியில் ஏராளமான கட்டிடங்களுக்கான கட்டிடப் பணிகளுக்கான செங்கற்கள் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. அந்தக் செங்கற்களை உற்பத்தி செய்வதில் தனியார்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். தனியார் உற்பத்தி செய்தும் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதால், தொழில் கூட்டுறவு சங்கத் தின் கீழ் மசினகுடி பகுதியில் செங்கல் சூளை அமைக்க வேண்டும். ஆனால் அதில் அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரி அந்த மண் ணைப் பரிசோதனை செய்திருப்பதில், அந்த மண் செங்கல்லுக்குத் தகுதியானதாக இல்லை என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அது தவறு என்று கருதுகிறேன். ஏராளமான செங்கற் களைத் தனியார்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நீலகிரி மாவட்டத்தில் உலகப் புகழ் பெற்ற நீலகிரித் தைலம் மிக அதிகமாக உண்டாக்கப்படுகிறது. அந்த நீலகிரித் தைலம் தயாரிப்பது சிறுசிறு குடிசைத் தொழில்களாக நடந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தைலத்தைத் தயாரிக்கும் தொழிலை நவீனப்படுத்தி அந்த முறையில் தயாரிக்கின்ற தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தினால் அதிகமாகக் கிடைக் கின்ற மூலப்பொருட்களைக் கொண்டு மிக அதிக அளவில் கற்பூரத் தைலத்தைத் தயாரிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்



மேலும், உதகை வட்டத்தைச் கிண்ணக்கொரை என்ற இடத்தில் 60 இலட்சம் ரூபாய் செலவில் புதிய 14-வது கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் திட்டத்தை வரவேற்று, அதற் காக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலையில் கட்டுமானப் பணிகள் விரைவாக்கப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

மேலும் குந்தா பகுதியைச் சேர்ந்த பிக்கட்டி என்ற இடத் தில் புதிதாக ஒரு தேயிலை தொழிற்சாலையை அமைக்க வேண்டு மென்று அந்தப் பகுதியைச் சேர்ந்த படுக இன மக்களும், ஆதிவாசி களான கோத்தர் இன மக்களும் நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆகவே, குந்தா பிக்கட்டியில் புதிய தேயிலை தொழிற்சாலையை அமைக்க அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கடந்த மூன்று மாதங்களாக பச்சைத் தேயிலையின் விலையில் மிகப்பெரிய விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ பச்சை தேயிலையின் விலை ரூ. 6-ஆக இருந்தது; தற்போது ரூ. 2-50-ஆக விலை குறைந்துள் ளது. இதனால் மாவட்டத்திலுள்ள சிறு விவசாயிகளுக்கிடையே, கடுமையான பதட்ட நிலை உருவாகியுள்ளது. அதைப்பற்றி நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு. சிவக்குமார் அவர்களும், திரு. கல்லன் அவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தார்கள். அது ஏதோ காரணத்தால், தலைவரால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்த விலை வீழ்ச்சியிலிருந்து மாவட்டத்திலுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளைக் காப்பாற்ற நமது அரசு மத்திய அரசை வற்புறுத்தி மிகப் பெரிய அளவில் அந்நியச் செலாவணி ஈட்டித்தரும் தேயிலை விவசாயிகளின் நிலையை அறிந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியை அதிகபடுத்தும் முயற்சியினை துரிதப்படுத்தியாக வேண்டும்.

சில நேரங்களில், மைய அரசு சி.டி.சி. போன்ற சில ரக தேயிலைகளின் வெளிநாட்டு ஏற்றுமதியைத் தடை செய்து விடு கிறார்கள். அந்த நிலையை மாற்றி எல்லாவகை தேயிலைகளை யும், எந்தக் காலத்திலும் தாராளமாக ஏற்றுமதி செய்ய வழி வகை காண வேண்டுமென்று மைய அரசு வலியுறுத்தப்பட வேண்டும்.

தேயிலையை விற்பதில் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. உற்பத்தி செய்யாத பகுதியில் உள்ள சிலர்—சிலர் என்று சொன்னால் அவர்களை விஷமிகள் என்று கூட சொல்லலாம்—கலப்படம் செய்கிறார்கள். அந்தக் கலப்படம் எப்படியென்றால், உளுந்து பருப்புத் தோல், முந்திரி பழத்தோல், ஒருவகை மண் ஆகியவற் றைச் சேர்த்து விற்று விடுகிறார்கள். அந்தக் கலப்படத் தேயி லையை அப்படியே விற்று விடுவதால், நீலகிரி மாவட்டத் தேயிலை ரகம் குறைக்கப்பட்டு, மார்கெட் கிடைப்பது அரிதாக உள்ளது.

(திரு. கே. உச்சி) [1985 ஜூலை 4

தேயிலை வாரியத்திலிருந்து கிடைக்கும் எல்லா நன்மை களும் சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகளுக்குச் சென்று அடைவதில்லை. இதில் நமது அரசு தேயிலை வாரியத்தை வற் புறுத்தி, சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைய செய்ய வேண்டும்.

அதே சமயம், நமது தமிழக அரசைப் பொறுத்தவரையில் தேயிலைத் தொழிலை முக்கியமான தொழில் என்று கருதிட வேண்டும். அத்தொழிற்சாலைகள் மின் வெட்டுக்கு ஆட்படுவ தால், கடுமையான அளவில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஆகவே, ஜெனரேட்டர்களை வைத்து, தொழிற்சாலைகள் மின் சக்தியைப் பெறுவதால், சில தொழிற்சாலைகளுக்கு அதிக செலவு ஏற்பட்டு தொழிலில் நஷ்டம் அடையும் நிலை உள்ளது. இந்த நஷ்டத்தைக் குறைக்க, குறைந்தது கூட்டுறவு தொழிற்சாலைகளுக் காவது மின் வெட்டிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளை இணைக்கும் மேலமைப்பாக ''இன்கோசர்வ்'' என்ற அமைப்பு குன்னூரில் இயங்கி வருகிறது. ஜனநாயக முறைப்படி ஒவ்வொரு தேயிலைத் தொழிற்சாலைக்கும் அதனுடைய தலைவர் தேர்ந் தெடுக்கப்படுகிறார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் 'இன்கோசர்வ்' கூட்டங்களை நடத்தும் போது 'இன்கோசர்வ்'-ன் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்படுகிறார். மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பல்வேறு வேலைகள் இருப்பதால் தேயிலைத் தொழிற்சாலைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்த முடிவதில்லை. ஆகவே, ஜனநாயகத்தை மதிக்கும் வகையில் அந்த இன்கோசர்வ்-வுக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருவரைத் தலைவராக நியமிக்கவேண்டும். அல்லது தேர்தல் முறையை அறிமுகப்படுத்த வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இன்கோசர்வ்வில் கிட்டத்தட்ட 13 தொழிற் சாலைகள் இருக்கின்றன. அதில் 11வது எண்ணுள்ள கட்டபெட்டு தொழிற்சாலை மிகவும் நலிந்துள்ளது. அதற்கு அரசாங்கம் கொடுத்துள்ள கடனுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டு மென்று அந்தப் பகுதியைச் சேர்ந்த தொழிற்சாலை நிர்வாகிகள் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆகவே, அந்தக் கடனுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ரா. சின்னச்சாமி : பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் வைக்கப்பட்டிருக்கிற வரைத் தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான இந்த விவாதத்தில் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப்



1985 ஜூலை 4] (திரு. ரா. சின்னச்சாமி)

பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க முன் வரு கின்றேன். குறிப்பாக, படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், மத்திய மேலாளருடைய ஒப்புதலோடு ரூ. 25,000 வரையில் கடனாக வழங்குகிறார்கள்.

(முற்பகல் 10–50)

அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டத்தின்கீழ், தொழில் மையத் தினுடைய குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், மானியமாக வழங்குகின்ற தொகையும் உண்டு. ஆனால், மானியமாக வழங்குகின்ற தொகைக்கும் சேர்த்து வட்டி கட்ட வேண்டியிருக்கிறது. மத்திய அரசினுடைய மானியம் கிடைக்கின்ற வகையில் படித்த இளைஞர்கள் தொழில் தொடங்கு கின்ற நிலைமையில் இருந்தாலும் வங்கிகளில் அவர்கள் வாங்கிய கடனுக்கும் மானியத் தொகைக்கும் சேர்த்து வட்டி செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, தொழில் மைய பொது மேலாளர் அனுமதி பெற்றவுடனே அந்த மானியத் தொகை கிடைக்கின்ற வகையில் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல அவர்களுக்கு ஒழுங்காக மின்சாரம் கிடைக்காத சூழ்நிலையில், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கிகளில் அந்த இளைஞர்கள் கடன் பெற ஜாமீன் கோரப்படுகிறது. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடனை பெறுகின்ற இளைஞர் களுக்கு ஜாமீன் கேட்காமல் கடன் வழங்குவதற்கான ஆலோசனை களை வங்கிகளுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் பெற்ற இளைஞர்கள் தொழில் தொடங்குகின்ற நிலையில் கடந்த 3 மாதங்களாக சரியாக மின்சாரம் கிடைக்கவில்லை. ஒரு நாளைக்கு 3, 4 மணி நேரம் கூட மின்சாரம் கிடைக்காத சூழ்நிலை இருக் கிறது. அப்படி மின்சாரம் கிடைக்காத மாதங்களில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அந்த இளைஞர்கள் படுகின்ற இன்னல் கள் கொஞ்சநஞ்சமல்ல. ஆகையால் மின்சாரம் தட்டுப்பாடு இருக் கிற மாதங்களில் அவர்கள் செலுத்த வேண்டிய கடனை ஒத்தி வைக்க ஆலோசனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் ஒகனேக்கல்லில் எறத்தாழ 1000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு இருக் கிறது. கர்நாடக மாநிலமும் தமிழ்நாடும் சேர்ந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இரண்டு மாநிலங்களும் இணைந்து அந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு நிறைய இருக்கிறது. தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்து, இங்கே இருக்கிற மின்சார வாரிய அதிகாரிகள் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டால், அந்தத்

திட்டம் நிறைவேற்றப்பட்டால், தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்
பாடு இல்லை என்ற நிலை உருவாகும். அந்த அடிப்படையில்
ஒகேனேக்கல் மின்சாரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தீப்பெட்டி
கூட்டுறவுச் சங்கங்கள் 52-க்கு மேல் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்
கிறது. ஆனால் ஒரு கூட்டுறவுச் சங்கம்கூட அங்கே ஒழுங்காக
நடைபெறவில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரிய
வில்லை. ஏறத்தாழ 240-க்கு மேற்பட்ட தொழில் கூடங்கள்
கட்டிவிடப்பட்டு, அவை எல்லாம் மூடிக் கிடக்கின்ற நிலைதான்
இன்று தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிறது. ஏன் அப்படி மூடிக்
கிடக்கின்றன என்று தெரியவில்லை, எப்படிப்பட்ட சூழ்நிலையில்
அவை இயங்காமல் இருக்கின்றன என்பதை ஆராய வேண்டும்.
சரியாக அவை இயங்காத காரணத்தால் நமமுடைய இலட்சியம்,
குறிக்கோள் நிறைவேறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

குறிப்பாக, தொழில் உற்பத்தியில் தீக்குச்சி இல்லாத குறை,
தீக்குச்சி கிடைக்காத ஒரு பெரும் குறை இருப்பதாக சொல்லப்படு
கிறது. அதனாலும், வேறு காரணங்களாலும் அந்த 240 தொழில்
கூடங்களும் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. தீக் குச்சி
கிடைக்காமல், சரியாகத் தொழில் நடக்காத காரணத்தால் உதவி
இயக்குநர் மேலாளராக இருந்தது போய் இப்போது ஆய்வாளர்
இருக்கிறார். இந்த நிலைக்கு பொறுப்பான அதிகாரிகள் மீது
உடனடியாக விசாரணை நடத்தி, அவர்கள் மீது உரிய நட
வடிக்கை எடுத்து, அந்தத் தொழில் கூடங்கள் ஒழுங்காக நடை
பெறுவதற்கான நடைமுறைகளை இந்த அரசாங்கம் செய்துதர
வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்
டிருக்கிறேன்.

அதைப்போன்று என்னுடைய தர்மபுரி மாவட்டத்தில்
'சார்க்கோசம்' சங்கங்கள் இரண்டு இருக்கின்றன. ஆனால் அந்த
இரண்டுமே சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படு
கின்றன. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் குச்சிக்கிழங்கு அதிக
மாகக் கிடைக்கிறது என்பதை இந்த அரசு நன்றாக அறியும்.

600-க்கு மேற்பட்டவர்கள் அங்கே குச்சிக் கிழங்கிலேயிருந்து
ஜவ்வரிசி தொழிற்சாலையினை நடத்துகின்ற மெம்பர்களாக இருக்
கிறார்கள். ஜவ்வரிசித் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில்
ஏஜென்சி முறை என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். அந்த
ஏஜென்சி முறையை நீக்கவேண்டும் என்று பல முறை சொல்லப்
பட்டிருக்கின்றது. எனவே அந்த ஜவ்வரிசி உற்பத்தி செய்கின்ற
தொழிற்சாலையை நடத்துகின்றவர்களுக்கு உரிய விலை கிடைக்க



வில்லை. இதற்கு முன்னால் கடந்த ஆண்டுகளில் கூட்டுறவு
சங்கம் ஆரம்பித்த பிறகு தான் விவசாயிகளுக்குக் குச்சிக் கிழங்குக்கு
நல்ல விலை கிடைத்ததாக இந்த அரசினுடைய சார்பில் அறிவிக்
கப்பட்டிருக்கின்ற புத்தகத்தில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால்
மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்னால் ஒரு மூட்டை குச்சிக்
கிழங்கு 25 ரூபாய்க்கு விற்றது போய் இப்போது 20 ரூபாய் 15
ரூபாய்க்கு விற்ற காலமும் உண்டு. ஏன் அப்படிப்பட்ட சூழ்நிலை
வந்தது? இந்தச் கூட்டுறவுச் சங்கங்கள் சரியாகச் செயல்படு
கின்றனவா? உற்பத்தியாளர்களுடைய சரக்குகள் அனைத்தையும்
இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் கொண்டு வந்து வைத்துவிட்டு
அதற்கு ஈடான தொகையை வாங்கிக்கொண்டு போகக்கூடிய
வகையில் இப்போது அது அதிகமாக விளைவிக்கப்படக்கூடிய
காலத்தில் முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய
எண்ணமாகும்.

குறிப்பாகச் சேலத்திலே ஜவ்வரிசித் தொழிலாளர்களின்
சங்கத்திலே தலைவராக இருப்பவர்களின் மகாசபைக் கூட்டம்
நடந்தது. ரத்தினவேல் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற
அந்தக் கூட்டத்தில் எந்தவிதமான தீர்மானமும் நிறைவேற்றப்
படாமல் திண்டாடி அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். இதற்
கெல்லாம் காரணம் என்னவென்றால் அவர்கள் மீது அங்கே
இருக்கின்ற உற்பத்தியாளர்களுக்குச் சரியான நம்பிக்கை இல்லாத
தன் காரணத்தால்தான். அதேநிலைதான் தர்மபுரியிலேயும் இருக்
கின்றது என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதேபோல் பாரம் தூக்குகின்ற, சுமை தூக்குகின்ற தொழி
லாளர்களைப் பொறுத்தவரையில் ஏஜென்சி முறையில் ஏற்பாடு
செய்யப்பட்டு இருக்கிறது. அந்த ஏஜென்சி முறையை நீக்கி
அங்கே குறைந்த கூலிக்கு வருபவர்களை வைத்துக்கொண்டு அந்தப்
பாரம் தூக்குகின்ற தொழிலைச் செய்தால் உற்பத்தியாளர்
களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிற்சாலையை நடத்துகின்ற
வர்களுக்கும் ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான்
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பல்வேறு ஊரகத் தொழில்களை அறிவித்திருக்
கிறீர்கள். இந்த ஊரகத் தொழில்களைப் பொறுத்தவரையில்
ஆதி திராவிடர் மனித சக்தியைப் பயன்படுத்தி சிறுசிறு தொழில்
களை ஆங்காங்கே ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை இந்த
அரசு செய்யவேண்டும். குறிப்பாக ஆதி திராவிடர்கள் வாழ்கின்ற
பகுதிகளில் பாய் நெய்தல், பாலிதின் பைகள் தயாரித்தல்,
தென்னை நாரிலிருந்து கயிறு தயாரித்தல், தென்னங்கீற்றிலிருந்து
ஓலை பின்னுதல் என்ற இப்படிப்பட்ட தொழில்களை அவர்
களுக்குக் கொடுக்கவேண்டும். விவசாயக் கூலி கிடைக்காத நேரத்தில்
அவர்களுக்கு இதைக் கொடுக்கவேண்டும். 100-க்கு 90 சதவீதம்

அவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல், சொந்த நிலம் இல்லாமல்
அன்றாடம் கூலி வேலை செய்கின்ற ஆதி திராவிடர்களுக்கு இத்
எல்லாம் ஒரு வாய்ப்பாக அமைய வேண்டும். என்ன காரணத்
தாமலா தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கூட்டுறவுச்
சங்கங்களால் ஊரகத் தொழில்கள் முழுமையாக நிறைவேற்றப்பட
வில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டாமல் இருக்க
முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப் பட்டிருக்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கர்நாடக
மாநிலத்தை ஒட்டி இருக்கின்ற காரணத்தால் பட்டு வளர்ச்சித்
துறை மிக அதிகமாகப் பெருகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
தர்மபுரி மாவட்டம் தான் பட்டு வளர்ச்சியில் அதிகமாக அக்கறை
எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளைப் பெற்ற
மாவட்டம். அந்த மாவட்டத்திற்கு இன்னும் பல்வேறு சலுகை
களை அறிவிக்க வேண்டும். ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூபாய் மானிய
மாகத் தருவதை மாற்றி ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் மானிய
மாகத் தருகின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு
இந்த அரசு செய்தால் பட்டு வளர்ச்சியில் விவசாயிகள் பெருவாரி
யான பயன் அடைய வாய்ப்புக்கள் இருக்கும். பட்டுக் கூடுகள்
விற்பனை செய்கின்ற நிலையங்கள் ஹோசூர், தர்மபுரி ஆகிய
இடங்களில் இருக்கின்றன. மாவட்டத் தலைநகரங்களில் மட்டு
மல்லாது, தாலுக்கா தலைநகரங்களிலும் பட்டுக் கூடுகள் விற்பனை
செய்கின்ற நிலையங்களை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

(முற்பகல் 11–00)

அதே நேரத்தில் குறிப்பாக தர்மபுரியைப் பொறுத்தவரை
யில் செங்கல் தொழிலுக்கு கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கலாம்,
அதேபோல மொசைக் தொழிலுக்கு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்
கலாம், ஸ்டீல் பர்னிச்சர் தொழிலுக்கும் கூட்டுறவுச் சங்கம் ஆரம்
பிக்கலாம். இப்படி இவ்வளவு வழி வகைகள் இருந்தும், இவை
களுக்கெல்லாம் ஒன்றிற்கு கூட கூட்டுறவு அமைப்பு இல்லாத ஒரு
துர்பாக்கியமான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, நான் கேட்டுக்
கொள்ள விரும்புவது, நமது ஊரகத் தொழில் துறை அமைச்சர்
அவர்களும், குறிப்பாக அரசாங்க அதிகாரிகளும், குறிப்பாக
தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில இந்தத் தொழில்கள்
சம்பந்தப்பட்ட ஒரு கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்து, அதற்கான
நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்
திலே பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.





அடுத்தாற்போல நம்முடைய டான்சி நிறுவனம். பெரிய
சாதனை நிகழ்த்தியிருப்பதாக இதிலே சொல்லியிருக்கிறார்கள்.
ஆனால் குறிப்பாக அதிலே 2 கோடிக்குமேல் நஷ்டம் ஏற்பட்டிருக்
கிறது. எந்த அடிப்படையில் எப்படி, 25 கோடி ரூபாய் அளவில்
பொருள்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஒரு நிறுவனத்
திற்கு 2 கோடி ரூபாய் நஷ்டம் வந்தது என்பதை அரசு ஆராய
வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, டான்சி
ஸ்தாபனத்தை செம்மை படுத்த வேண்டும். டான்சி ஸ்தாபனம்
ஒரு பழைமையான ஸ்தாபனம். அதை அபிவிருத்திச் செய்யக்
கூடிய முறையில் சிறந்த நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்
கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு கொள்கிறேன்.

அடுத்தாற்போல இன்னொன்றையும் குறிப்பிட விரும்பு
கிறேன். கிராமங்களிலே இப்போது புதிய புதிய அரிசி ஆலைகள்
சிறு தொழில்களின் சார்பாக, அரசாங்கத்தின் சார்பாக, குறிப்
பாக தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக ஏற்படுத்தப்பட்
டிருக்கின்றன. இப்போது அவைகளுக்கெல்லாம் கடன் கொடுக்கிற
சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் புதிய அரிசி ஆலைகளுக்கு
உரிமம் தரும் பணி வெளியார்களுக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது.
அந்த லைசன்சுகள் எல்லாம் நமது உணவுத்துறை அமைச்சர் அவர்
களைக் கலந்துக் கொண்டு, நமது ஊரக தொழில் அமைச்சர்
அவர்கள் கிராமங்களில் முழுமையாக வழங்குவதற்கான நடவடிக்
கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அது மட்டும் அல்ல, இந்த ஊரக தொழில்களில் துறையில்
சிறு சிறு தொழில்களாக இந்த அரிசி ஆலைகள் இயங்கிக்
கொண்டிருக்கிற நேரத்தில் புதியதாக செல்லர் முறை என்று,
அரிசியை ரப்பரால் உடைக்கின்ற நவீன முறைகளை கையாளுகிற
அளவுக்கு நம்முடைய நாடு முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது.
இந்த நேரத்தில் விவசாயக் கழிவுப் பொருள்களை கொண்டு நிலக்
கரியைப் போன்ற கரித்துண்டுகள் தயாரிக்கின்ற ஒரு இயந்திரம்
சமீபத்திலே உருவாக்கப்பட்டு, அது இப்போது சரியாக செயல்
படுவதாகத் தெரியவில்லை. அதிலே சிறு சிறு அளவில் முதலீடு
செய்த இளம் வாலிபர்கள் இந்த இயந்திரத் தோல்வியால்
கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே, அரசாங்கத்தின் சார்பாக குறிப்பாக நுகர்பொருள்
வாணிபக் கழகத்தின் சார்பாக, ஏற்கெனவே 7, 8 நவீன அரிசி
ஆலைகள் இருந்தாலும் அங்கே கழிவுப் பொருளாக வருகின்ற
உமிகள், கடலைத் தோல், கரும்புச் சக்கைகள் மற்றும் தேங்கிக்
கிடக்கின்ற சக்கைகள் போன்றவைகளிலிருந்து கரித்துண்டுகள்
தயாரிக்கின்ற இந்த தொழிற்சாலையை மேற்கொண்டால்,
தமிழகத்தில் வேலை வாய்ப்புக்கு வழி ஏற்படுவதோடு, எரிபொருள்

பற்றாக்குறையும் நீங்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்து அதிலே குறிப்பாக பெர்கெட் என்று சொல்லக்கூடிய அந்தக் கரித்துண்டுகளை தயாரித்தால் அது நிலக்கரியோடு ஒப்பிடக் கூடிய வகையில் தரம் பெற்றிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் உற்பத்தி செய்வதற்குத் தான் கஷ்டமாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தக் கரித்துண்டுகளை உற்பத்தி செய்ய நெல் உமி, கடலைச் சக்கை, கருப்பஞ்சக்கை போன்ற விவசாயக் கழிவுப் பொருள்களே தேவைப்படுவதால், அந்தத் தொழிற் சாலையை ஊரக தொழில் துறையின் சார்பாக நிறைவேற்றிட வேண்டும் என்று இந்த நேரத்திலே என்னுடைய கோரிக்கையாக தெரிவித்துக் கொண்டு, அதைவலியுறுத்தி நான் அமர்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவுகள் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரித்துப் பேசுகிற வாய்ப்பு பெற்றமைக்சாக மகிழ்ச்சி அடைகிறேன். தமிழக அரசைப் பொறுத்த வரையில் ஊரகத் தொழில்துறையின் வளர்ச்சியில் தொழில் பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல், தொழில் மையங்களை ஏற்படுத்துதல், மூலப்பொருள்களை வழங்குதல், நிதி உதவி அளித்தல், விற்பனைக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற பணிகளை நிறைவேற்றி, தொழிற்கூடங்களுக்கு புத்துயிர் ஊட்டிட வழிவகுத்துக் கொடுத்து, அதற்குரிய திட்டங்களை செயல்முறைபடுத்துவதற்கான வகையில் கொள்கை திட்டங்களை வைத்துக் கொண்டு, அதிலே தொழில் வணிக இயக்ககத்தின் மூலமாக பல நல்ல மேலான பணிகளைச் இந்த அரசு செய்துக் கொண்டிருக்கிறது. இந்த தொழில் வணிக இயக்கத்தின் மூலமாக உருவாக்கப்பட்டவைதான் சிட்கோ என்று சொல்லப் படுகிற இயக்ககமும், டி.ஐ.ஐ.சி (டிக்) என்று சொல்லப்படுகிற இயக்ககமும் ஆகும்.

சிட்கோ என்று சொல்லப்படுகிற தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக ரூபாய் 39 லட்சம் அளவில் அரசு 1984 ஆம் ஆண்டிலே லாபத்தை ஈட்டி உள்ளது. மாநிலங்களின் அளவிலே சிறு தொழில்கள் வளர்ச்சி அடையச் செய்வதற்காக இந்த சிட்கோ நிறுவனம் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டிருக் கிறது என்பதிலே சந்தேகமில்லை.

அடுத்தபடியாக, சிறுதொழில்களைத் தொடங்குவதற்கான முதலீட்டை பெறுவதற்கு 'டிக்' என்று சொல்லக்கூடிய தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மிகுந்த உதவிகளைச் அளித்து வருகிறது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கு பல உதவிகளைச்



செய்து வருகிறது. இந்த நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏறத்தாழ ஒரு லட்சத்து 87 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிற ஒரு நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

இப்போது தமிழகத்தில் ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக பல நல்ல திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள். கிராமப்புறங் களில் உள்ள பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்களுக்கு கைத்திற பொருள் வளர்ச்சி நிறுவனம் பயிற்சி தந்துள்ளது. அதன்மூலமாக ஊரகத் தொழில்கள் நல்லமுறையில் வளர்வதற்கு பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இப்படி பயிற்சி பெற்று வருகிற கைவினைஞர்களுக்கு, தனிப்பட்ட நபர்களுக்கு 3,000 ரூபாய் என்ற அளவிலும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5,000 ரூபாய் என்ற அளவிலும் நிதியுதவி அளிக்கிற ஒரு திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் ஊரகத் தொழில்கள் எவ்வளவு வளர்ச்சி யடைந்து வருகின்றன என்பதற்கு சில உதாரணங்களை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். 1977–ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட சிறுதொழில்களின் எண்ணிக்கை 18,789. இது 1984–ம் ஆண்டில் 49,920 ஆக உயர்ந்திருக்கிறது என்ற நிலையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழக அரசின் முயற்சியால், தமிழக அரசின் நிர்வாகத் திறமையால் பதிவு பெற்ற ஊரகத் தொழில்களின் எண்ணிக்கை மிக அதிகமாக வளர்ச்சியடைந்துள்ளது. அதுமட்டுமல்லாமல், தமிழக அரசு ஊரகத் தொழில்களுக்கு அளிக்கிற கடனுதவியைப் எண்ணிப் பார்ப்போமானால் அது எவ்வளவு அதிகமாக உதவிகளை செய்து வருகிறது என்பது தெரியவரும். 1977–ம் ஆண்டில் 18 லட்சமாக இருந்த அந்தத் தொகை, தற்போது 1985–ம் ஆண்டில் மார்ச் மாதத்தில் ஏறத்தாழ 60 லட்சம் ரூபாயாக அந்தத் தொகை உயர்ந்திருக்கிறது என்பதை குறிப்பிட்டுக் காட்டும்பொழுது, சிறு தொழில் வளர்ச்சிக்காக தமிழக அரசு எந்தெந்த வகையில் பாடு பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அறியலாம்.

தமிழக அரசு மிக வேகமாக கிராமப் பகுதிகளில் இருக்கிற சிறுதொழில்கள் வளர்வதற்கு ஒருபக்கம் முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது. ஆனால் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் அதற்கு மாறான வகையில் நிர்வாகத்தை நடத்தி வருகின்றன. இந்த நேரத்தில் ஒரு சிறிய புள்ளிவிவரத்தை அளிப்பது நலமாக இருக்குமென்று கருதுகிறேன். கிராமப்புறங்களில் தொழில்களை ஆரம்பிப்பதற்காக மாவட்ட அளவில் 14 தொழில் மையங்கள்

இருக்கின்றன. இந்த 14 தொழில் மையங்கள் மூலமாக அங்கீகரிக்கப்பட்டு 25 ஆயிரம் விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் வங்கிகள் அவற்றில் கடன் வழங்குவதற்கு ஏற்றுக் கொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 5,709 தான். ஆகவே 25 ஆயிரம் விண்ணப்பங்களை தொழில் மையங்கள் அனுப்புகிற போது வங்கிகள் 5 ஆயிரம் விண்ணப்பங்களை தான் ஏற்றுக் கொள்கின்றன என்றால், தொழில் வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் வங்கிகள் முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

இந்தத் தொழிற் மையங்கள் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் அளவிற்கு தொழில் கடன் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுகின்றன. ஆனால் வங்கிகள் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அளவில்தான் கடன் வழங்கி உள்ளன. இப்படிப்பட்ட நிலையை நான் சுட்டிக் காட்டுவதற்கு காரணம், எவ்வளவோ பெரிய முதலாளிகளுக்கு கடன் கொடுத்துவிட்டு அவற்றை அவர்களிடமிருந்து திரும்பப் பெறமுடியாமல் இருந்து வருகிற வங்கிகள், ஏழைகளுக்கு, படித்து வேலையில்லாமல் இருக்கிற பட்டதாரி இளைஞர்களுக்கு தொழில் துவங்குவதற்கு உதவி அளிப்பதற்கு முன்வரத் தயாராக இல்லாத சூழ்நிலையில் இருக்கின்றனயென்பதைத் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். வங்கிகளின் நிர்வாகத்தில் இருக்கிற அதிகாரிகள் இந்த நிலையை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வங்கிகள் ஏழைகளுக்கு கடனுதவி வழங்க, அவர்கள் தொழில் துவங்குவதற்கு உதவி செய்யும் வகையில் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல் தற்போது வங்கிகளில் இருக்கக்கூடியவர்கள் தொழில் துவங்குவதற்கு கொடுக்கிற கடன், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கிற கடன் ஆகியவை எல்லாம் சரியான முறையில் கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக இருந்து வருகிறது.

(முற்பகல் 11-10)

மற்ற துறைகளுக்கு எல்லாம் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளைக் கொண்டு, அப்படிப்பட்ட லஞ்சப் புகார்கள் வந்தால், நடவடிக்கை எடுப்பதற்கு, பிரிவுகள் அமைக்கப்பட்டு உள்ளன. ஆனால் இந்த வங்கிகளுக்கு மட்டும், அந்தப் பிரிவுகள் செயல்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டி, வங்கி அதிகாரிகளையும், அந்தப் பிரிவுகள் கண்காணிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வாங்குகின்ற கடன்கள் ஒழுங்கான முறையிலே அதை வாங்குகின்ற நபர்களுக்குப் போய்ச்சேருகிறதா, அல்லது வாங்குகின்ற பணத்திலே சிலவற்றை அதிகாரிகள் பங்கு போட்டுக்கொள்கிறார்களா என்ற சூழ்நிலைகளை எல்லாம் நாம் பார்த்தாகவேண்டும்.



அடுத்தபடியாக தமிழகத்தில் உள்ள அத்தனை கிராமங்களிலும், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிறு தொழிலாவது இருந்தாகவேண்டும். தொழில் கூடம் அமைத்தாகவேண்டும் என்பதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் அந்தந்தக் கிராமத்தில் என்னென்ன மூலப்பொருள்கள் கிடைக்கின்றன, அந்த மூலப்பொருள்களை வைத்து என்னென்ன தொழில்களைச் செய்யலாம், அப்படி உற்பத்தி செய்கின்ற தொழில் கூடங்களில் எத்தனை பேர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்பனபோன்ற புள்ளி விவரங்களை சேகரிக்க, அப்படிப்பட்ட கணக்குகளை எடுக்க, ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழு மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஒவ்வொரு கிராமத்திலும் கிடைக்கக்கூடிய மூலப்பொருளை வரையறுத்து, தொழில் கூடங்கள் ஏற்படுத்துவதற்கு உண்டான நல்ல நிலைமையை உருவாக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கிராமப்புற சிறு தொழில்களுக்கு, குடிசைத் தொழில்களுக்கு அரசு உதவிகளில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும். மின்சாரக் கட்டணம் குடிசைத் தொழிலுக்கு 20 காசாக இருந்ததை தற்போது 55 காசாக உயர்த்தி இருப்பதாக அறிகிறேன். இப்படிப்பட்ட நிலை மாற்றப்படவேண்டும். எனவே குடிசைத் தொழிலுக்கு ஏற்கனவே இருந்த யூனிட்டுக்கு 20 காசு என்று சொல்லக்கூடிய அந்த திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதியைப் பொறுத்த வரையில் சிலோனிலிருந்தும், பர்மாவிலிருந்தும் அகதிகளாக வந்திருக்கக்கூடியவர்கள் 3, 4 குடியிருப்புகளில் குடியிருந்து வருகிறார்கள். அங்கே தனக்கன்குளம் என்ற கிராமத்திற்கு அருகே பர்மா காலனி என்ற ஒரு காலனி இருக்கிறது. அதேபோல் தோப்பூர் கிராமத்திற்கு அருகில் நேதாஜி நகர் என்று சொல்லக்கூடிய சிலோன் வாழ் அகதிகள் வாழ்கின்ற அந்தக் கிராமம் இருக்கிறது. அதைப்போல அவணியாபுரம் என்ற நகரத்திற்குப் பக்கத்திலே கணேசபுரம் மற்றும் இந்திரா நகர் என்று சொல்லக்கூடிய இரண்டு குடியிருப்புகள் இருக்கின்றன. அந்தக் குடியிருப்புகளிலே உள்ளவர்களுக்கு எந்தவிதமான வேலையும் கிடைக்காமல் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வீடுகளிலே குடியிருக்கிறார்களே தவிர, எங்கே வேலைக்குச் செல்வது, என்ன வேலை பார்ப்பது என்றுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய அன்றாட வாழ்க்கைப் பிரச்சனை கூட இன்றைக்குத் தீர்க்க முடியாத அளவிற்கு கஷ்டத்தில் உழன்று கொண்டு இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்டவர்களுடைய

பிரச்சனைகளை தீர்ப்பதற்காக நான் மேலே குறிப்பிட்ட சிலோன், பர்மா அகதிகள் குடியிருக்கின்ற ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு சிறு தொழிற்சாலை என்ற அளவிலே உருவாக்க முன்னுரிமை கொடுத்து, அதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறே .

மற்றபடி இந்த சிறு தொழில் வளர்ச்சியிலே தமிழக அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. இந்த வளர்ச்சி மிக பிரம் மாண்டமான வளர்ச்சியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே எற்டடுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டி, இந்த வளர்ச்சியை ஏழை மக்கள் வாழ்வதற்காக மேலும் விரிவாக்க வேண்டும் என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை வேண்டி, நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த எட்டாவது சட்ட மன்றத்தில் வைக்கப்பட்டு இருக்கிற ஊரகத் தொழில் துறையின் விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பு அளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றியைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். சிறு தொழில்கள் படிப்படியாக வளர்ந்து இன்று மிகவும் சிறப்பான நிலையை எய்தக்கூடிய இந்தக் காலத்திலே 1977—ஆம் ஆண்டுக்கு முன்னால் சிறு தொழில்களுடைய எண்ணிக்கை 18,789 ஆக இருந்தது. இன்று அதனுடைய எண்ணிக்கை ஏறக்குறைய 60 ஆயிரத்தையும் தாண்டியிருக்கிறது என்ற நிலையில், சிறு தொழில் வைத்திருப்பவர்கள். மிகவும் சிறப்பாக செயல்படுவதற்கு உண்டான அறிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிற தொழில் முதலீட்டுக் கழகங்கள், சிட்கோ, டான்சி போன்ற நிறுவனங்கள் அரசினுடைய சிறு தொழில் மையங்களோடு ஒத்துழைப்பு தந்து நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளோடு இணைந்து செயல்பட்டதன் காரணமாக இதுபோன்ற நிறுவனங்கள் மிகச் சிறப்பாக செயலாற்றியதன் காரணமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அறிவுறுத்திய பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் சிறு தொழில்கள் மிகச் சிறப்பாக வளர்ச்சி அடைந்து இருக்கின்றன என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் மாவட்டத்திலே மிக சிறப்பாக செயல் ஆற்றி வருகின்ற சிட்கோ நிறுவனம் பல அறிய சாதனைகளை செய்து இருந்தாலும் மாவட்டத்தில் இருக்கின்ற தொழில் மையங்கள், சிறு தொழில்கள் முனைவோர்களுக்கு பல்வேறு அடிப்படையான வசதிகளை சிறு தொழிலுக்கு தேவையான திட்டங்களை உறுதி செய்யவேண்டும். அதன்மூலமாக சிறு தொழில்கள் மேலும் வளர்ச்சி அடைவதற்கு உண்டான அறிய வாய்ப்பினை பெற்று இருக்கிறது என்பதை நான் இங்கே ஆர்வத்தோடு கூறக் கடமைப்பட்டுள்ளேன் .





அதே போல் சிறு தொழில்கள், பல்வேறு சிறு தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையில் கூட ஆரம்பித்த அதே நேரத்தில் நலிவு உற்று பின் தங்கி இருக்கின்ற பல்வேறு சிறு தொழில்கள் உருப்படியாக அவைகள் இங்கே நாட்டமுடைய சிறு தொழிலாக உருவாக்குவதற்கு அரசு மிக அக்கறையான கவனத்தை செவி சாய்த்து செயல் ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் டான்சி நிறுவனம் என்று சொன்னால் இது சம்பந்தப்பட்ட 56 நிறுவனங்கள் ஒரு சேர இருக்கிறது. டான்சி நிறுவனம் என்று சொன்னாலே தொழில் துறையில் நஷ்டம் படுகிற நிறுவனம் என்று பரவலாக பேசப்படுகிறது. இதை உடனடியாக தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு அறிய வாய்ப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாவட்ட தொழில் மையம், தொழில் கூடங்கள் தொடங்குவதற்கு முன்னால், தொழிற் கூடங்களை தொடங்குபவர்களுக்கு ஒரு சரியான அறிவுறுத்தலின் கீழ் அந்த அந்தப் பகுதியில் இருக்கின்ற ரா-மெட்டிரியல்ஸ் அந்த பகுதியில் உள்ள தொழில் கூடங்களுககு கிடைக்கின்ற ஒரு அறிய வாய்ப்பினை அவர்களுக்கு நிரந்தரமாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அந்தத் தொழில் கூடங்களுக்கு மின்சாரம், அடிப்படையான தொழிலாளர் அமைதி போன்ற பல்வேறு பிரச்சினைகளை மனதில் வைத்து தொழில் கூடங்களுக்கு ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கித் தருவார்களானால் தொழில் கூடங்கள் சீராக செயல் ஆற்றுவதற்கு அறிய வாய்ப்பை ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் புதியதாக ஆரம்பிக்கின்ற சிறு தொழில் கூடங்கள் மின் அணு தொழிலாக இருந்தால் பல்வேறு முன்னேறிய நாடுகளின் அடிப்படையில் இந்தியாவும், தமிழ்நாடும் முன்னேற ஒரு அறிய வாய்ப்பினை ஊரகத் தொழில் துறை உருவாக்கித் தருவதற்கு உண்டான ஒரு அடிப்படையை இங்கே உருவாக்க முடியும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதேபோல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியின்கீழ் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற பட்டதாரி வாலிபர்களுக்கு, படித்த பட்டதாரி வாலிபர்களுக்கு அரசு கடன் வழங்குவதற்கு உண்டான ஒரு அறிய வாய்ப்பினை உருவாக்கி தருவதற்கு 1984-85 ஆம் ஆண்டு சுமார் 42·49 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு 1985-86 ல் 57.46 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் தொகை மிகவும் குறைவு. படித்த இளைஞர்கள் சுய வேலை வாய்ப்பு

இன்றி அலைந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சீரான வழிமுறையை உருவாக்கித் தரவேண்டும் என்ற அந்த அடிப்படையிலே படித்த பட்டதாரி வாலிபர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலமாக வங்கிகள் மூலம் கடன் அளிப்பதன் மூலமாக மேலும் அந்த அந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கின்ற தொழிற்சாலைகளிலே அந்த பகுதியில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக தாய்மார்களுக்கு உண்டான வேலையை அளிக்கின்ற ஒரு உத்திரவாதத்தினை கிராமப்புறங்களில் உருவாக்கி தரவேண்டும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதேபோல் புதியதாக ஆரம்பிக்கின்ற தொழில் கூட்டுறவுகள் அங்கே ஆரம்பிக்கின்ற தொழிலாளர் அமைப்புகள் அங்கே இருக் கின்ற ஆட்சித் தலைவர்கள் அடிப்படையான வசதிகளை கூட்டுறவு முறையில் ஏற்படுத்தப்பட்டாலும் ஒரு கூட்டு அமைப்பு நிறுவனத் தின்கீழ் ஒரு ஆணையரை ஏற்படுத்தி அவர்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களை போக்க அறிய வாய்ப்பினை தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களும் ஏற்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்ற கருத்தை நான் இங்கே கூற ஆசைப்படுகிறேன்.

அதேபோல் நலிந்த ஆலைகளுக்கு, இந்த நிறுவனங்களுக்கு முனைவோர்களுக்கு 50 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை நாம் வட்டி இல்லாத கடன் அளிக்கப்பட்டு இருந்தாலும் மீண்டும் அவர் களின் தொழில் நிறுவனங்கள் அந்தப் பகுதியில் மிக சிறப்பாக செயல் ஆற்றுவதற்கு இல்லாமல் அந்தப் பகுதியில் இருக்கின்ற தொழில்கள் அங்கே நசிந்து இருக்குமானால் அதற்காக மொத்த மூலதனத்தைக் கூட கொடுத்து அந்தப்பகுதியில் இருக்கின்ற அந்தத் தொழில் நிறுவனங்களை நடத்துவதற்கு உண்டான அரிய வாய்ப்பினை ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-20)

இதே போல், தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு அடிப் படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளை எல்லாம் போக்குவதற்கு, ஆவடி, அம்பத்தூர் பகுதிகளுக்குப் போட்டு இருக்கிறபடி, தொழிற்பேட்டைகள் அமைந்து இருக்கின்ற ராணிப்பேட்டை, பல்வேறு பிற்படுத்தப்பட்ட மாவட்ட பகுதி களுக்கு தொழிலாளர் ஆணையர்களைப் போட்டு, அந்தப் பகுதிப் பிரச்சினைகளைப் போக்குவதற்கும், தொழிற்சாலைகள் சரியாக இயங்குகின்றனவா என்றும் அடிப்படைப் பிரச்சினைகள் என்ன என்றும் கண்டறிய வகை செய்யுமாறு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.





கிராமப் புறங்களிலே இருக்கின்ற பல்வேறு தொழிற்சாலை கள், கூட்டுறவுத் துறையிலே ஏற்படுத்துவதற்குண்டான அரிய வாய்ப்புகளை, பல்வேறு தொழில்கள் அந்தந்தப் பகுதிகளிலே புதிது, புதிதாக ஏற்படுத்துவதற்குண்டான வாய்ப்புக்களை பெற்றி ருந்தும், தொழில் முதலீட்டுக் கழகத்தினிடம் அவர்கள் மனு செய் திருந்தும், வருடக் கணக்கில், அந்த மனுக்களின் மீது பரிசீலனை செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. எனவே, அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற, அதனை வேகப்படுத்துகின்ற சூழ் நிலையை மாண்புமிகு அமைச்சர் பெருமகன் அவர்கள் வழிமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க ஆசைப்படுகிறேன்.

அதேபோல் கூட்டுறவுத் துறை அமைப்புகளின் கீழே, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற அடிப்படையான தொழில்களை அந்தந்த பகுதி மக்கள் செய்யக் கூடிய தொழில்களை, அதாவது விவசாயப் பெருமக்களை, விவசாய காலங்கள் போக, மீதிக் காலங்களிலே பயன்படுத்துகின்ற விதத்திலே, கொண்டு வந்து, அந்த அமைப்புக் களின் கீழே செயலாற்றுகின்ற வகையில் செங்கற் சூளைகளையும், கயிறு பண்ணைகளையும் அமைத்துத் தந்து, அப்பகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற் கூட்டுறவு மையத்தின் வாயிலாக அந்தந்தப் பகுதி யில் இருக்கின்ற தோல் தொழில்கள் குறிப்பாக, கிராமத்தில் இருக்கின்ற ஏழை எளிய தாய்மார்கள் தையல் இயந்திரங்களை வைத்துக் கொண்டு தையல் தொழில் கற்றுக் கொண்டிருக்கிறவர் களுக்குப் பயன்படுகிற விதத்தில், தோல் தொழிலை பயன்படுத்தி, சிறு சிறு கூட்டுறவு மையங்களின் வாயிலாக, காலணிகள், பைகள் போன்றவற்றை தைத்து, ஏற்றுமதி செய்யும் உருப்படியான பல வேறு திட்டங்களை, கிராமப்புற திட்டத்தின் அடிப்படையில் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிட்கோ நிறுவனம், அதனுடைய தொடர்புடைய நிறுவனங் களுக்கு உடனடியாக அதற்குத் தேவையான ரா-மெட்டீரியல்ஸ் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதே போல், சிட்கோ நிறுவனங்களின் வாயிலாக கடன் பெற்று இருக்கின்ற நிறுவனங் களுக்குண்டான மார்க்கட்டிங்-ஐ உருவாக்கித் தரும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அவர்களுக்கு மார்க்கட்டிங் ஏற்படுத்தித் தந்தாலும், அவர் கள் பொருளாதாரத்திலே வீழ்ச்சி அடைந்திருந்தால் அந்த நிறுவனங்களுக்கு பொருளாதார பாதுகாப்பையும் உருவாக்கித் தர வேண்டும்.

பல்வேறு நிலைகளிலே அடிப்படையான வசதிகளைப் பெற்று
இருக்கின்ற வகையில், சிட்கோ போன்ற பல்வேறு நிறுவனங்
களினைப் போல், டால்கோ என்ற புதிய நிறுவனத்தை இப்போது
ஏற்படுத்தித் தந்து இருக்கின்ற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர்
புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு ஊரகத் தொழில்
வளர்ச்சி அமைச்சர் அருமை அண்ணன் ஆனூரார் அவர்களுக்கும்
நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியில், ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்
பாடி, விசாரம், பேரணாம்பட்டு போன்ற பகுதிகளில் இருக்கின்ற
தோல் தொழிலினால், அதனைச் சுற்றி இருக்கின்ற கழிவு நீரால்
அங்கே இருக்கின்ற ஏழை எளிய விவசாய மக்கள், குடிக்கின்ற
தண்ணீரும், பயிரிடுகின்ற நிலங்களும் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்
நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

பாதிக்கபப்பட்டிருக்கின்ற நிலங்கள் மற்றும் நிலவரங்களைப்
புரிந்து கொண்டு இருக்கிற மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்
அவர்கள், அங்கே இருக்கின்ற அனைத்து தோல் ஷாப்புக்களையும்
இணைத்து, கூட்டுறவு முறையிலே கட்டப்பட்டு, அங்கே புதியதாக
தோல் தொழில் தொடங்குவோருக்கு உண்டான அனைத்து வசதி
களையும் செய்து கொடுக்கின்ற இந்த அரசு, அதோடு அந்த
மக்களுக்கும் உண்டான பாதுகாப்பையும் அளிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அங்கே இருக்கின்ற தோல் தொழிலினால் வெளியாகின்ற கழிவு
நீரை சுத்தப்படுத்துகின்ற நிலையை, ஆம்பூர், வாணியம்பாடி,
பேரணாம்பட்டு, விசாரம், ராணிப்பேட்டை போன்ற பகுதிகளில்
இருக்கின்ற நிலையங்களில் டனடியாக அதற்கான ஒரு திட்
டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு ஊரகத்
தொழில் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ள ஆசைப்
படுகிறேன்.

அதைப்போன்று, இந்த நியூக்லஸ் என்விரான்மெண்ட் செல்
என்பதைத் தமிழ்நாடு முழுவதும், எங்கெங்கே தோல் பதனிடும்
தொழில் இருக்கிறதோ அங்கெல்லாம் விரிவு படுத்தி, உடனடி
யாகக் குடிதண்ணீரையும், விளை நிலங்களையும் பாதுகாப்பதற்கு
உத்தரவிடும்படி கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போன்று, 31—5—85-க்குள்ளாக, அந்தத் தண்ணீரை
உப்பு நீராகத் தண்ணீரை வெளியேற்றக் கூடாது, நியூக்லஸ் என்வி
ரான்மெண்ட் செல் அமைக்கப்பட வேண்டுமென்ற உத்தரவை,
தமிழ்நாடு அரசினுடைய நிலையிலேயிருந்து அவர்கள் பெற்றிருப்ப
தாக அறிகிறோம். உடனடியாக அவர்கள் அந்த உப்புநீரைப்
போக்குவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திய பிறகு அதற்
குண்டான உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.





மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர
வர்கள், டான்சி நிறுவனத்தின் கீழ் இயங்கக்கூடிய தோல் நிறு
வனங்களை டால்கோ நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்ற
அறிவிப்பினை நேற்று நடந்த தோல் தொழில் வளர்ச்சிக் கழக
நிறுவனத்தினுடைய ஏற்றுமதியாளர்கள் கூட்டத்திலே அறிவித்
திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர்
புரட்சித் தலைவரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,
வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தோல் தொழிலை டால்கோ நிறுவனத்தின்கீழ் கொண்டு
வந்து அவர்கள் தோல் தொழிலை அறிமுகப்படுத்தவும், தோல்
தொழிலில் உருவாகும்படியான பல்வேறு அடிப்படைப் பிரச்னை
கள் எதுவாக இருந்தாலும், அதாவது ஆரம்பிப்பதாக இருந்தாலும்
அல்லது கூட்டுறவுத் துறையில் கடன் பெறுவதாக இருந்தாலும்,
அவைகளை டால்கா நிறுவனத்தின்கீழ் கொண்டுவந்து அதை
முறைப்படுத்த வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்ட
ஆசைப்படுகிறேன்.

1977 ஆம் ஆண்டுக்கு முன்னாலே தோல் தொழிலில் இருந்
தவர்கள், அதற்கு முன்னால் வியாபாரம் செய்தவர்கள் அந்தந்தப்
பகுதிகளிலே வியாபாரம் செய்தார்கள். ஆனால் அதற்குப்பிறகு,
1979 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் தோல்
தொழில் ஏற்றுமதியில் கட்டுப்பாடு விதித்ததால் மத்தியிலே
கட்டுப்பாடு விதித்ததன் காரணமாகத் தோல் தொழில்
தமிழ்நாட்டிலே நலிவுற்றிருக்கிறது. அப்படி நலிவுற்ற பிறகு
பல்வேறு தொழில் அதிபர்கள், தோல் ஏற்றுமதியாளர்கள்
நசிந்துபோய், இருக்கின்ற இடம் தெரியாமல் உள்ளார்கள்.
1976—77 ஆம் ஆண்டுக்கு முன்னால் தோல் தொழிலில் பதிவு
செய்துகொண்டு வியாபாரம் செய்தவர்கள், ஏற்றுமதியாளர்களாக
இருந்தவர்களுக்கு கோட்டா வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்
பெற்ற பலர் இன்றைக்கும் கோட்டா வைத்துக்கொண்டு, வெள்
ளைத் தோலுக்கு கோட்டா இருப்பதால் அதை இன்றும் வியா
பாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். 1981-க்குப் பிறகு, 1983,
1984 வரையில் புதிதாக வியாபாரம் செய்பவர்களுக்குக் கோட்டா
இல்லாததன் காரணமாக ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது. 583 கோடி
ரூபாய்க்கான ஏற்றுமதியைப் பெற்றிருக்கிறோம். தோல் தொழி
லில், இந்தியாவினுடைய மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டிலே
60 சதவீதம் முதல் 70 சதவீதத்தைப் பெற்றிருக்கிறது. அப்படிப்
பட்ட தோல் தொழிலில் புதிது புதிதாக லைசன்ஸ் பெற்று தோல்
தொழிலை ஆரம்பிக்கின்றவர்கள் ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்பை
ஊரகத் தொழில் துறை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். அப்படி வழங்க முடியும் என்றால், இப்படிப்பட்ட தோல்
தொழிலின் மூலம் மேலும் அந்நியச் செலாவணியைப் பெருக்கும்
வகையில் பல்வேறு தொழில் முனைவர்கள் நாட்டம் செலுத்து
வார்கள் என்ற அரிய கருத்தையும் நான் தெரிவித்துக்கொள்
கிறேன்.

பட்டுத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், அது ஊரகத் தொழில் துறையிலே இப்பொழுது இருந்தாலும்கூட, பட்டுத்தொழிலை வளர்க்கும் பணியை விவசாயத் துறைக்கு மாற்றிக்கொடுத்தால் நல்ல முறையில் இருக்கும். பட்டுப் பூச்சியை வளர்க்கும் பணியில் பெரும்பகுதி விவசாயத் துறையையே நம்பியிருக்கிறது. அது பச்சை இலைகளை நம்பியிருப்பதால், பச்சை இலைகள் நிச்சயமாகப் பராமரிக்கப்பட்டால்தான் அந்தப் பட்டுப் புழுக்கள் வளர்வது வெற்றியடையும் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அப்படிப் பட்டுப் புழுக்களை புதுப்புது ரகங்களாக உருவாக்கித் தருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதைப்போன்றே, பட்டு உற்பத்தியாளர்களுக்கு அடிப்படையான மார்க்கெட்டிங் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழகத்திலே அதற்கான வசதி இல்லாததால் பட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. பட்டு உற்பத்தி செய்தாலும் அதை எடுத்துச் சென்று விற்பதற்கான வழிமுறைகள் இல்லாத காரணத்தினால் பட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பல்வேறு விவசாயிகளும் இதை உற்பத்தி செய்வதில் முனைப்பாக முன்வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். எனவே, உடனடியாகப் பட்டு மார்க்கெட்டிங் பெடரேஷனைத் தமிழ்நாட்டிலே, குறிப்பாக சென்னையிலேயோ அல்லது மத்திய பகுதியாக இருக்கின்ற திருச்சியிலோ உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பு தந்த மாண்புமிகு துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-30)

திரு. ஜெ. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை அறிவிப்பிலே கிராமப் பிரதேசங்களிலே அதிகமான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய முக்கியமான நோக்கம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நோக்கம் நல்லதுதான். அது வரவேற்க வேண்டியதுதான். ஆனால் நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், இதே நோக்கம் தான் சென்ற வருஷத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் கிராமப் பகுதிகளிலே இன்று எந்த அளவுக்குத் தொழில் வளர்ச்சி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. எத்தனை ஆயிரம் நபர்களுக்கு அதிகமான தொழில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைச் சொன்னால் கொஞ்சம் உதவிகரமாக இருக்கும்.

எனக்குத் தெரிந்த அளவிலே நான் ஒருசில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று கிராமப் பகுதிகளிலே பிரதானமாக உள்ள தொழில்கள் என்று நாம் தெரிந்திருக்கக்





கூடிய தொழில்கள், மிகப் பெரிய சிக்கலிலே மாட்டிக்கொண்டு அந்தத் தொழிலே இன்று செயலற்ற முறையிலே இருந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் தோல் பதனிடும் தொழிலில் ஏற்பட்டிருக்கிற பிரச்னைகளைப் பற்றி தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு, அந்தத் தொழிலிலே வேலை செய்து கொண்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றனர் என்பதை அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள்.

அதேபோல் தீப்பெட்டித் தொழில், தீப்பெட்டித் தொழிலில் வேலை செய்து கொண்டிருக்கிற தொழிலாளர்களும் அந்தத் தொழிலில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னைகளின் காரணமாக பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அவர்களது பல்வேறு பிரச்னைகளைத் தீர்த்து, அந்தத் தொழில் நல்ல முறையிலே இயங்குவதற்கு அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் போதுமானவை அல்ல என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று இன்னொரு விஷயம், ஏறத்தாழ 1 இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய தொழில் முந்திரித் தொழில். ஏறத்தாழ சென்ற இரண்டு மூன்று வருடங்களாக அந்த முந்திரி ஆலைகளிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் வாயிலாக, அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த நேரத்தில், அமைச்சர் அவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார். அதிலே இருக்கிற மிக முக்கியமான பிரச்சனை என்னவென்றால், மத்திய அரசினுடைய ஏற்றுமதி இறக்குமதி கொள்கை காரணமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இன்று மைய அரசை அணுகி, மேலும் அதிகமாக கச்சா முந்திரி கிடைப்பதற்கான ஏற்பாட்டை, வெளி நாடுகளிலிருந்து வரவழைத்து, அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏறத்தாழ 70,000 தொழிலாளர்கள், இன்று இந்தத் தொழில் முடங்கிக் கிடப்பதன் காரணமாக, வேலையற்றிருப்பதன் காரணமாக, பாதிக்கப் பட்டிருக்கின்றனர் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே, அந்த முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்) [1985 ஜூலை 4

இன்னொரு பெரிய தொழில் கயிறுத் தொழில். கயிறுத்
தொழிலைப் பொறுத்தமட்டில் தஞ்சை மாவட்டத்திலே சில
நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக இந்தக் கொள்கைக் குறிப்பிலே
சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற வருடம் கூட இது சம்பந்த
மாகச் சில நடவடிக்கைகள் எடுக்கப் பட்டதாகக் கொள்கைக்
குறிப்பிலே சொல்லப்பட்டிருந்தது. ஆனால், அந்த முறையிலே
நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக, கயிறு
தொழில் அபிவிருத்திக்காக, ஒரு வெல்பேர் டிரெயினிங் சென்டர்
தஞ்சை மாவட்டத்திலே ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்
பட்டிருக்கிறது. அந்த முறையிலே நடவடிக்கைகள் காணப்பட
வில்லை. இந்த நேரத்திலே ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன்.
மைய அரசு கயிறு தொழிலை வளர்ப்பதற்காக ஏறத்தாழ
ரூ. 100 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது நமக்குச் சொல்லப்
பட்டிருக்கிற தகவல்.

ஆனால் அந்தத் தொகையிலிருந்து இந்த மாநில அரசுக்கு,
தமிழ்நாட்டிற்கு எந்த அளவுக்கு பணம் கொடுக்க வேண்டுமோ
அந்த அளவுக்குக் கிடைக்காத காரணத்தால் இங்கே இருக்கிற பல
ஆயிரக்கணக்கான கயிறு தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்
கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சரியான
வகையில் பணம் கிடைக்காத காரணத்தால் நல்ல திட்டங்கள், விரி
வான திட்டங்கள் இந்த அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லை என்று
தெரிகிறது. அது உண்மையா என்று தெரியவில்லை. எனக்குக்
கிடைத்த தகவல் அது. அப்படி இருந்தால் அது நிச்சயமாக சரி
யல்ல. தமிழ்நாட்டிலே இருக்கிற மக்களில் ஒரு கணிசமான பகுதி
யினர் இந்த கயர் தொழிலை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.
அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தக் கூடிய முறையில் மத்திய
சர்க்காரிடமிருந்து பணத்தைப் பெற்று, இந்தத் தொழிலை
அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஈத்தாமொழியி
லிருந்து கொல்லங்கோடு வரையிலுள்ள பகுதியில் 10,000-க்கும்
அதிகமாக தொழிலாளர்கள் இதை நம்பியிருக்கிறார்கள். ஆசியாவில்
இருக்கக்கூடிய மிகப்பெரிய கயர் மெகனைஸ்ட் ஆலை, மிகப்பெரிய
ஒரு முதலாளியினுடைய அந்த ஆலை இன்று அந்த மாவட்டத்தில்
செயலற்றுப்போய் இருக்கிறது. அந்த முதலாளிக்கும் மத்திய
அரசுக்கும் அல்லது அவருக்கும் கயர்போர்டுக்கும் ஏற்பட்டிருக்கக்
கூடிய சண்டை காரணமாக இன்று அந்த ஃபாக்டரியை செயலற்ற
முறையில் வைத்திருக்கிறார். அந்த ஃபாக்டரியிலே அவர் பெரு
மளவில் முதலீடு ஒன்றும் செய்யவில்லை. தமிழக அரசிடமிருந்து
அல்லது அதனுடைய பல்வேறு ஏஜென்சிகளிடமிருந்து பணத்
தைப்பெற்றுத்தான் அந்த ஃபாக்டரியை நிறுவியிருக்கிறார். அந்த
ஆலையை நம்முடைய இண்டஸ்டிரீஸ் டிபார்ட்மெண்ட் ஆபீசர்கள்
சென்று பார்த்து, தமிழக அரசு அதை ஏற்று நடத்த முடியுமா



1985 ஜூலை 4] (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

என்று பரிசீலித்துக்கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்
திருக்கிறது. அந்த முதலாளி பெரிய அளவில் முதலீடு போடாமல்
அரசின் பல்வேறு ஏஜென்சிகளிடமிருந்து பெற்ற பணத்தை முதலீ
டாகப் போட்டிருக்கிறார் என்பதால், அவருக்கும் மத்திய அரசுக்
கும் அல்லது அவருக்கும் கயர்போர்டுக்கும் இருக்கிற தகராறு
காரணமாக 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்
டிருப்பதால், அந்த ஸ்தாபனத்தை அரசே எடுத்து நடத்த உரிய
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கொல்லங்கோடு என்ற கிராமம் கயர்
டெவலப்மெண்ட் ஸ்கீமில் ஒரு மாதிரி கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்
பட்டது. ஆனால் இந்த சர்க்கார் அங்கே இந்தத் தொழில்
வளர்ச்சிபெற இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் சரி
யான முறையில் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். இந்த நிலை சரியல்ல. விரைவிலே சரியான நட
வடிக்கை எடுக்க வேண்டும். அதைப்போன்று தஞ்சை மாவட்டத்
தில் இருக்கிற கயர் தொழிலும் வளர உரிய நடவடிக்கையை இந்த
சர்க்கார் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சனை என்னவென்றால் நெல்லை மாவட்
டத்திலிருந்து இன்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தொண்டு
(தேங்காய் மட்டை) போகக்கூடாது என்று தடை இருக்கிறது. அது
கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தத் தொழிலைப் பாதிக்கும்.
ஆகையால் இந்தக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் இந்த கொள்கைக் குறிப்பில் சொல்லப்
பட்டிருக்கிறது. தேங்காய் மட்டை கிடைக்காத அந்தப் பிரச்சனை
காரணமாக இந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று
கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் குறிப்பிட
விரும்புவது, உபரியாகக் கிடைக்கிற காலத்தில் மலிவாகக் கிடைக்
கிற காலத்தில் அரசாங்கமே தேங்காய் மட்டையை வாங்கி ஸ்டாக்
பண்ணி, பின்னர் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்
களுக்கு கொடுக்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது.

இன்னொரு விஷயம். பொதுவாக மத்திய அரசினுடைய
முதலீடு இன்று தமிழ்நாட்டில் மிகவும் குறைவாக இருக்கிறது
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற காலத்தில்,
காங்கிரஸ் கட்சி இந்த நாட்டில் ஆட்சியில் இருந்தபோது எந்த
அளவுக்கு மத்திய சர்க்கார் தமிழ்நாட்டில் நேரடியாக முதலீடு
செய்து தொழில்களை ஏற்படுத்தினார்களோ அந்த அளவுக்கு
இன்றைக்கு செய்யவில்லை. இதை இந்த சர்க்கார் மத்திய
அரசுக்கு சுட்டிக்காட்ட வேண்டும். மத்திய அரசின் முதலீடு அதிக
மாக, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்) [1985 ஜுலை 4

இன்றைக்கு நமக்குக் கிடைக்கக்கூடிய தகவல் என்ன வென்றால், அது சரியாக இருந்தால், சென்ட்ரல் இன்வெஸ்ட் மெண்ட் அல்லது சென்ட்ரல் சப்சிடி 1983-84 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டுக்குக் கொடுக்கப்பட்டது 11 கோடி ரூபாய் மட்டும்தான். இது காணாது என்பதை அமைச்சர் அவர்களும் இந்த நாடும் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். ஆகவே, மத்திய அரசினு டைய முதலீட்டை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

செல்ஃப் எம்பிளாய்மெண்ட் சம்பந்தமாக லோன் கொடுக்கப் படுகிறது என்று பெருமையாகச் சொல்லப்படுகிறது. பலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது, என்ன வென்றால் 1984-85ஆம் ஆண்டு டார்கெட் 4,340 இலட்சம் ரூபாய், கொடுக்கப்பட்டிருப்பது 4216.49 இலட்சம் ரூபாய்தான்.

(முற்பகல் 11-40)

டார்கெட்டைக்கூட நம்மால் நிறைவேற்ற முடியவில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? இந்தச் சபையிலே இருக்கின்ற பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். பல பத்திரிகைகளிலேயும் வந்திருக்கின்ற விவரங்கள் என்ன? இன்றைக்கு டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரீஸ் சென்டர் அல்லது அதற்காக அமைக்கப்பட்டிருக்கக்கூடிய குழுக்கள் சிபாரிசு செய்ததற்குப் பிறகும் பல நபர்களுக்கு வங்கிகள் கடனைக் கொடுப்பதில்லை. எந்த நோக்கத்தோடு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உருவாக்கப் பட்டிருக்கின்றதோ அந்த நோக்கத்தோடு நேஷனலைஸ்ட் பேங்குகள் செயலாற்றுவதில்லை. அதில் அவர்கள் ஒத்துழைப்ப தில்லை. எனக்கு இது நன்றாகத் தெளிவாகத் தெரியும். கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட இது மிகப்பெரிய பிரச்சனையாக வந்தது.

மத்திய அரசு ஒதுக்கிய பணத்தைப் போதுமான அளவுக்கு வேலையில்லாதவர்கள் பண உதவி செய்ய வேண்டும் என்ற அடிப் படையில் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு இருப்பது சரியில்லை. எனவே அதற்காக வைக்கப்பட்டிருக்கக்கூடிய நடைமுறைகளை எந்த அளவுக்கு லெஸன் பண்ணவேண்டுமோ அந்த அளவுக்கு குறைத்து அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய வகையில் அவர்களுக்கு வாழ்வு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வகையில் சட்ட திட்டங்களை உருவாக்கி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1985 ஜுலை 4] (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

இன்னொரு விஷயத்தை நான் இங்கே சொல்ல விரும்பு கிறேன். இன்று சிறு தொழில்களைப் பொறுத்த வரையில் அவை டிரிப்பில்ட் என்ற முறையில் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலே 24 ஆம் தேதிய இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் தமிழ்நாடு ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷனுடைய தலைவர் அவர்களால் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருக்கின்றது, அதில் அவர் என்ன சொல்கிறார்? அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் காரணமாக இன்று அந்தத் தொழிலே அழிக்கப்படக்கூடிய அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு அவர் ஒரு உதாரணமும் சொல்கிறார். 20 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே ஒரு தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது என்றால் அந்தத் தொழிலிலே இலாபம் வந்தாலும் நஷ்டம் ஏற்பட்டாலும் கூட அதைப்பற்றிக் கவலைப்படாமல் 25 ஆயிரம் ரூபாய் சேல்ஸ் டாக்ஸ் கட்டியாக வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணத்தால் இன்று பல சிறுதொழில்கள் நசிந்து போகக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே இந்த விஷயத்தைத் தீவிரமாக அரசு பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் விளைவாகக் கிடைத்திருக்க கூடிய தகவல் என்ன? 1971-லே தமிழ்நாடு சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் முன்னணியில் இருந்தது. இன்று அது அந்த இடத்திலே இருந்து கீழே இறங்கியிருக்கின்றது.

உதாரணமாக இன்று கிடைத்திருக்கக்கூடிய தகவல் இந்தியா விலேயே ஒட்டுமொத்தமாக Small Scale Industries average growth 196. தமிழகத்தைப் பொறுத்தவரையில் என்ன நிலைமை என்றால் அது 141 என்று இருக்கின்றது. இந்த அளவுக்கு நம்முடைய நிலைமை இருக்கின்றது என்றால் அதைக் கூட்டவேண்டும். எனவே சிறு தொழில்களைப் பாதுகாக்கின்ற முறையில் அவர்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்யவேண்டுமோ அதைச் செய்து சேல்ஸ் டாக்ஸிலும் ஏதாவது உதவி செய்யவேண்டுமென்றால் அதையும் செய்து சிறு தொழில்களை வளர்க்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். Pollution Control சம்பந்தமாக நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நேற்றையதினம் அந்த Council of Export-leather export சம்பந்தமாக நடந்த திறப்பு விழா கூட்டத்தில் அந்த கவுன்சிலுடைய சேர்மென் ஒரு கருத்து தெரிவித்திருக்கிறார். அதாவது நம்முடைய மத்திய அமைச்சருக்கும் மாநில அமைச்சர் களுக்கும் தெரிவிக்கப்பட்ட கருத்து என்னவென்றால் "Industrialists are conscious of the social responsibility on pollution control. But the existing technology treatment is so costly that investments are beyond the capacity of the individual Tanner". இவ்வாறு தோல் தொழில் சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

தோல் தொழிலில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பிரச்சினை பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் சொல்லப்பட்டிருப்பது என்ன வென்றால் பொல்லுஷன் கன்ட்ரோலிலேயிருந்து நாட்டைக் காப்பாற்றவேண்டும் என்பதில் நாம் அக்கறை உள்ளவர்கள்தான், ஆனால் பொல்யூஷன் கண்ட்ரோல் என்ற ஒரே பிரச்சினை காரணமாக தொழில்கள் எல்லாம் அழிந்து போகக்கூடிய அளவுக்கு நிச்சயமாக அனுமதிக்கக் கூடாது. ஆகவே இன்று பிரச்சினை என்னவென்றால் பொல்லுஷன் கன்ட்ரோல் சம்பந்த மாக அட்வான்ஸ் சைன்ஸ் டெவலப்மென்டிலே அதற்காக என்னென்ன ஏற்பாடுகளைச் செய்து கொள்ள முடியுமோ அவற்றைச் செய்து கொள்ளவேண்டும். இவ்வாறு உரிய ஏற்பாடு களைச் செய்து இந்த பொல்லுஷன் கன்ட்ரோலிலே இருந்து நாட்டைக் காப்பாற்றுகின்ற வகையிலும், அதே நேரத்தில் தொழில்கள் நசிந்து போகாமல் பாதுகாக்கின்ற முறையிலும் ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்னொரு விஷயத்தில் கூட நான் சுட்டிக் காட்ட விரும்பு வது என்னவென்றால், தண்ணீர் இருக்கக் கூடிய இடங்களுக்கு ஒரு மைல் சுற்றளவில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைத்துக் கொள்வதற்கு லைசன்சுகள் வழங்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி வரக்கூடிய நேரத்திலே பல கிராமங்களில் இப்படிப்பட்ட சிறு தொழில்களை ஆரம்பிக்க முடியாத நிலைமை ஏற்படும். பல இடங்களிலே பலவிதமான சங்கடங்கள் ஏற்படும். ஆகவே அதைத் தவிர்க்க பொல்லுஷன் கண்ட்ரோலுக்கு தேவைப்படும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு, கிராமங்களில் சிறு தொழில் வளர்ச்சியையும், எந்த தடையும் இல்லாது நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தில் நான் சொல்லவிரும்பு வது என்னவென்றால், சென்ற ஆண்டு, இந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் நம்முடைய காங்கிரஸ் கட்சியை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிலைப் பொறுத்தவரையில், டயர் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை அரசாங்கம் ஆரம்பிக்க இருக்கிறது என்று பல ஆண்டுகளுக்கு முன்பே அறிவிப்பு வந்தது. அதுவும் இன்னும் நிறைவேறாத நிலையிலேயே இருக்கிறது என்று சுட்டிக் காட்டினார். அதை நானும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் அதிகமாக உற்பத்தியாகிறது என்பது அனைவருக்கும் நன்கு தெரிந்த உண்மை.





அங்கே போக்குவரத்துக் கழகங்களுக்கும் அரசினுடைய வாகனங்களுக்கும் தேவைப்படுகிற டயர்களை உற்பத்தி செய்கிற பேக்டரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வைக் கப்பட்டது. ஆனால் அரசு என்ன காரணத்தினாலோ அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசு அந்த மாவட்டத்தைப் புறக்கணிக்கிறதோ என்ற சந்தேகம் கூட அந்த மாவட்டத்து மக்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்த மாவட்டத்திலே ஒரு ரப்பர் பேக்டரியை கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஏற்படுத்துவதற்காக 76—வது வருஷத்திலேயே மனு கொடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் அங்கே அந்த தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படாதது இந்தத் துறை அந்தத் தொழிலில் தோல்வியைக் கண்டிருக்கிறது என்பதைத் தான் சுட்டிக் காட்டுகிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். ஏனென்றால் எந்த அளவிற்கு வேகமாக அந்தப் பணிகள் செய்யப்பட்டிருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு முனைப்பாக அந்தப் பணிகள் செய்து முடிக்கப்படவில்லை.

அதேபோல எங்கள் மாவட்டத்திலே மிகப் பெருவாரியாக மானோசைட்டு, இல்லுமனைட்டு போன்ற பல விலை உயர்ந்த பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதை வைத்து டிட்டோனியம் டை—ஆக்ஸைடு போன்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னோம், ஆனால் இன்னும் அது முடிவுக்கு வராமல் இருக்கிறது.

இன்னொரு விஷயம் என்னவென்றால், எங்கள் மாவட்டத் திலே கூட்டுறவுத் துறையிலே பழங்களை உற்பத்தி செய்கிற பேக்டரி ஒன்று இயங்கி வருகிறது. அங்கே 16 தொழிலாளர் களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்தை சேர்த்து வருவதைவிட மூன்று மடங்கு சம்பளம் அதிகமாக அங்கே இருக்கிற 5 அதிகாரி களுக்கு கொடுக்கப்படுகிறது. அந்தத் தொழிலாளர்கள் 84-வது ஆண்டிலிருந்து தங்களுக்கு அதிகமான சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டால், கொடுக்க முடியாது என்று பதில் வருகிறது. இந்த நிலைமை அவர்களை போராட்டத்திற்கு தள்ளக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் சொல்லி முடித்துக் கொள் கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை குறிப்புகளிலே நம்முடைய அரசு ஸ்தாபனங்கள் பலவற்றைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. நேற்றைய தினம் பொது நிறுவனங்கள் குழு 1985—86-வது ஆண்டுக்கான, மூன்றாவது அறிக்கையை இந்தப் பேரவையிலே வைத்தது. அதிலே தமிழ்நாடு தொழில் வளர்ச்சி

ஸ்தாபனத்தைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிற யோசனையை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். '' கழகம் முதலீடு செய்துள்ள 55 நிறுவனங்களில், 21 நிறுவனங்கள் ஆதாயப் பங்கை அறிவிக்கவில்லை என்றும், கழகத்தின் முதலீட்டில் சுமார் 10 சதவீதத்தைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்துவிட வேண்டியிருந்தது என்றும்; கடனும் வட்டியும் அதிக அளவில் நிலுவையாக உள்ளன என்றும் குழு அறிகிறது.—இதன் காரணமாக—ஆண்டுதோறும் நிலுவைத் தொகை கணக்கிலிருந்து கணிசமான அளவிற்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டிலிருந்து 1982–83-ஆம் ஆண்டு வரை கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ. 3.12 கோடியாகும் '' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த முறையிலே அந்தக் கழகம் செயல்பட்டால் எப்படித் தொழில் வளர்ச்சி ஏற்படும் என்று நான் கேட்க விரும்புகிறேன் ?

இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதே அறிக்கையிலேயே 37-வது பத்தியிலே '' கழகம் தொடங்கப்பட்டு 35 ஆண்டுகள் ஆகியும் உள் தணிக்கைப் பற்றிய நடைமுறை நூல் இல்லையென்பதை அறிந்து குழு வியப்படைகிறது. இனியும் காலம் தாழ்த்தாமல், உள் தணிக்கை நடைமுறை நூலைத் தயாரிக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த மாதிரி இன்னொரு பிரச்சினையைக்கூட சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11–50)

அதாவது இயக்குநர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு நிதியுதவி வழங்கும் போக்கு ஒரு ஆரோக்கியமான நடைமுறையில்லையென்று குழு கருதுகிறது. அத்தகைய நிதியுதவியை வழங்குவதற்கு கட்டுப்பாடு இல்லையென்பது, அவ்வாறு நிதியுதவி வழங்குவதை நியாயப்படுத்தாது, இயக்குநர்களுக்கு அல்லது இயக்குநர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு பொது நிறுவனங்கள் நிதியுதவி வழங்காதிருப்பதை உறுதி செய்ய அந்த நிறுவனங்கள் அனைத்திற்கும் நிதித் துறை தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

இது நம்முடைய பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டி பொது நிறுவனங்களைப் பற்றி பரிசீலனை செய்து சொல்லியிருக்கிற ஒரு விஷயம். இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட்டு முடித்து விடுகிறேன். தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட சில தொழில் பிரிவுகள், நலிவுற்ற தொழில் பிரிவுகள் தவிர





கழகம் நிதியுதவி செய்த மற்ற தொழில் பிரிவுகளுக்கு கடன் வழங்கியதில் அவற்றின் பணிமுன்னேற்றம் குறித்து அக்கறை செலுத்தவில்லை என்பதையும், கடனுதவித் தொகை, வட்டித் தொகை ஆகியவற்றை செலுத்தத் தவறினால் அவற்றில் கழகம் அக்கறை காட்டுகிறது என்பதையும் ஆராய்ந்து குழு கருத்து தெரிவித்திருக்கிறது. இவற்றின் மூலம் இந்தக் கழகம் எப்படி செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

திரு க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள ஊரகத் தொழில்கள் குறித்து கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருப்பவர்கள், 'கெட்டும் பட்டணம் சேர்' என்று சொல்கிற நிலையை மாற்றுகிற அளவில், அவர்களுக்கு அங்கே வேலை வாய்ப்புகளை உருவாக்குகிற சூழ்நிலையை இன்றையதினம் அரசு உருவாக்கி வருகிறது, ஊரக வளர்ச்சித் திட்டங்களை பொதுமக்கள் இன்றையத் தினம் பெரிதும் பாராட்டி வருகிறார்கள். இந்தத் திட்டங்களினால் கிராமப்புறங்களில் போற்றி கைத்தொழில்கள் பெரிதும் வளரவும், அவை பாதுகாக்கப்படவும் வாய்ப்புள்ளது. தயாரிக்கும் பொருட்கள் நல்ல தரமுள்ளவையாகவும், அதேசமயம் தொழில் செய்பவர்களுக்கு இலாபகரமாக அமையும் விதத்திலும் சிறுதொழில் வளர்ச்சித் துறை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வேலையின்மை என்கின்ற பிரச்னை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இந்த நிலையைக் கருதிதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் தொழில் கல்வித் திட்டத்தை இன்றைய தினம் உருவாக்கி இருக்கிறார்கள். படித்த இளைஞர்கள் பயன் பெறுகிற வகையில், படித்த இளைஞர்கள் தங்களுடைய வாழ்வில் வளர்ச்சியை நல்லமுறையில் காண்கிறவகையில், படித்து விட்டோம் அலுவலகங்களில் தான் வேலை செய்ய வேண்டும், பேனாவைத் தான் பிடிக்க வேண்டுமென்ற நிலையை மாற்றி, ஒவ்வொருவரும் தங்களுக்கு தேவையான முறையில், அவரவர்களின் சுயதேவையைப் பூர்த்தி செய்கிற விதத்திலே கைத்தொழில்களை உருவாக்குகிற முறையில் இன்றைய தினம் தமிழகத்தில் தொழில் வளர்ச்சித் திட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த வகையில் படித்த , இளைஞர்கள் தொழில்களைத் துவங்க அவர்களுக்கு இன்றைய தினம் 20 ஆயிரம் ரூபாய் அளவிற்கு உதவி கொடுக்கப்படுகிறது.

அதை மேலும் நல்லமுறையில் உயர்த்தி அவர்கள் அந்த 20 ஆயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு மூலப்பொருட்களை வாங்கி அவர்கள் தொழில் நடத்த முடியாத ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் சொந்தப் பணம் வைத்திருந்தால் கிடைக்கக் கூடிய அந்த 20 ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு, தொழிலைத் துவங்க முடியும். நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கும் முடியும். மிகவும் தாழ்த்தப்பட்ட நசுக்கப்பட்ட நிலையில் இருக்கின்ற, பிற்படுத்தப்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கு இந்த 20 ஆயிரம் ரூபாய் போதாது இருப்பதன் காரணமாக குறைந்தது 50 ஆயிரம் ரூபாயாக அதை உயர்த்திக் கொடுத்து, இளைஞர்கள் தொழில் துவங்க கடன் வழங்க அரசு முன்வரவேண்டும், அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

படித்த இளைஞர்கள் சிந்தனையை ஒருமுகப்படுத்தி, நல்வழிப்படுத்தி, இன்றையதினம் சிறு தொழில் வளர்ச்சி நல்ல ஒரு துறையாக இருந்து கொண்டு இருக்கிறது. இல்லை என்றால், வேலையற்ற படித்தவர்கள், வேடிக்கையாக சமுதாயத்தில் வேண்டாத காரியங்களுக்கு தங்களை ஆட்படுத்திக்கொள்ளும் நிலைமைகளும் உருவாகும். மேலும் சிறுதொழில்களின் வகைகள் என்னென்ன இருக்கின்றன என்பதைபற்றி இன்றையதினம் உள்ள இளைஞர்களுக்குத் தெரியவில்லை. நான் கூட என்னென்ன தொழில்கள் இருக்கின்றன என்பதைப் பற்றித் தேடிப் பார்க்கின்ற போது, இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிற இந்த புத்தகத்தின் வாயிலாக படிக்கின்ற போதுதான் அவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே இந்தச் சிறு தொழில்கள் மற்றும் உள்ள தொழில்களைச் செய்து, அவர்கள் முன்னேறவும், நிம்மதியாக இருக்கவும், அப்படிப்பட்ட உணர்வுகளை உண்டாக்கும் விதத்தில் திரைப்படங்களை எடுத்து காட்டவேண்டும் என்றும், தொழில் சம்பந்தப்பட்ட நூல்களை நூல் பிரிவுகளை நூலகங்களில் தனியாக அமைத்துத் தரவேண்டும் என்றும் இந்தச் சமயத்தில் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதனால் வேலை துவங்க இருக்கின்ற இளைஞர்கள் யாரிடமும் யோசனையும், ஆலோசனையும் கேட்காமல், இந்த நூலைப் படிக்கின்ற போது, அதற்கான வழிவகைகள் கோட்பாடுகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளும் சூழ்நிலைகள் உருவாகும். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒரு தாலுக்காவிற்கு ஒரு சிறுதொழில் துவங்க, கடன் வழங்கும் மையம் ஒன்றை உருவாக்குகின்ற விதத்தில் தமிழகம் முழுவதும் உருவாக்கி இந்தத் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





எனது தொகுதியான உத்திரமேரூர் தொகுதியை பின்தங்கிய தொகுதியாக அறிவித்து, அங்கே வாழ்கின்ற மக்களுக்கு வேலை வாய்ப்பும், அவர்களுக்கு வளர்ச்சியும் கொடுக்க உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் சிறுதொழில் துவங்குவதை, பின்தங்கிய பகுதிக்கு மட்டும் சலுகை அளித்து பிற்படுத்தப்பட்ட தொகுதி என்று அறிவித்த அந்தப் பிற்படுத்தப்பட்ட தொகுதிக்கு உண்டான சலுகைகளை அரசு அறிவிக்கின்ற முறையை கைவிட்டு விட்டு கூட தமிழகம் முழுவதும் எங்கெங்கு சிறுதொழில்கள் ஆரம்பிக்க முன்வருகிறார்களோ, குறிப்பாக சிராமப் பகுதிகளில் அந்த இடங்களில் ஆரம்பிக்கின்ற சிறுதொழில்களுக்கு, பிற்படுத்தப்பட்ட தொகுதிக்கு அறிவிக்கின்ற சலுகைகளை அந்த முறைகளை இதற்கும் வழங்கி அந்தத் தொழில்கள் சிறக்க, அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தீப்பெட்டித் தொழில்கள் இன்றையதினம் தமிழகத்தில் 4 ஆயிரத்திற்கும் மேலான இடங்களில் துவங்கப்பட்டு உள்ளன. ஆனால் இன்றையதினம் 400 இடங்களுக்கு குறைவாகத்தான் அது இயங்கிக்கொண்டு இருக்கிறது. சிவகாசி போன்ற இடங்களில் இன்றையதினம் அந்தத் தொழில் நசுங்கிவிடாமல், சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த இடத்தில் மட்டும் இந்த அளவிற்கு சிறப்பாக நடைபெறுகிறது என்றால், அதற்கான காரண காரியங்களை ஆராய்ந்து, மற்ற இடங்களில் துவக்கப்பட்ட அந்தத் தொழில்களும் சிறப்பாக நடைபெறுவதற்கான வழிவகைகளை முனைப்போடு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு கொடுக்கின்ற சலுகைகள் அடிப்படையில்தான், தீப்பெட்டித் தொழில்களுக்கு அரசு கொடுக்கின்ற சலுகைகளை வைத்துத்தான் என் தொகுதியில் கூட ஒருசில இடங்களில் அந்தத் தொழில் மீண்டும் துவங்கப்பட்டு இப்போது அவை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

மேலும் இந்த சிறு தொழில்களை எந்த அளவுக்கு நாம் ஊக்குவித்து அவற்றை செயலாக்க முடியுமோ அந்த அளவுக்கு செயல்படுத்தினால் தான் இன்றையதினம் கிராமங்களில் இருக்கின்ற படித்த இளைஞர்கள் ஆனாலும் சரி, விவசாயிகள் ஆனாலும் சரி பயன்பெற முடியும். விவசாயிகள் பெரும்பாலும் ஏரி பாசனத்தை நம்பியிருக்கிறார்கள். அந்த விவசாய பெருங்குடி மக்கள் 3 மாதம் அல்லது 4 மாதம் தான் அந்த விவசாயத்தில்

ஈடுபட்டு அந்த விவசாயத்தை முடித்த பிறகு ஏரியில் தண்ணீர்
இல்லாத காலத்தில் தனக்கு வேலை இன்றி தெரு திண்ணையில்
உட்கார்ந்து இருக்கிற சூழ்நிலையை மாற்றுகின்ற வகையில் இந்தச்
சிறு தொழில்களை அந்த கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நல்லமுறையில் ஊக்குவித்து
அவர்கள் கடன் பெறுகின்ற நிலையை உருவாக்கித் தருமாறு
கேட்டுக்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு
எந்தத் திட்டங்களை எடுத்துக்கொண்டாலும் மக்களுக்கு நன்மை
பயக்குமானால் அதைத் துணிந்து செயலாக்க தவறியது
இல்லை.

அந்த அடிப்படையில்தான் தன்னிறைவுத் திட்டம்
ஆனாலும் சரி, தேசிய வேலை வாய்ப்பு திட்டமானாலும் சரி,
சத்துணவுத் திட்டமானாலும் சரி, சீருடை தரும் திட்ட
மானாலும் சரி இது போன்ற எண்ணற்ற திட்டங்களை வெற்றி
கரமாக செயல்படுத்தி நிறைவேற்றிக் கொண்டுவருகிறார்கள்.
இப்போது வளர்ந்துள்ள ஊரகத் தொழில் வளர்ச்சி சிறப்பாக
மேலும் வளரவும், மேலும் சிறப்பு அடைந்து இல்லங்கள்தோறும்
சிறு தொழில்கள் ந. த்தாதவர்கள் இல்லை என்ற நிலை உருவாக்கி
அங்கு சுய தேவையை பூர்த்தி செய்து, அன்னிய செலாவணியை
ஈட்டுகின்ற நிலையை உருவாக்கி தருகின்ற அளவுக்கு இந்த
தொழிலுக்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு
நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால்
முன் மொழியப்பட்டு இருக்கிற ஊரகத் தொழில் துறை மானியக்
கோரிக்கை கொள்கை குறிப்பின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சி
யில் சார்பாக சில குறிப்பிட்ட விமர்சனங்களை முன் வைக்க
விரும்புகிறேன்.

இந்த கொள்கை குறிப்பில் துவக்கத்திலேயே சொல்லப்பட்டு
இருக்கிறது, தொழில்களை உருவாக்குவதன் மூலம் அங்கு வேலை
வாய்ப்பினை ஏற்படுத்துவதே தமிழ்நாடு அரசின் கொள்கை ஆகும்
என்றும், தொழில்களை உருவாக்க அவற்றை மேன்மேலும்
வளர்ச்சி பெற செய்ய அரசு தனி முக்கியத்துவம் அளிக்கிறது
என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

மேற்கொண்டு இந்த நோக்கம் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள
டான்சியில் பின்பற்றவில்லை என்பதோடு அந்தத் துறையில்
இருக்கக்கூடிய பொறுப்பான அதிகாரிகள் சிலர் அரசின் நோக்
கத்தை நாசப்படுத்துகிறார்கள் என்பதை நான் சில பல ஆதாரத்
தோடு குறிப்பிட விரும்புகிறேன்.



8 வகையான தொழில்தன்மை கொண்ட 56 தொழில் பிரிவு
களை கொண்டு இருக்கிற டான்சியில் அதனுடைய துவக்கமே
பொருளாதார ரீதியில் ஆதாயத்துடன் செயல்படவேண்டும் என்ற
நல்ல நோக்கத்துடன் துவங்கப்பட்டது. ஆனால் நல்ல நோக்கத்
தோடு துவக்கப்பட்ட அந்த நிறுவனத்தில் இன்றைக்கு பொரு
ளாதார ரீதியாக முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறதா? ஆதாயம்
ஏற்பட்டு இருக்கிறதா என்று பார்க்கிறபோது கொடுக்கப்பட்டு
இருக்கிற கொள்கை குறிப்பிலேயே அது இல்லை என்ற விவரம்
விளக்கமாக தரப்பட்டுள்ளது.

1983—84-ல் இந்த நிறுவனத்திற்கு ஏற்பட்டு இருக்கிற நஷ்டம்
211.29 லட்ச ரூபாய் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால்
அதே நேரத்தில் ஆர்டர் வாய்ப்புகள் அதிகப்பட்டு இருக்கிறது.
தனியார் துறையானாலும் சரி, அரசு துறையானாலும் சரி பல
நிறுவனங்கள் மத்தியில், மக்கள் மத்தியில் ஆர்டர்கள் தரப்பட்ட
இதுவரை இல்லாத உச்சபட்ச உற்பத்தி நடைபெற்று இருப்பதாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது.
2,514 லட்சம் ரூபாய்க்கு பெருமான உற்பத்தி நடந்து இருக்கிறது.
ஆனாலும் நஷ்டம் இவ்வளவு ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது என்றால் என்ன காரணம்? உற்பத்தி
அதிகரித்து இருக்கிறது. ஆர்டர் வாய்ப்புகள் அதிகரித்து இருக்
கின்றன. விற்பனை அதிகரித்து இருக்கிறது. மற்ற பொது
நிறுவனங்களில் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு வழங்கப்
படுகிற சம்பளத்தைக் காட்டிலும் மிகக் குறைவான சம்பளம்தான்
இந்தத் துறையில் வழங்கப்படுகிறது. இருந்தாலும் இந்தத்
துறைக்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்றால் இதற்கு யார்
காரணம் என்பதை ஒரு பொறுப்புள்ள அரசு தீர்மானமான
கண்ணோட்டத்தோடு பரிசீலித்து இருக்கிறதா என்று பார்த்தால்
இந்தக் கொள்கை குறிப்பில் அப்படிப்பட்ட பரிசீலனைகள் இருப்ப
தாகவோ அதை பரிசீலிக்கவேண்டும் என்ற அக்கறை இருப்ப
தாகவோ நமக்குத் தெரியவில்லை.

இத்தகைய வருமான இழப்பு கரைக்கப்படுவதற்கு என்ன
காரணம்? வருமான கரைப்பிற்கு இந்தத் துறையில் பிரதான
காரணமாக இருப்பது 'தோட்டத்தில் பாதி கிணறு' என்று சொல்
லுவது போல் அதிகாரிகள் எண்ணிக்கை மிகவும் அதிகம்.

இந்தத் துறையிலே வருகிற வருமானத்தைக் கரைக்கிற
கரையான்களே இந்தத் துறையில் இருக்கிற அதிகாரிகள்தான்.
இவ்வளவு அதிகாரிகள் இந்தத் துறைக்குத் தேவைதானா?
இவ்வளவு பேர் போட வேண்டிய அவசியம் ஏன் என்பதற்கு
இந்தத் துறையில் பணியாற்றுகிற தொழிற்சங்கம் பல முறை
புகார் செய்தும் கூட, ஆதாரப்பூர்வமான பல கருத்துக்களை முன்
மொழிந்தும் கூட, இந்தத் துறையின் பொறுப்புமிக்கவர்கள்
அவற்றைப் பரிசீலிக்கவில்லை என்பது வேதனைக்குரிய விஷயம்
ஆகும்.

[திரு. கு. சுப்பராயன்] [1985 ஜுலை 4

இந்தத் துறையில் என்ன நடக்கிறது? ஏராளமான திருட்டும், கொள்ளையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் இந்தத் துறையில், பொறுப்போடு புதிய ஆர்டர்களைப் பிடிப்பது பற்றி அக்கறை செலுத்துவது கிடையாது. பெரும் பகுதி அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்?

டான்சியிலே யூனிட் ஆபீசராக இருப்பார்கள். அதே நேரத்தில், அதே தொழிலை தாங்கள் தனியாக, தங்கள் குடும்ப நபர்களின் பெயரிலே நடத்திக் கொண்டிருப்பார்கள். டான்சிக்கு வருகிற ஆர்டர்கள் அங்கே திருப்பி விடப்படும். அதற்கு ஏராளமாக உதாரணங்கள் இருக்கின்றன.

சம்பந்தப்பட்ட துறையிலே இருக்கிற எங்களுடைய ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற்சங்க அமைப்பு அதுபற்றி பலமுறை புகார் செய்து இருக்கிறது. செய்தும் கூட, அந்தப் புகார்கள் பரிசீலிக்கப்படவில்லை. அத்தகைய தன்மைகளினாலேதான் இந்தத் துறைக்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை இந்த மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது குறிப்பாக நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், இந்த டான்சியைப் பொறுத்தவரையில், நடைமுறையில், இந்த டான்சி நிறுவனம், அதிகாரிகளுடைய மேய்ச்சல் நிலமாக பட்டா போட்டு விடப்பட்டது போன்ற ஒரு தன்மை தெரிகிறது. அதற்கு சில உதாரணங்களைக் குறிப்பட விரும்புகிறேன்.

கிருஷ்ணகிரியிலே ஃபர்னிச்சர், பொறியியல் இரண்டு துறைகளும் ஒரே காம்பவுண்டுக்குள் இருக்கின்றன.

அந்தத் துறைக்கு யூனிட் ஆபீசராக இருக்கிறவர் கமால் பாஷா. 10, 15 வருடங்களாக அவர் அங்கே தான் இருக்கிறார். அவர் மீது ஏராளமான கடுமையான புகார்கள் இருக்கின்றன. அவை தொழிலாளர்களாலும், தொழிற்சங்கத்தாலும் பலமுறை தரப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், அவருடைய ஊழல் முறைகேட்டு நடவடிக்கைகளுக்கு எதிராக நடத்தப்பட்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான மனுக்கள் அவர் மீது உரிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் கூட அவர்......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) : ஒரு குறிப்பிட்ட அதிகாரியைப் பற்றி பேசும்போது, அவர் இந்தச் சபையிலே இல்லாததினாலே ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேசுங்கள். ஆதாரங்கள் இல்லாமல் குற்றச்சாட்டுக்களைச் சொல்லிக் கொண்டே போனீர்களானால், அதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.



1985 ஜுலை 4]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சபையிலே அதிகாரிகளைப் பற்றி பேசுகிறபோது, அந்த இலாகா சார்பான அமைச்சர், அவர்களைப் பாதுகாப்பதற்கு இங்கே இருக்கிறார். சபையில் அதிகாரிகளைப் பற்றிக் குற்றச்சாட்டுக்கள் சொல்லக்கூடாது என்றால், இந்த சபையில் வாதத்திற்கு என்ன இருக்கிறது?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா, ஜெயராமன்) : எந்தக் குற்றச்சாட்டையும் நீங்கள் எப்படியும் சொல்லிவிட்டுப் போய் விடலாம். அதற்கு ஆதாரங்கலை வைத்துக் கொண்டு பேசவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்வது அது அல்ல. ஆதாரம் கேட்பது வேறு. ஆனால் சபையில் அங்கம் வகிக்காத அதிகாரியைப் பற்றி பேசக்கூடாது என்று தீர்ப்பு வழங்குகிறீர்களே, அதிகாரிகளை டிஃபென்ட் செய்வதற்கு அமைச்சர் இருக்கிறார். ஆதாரம் கேட்பது என்பது வேறு விவகாரம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) : ஆதாரத்தோடு பேசுங்கள். இல்லையெனில் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்.

திரு. கு. சுப்பராயன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் எந்தப் புகாரையும் இன்னமும் இங்கே சொல்ல வில்லை. நான் முன்னமேயே இங்கே சொல்லியிருக்கிறேன். புகார்கள் நிரூபிக்கப்படாமல் இருப்பதனாலேயே, குற்றவாளிகள், நிரபராதிகள் ஆகிவிடமாட்டார்கள். ஆனாலும், நான் இந்தக் குறிப்பிட்ட துறையில் இவ்வளவு பெரு நஷ்டம் ஏற்பட்டு இருப்பதற்கு என்ன காரணம் என்பதை இந்தத் துறையை நிர்வகிக் கக்கூடிய அதிகாரிகளைப் பற்றிய, அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றிய விமர்சனங்களை வெளியிட வேண்டிய தவிர்க்க முடியாத கடமையும், அவசியமும் எனக்கு இருக்கிறது, ஒரு உறுப்பினர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே கிருஷ்ணகிரியில் சம்பந்தப்பட்ட யூனிட் ஆபீசர், அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்பை விட்டுவிட்டு, தனிப்பட்ட பொறியியல் தொழிற்சாலை நடத்திக் கொண்டிருக் கிறார். பலசரக்கு கடை நடத்திக் கொண்டிருக்கிறார். அலுவல் நேரத்தில், அவர் அவருடைய கடையில் கல்லா பெட்டியில் உட்கார்ந்து கொண்டிருப்பார். அவருடைய பொறுப்புக்களைக் கவனித்துக் கொண்டிருப்பார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை) :

அவருக்கு சம்பளம் கொடுப்பது எதற்கு? கமால் பாஷா அரசுத் தரப்பிலே சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பது, அவருடைய

கடையை நடத்தவா? அவருடைய தொழிற்சாலையை நடத்தவா? அப்படிப்பட்ட புகார்கள் அவர் மீது இல்லையா என்பதை தயவுசெய்து இறுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

அதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். இது பற்றி ஏதோ இந்த மானியக் கோரிக்கை பொது விவாதத்திலே மட்டுமல்ல, அங்கே நடைபெற்ற ஒவ்வொரு ஆர்ப்பாட்டங்களிலும், பல்வேறு மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு ஆர்ப்பாட்டம் நடந்து, அவர் மீது ஒரு கடுமையான நடவடிக்கை இந்த அரசு எடுத்திருக்கிறது.

அதாவது, 10, 15 வருஷங்களாக அங்கேயே இருந்த அந்த அதிகாரிக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்தது தெரியுமா? மிகக் கடுமையான நடவடிக்கை. அண்ணா தி.மு.க. மாடல் தண்டனை. ஒரே காம்பவுண்டுக்குள் ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவுக்கு டிரான்ஸ்பர்.

இப்படி ஒரு கண்துடைப்பு நடத்தி விட்டு மிக விரைவிலேயே, அவர் எங்கே முன்பு பணியாற்றினாரோ, அந்த இடத்திலேயே திரும்பவும் போடப்பட்டு விட்டார்.

(பிற்பகல் 12—10).

எப்படி இந்தத் துறை வாழும்? இந்தத் துறையில் முறைகேடாக நடந்து கொள்கிற அதிகாரியின்மீது புகார் வருகின்றபொழுது உரிய நடவடிக்கைகளை, உரிய காலத்தில் மேற்கொள்ளவில்லை என்றால் அந்தத் துறை பாழ்பட்டுப் போகும் என்பதைக் கூறத்தான் இந்த உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தமாதிரி புகாருக்குள்ளான அதிகாரிகளை மாநில அரசு, நான் அடிப்பது போல் அடிக்கிறேன், நீ அழுவதுபோல் அழு என்று சொல்கின்ற நாடகமாகத்தான் நடவடிக்கை எடுக்கிறது. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது? ஒரு நாற்காலியிலிருந்து நாலடி தள்ளி இன்னொரு நாற்காலிக்கு டிரான்ஸ்பர் செய்வது. அந்த டிரான்ஸ்பர் என்பது தண்டனை ஆகாது. குற்றவாளிகளைத் திருத்துவதற்கு அது ஒருபோதும் உதவாது. குறிப்பாக மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், இந்தக் குறிப்பிட்ட அதிகாரிகளின் நடவடிக்கைகளைப் பற்றி எங்கள் சங்க அமைப்பிலிருந்து வந்திருக்கின்ற ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகளைப் பரிசீலித்துப் பார்த்து, கடுமையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து கரூர். இந்த டான்சி நிறுவனம் பாதுகாப்பற்ற நிலையில், கதவுகள் பிடுங்கிவிடப்பட்ட நிலையில் இருக்கிறது. கரூரில் என்ன நடந்தது? ஒப்பனாக லாரியில் ராடுகளைக் கடத்திச் செல்கிறார்கள், குப்பை என்ற பெயரில். அதை அங்குள்ள வாட்ச்மேன் கையுங் களவுமாகப் பிடித்துவிட்டார். அதில் ராடு இருந்தது என்று எழுதிக்கொடுக்கச் சொன்னால் மறுத்துவிட்டார். அங்கே என்ன நடந்தது தெரியுமா? கையுங் களவுமாக, அந்த ராடுகளை உள்ளேயிருந்து கடத்தியவர்களைப் பிடித்துக் கொடுத்த அந்த வாட்ச்மேன் டிரான்ஸ்பர் செய்யப்பட்டார். என்ன சொல்லித் தெரியுமா? அவர் நல்ல உடை போட்டுக்கொண்டு வரவில்லை; சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்கு அவர் வரவில்லை என்ற பெயரால் அவர் டிரான்ஸ்பர் செய்யப்படுகிறார். இப்படியிருந்தால் எப்படிக் குற்றங்கள் தடுக்கப்பட முடியும்? திருட்டை எப்படித் தடுக்க முடியும்? இந்தப் பொதுத் துறை எப்படி வாழும்? பொதுத் துறையைச் சீரழிக்கும் அதிகாரிகளை தொழிலாளர்கள் உஷாராக இருந்து கையுங் களவுமாகப் பிடித்துக் கொடுத்தாலும்கூட இந்த அரசு கண்டுகொள்ளாமல் விட்டு விடுகிறது என்பதால் இந்தத் துறையை மேலும் பள்ளத்தில் தள்ளிவிடுகிற போக்காகத்தான் அது அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் அதிகாரிகள் மேல் குற்றச்சாட்டுகளைச் சொல்லி, பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் பிடித்துக் கொடுத்தாலும், அதற்குப் பிறகும் அரசு அதைக் கேளாவண்ணம் ஏதோ அவர்களைக் காப்பாற்றுவதைப்போல நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை எந்த ஆதாரத்தோடு இங்கே சொல்கிறார்கள் என்பதை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள், தொழிலாளர்கள் உஷாராக இருந்து பிடித்துக்கொடுத்தும் கூட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று. அந்த ராடுகளைக் கடத்தியது அதிகாரிகளா அல்லது தொழிலாளியா என்பதை நமக்கு சுப்பராயன் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ராடுகளைக் கடத்தியவர்கள் யார் என்ற விவரத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஏனென்றால் அது என்னுடைய பணி அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த விவரத்திற்குள்ளே போக விரும்பவில்லை என்று சொன்னால், அரசாங்கம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்ற கருத்தை மட்டும் எப்படிச் சொல்கிறீர்கள்.

திரு. கு. சுப்பராயன் : நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை அறிந்து கொள்ள நான் முடிக்கின்ற வரையில் தலையிடாமல் இருந்தால் மிகச் சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌரிராஜன் அவர்கள் கிளப்பிய பிரச்னை என்னவென்றால், கடத்தியவர்கள்-அந்த லாரியை ஓட்டியவர் தொழிலாளிதானே என்ற கருத்தில் கேட்கிறார்கள். அதற்குப் பதில் சொல்லலாம்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான விஷயம். அதிகாரியின் அனுமதி இல்லாமல் ராடு போகாது. லாரி ஓட்டியவர் தொழிலாளி, எனவே அவர்தான் கடத்தினார் என்ற கருத்துக்கு வருவது இன்சுனுவேஷன் ஆகும். அது எப்படிச் சரியாகும் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யார் என்ற விவரத்திற்குள்ளே போக விரும்பவில்லை என்று உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொல்கிறார்கள். அது எப்படிப் பொருத்தமாகும் ? அதைத்தான் சொல்லச் சொல்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு நிறுவனத்திலேயிருந்து அரசு நிறுவனத்திற்குரிய ராடுகளை லாரிகளில் கடத்திக்கொண்டு போகின்றபொழுது வாட்ச்மேன் பிடிக்கிறார். ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரியின் மீது நடவடிக்கை இல்லை. ஆனால் கையும் களவுமாகப் பிடித்த வாட்ச்மேன் டிரான்ஸ்பர் செய்யப்பட்டார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பாய்ண்ட் ஆப் ஆர்டர் கேட்டார். அப்படி எடுத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லையென்று எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்கிறீர்கள் என்று கேட்டார். நடைமுறை என்ற ஆதாரத்தை வைத்துத்தான் சொல்கிறேன். இந்த நிமிடம் வரையிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்களா ? இல்லை. ஆனால், பிடித்த வாட்ச்மேன் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருகிறாரே தவிர, கடத்திய அதிகாரிகள் இன்று வரையில் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படவில்லை. அதுதான் நடைமுறையில் ஆதாரம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறை சொல்கிற பொழுது, பிடித்த அந்த வாட்ச்மேன் அதிகாரிகளுக்குப் புகார் பண்ணினார் என்று சொன்னால் பரவாயில்லை. அப்படிச் சொல்லாமல் நடைமுறை ஆதாரம் என்பது புதிதாக இருக்கிறது. ஆகவே,



அப்படிச் சொல்ல வேண்டாம். நடைமுறை ஆதாரம் என்கிற ஒரு ஆதாரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நீங்கள், அது சம்பந்தமாக வாச்மேன் புகார் பண்ணினார் என்று இருந்தால் சொல்லுங்கள் : அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொல்லுங்கள். அப்படிச் சொன்னால் அமைச்சர் பதில் சொல்ல வாய்ப்பிருக்கிறது. நடைமுறை ஆதாரம் என்றால் எல்லோரும் சொல்லிவிடலாம்.

திரு. கு. சுப்பராயன் : அங்கே கடத்தப்பட்டதை ஒட்டியும், சம்பந்தபட்ட வாச்மேன் சமாச்சாரமாகவும், சம்பந்தப்பட்ட யூனியன் சார்பாகவும், எங்கள் சங்கத் தலைவர் கே. எம். சுந்தரம் ஆதாரபூர்வமான புகார்களை அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறார். ஏ.ஐ.டி.யூ.சி. அமைப்பிலிருந்து அனுப்பிய அந்தப் புகார்களை இங்கே வைத்து விவாதிப்போமானால் இந்த டான்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற முழு உண்மைகளும் வெளிப்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சனையாகத் தெரிகிறது. திரு. சுந்தரம் என்று சொல்கிற பொழுது தான் எனக்கே விஷயம் தெரிகிறது. ஆகவே, விசாரிக்க வேண்டுமே தவிர, நடைமுறையிலே என்ன கோளாறு என்பதை நாம் விசாரித்தாக வேண்டும். தகவலை நீங்கள் தெரிந்து குற்றச்சாட்டு சொல்வது நல்லது.

திரு கு. சுப்பராயன் : தேவையானால் நான் அதற்குரிய ஆதாரங்களையும் தர விரும்புகிறேன்.

அடுத்து மன்னார்குடி. மன்னார்குடியில் என்ன நடக்கிறது என்றால், மன்னார்குடியில் இருக்கிற யூனிட் ஆபீசர்கள், மன்னார்குடியில் தனி யூனிட் வைத்துக் கொண்டு, டான்சியினுடைய ஆர்டர்களை நடைமுறையில் குறைத்து, தங்களுடைய யூனிட்டுகளின் வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்கிற நடைமுறைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இத்தகைய நடைமுறைகளால்தான் இந்த டான்சி துறை, பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதே போல் விண்ணமங்கலம் டானரி யூனிட். இந்த யூனிட்டிலே சங்கரசுப்பு என்ற யூனிட் ஆபீசர்: அதேபோல் அம்பாலி என்ற மானேஜர். இவர்கள் இருவரும் ஏன் அவர்களாகவே ராஜிநாமா செய்து விட்டுப் போனார்கள் என்று தெரியவில்லை. அந்தச் சம்பந்தப்பட்ட தொழிற்சங்க அமைப்பின் சார்பாகவும் தொழிலாளர்கள் சார்பாகவும் இந்த இரண்டு அதிகாரிகள் மீது புகார்கள் அவ்வப்போது கொடுக்கப் பட்டிருக்கின்றன. அந்தப் புகார்களை மறுக்க முடியாத நிர்பந்த நிலைமையிலேதான் தப்பித்துக் கொள்ளும் நோக்குடன் அந்த இரண்டு அதிகாரிகளும் ராஜிநாமா செய்துவிட்டு வெளியேறி இருக்கிறார்கள். அந்த இரண்டு அதிகாரிகளின் மீது..........

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில அதிகாரிகளைக் குறிப்பிட்டு அவர்கள் ஏன் ராஜிநாமா செய்திருக்கிறார்கள் என்று தானாகவே ஒரு காரணத்தைக் கற்பிப்பது நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் ராஜிநாமா செய்திருப்பதற்குப் பல்வேறு காரணங்கள், அவர்களது சொந்தக் காரணங்கள் இருந்திருக்கக்கூடும். ஆகவே அதைப் பற்றி தெளிவாக இல்லாமல், குற்றச்சாட்டாக ஒரு காரணத்தைக் கற்பிப்பது என்றால் அந்த அதிகாரியை நாம் சரிவர புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் அர்த்தம்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னமும் காரணம் கற்பிக்கவே இல்லை. ஏன் ராஜிநாமா செய்திருக்கிறார்கள் என்ற கேள்வியைத் தான் கேட்டிருக்கிறேனே தவிர, இன்னமும் காரணம் கற்பிக்கவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் சொல்வது, ராஜிநாமாவையும் உறுப்பினர் தெரிவித்த குற்றச் சாட்டையும் இணைத்துப் பார்த்தால், அதற்காகச் செய்த மாதிரி இருக்கிறது.

அதே மாதிரி, பேசுவதில் கூட, எல்லா அதிகாரிகளும் தனி யூனிட்டுகள் வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். ஸ்பெசிபிக்காகச் சொன்னால் பரவாயில்லை ஸ்வீப்பிங்காக, எல்லா அதிகாரிகளும் என்று சொன்னால் பதில் சொல்லமுடியாது. இன்ன அதிகாரிகள் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அமைச்சர் பதில் சொல்ல வாய்ப்பிருக்கும்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட இரண்டு அதிகாரிகளின் பெயர்களை நான் குறிப்பிட்டிருக்கிறேன். நான் உண்மையிலேயே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தப் பேரவையில் கேட்டுக்கொள்ள விரும்புவது, சம்பந்தப்பட்ட யூனிட்டுகளில் உண்மையைக் கண்டறிய வேண்டுமென்று உண்மையான அக்கறை இந்த அரசுக்கு இருப்பது உண்மையானால், அதன்மீது ஒரு முழுமையான புலன் விசாரணை செய்வதற்கு தயாரா என்பதை சட்டமன்றத்தில் மட்டும் அல்ல, அந்த அரங்கில் இருக்கிற தொழிலாளர்களின் சார்பாக, தொழிற்சங்கமும் கேட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டுகோளாக வைக்கிறேன். இந்த டான்சியில் புகார்களுக்கு உரிய யூனிட் ஆபீசர்கள்மீது நடவடிக் கைகள் எடுக்க ஒரு உயர் மட்ட விசாரணையை ஏற்பாடு செய்து உண்மையைக் கண்டறிய உதவ வேண்டுமென்பதை இங்கே நான் கேட்டுக் கொள்கிறேன்.



(பிற்பகல் 12—20)

அடுத்து, இங்கே இருக்கக்கூடிய இரண்டு யூனிட்டுகளிலும் இருக்கிற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டுமல்லாமல் பொதுவாக ஆங்காங்கே இருக்கக்கூடிய நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய அதிகாரிகளுடைய முறையற்ற நடவடிக்கைகள் காரணமாகத் தான் விற்பனை பாதிக்கப்பட்டிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழு, எட்டு தொழிற்சாலைகளை மூடிவிட வேண்டும், ஆயிரம் தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும் ; அப்படிச் செய்தால் நிலைமை சீர் திருந்திவிடும் என்று இந்த அரசு நம்புகிறது என்ற தகவல் எனக்கு கிடைத்திருக்கிறது. ஆயிரம் தொழிலாளர் களை வீட்டுக்கு அனுப்பி விடுவதாலோ, 7, 8 டான்சி நிறுவனங் களை மூடிவிடுவதாலோ நஷ்டம் தவிர்க்கப்பட்டுவிடுமா ? இந்த எண்ணம் தவறானது. உண்மையிலேயே நஷ்டத்தை யார் ஏற் படுத்தினார்களோ அவர்களைத் தண்டிப்பதை விட்டுவிட்டு, நிரபராதிகளை, அப்பாவிகளை ஒன்றும் அறியாதவர்களை தண்டிப்பது என்ன நியாயம் ? அப்பாவித் தொழிலாளர்களைத் தண்டிப்பது ஒரு போதும் நியாயமாகாது என்பதை இந்த மாநில அரசுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உண்மையிலேயே ஆயிரம் தொழிலாளர்களை நிறுத்தும் எண்ணம் இருந்தால் அதை கைவிட வேண்டும். அதைப்போலவே 7, 8 யூனிட்டுகளை மூடிவிடும் எண்ணம் இருந்தால் அதையும் கைவிட வேண்டும். இந்தக் கொள்கைக் குறிப்பிலே வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்புவதும், தொழில் பிரிவுகளை மூடிவிடுவதுமா வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் ? இந்தத் துறையில் நஷ்டம் ஏற்படுவதற்கு தொழிலாளர்கள் காரணம் அல்ல. இரத்தப் புற்றுநோய் போல இந்தத் துறையிலே ஒருசில அதிகாரி கள் இருந்ததால்தான் இப்படிப்பட்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நியாயமாக குற்றவாளிகளைத் தண்டிக்கிற எண்ணம் இந்த அரசுக்கு இருக்குமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அரசாங்கம் தொழில்களை மூடி, தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்புவதாக இருந்தால் அது மாபெரும் சிக்கல்களைத் தோற்று விக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இந்த டான்சியைப் பொறுத்தவரையில் அரசாங்கம் நன்றாக ஆராய்ந்து, தவறுகள் நடைபெறுவதற்கு காரணமாக இருந்த அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனம் இருக்கிறது: துக்ளக் தர்பார் மாதிரி நடந்திருக்கிறது. அந்த நிறுவனம் தொடங்கப்பட்ட போது கிராக்கி இருந்ததாம்; உற்பத்தியைத் தொடங்கியதும் கிராக்கி இல்லையாம், விற்பனைக்கான வாய்ப்பும் இல்லையாம். அதனால் மூடப்பட்டுள்ளது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இப்போது அங்கே என்ன வேலை நடக்கிறது? உலோகத் தகடுகளை உருவாக்குவதும் பிற பணிகளும் நடை பெறுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிற பணிகள் என்றால் அது என்ன பிற பணி என்று தெரியவில்லை. இந்த உலோகத் தகடு உருவாக்குவதும் பிற பணிகளுமாவது நிரந்தரமாக நடக்குமா? பிறகுதான் தெரியும்.

அடுத்து, தமிழ்நாடு கைத்திற பொருள் வளர்ச்சி நிறுவனம் இருக்கிறது. 1982–83 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் 3.95 இலட்சத்தை நிகர லாபமாக ஈட்டியது. 1983–84-ஆம் ஆண்டில் 2 இலட்சம் ரூபாய் லாபம் வரலாம் என்று மதிப்பிடப்பட்டிருக் கிறது. 1985–86 ஆம் ஆண்டில் நிகர இலாபம் குறையும் என்று இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இலாபம் குறைவாக வருவதற்கு மட்டுமல்லாமல், திறமையான, சரியான நிர்வாகம் இல்லாமல் நஷ்டம் ஏற்படுவதற்கு தொழிலாளர் கள் தலையில் பாராங்கல்லைத் தூக்கிப்போடுவதைப்போல தொழில் களை மூடுகின்ற, தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்புகின்ற முயற்சிகளில் ஈடுபடுவது சரியாகாது. வெறும் வாய் வார்த்தை களிலே சாமானியப்பட்டவர்கள் பிரதிநிதி நாங்கள், தொழிலாளர் தோழர்கள் நாங்கள், சாதாரண மக்கள் பக்கம் நிற்கிறோம் நாங்கள் என்று சொல்லிவிட்டு அதிகாரிகளின் நடவடிக்கைகளி னால் ஏற்படக்கூடிய தவறுகளைப்போக்க, கங்கையிலே பாவத்தைக் கழுவுவதைப் போல தொழிலாளர்களை பழிவாங்கும் சூழ்நிலை இருக்குமானால் பிரச்சனை தீராது என்று கூறி, பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி, முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும் என்ற மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்ல, இங்கே இந்த அரசு செய்திருக்கக்கூடிய சில திட்டங்களைச் சுட்டிக்காட்டி பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னர்லே இங்கே பேசிய மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் இந்த அரசின் மூலமாக நடைபெறுகின்ற ஊரகத் தொழில் துறை பற்றியும் சிறு தொழிற்கள் பற்றியும் அவரவர்க்கு உகந்த கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.



இந்த அரசைப் பொறுத்தவரையில் 1977–க்குப் பின்னால் மூன்றாவது முறையாக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய காலகட்டம் இது. இந்த அரசு ஊரகத் தொழில் துறையைப் பொறுத்தவரையில் திட்டத்திலும், வளர்ச்சியிலும் அதிகப்படி யான அக்கறை கொண்டு கவனித்து வருகின்றது. எனவே இந்த அரசைப் பார்த்து குற்றம் சொல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு குற்றம் சொல்பவர்களாக இருந்தாலும் சரி, அல்லது தன்னுடைய தொகுதியிலே இன்னின்ன காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்ற வகையில் அவற்றைச் சொல்லி யிருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக்கொள்ள விழைவது என்னவென்றால் இந்தத் திட்டத்திலே உரிய வளர்ச்சியினை ஏற்படுத்தாவிட்டால், போடுகின்ற திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேராவிட்டால் மூன்றாவது முறையாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியைத் தமிழ்நாட்டு மக்கள் ஏற்படுத்தி இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்திருப்பார்களா என்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சகோதரர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே பேசியபோது ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் மிகப் பெரிய தொழிற்சாலைகள் இருக்கக்கூடிய பகுதியிலே இருப் பவர்கள் என்பதை நான் அறிவேன். நானும் அவரைப் போல திருச்சியிலே இருக்கின்ற திருவரம்பூர் தொகுதி என்ற மிகப் பெரிய தொழிற்கூடங்களும், சிறு சிறு தொழிற்கூடங்களும் இருக்கின்ற பகுதியிலே இருந்து வந்தவன்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல திட்டங்களைச் சொல்வார்கள், பல தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக் கெல்லாம் இன்னின்ன வகையிலே மத்திய அரசின் நிதியுதவி யினைப் பெற்று உதவவேண்டும். அவர்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டும் என்று நல்ல கருத்துக்களை இங்கே அவர்கள் எடுத்து வைப்பார்கள் என்று நான் உள்ளபடியே எதிர்பார்த் தேன். இப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவோ சொல்லவேண்டியதை விட்டுவிட்டு, தொழிலாளர்களின் உணர்வை மேலோங்கச் செய்பவர்கள் என்று சொல்லப்படுகின்ற இயக்கத் தைச் சார்ந்த அவர்கள் அதிகாரிகள்மீது குற்றச்சாட்டுக்களை எடுத்து வைத்தார்கள். அதனால்தான் நான் கூட அப்போது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கேட்டேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்

இன்றைக்கு தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில் சிறு தொழில்களையும், ஊரகத் தொழில்களையும் வளர்க்கின்ற வகை குறித்து அரசின் கொள்கைக் குறிப்பிலே பார்ட், பார்ட்டாக தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி),

தமிழ்நாடு தோல் பொருட்கள் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம், பட்டுப்புழு வளர்ப்பு இயக்ககம், பண்டகக் கொள்முதல் கொள்கை என்று இப்படிப் பட்ட பல்வேறு புள்ளிவிவரங்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொல்லி ஒவ்வொரு துறையிலேயும் இதுவரைக்கும் வழங்கப் பட்டிருக்கக்கூடிய நிதியாதாரத்தை பற்றியும் இங்கே தெரிவித் திருக்கிறார்கள். ஆனால் இவற்றை எல்லாம் விட்டுவிட்டு அதாவது தேவையானதை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு சுட்டிக்காட்டுவது என்பது தான் உங்களுடைய கொள்கையா? இதுபற்றி உங்கள் மீது குற்றமாக நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் நல்லது நடக்கவேண்டும் என்பதற்காக நல்லதைச் சுட்டிக்காட்டவேண்டிய தலையாய கடமை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என்பதற் காகத்தான் இதை நான் உங்களுடைய கவனத்திற்குப் பணிவன் போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குற்றங்களைச் சொல்கிறபோது, அதாவது அதிகாரிகளைப் பற்றிக் குற்றம் சொல்கிறபோது, அவற்றை மறுக்கவேண்டும், அவர்களைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்று இந்த அரசு எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. 1950 ஆம் ஆண்டிலே யிருந்து நான் தொழிலாளியாக இருந்திருக்கின்றேன். தொழிற் சங்கத்தை நடத்துகின்ற பொறுப்பாளராகவும் இருந்திருக்கிறேன். பலமுறை வேலையை இழந்தும் இருக்கிறேன். போராட்டங் களில் ஈடுபட்டதன் காரணத்தால், நான் பல அதிகாரிகளைச் சந்தித்து இருக்கிறேன். ஆனால் அந்தக் காலகட்டத்திலே இருந்த நிலைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது என்னுடைய அருமை மாற்றுக்கட்சி உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். திருச்சி மாவட்டத்தில் தொழிலாளர்கள் சார்பில் பணியாற்றிய அந்தக் காலத்தில் ஆண்ட அரசுகள் எந்த அளவுக்கு நடந்து கொண்டன?

(பிற்பகல் 12.30)

முந்தைய அரசுகள் எந்த அளவுக்கு அவர்கள் மேல் அக்கறை காட்டியது, அதிகாரிகளை எப்படி வளர்த்து விட்டது. இல்லை அதிகாரிகளை கண்டித்து நீங்களும், நாங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிற தொழிலாளர்களின் பிரச்னையில் என்னதான் செய்தது என்பதை தயவுசெய்து நீங்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அண்ணாதாசன் சொன்னதற்காக இல்லா விட்டாலும், நீங்களாகவே சிந்தித்துப் பார்ப்பது நல்லது. ஏன் அதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், அதிகாரிகளுக்கு வக்காலத்து வாங்கக் கூடிய அரசு எங்களுடைய இதய தெய்வம்



136413
சென்னை-600 009

புரட்சித் தலைவரவர்கள் அரசு இல்லை என்பதை தெளிவு படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். அன்றைய சூழ்நிலைகளுக்கும் இன்றைய சூழ்நிலைகளுக்கும் பெரும் வேறுபாடுகள் இருக்கின்றன. அதிகாரிகளைக் காப்பாற்றுகின்ற வகையில் இந்த அரசு என்றைக்குமே முனைப்பாக இருந்தது இல்லை.

அதிகாரிகள் தவறு செய்வார்களேயானால் அவர்களைக் கண்டித்து அவர்களை கீழே இறக்கி, அவர்கள் மீது விசாரணை நடத்தி, எத்தனையோ பேர்களை வேலையை விட்டு நீக்கி வீட்டுக்கு அனுப்பியிருக்கிறது இந்த அரசு என்பதற்கு என்னால் நிச்சயமாக பல புள்ளி விவரங்களை சொல்ல முடியும் என்றாலும் நேரம் போதாது. நீங்களே பார்த்திருப்பீர்கள் நம்முடைய பொதுக் கணக்கு குழு, எஸ்டிமேட் குழு போன்ற கமிட்டிகளில் இது போன்ற தவறுகளைப் பார்க்கிறபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருப்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். அதை எல்லாம் விவரமாக கொள்கை குறிப்பிலே கொடுக்க முடியாது என்று காரணத்தினால் தான், இந்த அரசு அதை அறிக்கையிலே குறிப்பிடவில்லை.

1949 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு, 30 ஆண்டுகாலத்தில், அதாவது 1949 ஆம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு வரை, தொழில் வளர்ச்சிக்காக 130.83 கோடி ரூபாயை இந்த முதலீட்டுக் கழகத்தின் மூலமாக தொழில் துறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள் என்றால், எந்த அளவுக்கு மெத்தனமாக அன்றைய காலக் கட்டத்தில், அன்றைய அரசுகள் இருந்திருக்கின்றன. 30 ஆண்டுக் காலத்திற்கும் ஒட்டு மொத்தமாக அரசாங்கத்திலிருந்து நிறுவனத் திற்கு கொடுத்த பணம் 130.83 கோடி. அதிலே வசூல் செய்த பணம் 49.20 கோடியாகும். அதுவும் அந்த 30 ஆண்டுக் காலக் கட்டத்தில்தான் வசூல் செய்திருக்கிறது.

ஆனால் எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆட்சிக்கு வந்தபிறகு ஒவ்வொரு ஆண்டு பட்டியலும் இந்தக் கொள்கை குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

1979—80ல் முதலீடு 17.19 கோடி

1980—81ல் முதலீடு 36.90 கோடி

1981—82ல் முதலீடு 52.12 கோடி

1982—83ல் முதலீடு 55.87 கோடி

1983—84ல் முதலீடு 59.74 கோடி

1984—85ல் முதலீடு 67.97 கோடி என்று இங்கே குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், 1977க்குப் பிறகு தொழில்

முன்னேற்றத்திற்காக வழங்கியிருக்கக்கூடிய தொகை 289.80 கோடியாகும். 30 ஆண்டுகளில் முதலீடு செய்த தொகை 130.83 கோடி. ஆனால் இந்த 5 ஆண்டுகளில் 289.80 கோடியை வழங்கி யிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் இந்த 5 ஆண்டுக் காலத்தில் அவர்களிடத்திலிருந்து வசூல் செய்த தொகை 113.25 கோடியாகும். ஆக மீதம் 176.55 கோடி பணம் வசூல் செய்யப்பட இருக்கிறது. எவ்வளவு பெரிய தொகையை கொடுத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படியென்றால் எந்த அளவிற்கு இந்த அரசு, அதிகாரி களைப் யன்படுத்தி, முறையாக அவர்களுக்கு தாக்கீது களைத் தந்து, இன்றைக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக் கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவிக்க ஆசைப்படுகிறேன். அதில் வசூல் செய்த தொகை எவ்வளவு என்பதை மட்டும் நீங்கள் கொஞ்சம் தெரிந்து கொண்டால் மிகவும் நன்றாக இருக்கும். நீங்கள் அதைப் படித்துப் ப ர்ப்பீர்களானால் இந்த அரசு கொடுத்து இருக்கிற உதவிகளை வசூல் செய்வதிலே அக்கறை காட்டி 30 ஆண்டுகளாக வசூல் செய்ததைவிட, 5 ஆண்டு காலத்தில் கொடுத்து இருக்கிற தொகை அதிகம். இந்த அளவிற்கு அதிகாரிகள் அதிகம் வசூல் செய்து அரசுக்கு கொடுத்திருப்பதைப் பார்க்கிறபோது, இந்த அரசு முறையாக அதிகாரிகளை செயல்பட வைத்து பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென் றால் குறை கூறுகிற வகையிலே சென்று விடக்கூடாது. அரசு அதிகாரிகள் செய்திருக்கிற நன்மைகளையும் சொல்ல வேண்டும். அதே நேரத்தில் அவர்கள் செய்த தவறுகளையும் சுட்டிக்காட்டு வதிலும் நமக்கு பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்கிறேன். அந்தவகையில் தான் இதனை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்

இன்றைக்கு என்னுடைய தொகுதியான திருவரம்பூரைப் பொறுத்த வரையில் திருச்சி மாவட்டத்தில் மிக முக்கியமான தொகுதியாகும். திருச்சியைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டின் மத்திய பகுதியில் இருக்கிறது. அந்த மத்திய பகுதியில் சிறு தொழில கூடங்கள் சிட்கோ, டான்சி போன்ற நிறுவனங்களால் அங்கே உருவாக்கப்பட்டு, மிகப் பெரிய தொழில் கூடமான பாயிலர் தொழிற்சாலைக்கு உபகரணங்களை தயாரிப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொழில் கூடங்கள் 10, 12 ஆண்டுகாலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அங்கே தோல் பதனிடும் தொழில் கூடங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்தக் கொள்கைக் குறிப்பு அறிக்கையில் தமிழ் நாடு சிறுதொழில் நிறுவனம், டான்சி மூலமாக இந்த ஆண்டு செய்யப்படவிருக்கும் பல நல்ல திட்டங்களைத் தெரிவித்து இருக் கிறார்கள். அதில் கிடைக்கும் நன்மைகளை தெளிவாக தொகுத் திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதிலே, முறை யாக அவர்களை அணுகி, அவர்களிடத்தில் இந்தத் திட்டத்தைச்





செய்வதற்கு அரசு அதிகாரிகள் முனைப்பாக செயல்படுவார் களானால் அந்தத் திட்டம் முறையாக நடைபெறுவதற்கு வாய்ப் பாக இருக்கும். அதே நேரத்தில் அந்த நடவடிக்கை அந்தப் பகுதியில் இருக்கிற தொழிற் கூடங்கள் நல்ல முறையில் முன்னேறு வதற்கும் வழிவகை செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித் துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது, நல்ல பல திட்டங்களை உருவாக்கித் தந்ததன் காரணமாகத் தான் புரட்சித் தலைவர் அவர்கள் அரசை மக்கள் மூன்றாவது முறை யாக ஆட்சிப் பொறுப்புக்கு அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை இங்கே சொன்னேன். எங்களுடைய தொகுதியிலே இந்தத் தொழில்கள் வளர வேண்டும். தொழிற்சாலைகளை அதிகமாக உருவாக்கினால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவிற்கு தீர்க்க முடியும். படித்த இளைஞர்கள், தொழில் கல்வி பயின்ற மாணவர்கள், வேலையில்லாமல் இருப்பதை போக்குவதற்குத்தான் மத்திய சர்க்கார் தமிழ் நாட்டிற்கு நல்ல அக்கறையோடு பாயிலர் தொழிற்சாலையைத் தந்தார்கள். அந்த பாயிலர் தொழிற் சாலையை நம்பி திருச்சி மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் பல தொழில் கூடங்கள் உரு வாக்கப்பட்டன. அப்படி உருவாக்கப்பட்ட தொழில் கூடங்கள் 1980-ம் ஆண்டு வரையில் பாயிலர் தொழிற்சாலைக்கு பயன்படுகிற ஒவ்வொரு உறுப்புகளையும், உதிரி பாகங்களையும் செய்து கொண்டிருந்தன. மத்திய சர்க்கார் தமிழ் நாட்டிற்கு கொண்டு வந்திருக்கிற திட்டங்களை நாம் பாராட்டுகிறோம், வரவேற் [illegible]றோம். ஆனால் 1980-ம் ஆண்டிற்குப் பின்னால் பாயிலர் தொழிற்சாலைக்கு தேவைப்படும் உதிரி பாகங்களை, உறுப்புகளை தயாரித்துக் கொடுக்க, பக்கத்திலே இருக்கிற சிறு தொழில் கூடங்களுக்கு அந்த வேலைகளை கொடுக்க முடியாமல், அந்த வாய்ப்பை எடுத்துவிட்டு, பாயிலர் தொழிற்சாலையைச் சேர்ந்த பிரிவுகளை இராணிப்பேட்டைத் தொழிற்சாலைக்கு மாற்றி விட்டதாக நான் அறிகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-40)

இதனால் என்ன ஏற்படுகிறது என்றால், அந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிக மாகிறது. அந்தத் தொழில்களைச் செய்வதற்கு வேண்டிய பணங் களை வங்கிகளின் மூலமாக அரசு சிபாரிசு மூலம் கொடுக்கப்பட்டு அந்தப் பணங்கள் பெரிய பெரிய தொழில் கூடங்களாக கட்டி முடிக்கப்பட்டு, அதிலே இயந்திரங்கள் எல்லாம் பொருத்தப்பட்டு

இன்றைக்கு வேலையில்லாத நிலைமை உருவாகி உள்ளது.
மேற்படி பகுதியிலே வேலை கொடுக்கப்படவில்லை என்றால் அந்த
முதலீடுகள் அனைத்தும் வேஸ்டாகப் போய்விடும். வங்கிகளுக்கும்
நிதி போய்ச் சேராமல் வங்கிகள் நடக்க, தயக்க நிலைமை
உருவாகும். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம்
உருவாகிக் கொண்டு இருக்கிறது. புதிதாக ராணிப்பேட்டைக்கு
தொழிற்கூடம் வர இருந்ததை அங்கே கொண்டுவருவார்கள்
என்று எங்களைப் போன்றவர்கள் அந்தப் பகுதியில் இருக்கிற
நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் பாய்லர் தொழிற்சாலையில்,
எங்கள் பகுதியில் இருக்கின்ற தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்
களை நிறைய ராணிப்பேட்டைக்கு மாற்றி விட்டார்கள்.

இப்போது அங்கே இயந்திரங்கள் இல்லாது பல தொழில்கள்
பின்னாலே தள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில்
சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். காரணம் மாண்புமிகு
பெரும் தொழில் அமைச்சர் அவர்கள் இங்கேயிருக்கிறார்கள்.
சிறுதொழில் மானியக் கோரிக்கையாக இருப்பதால், அந்தத் துறை
அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். எனவே நான் இரண்டு
அமைச்சர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே அதிகப்
படியான அக்கறை காட்டப்பட வேண்டும், கிட்டத்தட்ட புதுக்
கோட்டை மாவட்டம், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொழிற்
கூடங்கள் 200-க்கு மேற்பட்டு இருக்கின்றன. இந்த 200 தொழிற்
கூடங்களிலும், மெட்டீரியல்ஸ் சப்ளை செய்யாமல், அங்கே
வருகின்ற மெட்டீரியல்சை அதாவது அந்தப் பாகங்களுக்கு உள்ள
இரும்புகளை ராணிப்பேட்டைக்கு மாற்றிக் கொடுத்துவிட்டதால்,
ஏற்கனவே உருவாக்கப்பட்ட தொழிற்கூடங்களில் பணியாற்றிக்
கொண்டு இருக்கிற தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்
டம் ஏற்பட்டு, நிதி முடக்கம் ஏற்படக்கூடிய நிலைமைகள் உரு
வாகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக
BHEL நிர்வாகத்திற்கு தெரிவித்து, அதற்கான நடவடிக்கை
எடுத்து, நல்ல முறையில் அந்தத் தொழில்கூடங்கள் இயங்கு
வதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

இன்னொன்று, இந்தியாவைப் பொறுத்தவரையில், மத்திய
அரசு தமிழ்நாட்டுக்கு பெரிய திட்டங்களைத் தந்திருக்கிறார்கள்
என்றும் எதிர்க்கட்சியிலே இருக்கிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த
வர்கள் சொல்வார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு
தெரிவித்துக் கொள்வது, அவர்கள் மூலமாக நீங்களும் எடுத்துச்
சொல்லுங்கள், அதேபோல் தமிழ்நாடு அரசும் எடுத்துச் சொல்ல
வேண்டும் என்பதற்காகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்
கிறேன். ஆக எங்களுடைய தொகுதியிலே இருக்கிற அந்தத்
தொழிற்சாலைகளில் நல்ல ரிசர்ச் இன்ஸ்டிடியூட், அதாவது
வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கக் கூடிய ஒரு தொழில்
கூடமாக இல்லாது ஒரு ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டாக உருவாக்கு





வதற்கு சில திட்டங்களை கொண்டு வந்து, அந்தப் பகுதியில் அது
நல்ல மேம்பாடு அடைந்து வளர்ச்சி பெற்ற பிறகு, அதை வேறு
மாநிலங்களுக்கு கொண்டு செல்லுகின்ற பாங்கு இப்போது நடை
முறையில் இருந்து கொண்டிருக்கிறது. நான் தயவு செய்து
கேட்டுக்கொள்கிறேன், 20 ஆயிரம் தொழிலாளர்கள் கிட்டத்
தட்ட பெர்மனன்ட்டாக இருக்கிறார்கள். 20 ஆயிரத்திற்கும்
மேற்பட்ட அதாவது என்.எம்.ஆர். தொழிலாளர்கள் அங்கே
பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

எனவே அந்த முன்னேற்றமாக உள்ள அந்தத் தொழிலை
வேறு ஒரு மாநிலத்திற்கு கொண்டு செல்வது உண்மையிலே
வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன
செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே
உற்பத்தியாகி, வளர்ந்து நல்ல ஒரு தகுதியைப் பெற்ற அந்த
தொழிலை இன்னொரு மாநிலத்திற்கு கொண்டு செல்வதை தமிழ்
நாடு அரசு அனுமதிக்கக் கூடாது என்பதை தெரிவித்துக்கொள்ள
ஆசைப்படுகிறேன். காரணம் வால்வு உற்பத்தி திருச்சியிலே சிறப்
பான முறையில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அந்த வால்வு
உற்பத்தி நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிற அந்த
யூனிட்டை, BHEL நிர்வாக சேர்மனாக இருக்கக்கூடியவர் பஞ்
சாபைச் சேர்ந்தவர் என்பதால், அந்த வால்வு உற்பத்தி செய்யக்
கூடிய அந்தத் தொழிலை பஞ்சாப் மாநிலத்திற்கு மாற்றப்பட
இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, அதற்கு தமிழ்
நாடு அரசும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், சம்பந்
தப்பட்ட அமைச்சர் அவர்களும், அந்த நிர்வாகத்தோடு தொடர்பு
கொண்டு இந்த நிலையை மாற்றி அமைக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்னும் பலதரப்பட்ட அமைப்புகள் அந்த நிறு
வனத்திற்குட்பட்டவைகள் இன்றைக்கு மற்ற மாநிலத்திற்கு
கொண்டு செல்லப்பட்டு இருக்கிறது. அதையெல்லாம் தயவு செய்து
ஆளுகின்ற சர்க்காராக இருக்கின்ற மத்திய அரசைச் சேர்ந்தவர்கள்
தமிழ்நாடு வளரவேண்டும் என்பதை கருதி நீங்கள் மத்திய சர்க்
கார் இடத்திலே எடுத்துச் சொல்லவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே
மாண்புமிகு இன்றைக்கு துணை ஜனாதிபதியாக இருக்கின்ற நமது
மதிப்பிற்குரிய திரு. வெங்கட்ராமன் அவர்கள் காலத்தில் கொண்டு
வந்த அந்த மிகப் பெரிய தொழில் கூடத்தை எல்லாம் இந்த தமிழ்
நாடு மறக்காது. அதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்
கிறோம், ஆனால் கொண்டு வந்த திட்டங்களை ஒவ்
வொன்றாக கடத்திக்கொண்டு செல்வதை தயவுசெய்து நீங்கள்
நிறுத்தி ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில்

கேட்டு இந்த மானிய கோரிக்கையில் நல்ல பல திட்டங்கள் இருக்கின்றன என்பதை சொல்லி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வந்து இருக்கிற கோரிக்கை எண். 48, 57 மீது நான் சார்ந்து இருக்கிற காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் சில கருத்துக்களை தெரிவிக்க விழைகிறேன்.

'சிறு தொழில் பரப்பி வறுமையை ஒழிப்போம்' இதனை நாங்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறோம். பெருந் தலைவர் அவர்கள் பிறந்த நாள் சபதத்திலேயே கூட இதனை ஒரு கோரிக்கையாக எடுத்துவைத்துள்ளோம். எனவே சிறு தொழிலை பெருக்க நாம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தொழில் கொள்கை மற்றும் திட்டங்களில் கூறப்பட்டு உள்ளது போல் மிக சிறிய தொழில்களையும் வீட்டிலே செய்யும் தொழில்கள் உட்பட சிறு தொழில்களை உருவாக்கி குடிசைத் தொழில்களை வளர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ள அரசை மனதார பாராட்டுகிறேன். இது தான் காந்தியார் தத்துவம். நாடு வாழ, உழைப்பவர்கள் முன்னேற இந்த திட்டங்களை நிறைவேற்றவேண்டும்.

அதேபோல் எனது தொகுதியான சாத்தான்குளம் எந்தவிதமான பணியும் இல்லாமல் வறட்சியான தொகுதியாக இருந்து கொண்டு இருக்கிறது. அந்தத் தொகுதியில் உள்ளடக்கிய பகுதி பன்னம்பாறை என்னும் கிராமப் பகுதியில் இன்று சிமெண்ட் தயாரிக்கக்கூடிய மூலப்பொருள்கள் அங்கே இருப்பதாக சொல்லப் படுகிறது. அந்தப் பகுதியில் வெள்ளக்கல் போன்ற மூலப்பொருட்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக இன்று சிறுத்தொழில்கள் மூலமாக ஒரு மினி சிமெண்ட் ஆலையை அங்கே அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் ஒரு கோரிக்கையாக வைத்துள்ளேன்.

நாட்டில் சிமெண்ட் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. தினசரி 2 டன் தயாரிக்கும் மினி சிமெண்ட் ஆலையை நிறுவினால் வேலை வாய்ப்பும் உற்பத்தியும் கூடும். எனவே, அரசு இந்தத் திட்டத்தை பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நம் நாட்டில் ஏராளமான பனை மரங்கள் இருக்கின்றன. பனை தும்பை பயன்படுத்தி கான்கிரிட் பலகையை தயாரிப்பது அதாவது இரும்பு கம்பிகளுக்கு பதிலாக தும்பை உபயோகப்படுத்தி கான்கிரிட் பலகையை தயாரிக்க முடியும் என்ற சாத்திய கூறுகளை ஆராய வேண்டும்.



இதனை கதர் கமிஷன் பல ஆண்டுகளுக்கு முன்பு இரும்பு பற்றாக்குறை ஏற்பட்டபோது உறுதியான கான்கிரிட் பலகையை தயாரிக்க பனைதும்பை பயன்படுத்தலாம் என்று கூறியிருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறுமானால் சிமெண்ட் பலகை—உபயோகிக்கும் எல்லா கட்டிடங்களிலும், தொழில்களிலும் உபயோகிக்கக் கூடிய ஏராளமான தும்பு நம்மிடம் இருக்கிறது, என்பதை இந்த நேரத்தில் அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

நம்மிடம் உபயோகம் இல்லாத மரங்கள் நிறைய இருக்கிறது. ஆனால் பலகையும், பயன்பெறும் நல்ல மரங்களும் மிக அதிக அளவில் விலை உயர்ந்து விட்டது. ஆராய்ச்சியில் வெற்றிப் பெற்ற குறைந்த தரம் உள்ள மரத் தூள்களையும் ரசாயன பொருட்களையும் கலந்து செயற்கை மரம் தயாரித்தால் அது உயர்ந்த சாதி மரத்திற்கு இணையாக இருக்கிறது. எனவே செயற்கை மரம் தயாரிக்கக்கூடிய தொழில்களை உருவாக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 12.50)

அயோடின் குறைவால் நம் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அயோடைஸ் உப்பு தயாரிக்கும் தொழிற் சாலையை தூத்துக்குடி, வேதாரண்யம் போன்ற இடங்களில் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நீண்ட கடற்கரையை உடைய தமிழ்நாட்டில் மீன்களை பதப்படுத்தி, டப்பாக்களில் அடைக்கும் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

தூத்துக்குடி தொழிற் பேட்டையில், புதிய இன்னும் பல தொழில்களுக்கு கட்டிடங்கள் கட்டித் தரவேண்டும். அது புதிய தொழில்கள் வர வழி வகுக்கும்.

என்னுடைய தொகுதியில் பனை ஓலைகளில் பாய் முடைதல் என்ற குடிசைத் தொழில் உள்ளது. வியாபாரிகளிடம் கடன் பெற்று ஓலை வாங்கி பாய் முடைவதால், குறைந்த விலைக்கு அந்த வியாபாரிகளிடமே கொடுக்கவேண்டியிருக்கிறது. எனவே, பாய் முடைவதற்கு, டி.ஐ.சி. மூலமாக கடன் வழங்கப்படவேண்டும். அப்படி வழங்கினால் அந்தத் தொழிலாளர்களின் துன்பம் தீரும். எனவே, அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

பட்டுப் பூச்சி வளர்ப்பு தமிழகத்தில் ஒரு நல்ல வளர்ச்சியான தொழிலாக அமைந்துள்ளது. பட்டுப்பூச்சி வளர்ப்பது சிறந்த தொழில். அந்தப் பட்டுப் புழுக்கள் வளர்க்கும்போது, பக்கத்து நிலத்தில் பூச்சி மருந்துகளை அடிக்கக்கூடாது. பூச்சி மருந்துகள் அடிப்பதன் காரணமாக, அங்கே கூடு கட்டக்கூடிய புழுக்கள், அந்த விஷத்தினால் தாக்கப்பட்டு, நிறங்கள் மாறி, சிகப்பு நிறமாக ஆகி இறந்து விடுகின்றன.

எனவே, அந்தத் தீமைகளைப் போக்கி, பட்டுப் புழுக்களைக் காக்க தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் பலருக்கு கடன் வழங்கப் பட்டுள்ளன. அவர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு விற்பனை மையங்கள் இல்லாவிட்டால் அவர்கள் தொழில் நஷ்டம் அடைந்து விடுகின்றன. வங்கிக் கடன்களை திருப்பி செலுத்த முடியாத நிலையிலே இருந்து வருகிறார்கள்.

எனவே, அவர்களுக்கு விற்பனை செய்யும் மார்க்கட்டினை ஏற்படுத்தித் தரவேண்டும்.

மேலும், மார்க்கெட்டில் தேவைப்படும் பொருட்களை மட்டுமே தயாரிக்க அனுமதி வழங்கவேண்டும்.

அரசின் சாதனைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தென்னை ஓலைகளைக் கொண்டு கீற்று முடைதலை மேம்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

என்னுடைய சாத்தான்குளத் தொகுதியில், கொம் மட்டித் தொட்டை ஊராட்சி கிராமங்களைப் பொறுத்தவரையில் தென்னங்கீற்று முடைவதை மட்டுமே தொழிலாகக் கொண்டுள்ளனர். எனவே, அவர்களுக்குக் கடன் வழங்கி அந்தக் குடிசைத் தொழிலை முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும். என்று மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நாட்டில் தற்போது செங்கல் பற்றாக்குறை இருந்து வருகிறது. அதனைத் தவிர்க்க குளங்களில் உள் வாயிலில் சேர்ந்து மேடிட்டு இருக்கும் வண்டல் மண்ணை அப்புறப்படுத்தி, செங்கல் தயாரிப்பாளர்களைக் கொண்டு, அங்கே செங்கல் சூளை வைக்க அனுமதிப்பதோடு, தொழில் கடனும் வழங்கலாம்.

அதனால் செங்கல் பற்றாக்குறையும் தீரும். மேடிட்டு இருக்கும் குளங்கள் செலவு இல்லாமலே ஆழப்படுத்தப்படும். எனவே, அதனை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



கிராம கைவினைத் தொழிலை ஊக்கப்படுத்தி கிராமங்களி லுள்ள நிலம் அற்ற தொழிலாளர்களுக்கு உதவித் தொகை அளித்து பயிற்சி அளிக்கவேண்டும். நாட்டில் காகிதத்திற்கு தொடர்ந்து பற்றாக்குறை இருந்து வருகிறது. மரக் கட்டையி லிருந்தும், வைக்கோலிலிருந்தும், புல்லிலிருந்தும், காகிதம் தயாரிக்க முடியும் என்பது ஆராய்ச்சியில் முடிவு செய்யப் பட்டுள்ளது.

ஆனால் பனை ஓலைகளிலிருந்து காகிதம் தயாரிக்க முடியுமா? என்பதை ஆராயவேண்டும். முடியும் என்று நிருபணம் ஆனால் தமிழகத்தில் பல காகிதத் தொழிற்சாலைகளை நிறுவ முடியும். எனவே, அரசு அதனைப் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

உப்பிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களைப் பற்றிய விவர அட்டவணையை அரசு வெளியிடவேண்டும். அதனால் நெல்லை மாவட்டத்தில் அத்தகைய உப்பு துணைத் தொழில்கள் உருவாக்க வாய்ப்புக்கள் ஏற்படும்.

தமிழ்நாட்டில் பொறியியல் தொழில் பட்டறைகள் மிகுதியாக ஏற்பட அரசு ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் தான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத் தொழில் வளர்ந்தால்தான் நாடு சுபிட்சம் அடையும் என்ற பெரும் தலைவர் காமராஜரின் கொள்கையையும் இந்தியா போன்ற பெரிய விவசாய நாட்டில் கிராமத் தொழில் வளர்ச்சியே தேவை என்ற காந்தீய தத்துவத்தையும் செயல் படுத்திட முன் வந்த அரசைப் பாராட்டுகிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த நேரத்தில், நாட்டை வளப்படுத்தும் சிறு தொழில்களைப் பரப்பி, வறுமையை ஒழிப்போம் எனக்கூறி, வாய்ப் புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

***Thiru T. Venkata Reddy** : Hon. Mr. Temporary Speaker Sir, I wish to state on behalf of the Indian National Congress, some of my observations on Rural Industries Demand. We know this House and this Government are engaged in the upliftment of the poorer sections of the people and in improving their economic conditions. We also know that Tamil Nadu stands first in Family Planning. We also know that many small scale industries have come into play in Tamil Nadu. But the economic condition of the poorer sections of the people is going down. We have seen in Papers and have come to know from Statiticians that poverty in Tamil Nadu is very much below the National Level. We have to patch up this anomaly. We have stopped the growth of population more than the other States. At the same time we start industries. But yet the economic condition of the poorer sections of the people still remains the same.

We must have the basic things to improve their economic condition. One of the fore most basic things is the power. Power is the thing which will revolve round on all the industries and economy. We do not give power even for the rural and small scale industries. When this is the condition we cannot expect them to improve their economic condition. The other thing is, we have allowed so many people to start small scale industries without giving them proper marketing facilities, and technical know-how. But we have allowed to start industries.

We see, many industries have fallen sick. The entrepreneurs themselves may not be responsible. But largely the responsibility lies with these people who encourage such industries. They do not give psoper technical know-how. They do not also give the marketing facilities for the inputs. The other aspect is, we have got large-scale industries, in our State also. But unfortunately such large-scale industries encourage the auxiliary units of their own. The small scale industries sponsored by the Government and also by the Corporations are not being encouraged. That is one of the reasons for the units still to remain sick. Another thing is, when an industry is started by small entrepreneurs we cannot expect a large capital from them. The capital investment is very meagre. So far as this side is concerned the only Corporation that helps them is TIIC and the Corporation must see that the person is utilising the capital properly in the industries. Even if the unit falls sick, the Corporation and the Government must come in a big way to help him to regain his sick unit, as otherwise you will be wasting a lot of monies on him and his sick unit will never come up again. These are the things which are necessary to be kept in mind while promoting the industrial development. The other aspect is, our late beloved Shrimathi Indhira Gandhi under the Twenty point programme had promulgated a scheme whereunder the unemployed youths, the graduate youths, will be given incentives through Banks and Industrial Corporation.

(பிற்பகல் 1—00)

We have seen Hon'ble Members here complaining that many of the unemployed graduates and youths are not getting the loans properly from the Corporations. I also personally know this. For Dharmapuri District Industrial Centres, the Central Government has given Rs. 1 crore and 40 lakhs. Only Rs. 80 lakhs had been sanctioned about two years back. Rs. 60 lakhs remained to be disbursed. Rs. 80 lakhs was sanctioned by the Corporations but the banks laid hurdles in the distribution of these loans. Unfortunately



the bank people still have not come down from the level of the easy chair method. They stick to the chair. They do not know the needs of the common man. The Government should see that the bank authorities cater to the needs of the poorer section. Unfortunately they still follow the good old method. Only the Industrialists who come in cars and take the bank authorities to big hotels and provide good tiffin and meals get good amount of loans from the banks. They do not also repay the loans properly. Poor people who come by cycles or by walk are not entertained properly by the bank authorities. Unfortunately this results in the graduates and unemployed youths who are sanctioned loans by the Government, not getting the loans amounts properly and in time from the banks.

Malpractices are also in the offing. Hon'ble Minister should look into such things and take steps to set right, so that the good schemes which the Government introduces can be properly utilised by the unemployed youths and also by the entrepreneurs.

Many Members of this house have been telling that the TIIC has been doing a commendable work in the field of distribution of loans. When commendable work is being done there must be proper follow up action also. When you give loans you must also see that the loans are properly used not only for the person who gets the loan but also for increasing the economic condition of the society at large. When you give loans such follow up action is necessary. This aspect has not been properly looked into by any of the Investment Corporations, banks or Government. When you give loans under certain schemes you should see that those schemes are properly implemented and as a result of such implementation the economic condition of the society improves. If you do not do so, it will not matter whatever statistics you may give to the House. It will be beneficial only if you ensure that such statistics are correct and they benefit the society at large.

The Hon'ble Minister must constitute a Corporation to watch that such schemes help the people to come up in society well and such schemes really help the person who has taken the loan to enjoy the benefits of the scheme. The Government must also provide the necessary technical know-how, marketing facilities etc. to the loanees. There must be co-ordination between different fields engaged in the implementation of these schemes. Such co-ordination is not forthcoming in the Government of India as well as in the State Governments. We must have relevant statistics for the whole of India. At present we do not have statistics with regard to consumer needs.

[Thiru. T. Venkata Reddy] [1985 ஜூலை 4

When we do not have the consumer needs statistics, however large schemes that we may draw or develop will fail. Based on the consumer needs statistics, the industrial development authorities and the Government should be in a position to say these are the needs which are necessary for the society and that these things will move very fast in the society and they will earn good profits. Such things are basically necessary. The consumer needs statistics are maintained by all the countries in the world. Japan has become very forward and advanced in the industrial development. One of the reasons is the people are nation-minded, hard-working and more than that they know where the market is for their products. We have seen that Japan people have captured the market throughout the World because they know the technical know-how and collected the necessary statistics for their Nation and also for the nations of the World. They were able to sell their goods, which are required by their Nation and other countries of the World. Such statistical information are necessary, instead of providing and disbursing crores of rupees as loans to the entrepreneurs. So the basic and necessary thing is statistics. Then only you will know whether the amount disbursed has been utilised usefully, properly and correctly for the purpose for which it was given.

Another aspect is sericulture. Sericulture is the panacea for Tamil Nadu agriculturists. In Karnataka, the first Arthur Pope spinning mill for silk was started. It was formed by Arthur Pope, the then Governor of composite State of Tamil Nadu. From 1979 onwards, when the sericulture was bifurcated from the Agriculture, sericulture has begun to develop in Tamil Nadu. We had the Silk Weaving and Spinning Mill at Kollegal. We had good market. Now that taluk had gone to Karnataka. The next only taluk which has large-scale development in Sericulture is the Hosur taluk. In Hosur taluk, we have got extensive acres of cultivable land for sericulture. We produce nearly 10 lakhs kgs. of Cocoons in Hosur Taluk. Unfortunately, there is no proper co-ordination between the Central Silk Board Authorities and the Tamil Nadu Silk Authorities. Serieulture is developing well in Dharmapuri district itself. Even though sericulture is developed in Dharmapuri District, particularly in Hosur taluk, other facilities which the farmers require are not there.

I request the Hon'ble Minister for Rural Industries to see that certain facilities which are quite necessary for the development of sericulture are provided to our agriculturists. When an agriculturists in Karnataka is competent to get profit, why our farmers should get loss. You must set an example that our farmers by and large are more



1985 ஜூலை 4] [Thiru T. Venkata Reddy]

intelligent people and if they are given the technical know-how facilities and other necessary equipment, our farmers will forge ahead of others. The Hon'ble Minister for Rural Industries should see that a Cocoon market is located at Hosur for selling of cocoons produced in Dharmapuri District and other Districts. Now they are selling at Chennapatna Cocoon market. It is far away from our area and is in Karnataka State. The farmers need not go all the way to Karnataka, if there was a Cocoon market in Hosur itself. Even the Karnataka people will come to the market at Hosur and the farmers will get remunerative and reasonable price. 90 per cent of the cocoons are produced in Dharmapuri District, particularly in Hosur taluk. I therefore request the Hon'ble Minister for Rural Industries who is in charge of Sericulture to set up a Cocoon market at Hosur itself. The other Centres like Reeling Centre, weaving centre and twisting centre should be located in Hosur itself so that they will give a boost to the silk producing persons.

(பிற்பகல் 1-10)

All the three have located in one place so that the man who produces, the man who toils in the villages, and the man who toils in the fields, will get good remuneration instead of the merchants, the middle men who get crores of rupees by selling the finished products in foreign countries.

I know in Karnataka there are also Silk Merchants Union. They are very powerful in that area. They can influence the Government to get more concessions. Their only work is to get the finished products from the villagers and traders and sell them to foreign markets. It is only the work of middlemen. The Banks also help them by way of finance. Their main work is to get the twisted yarn and sell it in foreign market without any capital invested by themselves. This is the situation prevailing in Karnataka and such a situation should not happen in Tamil Nadu because the man who has toiled and who has put in his labour in the field, should get good remuneration. So, all the three units should be in a particular place, so that the Government can control the marketing facilities. Japan has been producing large quantities of silk cloth but it has banned the production of silk cloth. India is the only country which can fill the gap.

We have got scope for export in sericulture. If export is given an impetus our Tamil Nadu agriculturists who are very poor, will benefit to a large extent. I request in this context the Hon'ble Minister to have a Silk development Corporation so that the Corporation will devote its main attention for sericulture development

because it will get a lot of foreign exchange more than the small scale industries. I also request the Hon. Minister to see that the sericulture is developed in our area, under our guidance, so that the Karnataka people who have been the pioneers of sericulture, will envy us. There is a Central Silk Board in Karnataka for proper development. In Tamil Nadu also a Central Silk Board can be located, which will cater to the needs of the entire districts in Tamil Nadu.

One more word Sir, Mr. Temporary Speaker, I would conclude. Recently our young Prime Minister has said with regard to the industrial development, that we have been missing buses. We can not afford to miss bus again. Under his able guidance and under the able leadership of our beloved Prime Minister, the Prime Minister has been promoting a lot of industries now and I am sure if the Hon. Minister approaches the Central Government, the Central Government will not feel shy to help more industries to come in Tamil Nadu and in order to keep the tempo alive, we should not miss the bus and we should catch the bus, when it is moving and see that especially the rural industries and small scale industries are developed to a great extent during the Hon. Minister's regime.

Thank you.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் தங்களுடைய மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். கடந்த 8 ஆண்டுக்காலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கிற இந்த அரசு, தொழில் வளர்ச்சிக்கு, குறிப்பாக சிறு தொழில் வளர்ச்சிக்கு நல்ல பல திட்டங்களை தொடர்ந்து ஏற்படுத்தி செய்து வந்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள், எந்த அளவுக்கு சிறு தொழிற்கள் வளர்ச்சி பெற்றிருக்கிறது தமிழகத்திலே என்பதை எடுத்துக் காட்டினார்கள். தொழில் துறையிலே பின்தங்கிய பகுதிகளில், கிராமப் புறங்களில் சிறு தொழில்கள் வளர வேண்டும் என்பதற்காக என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் சில குறைகளை எடுத்துச் சொல்லி, அவைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும் என்று வற்புறுத்திருகிறார்கள்.



அதன் மூலமாக கிராமப்புறங்களிலே வேலை வாய்ப்புகள் பெருக வேண்டும் என்ற எண்ணத்திலேதான் தங்களுடைய பேச்சின் மூல மாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய கருத் துக்களையும் பற்றிய விளக்கத்தை நான் ஒட்டு மொத்தமாகச் சொல்வதுதான் ஒழுங்காக இருக்கும் என்ற காரணத்தாலே, தனித் தனியாக ஒவ்வொருவருக்கும் பதிலைச் சொல்லாமல், ஒட்டு மொத் தமாக இந்த அரசு எடுத்து இருக்கிற நடவடிக்கைகளையும், தொழில் துறையில் தமிழகம் எந்த அளவுக்கு முன்னேறிக் கொண்டு வருகிறது என்பதைப் பற்றியும் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையெல்லாம் ஏற்று, தவறுகள் ஏதாவது இருப்பின் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில், தொழில் வணிகத் துறை இன்றைக்குச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது. மாவட்ட அளவில், மாவட்ட வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தி, அதன் மூலமாக கிராமப்புறங்களிலேயும், புற நகர்ப்பகுதிகளி லேயும், தொடர்ந்து சிறு தொழில்கள் சிறப்பாக வளர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று செய்து கொண்டிருக் கிறார்கள். 1960 ஆம் ஆண்டிலேயிருந்து 1978 ஆம் ஆண்டு வரையில் 18 ஆண்டுக்காலத்தில் சிறு தொழில்கள் பதிவு செய்யப் பட்டிருந்தது 18,289. ஆனால் கடந்த 7 ஆண்டுக் காலத்தில் ஏறக் குறைய 3 மடங்காக அது ஆக்கப்பட்டிருப்பதை யாரும் மறுத்து விட முடியாது.

இன்றைக்கு 31-3-85 வரையில் சிறு தொழில்கள் ஏறக்குறைய பதிவாகி இருப்பது 60,259. சென்ற ஆண்டு 49,920. ஒரு ஆண்டு காலத்திற்குள் புதியதாக தொடங்கப்பட பதிவு செய்யப் பட்டிருப்பவை, ஏறத்தாழ 10,500 என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். 10,500 என்று சொல்கிறபோது எல்லாத் தொழில்களுமே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று பொருள் அல்ல. ஆரம்பிப்பதற்காக தமிழகத்திலே உள்ள தொழில் துறையினிடத்திலே பதிவு செய்யப்பட்டவை 10,500.

அதேபோல் இன்றைக்கு வளர்ச்சி குன்றிய பகுதிகளிலே அந்தத் தொழில்கள் சரியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத் தோடு சில பணிகளை அரசு இப்போது முயற்சி செய்து, செய்து கொண்டு வருகிறது. ஒரு தொழில் என்று எடுத்துக் கொண்டால், பக்கத்து பக்கத்திலே, ஒரே இடத்திலேயே அந்தத் தொழிலைச் செய்ய வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு சில பேர்கள் ஆளாக்கப்படு கிறார்கள். அதனால் போட்டி ஏற்படுகிறது. அதனால் சில தொழில்களை செய்ய முடியாமல் நசிந்து போகிறது. ஆகவே தான் புதுத் தொழில்களை தொடங்குவதற்கு முன், அவைகளை இன வாரியாகப் பிரித்துச் செயல்படுத்த வேண்டும், அதற்கு முன் னுரிமை தரவேண்டும் என்று ஒரு கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அப்படி 1985–86 ஆம் ஆண்டில் 6 ஆயிரம் புதிய தொழில் களை பிரித்து இருக்கிறது. அந்த வகையில் மின்சாரம் மற்றும் மின் அணுயியல் தொழில்களுக்கு 600, இரசாயனம், மருந்துத் தொழில்கள் மற்றும் பிளாஸ்டிக் தொழில்களுக்கு 400, தான் இயங்கி வண்டி பாகங்கள், உறுப்புகள் மற்றும் அந்தத் தொழில் சம்பந்தப்பட்ட பொ(ு)ள்களை செய்கின்ற தொழில்களுக்கு என்று 400. மொத்தம் 1400 தொழில்களைப் பிரித்து அவர்களுக்கு உதவி செய்வது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–20).

அதற்கு என ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் குறைந்த பட்சம் 1½ லட்சம் மூலதனமாக வைக்க வேண்டும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் குறைந்த பட்சம் 10 பேர்களுக்காவது வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. அதன் மூலமாக இன்றைக்கு கோயம்புத்தூரில், மேற்கு ஜெர்மனி அரசினுடைய தொழில் நுட்ப உதவியுடன் 1.84 கோடி செலவில் பம்பு–மோட்டார் மற்றும் டீசல் என்ஜின் தொழிற்சாலைக்கு தயாரிப்பு முறை, வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் அமைப்பதற்காக மைய அரசின் பூர்வாங்க ஒப்புதலைப் பெற்று இன்றைக்கு இப்போது பணிகளை ஆரம்பிக்க இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் துவங்குவதற்கு முன்னாலே தொழில் துவங்குகிற தொழில் முனைவர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று உறுப்பினர்கள் பரவலாகப் பேசினார்கள். அவர்கள் பஞ்சாயத்து யூனியன், டி. எச். ஓ. இப்படி பலபேர்களிடத்தில் அனுமதி பெற வேண்டியுள்ளது. அப்படி ஒவ்வொருவரிடத்திலும் சென்று அவர் கள் அனுமதி பெறுகிற போது நீண்ட நாட்கள் ஆகிவிடுகிறது. அந்தவகையில் தொழில் முனைவர்களுக்கு சங்கடங்கள் ஏற்படுவ தால், அவர்களுக்கு இருக்கிற குறைகளைத் தீர்த்து வைக்கவேண்டு மென்று, ஒரே கூரையின் கீழ் தடைகளை நீக்கி அனுமதியளிக்கும் முறையை இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் என்னென்ன அனுமதிகளை யார்யாரிடமிந்து பெறவேண்டுமோ, அப்படிப்பட்ட அனுமதிகளை ஒட்டு மொத்தமாக இந்தத் துறை பெற்றுக் கொடுக்கிற நிலைமையை உருவாக்கி இருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மாவட்ட அளவில் குழுக்களை அமைத்து, அதேபோல மாநில அளவில் ஒரு குழுவை நியமித்து, இந்த முறை செயல்படுகிறது. மாவட்ட அளவிலான இந்தக் குழுவில் மின் வாரியம், காற்றுத் தூய்மைக் கேடு தடுப்பு போன்ற சம்பந்தப்பட்ட துறைகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



அவர்கள் அத்தனைபேரும் மனு கிடைத்த 45 நாட்களுக்குள்ளாக விண்ணப்பங்களை ஆய்ந்து, முடிவெடுத்து அவர்களுக்கு என் னென்ன உதவிகளைச் செய்யமுடியுமோ, அந்த உதவிகளை இன்றைக்கு உடனுக்குடன் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி செய்ததன் பலனாக இன்றைக்கு 1984–ம் ஆண்டு மே மாதம் முதல் மார்ச் 1985 வரையில் பெறப்பட்ட 1611 இனங்களில் 906 இனங் களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்றைக்கு தொழில் துவங்குவதற்கு எல்லாவிதமான உதவிகளையும் அரசு செய்து கொடுத்திருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி அந்தச் சிறு தொழில்களுக்கு ஒரு கூரையின் கீழ் தடைகளை நீக்கி அனுமதியளிக்கும் முறை வெற்றிகரமாக பலனளிப்பதைப் புரிந்து கொண்ட காரணத்தால் தான் இன்றைக்கு பெரிய தொழில் முனைவர்களுக்கும் இதுபோன்ற உதவி களைச் செய்வதற்கு தொழில் துறை ஆணையாளர், அரசு செயலாளர் ஆகியவர்களுடைய தலைமையில் ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

அதேபோல் நம்முடைய பாரதப் பிரதமர் மறைந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 20 அம்சத் திட்டத்தின் கீழ், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டமென்று ஒரு சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக நம்முடைய அரசை பொறுத்தவரை யில் சிறப்பான முன்னேற்றத்தை மற்ற மாநிலங்களை விட அடைந்திருக்கிறோம். 1983–84-ம் ஆண்டின் இலக்கு நமக்கு 17 ஆயிரத்து 500 என்று கொடுக்கப்பட்டது. ஆனால் 21,747 பேர்களுக்கு தொழில் துவங்குவதற்காக ஏறக்குறைய 3,315.50 இலட்சத்தை வழங்கி இருக்கிறோம். அதேபோல 1984–85-ம் ஆண்டு நமக்கு கொடுக்கப்பட்ட இலக்கு 21,700. ஆனால் ஏறக் குறைய 22,084 பேர்களுக்கு தொழில் துவங்குவதற்காக ரூ. 4216.49 இலட்சம் தொகையை இந்த அரசாங்கம் வழங்கி இருக்கிறது.

குறிப்பாக மற்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டால், பல மாநிலங்களில் இன்றைக்கு கூட நான்கு மாதகாலம் ஆகியும் அவர் களுக்கு கொடுத்த இலக்கை பூர்த்தி செய்யாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய இலக்கை பூர்த்தி செய்துவிட்டு, அடுத்த ஆண்டிற்கு அதாவது 1985–86-ம் ஆண்டிற்கு இன்றைக்கு அவர் களுடைய ஒத்துழைப்பை, அவர்களுடைய ஒதுக்கீட்டை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த அளவிற்கு இன்றைக்கு சிறப்பாக பணிகளை தனி நபர்களுக்கு, படித்த வேலையில்லாமல்

இருக்கிற இளைஞர்களுக்கு இந்த ஏற்பாட்டின் மூலமாக நல்ல பலன் கிடைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான சாதனையாக, இன்றைக்கு தொழில் கூட்டுறவுச் சங்கங்களை நாம் ஏராளமாக தமிழகத்தில் ஏற்படுத்திக் கொண்டிக்கிறோம். அந்தந்த இடங்களில் தனியாக தொழில் துவங்க முன்வரவில்லை என்று சொன்னாலும்கூட 20 பேர், 30 பேரை ஒன்றாக வைத்து அவர்களுக்குள் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி தொழில் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் அவர்கள் அத்துனை பேரும் அங்கே பணி செய்யவும், அல்லது அவர்கள் சார்பாக யாராவது பணி செய்யவும் ஏற்பாட்டை இன்றைக்கு நாம் செய்து வருகிறோம். அதன் மூலமாக 1978-ம் ஆண்டு மார்ச் திங்களில் 297 என்று இருந்த கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1985 மார்ச் இறுதியில் 723 ஆக உயர்ந்திருக்கிறது.

அதேபோல 1977–78-ல் உற்பத்தி ரூ. 15.09 கோடியாகவும், விற்பனை ரூ. 17.63 கோடியாகவும் இருந்தது. ஆனால் 1985-ம் ஆண்டு மார்ச் முடிய ரூ. 79.93 கோடி, மற்றும் ரூ. 92.00 கோடியாக இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. நடப்பு ஆண்டிலே அது 100 கோடியாக விற்பனையையும், உற்பத்தியையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

அதுமட்டுமல்ல. இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உச்சி அவர்கள் தேயிலைத் தொழிலைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். நீலகிரியில் சிறு அளவிலே தேயிலை பயிரிடுபவர்கள் விளைவிக்கும் தேயிலைக்கு உரிய விலை கிடைக்காமல் சில தரகர்கள் முட்டுக்கட்டையாக இருந்தது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதைப்போலவே கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி, ஏறக்குறைய 12 தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அங்கே இருக்கின்ற அனைவருக்கும் வேலைவாய்ப்புக்கும், அங்கே பயிரிடுகின்ற தேயிலைக்கும் நல்ல விலை கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஏறக்குறைய 14-வது தொழிற்சாலையாக சின்னைக்கோரை என்ற இடத்தில். ஏறக்குறைய 60 லட்சம் ரூபாய் செலவில் தேயிலை தொழில் கூட்டுறவுத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு இன்றைக்கு பூர்வாங்க வேலைகள் எல்லாம் நடந்து கொண்டு இருக்கின்றன.

அதேபோல் மற்றொரு இடத்தில் பிராண்டியர் தொழில் கூட்டுறவுத் தொழிற்சாலை என்ற தொழிற்சாலையை ஏறக்குறைய 72 லட்சத்தில் அமைத்துக் கொண்டிருக்கிறோம். அது 4 மாத காலத்திற்குள்ளே தன்னுடைய உற்பத்தியைத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட 12 தொழிற்சாலைகளில் ஏறக்குறைய 1,600 பேர்கள் ஆண்களும் பெண்களுமாக தொழில் செய்கிறார்கள். அதேபோல் ஏறக்குறைய 14 ஆயிரம் விவசாயிகள், மற்றும் விவசாயக் கூலிகள் அந்தத் தேயிலைத்



தொழிற்சாலைகளின் மூலமாக பயன் அடைந்து கொண்டு இ க்கிறார்கள். ஏறக்குறைய 8,500 பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இன்றைக்கு ஏறக்குறைய 1 ஏக்கருக்கு 2 ஆயிரம் முதல் 2,500 கிலோகிராம் வரை தான் மகசூல் கிடைக்கும் என்ற நிலைமை மாறி, ஏற்பட்ட இந்த சிறப்பான விளைவுகளின் காரணமாக 3,500-லிருந்து 5,000 கிலோகிராம் வரையிலும் இன்றைக்கு தேயிலை விளைந்து கொண்டு இருக்கிறது. இன்றைக்கு கொஞ்சம் விலை, குறைவாக இருக்கிறது. சென்ற ஆண்டு 6 ரூபாய் இருந்தது, இன்றைக்கு 3, 3 ரூபாயாக இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கான காரணத்தையும் மாண்புமிகு உறுப்பினர் உச்சி அவர்களே தெரிவித்தார்கள். இங்கேயிருந்து அனுப்புகின்ற, சில அக்கிரமக்காரர்கள் தயாரித்து அனுப்புகின்ற தேயிலைகளில் மற்ற பொருட்களை வைத்து தேயிலையோடு இதையும் சேர்த்து வைத்து அனுப்புவதன் காரணமாக இன்றைக்கு நம் மீது இருந்த நம்பிக்கை கொஞ்சம் குறைந்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறோம்.

ஆனால் அதே நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, நடத்துகின்ற அந்தத் தேயிலை பேக்டரிகளுக்கு அப்படிப்பட்ட ஒரு சரிவு ஏற்படவில்லை. இன்றைக்கு அவைகள் எல்லாம் சிறப்பான முறையில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

அதேபோல் கூடலூரில் முதன்முதலாக நிறுவப்பட்ட தொழிற்சாலை ஏறக்குறைய 17 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் நிலைப்படுத்த ஒரு சிறப்பான ஏற்பாட்டை இன்றைக்குச் செய்து கொண்டு இருக்கிறோம். வேலைகள் தொடங்க இருக்கின்றன.

அடுத்து தென்னை மற்றும் தென்னை சார்ந்த தொழிலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசினார்கள். இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையிலும், தேங்காய் மட்டைகளைக் கொண்டு நார் எடுத்து, அதன் மூலம் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதிலே கேரளம் முதல் மாநிலமாக இருக்கிறது. அடுத்து கர்நாடகம், மூன்றாவதாக தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் கேரளத்தைப் பொறுத்த வரையில், இந்தத் தொழிலை ஏறக்குறைய 5 லட்சம் பேர்களுக்கு மேலாக இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது ஒரு குடிசைத் தொழிலாக இன்றைக்கு அங்கேயிருக்கிறது. அதன் காரணமாக அங்கே செய்கின்ற வேலைகள், அந்த நாரை தென்னை மட்டைகளிலிருந்து பிரித்து, ஏறக்குறைய 10 மாத காலத்திற்கு உப்பங் கழிகளிலே ஊற வைத்து, 10 மாதத்திற்குப் பிறகு அந்த 5 லட்சம் பேர்களுக்கு வேலை கொடுத்தாக வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்கள் கையினாலே அடித்து, நாராகப்

பிரித்து, இன்றைக்கு பலவிதமான பொருட்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனாலே நமக்குக் கிடைக்கிற விலை ஒரு பொருளை எடுத்துக்கொண்டால், 10 ரூபாய்க்குக் கிடைக்கக் கூடிய பொருளை நமக்கு, 6, 7 ரூபாயில் செய்து கொடுக்கக் கூடிய ஒரு முடிவுக்கு இன்றைக்கு வந்து இருக்கிறார்கள். காரணம் என்ன என்று சொன்னால், அங்கே எந்தவிதமான இயந்திரமும் பொருத்த முடியாத காரணத்தாலே, கையிலே செய்து, விற்பனை செய்வதன் காரணமாக ஏறக்குறைய 10 மாத காலம் காத்து இருக்க வேண்டிய காரணத்தால். விலை அதிகமாக இருக்கிறது என்பதை அறிந்து, தமிழகத்தைப் பொறுத்தவரையில் தஞ்சை, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் மற்றும் ஏனைய பகுதிகளிலே, தேங்காய் நார் கிடைக்கின்ற பகுதிகளிலே எல்லாம் சிறு சிறு இயந்திரங்களைக் கொண்டு ஏராளமான பேர்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுத்து, 3 நாளிலே மட்டைகளை ஊற வைத்து, அந்தச் சிறு இயந்திரங்களில் அடித்து நார் எடுத்து உடனடியாக பதப்படுத்தி, இன்றைக்குச் செய்யமுடியும் என்ற ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதற்காக பல்வேறு பணிகளை இன்றைக்கு அரசாங்கம் மேற்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 1978-ல் தமிழகத்தில் 11 இடங்களில் மட்டும் தென்னை நார் கூட்டுறவு சங்கம் இருந்தது இந்த அரசின் கொள்கையின் காரணமாக மாநிலம் முழுவதும் ஏறக்குறைய 61 சங்கங்கள் இப்போது இயங்கிக் கொண்டு வருகின்றன.

அது மட்டும் அல்லாமல் தனியார்கள் ஏறக்குறைய 347 பேர் தனியாக அவர்கள் தொழிற்சாலை வைத்து நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஏறக்குறைய 4,500 உறுப்பினர்கள் இதில் இருக்கிறார்கள் ஏறக்குறைய 7,500 பேருக்கு இது வேலைவாய்ப்பை அளித்துக்கொண்டு இருக்கிறது.

1983—84-ஆம் ஆண்டு இந்த சங்கம் உற்பத்தி செய்த மதிப்பு 33.48 லட்சம் ரூபாய் ஆகும். ஆனால் 1984—85-ல் அதனுடைய உற்பத்தி பெருகி 65.84 லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு வளர்ந்து இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.



நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நாரை பிரித்துவிட்டு அப்படியே விற்று விடுகிறார்கள். அல்லது நாரை பிரித்து கயிறு மட்டும் திரித்து இன்றைக்கு நாம் வெளியில் விற்றுக்கொண்டு இருக்கிறோம். இந்த நிலைமை மாறி நாம் எடுத்து இருக்கின்ற பல்வேறு முயற்சிகளின் காரணமாக அது பொருளாக மாற்றப்படுமானால் கேரளாவை நாம் முந்துகின்ற நிலைமை வெகு தொலைவில் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முன்னால் சொன்னது போல் அவர்கள் செய்கின்ற பொருள்கள் 10 ரூபாய் என்று சொன்னால், அதே பொருளை அதை விட தரத்தோடு நம்மால் செய்து 6 ரூபாய், 7 ரூபாய்க்கு நம் முடைய மார்க்கெட்டில் விற்கமுடியும் என்ற நிலைமையை இன்றைக்கு நாம் உருவாக்கியிருக்கிறோம். நம்முடைய பொருட்கள் எல்லாம் இன்றைக்கு அந்த நிலையில் இருந்து மாறி கயிறு திரிப்பதில் இருந்து ஒரு சில முன்னேற்றம் கண்டு ரப்பர் கலந்த நார் பொருட்கள் தயாரித்து மருத்துவ மனைகளிலும், பேருந்துகளிலும், திரை அரங்குகளிலும் மெத்தை, படுக்கை செய்வதற்கும், சுருள் கயிறு தயாரிக்கவும், மிதி அடிகள் ஏராளமாக தயாரிக்கவும், நாம் திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறோம். அதனால் நமக்கு நல்ல விற்பனைக்கான கிராக்கி இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்கான துரித நடவடிக்கையை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் தான் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பிள்ளையார்பட்டியில் முதல் கட்டமாக சுமார் 24 லட்ச ரூபாய் செலவில் ஒரு பயிற்சிக்கான கட்டிடத்தை இன்றைக்கு கட்டி முடித்து இருக்கிறோம். 2-வது கட்டமாக சுமார் 23 லட்ச ரூபாய் செலவில் மீதம் உள்ள கட்டிட பணிகளை முடிப்பதற்கு இன்றைக்கு நாம் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். தறிகளுக்கு மட்டும் ஏறக்குறைய 6 லட்ச ரூபாயும் கச்சாப் பொருட்களுக்கும் அங்கே உபகார சம்பளம் தருவதற்கும் ஏறக்குறைய 21 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

தறிகளில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு 11 மாத பயிற்சி தருகிறோம். பிசினஸ் மேனேஜர் என்ற பொறுப்பில் இருப்பவர்களுக்கு 6 மாத பயிற்சி தருகிறோம். இப்படி ஒவ்வொரு தடவையும் 60 பேருக்கு குறையாமல் நாம் பயிற்சி கொடுக்கிறோம். இதன் மூலமாக சிறுக சிறுக ஒரு நல்ல விளைவு நமக்கு ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அதை அடுத்து, பட்டுக்கோட்டையில் தாமரைக்கொட்டை என்ற கிராமத்தில் சிறந்த சுருள் கயிறு மெத்தை தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை இன்றைக்கு தொடங்குவதற்கான பணிகள்

நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. ஆக, 1985-86-ல் 13 இடங்களில் கூட்டுறவு சங்கங்களை அமைத்து மிதி அடிகள், கயிற்று பாய்கள் போன்றவைகள் தயாரிக்க இந்த அரசு முடிவு செய்து இருக்கிறது. அதற்கு 20 லட்ச ரூபாயை இந்த அரசு வழங்கியிருக்கிறது.

ஆதி திராவிடர்கள் முன்னேற்றத்திற்காக சங்கங்கள் துவக்கப்பட்டு, அதற்கான பல்வேறு பயிற்சியும் அளித்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஏழுதேசம், அதேபோல் பனங்காட்டு காலனி, தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பொட்டப்பட்டி, கோட்டூர், விராதனூர் ஆகிய பகுதியைச் சேர்ந்த சங்கங்களுக்கு இன்றைக்கு தறிகள் எல்லாம் வழங்கி ஏராளமான பெண்களுக்கு பயிற்சி கொடுத்து கொண்டு இருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் மட்டும் நல்லூரில் 100 பெண்களுக்கு, 4 1/2 ஏக்கர் நிலப்பரப்பில் இன்லறக்கு தொழில் செய்து கொள்வதற்கான ஏற்பாடு செய்து எல்லாவிதமான உதவிகளையும் இந்த அரசு செய்து கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் அங்கே 8 ரூபாய் முதல் 13 ரூபாய் வரை கூலியாக கொடுக்கப்படுகிறது.

1985-86 ஆம் ஆண்டில் அம்மணப்பாளையம், தென்காசி, வடமங்கலம், குடியாத்தம், விராலிமலை ஆகிய இடங்களில் சுருள் கயிறு உற்பத்திச் செய்யவும், மருதூர், குலசேகரப்பட்டிணம், பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் நார் பிரித்து எடுக்கவும், மரக்காணம், வடமங்கலம், தென்காசி, குலசேகரப்பட்டினம் ஆகிய இடங்களில் கூட்டுறவு சங்கங்களில் கயிறு பின்னும் பிரிவுகளை ஏற்பாடு செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு சங்கத்திற்கும் 50 ஆயிரம் ரூபாய் வீதத்தில் இன்றைக்கு 26 லட்ச ரூபாய் வழங்கியிருக்கிறோம்.

அதே போல், திண்டுக்கல்லிலே பரம்பரைத் தொழிலாக பூட்டுத் தொழில் நடந்து வருகிறது. அதிலே போதிய கவனம் செலுத்தவில்லை என்ற எண்ணம் பலருக்கும் இருந்த காரணத்தினாலே, ஏறக்குறைய 37 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நவீன இயந்திரங்களை எல்லாம் வாங்கிக் கொடுத்து, யார் வேண்டுமானாலும், தனி நபர் தொழில் செய்ய முன் வருவோர், பொதுவான இடத்திலே வந்து நவீன இயந்திரங்கள் மூலமாக பொருட்களைச் செய்து கொண்டு செல்வதற்கு, அரசு உதவி செய்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், கொடைக்கானலில், 150 பேர்களுக்கு மேல் ஜிரேனியம் பயிரிடுகிறார்கள். அங்கே தனியாக சேவை சங்கத்தை ஏற்படுத்தி, புதிய நவீன இயந்திரங்களைக் கொண்டு கூடுதலான எண்ணெயை எடுப்பதற்கும், பயிரிடுவோருக்கு சாதகமான விலைகள்



கிடைப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அந்தத் திட்டத்திற்கான செலவாக 13.88 இலட்சம் ரூபாயும், இந்த அரசு மேற்கொண்டு அதில் 1.12 இலட்சம் ரூபாயை பங்குத் தொகையாக அளித்து இருக்கிறது.

அதே போல், பால் வள உபகரணங்களுக்காக அந்தச் சங்கத்திற்கு 12.3 இலட்சம் ரூபாயை வழங்கி அந்தப் பணிகளை மேற்கொண்டு இருக்கிறது.

அதே போல், கடந்த ஆண்டு சில உறுதிமொழிகளை அப்போது இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். அந்த உறுதிமொழிகளுக்கேற்ப, குன்றக்குடி பாரதி தொழில் கூட்டுறவு குளோரைட் தொழிற்சாலை, 1984 மார்ச்சுக்குள் செயல்படும் என்ற உறுதியை அப்போது தந்தார்கள். அதே மாதிரியாக, அந்தத் தொழிற்சாலை 26-3-84 அன்று தன்னுடைய பணியைத் துவங்கி இருக்கிறது.

4 பாலிதீன் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று கடந்த முறை உறுதி சொல்லப்பட்டது. தமிழ் நாட்டிலே ஏறத்தாழ 14 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பாலிதீன் தொழிலை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கின்றன என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

தோல் நிறைவு செய்யும் சேவை சங்கங்கள் கூடிய விரைவில் பணியைத் துவங்கும் என்று முன்னால் சொல்லப்பட்டது. முன்பு ஒரு சங்கம் மட்டும்தான் வாணியம்பாடியிலே இருந்தது. 1984 ஆம் ஆண்டு மார்ச்-ல் திண்டுக்கல்லில் ஒரு சங்கமும், 1984 ஜூன்-ல் ராணிப்பேட்டையில் ஒரு சங்கமும் அமைக்கப்பட்டு தன்னுடைய சேவையை அவை துவங்கியிருக்கின்றன. பேரணாம்பட்டிலே அமைக்கப்பட இருக்கும் சங்கம் தன்னுடைய பணியை விரைவாக தொடங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் ஏராளமான ஜவ்வரிசியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொண்டு இருந்தோம், ஒரு காலத்தில். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுடைய முன்னேற்பாடான செயலினால் சேலம் மாவட்டத்தில் இன்றைக்கு 600-க்கு மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. பெரும்பகுதி அந்நியச் செலாவணியைத் தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, ஏற்படுத்தப்பட்ட அந்த ஆலைகளுக்கான நடவடிக்கைகளை எடுத்து, கூட்டுறவுச் சங்கமாக அமைத்து, தேவையான அளவுக்கு உதவியை இன்றைக்குச் செய்துவருகிறது.

அதன் மூலமாக 1½ இலட்சம் விவசாயக் குடும்பங்கள் இன்றைக்கு பயன் அடைந்து வருகின்றன. 3 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் அதன்மூலம் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

தர்மபுரி, சேலம், தென்னாற்காடு மாவட்டங்களிலே மரவள்ளிக் கிழங்கை உற்பத்தி செய்கின்ற திறன் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, சேலம் மாவட்டம் ஸ்டார்ச்சு மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவைக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் மிகக் குறைந்த அளவில், அங்கே உள்ள மரவள்ளிக் கிழங்குகள் விற்பனைக்குப் போய்க்கொண்டு இருந்தன. அந்த நிலை மாறி, ஒன்றுக்கு 4 ஆக இருக்கின்ற அளவுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னேற்பாடான ஏற்பாட்டின் காரணமாக நல்ல விலை இன்றைக்கு கிடைக்கிறது என்பதை மறந்துவிடமுடியாது.

27—2—82 அன்று தொடங்கப்பட்ட அந்தக் கூட்டுறவுச் சங்கம் இன்றைக்கு சிறப்பாக வளர்ச்சி அடைந்துள்ளது. 50 கோடி ரூபாய் அளவிலே இன்றைக்கு தன்னுடைய வியாபாரத்தை பெருக்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு மட்டும் ஏறத்தாழ 13.88 இலட்சம் லாபத்தை ஈட்டியிருக்கிறது. இன்றைக்கு, அதன் காரணமாக, தமிழ்நாட்டில் அந்த விவசாயம் பெருகி, 55 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் 17 இலட்சம் மெட்ரிக் டன் எடையுள்ள மரவள்ளிக் கிழங்கை பயிரிடுவதற்கான வகையில், நல்ல முன்னேற்றம் அடைந்து இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், தமிழ்நாட்டில், தென்னாற்காடு, கன்னியாகுமரி மாவட்டங்களில் அப்படிப்பட்ட ஆலைகள் இல்லை என்ற குறை இருக்கிறது. ஆனால், அதே நேரத்தில், தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கின்ற விவசாயிகள் அந்தக் கிழங்குகளை, சேலம் மாவட்டத்திலே இருக்கிற கூட்டுறவுச் சங்கத்திலே கொடுத்து, அந்தப் பலனை அவர்களும் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இன்றைக்கு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருட்களுடைய திறனை அதிகரிக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது.



(பிற்பகல் 1.40)

அந்த எண்ணத்தோடு தர்மபுரியிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை எற்படுத்தி ஏறத்தாழ 37 பேர்களை உறுப்பினர்களாக ஆக்கி இந்த ஆண்டு 53,719 ரூபாய் இலாபம் அடையும் அளவிற்கு ஒரு சிறப்பான பணியை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே பெரியகூடாம்பட்டியில் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தித் தொழிலுக்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் துவங்கி, பூர்வாங்கமான வேலை நடைபெற்று வருகிறது. இந்தச் சங்கம் தொடங்கி செயல்பட நல்ல வாய்ப்பு உள்ளது.

நாமக்கல்லில் ஜவ்வரிசி தொழிற்சாலை ஏற்பாடு செய்வதற்காக டாட்கோ மற்றும் அரசு பரிசீலித்து வருகிறது என்பதைப் பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலத்திலுள்ள ஸ்டார்ச் உற்பத்தியாளர்களிலே தனியார் சிலர் எப்படியாவது இந்தத் தொழிலை முடக்க வேண்டும் என்று வியாபாரப் போட்டியாக சில தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அது ஒரளவிற்கு முடிவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு மீண்டும் ஜவ்வரிசி மூட்டை ஒன்றுக்கு 300 ரூபாய், 400 ரூபாய் என்று விற்கும் அளவிற்கு இன்றைக்கு நல்ல ஏற்றத்தையும் பெற்றிருக்கிறது என்பதைப் பணிவன்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களேகூட சிலர் ஒழுங்காக, தாங்கள் பயிரிட்ட பொருட்களைக் கொடுக்காமல், தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களைக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விற்பதற்குப் பதிலாக தனிப்பட்ட முறையிலே, இன்றைக்கு விற்பனை செய்து கொண்டிருப்பது வேதனைக்குரிய விஷயமாகும். அதை இந்த மாமன்றத்தின் மூலமாக அருமை நண்பர்கள் அத்தனை பேர்களுக்கும் கூட்டுறவு இயக்கம் வளர வாழ, அந்தச் சங்கத்தின் மூலமாகக் கடன் பெற்றவர்கள், அதன் மூலமாகப் பலன் அடைந்தவர்கள், அந்தச் சங்கத்தின் மூலமாக விற்க முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீப்பெட்டித் தொழிலைப் பொறுத்தவரையில், தம்முடைய தமிழகத்தில் சிவகாசி, சாத்தூர், கோயில்பட்டி போன்ற இடங்களில் மிகச் சிறப்பாக பரம்பரை தொழிலாக இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது. அதனுடைய நிலைமைகளைத் தமிழகம் பூராவும் பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, தமிழகம் பூராவும் தீப்பெட்டி உற்பத்தியை, கிராமங்களிலே

ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு, ஏராளமாக கூட்டுறவுச்
சங்கங்களை நிறுவினார்கள். அப்படி நிறுவியதால் சேவை
சங்கங்கள் 107 சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அதைப்போல,
தொழிலாளர்களே நடத்துகின்ற தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்
ஏறக்குறைய 468 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டன. பரம்
பரையாக நடத்தப்படும் அந்த இடத்திலே இன்றைக்கும் அவை
ஒழுங்காக, சிறப்பாக, இலாபகரமாக இயங்கிக்கொண்டு இருக்
கின்றன. அவர்களுக்கு இருக்கின்ற சங்கடங்களை ஓரளவிற்குச்
சமாளிக்கிறார்கள். ஆனால், சேவை கூட்டுறவுச் சங்கம்போக,
தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்று ஏற்படுத்தப்பட்ட அந்தக்
குடிசைத் தொழில்கள் முழுக்க முழுக்க சிலயிடங்களைத் தவிர.
ஏறக்குறைய 47 சங்கங்களைத் தவிர, மற்ற அனைத்தும்
க்ஷீணித்துப் போகும் நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.
காரணம் என்னவென்றால், பல ஆண்டுக் காலமாகப் பழக்கப்
பட்டவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள் சிறப்பான முறையில்
வேகமான பயிற்சியைப் பெற்று, அதன்மூலம் 8 ரூபாய்,
10 ரூபாய், 18 ரூபாய் வரையில், பெறுகிறவர்கள் சின்னச்சின்ன
12 வயது, 13 வயது சிறுமிகள்கூட அந்த வருமானத்தைப்
பெறுகிறார்கள்.

ஆனால் இந்தப் பகுதியிலே பரம்பரைத் தொழிலாக
ஏற்காத, புதிதாக உள்ள பகுதிகளில் அப்படிச் செய்ய முடிகிறதா
என்றால் முடியவில்லை. கூலி குறைவாகக் கிடைப்பதால் வேறு
தொழிலுக்குப் போய், இதை விட்டு விட்டு, இந்தத் தொழில்
நசியும் அளவிற்கு இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கிறது
என்பதை நாம் அத்தனை பேரும் உணர்வோம்.

இன்றைக்குள்ள சங்கடமெல்லாம் தனியார் தீப்பெட்டித்
தொழிற்சாலைகளில் வரிகளை ஏய்த்து, எப்படி எப்படியோ
செய்கிறார்கள். ஆனால், கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகச்
செய்யும்பொழுது மிகப் பெரிய சுமையாக இருப்பது கலால் வரி
என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அந்தக் கலால் வரியின்
காரணமாகச் சில சங்கங்கள் இன்றைக்குத் தங்களுடைய பணியை
ஒழுங்காகச் செய்ய முடியாமல் தடைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்
கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

ஆனால் அதே நேரத்திலே புதிதாக ஏறக்குறைய 22 இடங்
களிலே தாட்கோவினுடைய உதவியோடு ஆதி திராவிட
மக்களுக்குத் தீப்பெட்டித் தொழிலைப் புது முறையிலே வேகமாகச்
செய்வதற்குண்டான பயிற்சியை அளித்து, ஏறக்குறைய 22 இடங்
களிலே சங்கங்களை அமைத்து, இன்றைக்கு எட்டையாபுரம்,
தூத்துக்குடி பகுதிகளிலே ஆரம்பித்திருக்கிறோம். இதில் உறுப்
பினர்களாக உள்ள 572 பேர்களில், 336 பேர்களுக்குப் பயிற்சி
அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அத்தனை பேர்களும் சிறப்பாகப்



பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. இந்தச்
சங்கங்கள் ஓரளவிற்கு நல்ல முறையில் இயங்குவதற்காக தாட்கோ
வின் மூலம் ஏறக்குறைய 2 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் பெற்று
அவர்களுக்குக் கொடுக்க இருக்கிறோம்.

அதே நேரத்தில் அப்படிப்பட்ட பயிற்சி இல்லாத குமரி
மாவட்டத்தைச் சேர்ந்த தக்கலை என்ற ஊரிலே மிகச் சிறப்பாகத்
தீப்பெட்டித் தொழிற்சாலை நடக்கிறது. அதற்குக் காரணம், பரம்
பரை இல்லாத பகுதியாக இருந்தாலும்கூட, அங்கே யாரும்
தனியார்கள் தொழில் நடத்தவில்லை.

கொடுக்கின்ற
தொழிலை அப்படி நடத்தாத காரணத்தால், ஒழுங்காக
மூலப்பொருள், அந்தச் சங்கம் சம்பந்தப்பட்டவர்களால் வழங்கப்படுகிற
உபயோகிக்கப் படவில்லை. சேவை சங்கத்திலே உபயோகப்படுத்தி
மூலப்பொருளை, சில இடங்களிலே கொஞ்சமாக சங்கங்
விட்டு, மிச்சப்படுத்தி, அதை விற்கின்ற தன்மை மற்ற இல்லை.
களிலே இருக்கின்றன. ஆனால், தக்கலையிலே அப்படி இன்றைக்
பரம்பரைத் தொழிலாளர்களாக இல்லாததனாலே, அது அதைக்
குச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் சில
கண்டிப்பாக வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்திற்குள்ளே செய்ய
கட்டுதிட்டங்களை வைத்துக் கொண்டு இப்படித்தான் எடுத்துக்
வேண்டுமென்று சொல்லி, மிகுந்த அளவுக்கு அக்கறை மிக ஒழுங்காக
கொண்டதன் காரணமாக, சிறந்த இலாபத்தோடு குச்சியும்
நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதி, காரணத்தால்,
பெட்டியும் தயார் செய்கின்ற பகுதியாக இருக்கிற சீதோஷ்ண நிலை
சுலபமாக மூலப் பொருள் கிடைக்கிறது. நல்ல ஒழுங்காக நடை
இருக்கிற காரணத்தாலே. அந்தப் பகுதியிலே
பெறுகிறது.

அதேபோல ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலே கூட மிகக் கண்டிப்
பான சொசைட்டி. அதே நேரத்திலே அந்தக் குச்சிகளுக்கு
மிகுந்த அளவிலே, கஞ்சத்தனம் இல்லாமல், எந்த அளவுக்கு
மருந்தை செலவிட வேண்டுமோ அந்த அளவுக்குத் தடவிச் செய்
கின்ற காரணத்தாலே நல்ல இலாபத்தோடு சிறப்பாக இன்றைக்கு
அங்கேயும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்குத்
தீப்பெட்டித் தொழிலை நன்றாக வளர்ப்பதற்கு வாய்ப்பு இருந்
தாலும்கூட, கலால் வரிச் சலுகை நமக்குக் கிடைக்குமானால், மிகச்
சிறப்பாக இருக்கும். அந்தக் கலால் வரிச் சலுகை சிறு தீப்
பெட்டித் தொழில் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்
கிறது. பெரிய தொழில் செய்பவர்கள் சிறு தீப் பெட்டி உற்பத்தி
யாளர்கள் செய்வது போல் காட்டி, அதன் மூலமாக நமக்குப்
போட்டி ஏற்படுத்தி, நம்முடைய தீப் பெட்டிகளுக்கு ஏற்படுகின்ற
கிராக்கிகளை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பெரிய,
பெரிய கம்பெனிகள், டிரேட் மார்க் வைத்திருக்கிற கம்பெனிகள்

போட்டியாக இருக்கிற காரணத்தால், அதிலே சிக்கல் இருக்கிறது. ஆகவே, மைய அரசை அணுகி, அப்படிப்பட்ட கலாம் வரிச் சலுகையைக் கூட்டுறவு முறையிலே நடைபெறுகின்ற சங்கங்களுக்கு மட்டும் இருக்கவேண்டுமென்று முன்னாலே இருந்த அந்தச் சட்டத் தின்படி சலுலககளைப் பெற வேண்டுமென்று, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழிற்சாலைகளுக்கு என்று தனியாக ஒரு லேபிள் இருக்கிறது. வசதி படைத்தவர்கள், தவறாகப் பயன்படுத்தி, நமக்குப் போட்டியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு அளவுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டுமென்ற அந்த லேபிள் கூட்டுறவு சொசைட்டிக்கு மட்டும் இருக்க வேண்டுமென்று சொல்லி விட்டால், ஏறக்குறைய 1 மாதத்தில், எந்த எந்தச் சங்கங்களை இன்றைக்கு மூடிவிட்டோமோ, அந்தச் சங்கங்கள் கூட மீண்டும் உயிர்பெற்று எழுகின்ற சூழ்நிலையை நம்மாலே உருவாக்க முடியும். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறன்.

அடுத்து, சிறு தொழில்களை வளர்ப்பதற்கும் அவர்களுக்கு உதவுவதற்கும் சிட்கோ எ ற நிறுவனத்தைத் தொடங்கி சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக, வாடகை அடிப்படையிலே கொடுத்துக் கொண்டிருந்த நிலங்களை யெல்லாம் பகுதி பகுதியாக பணத்தைக் கொடுத்து, அவர்கள் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டுமென்று மாற்றி இன்றைக்குச் சிறப்பான முறையிலே ஏற்பாடு செய்திருக்கிறோம்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டில், சிட்கோ நிறுவனம் 783 இடங்களிலே தொழில் கூடங்களைக் கட்டி இருக்கிறது.

அதேபோல், 1269 தொழில் கூடங்கதைத் தவணை முறையில் வழங்கும் அடிப்படையில் கட்டி இருக்கிறது.

மேலும் 983 மேம்படுத்தப்பட்ட மனைகளை பல்வேறு தொழிற் பேட்டைகளில் ஏற்பாடு செய்து, அதனை தொழில் செய்பவர் களுக்கு ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக மட்டும் ஏறக்குறைய 60,000 பேர்கள் இன்றைக்கு வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

அதுமட்டுமின்றி, சின்னஞ்சிறு தொழிற்கூடங்கள் வேண்டு மென்பதற்காக, அவர்களுக்கு 102 இடங்களில் 1674 சின்னஞ்சிறு 'டைனி ஷெட்ஸ்' தொழிற் கூடங்களை இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக, வேலை செய்ய முடிந்த தனிநபர்கள் ஏறக்குறைய 10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துக்கொண்டிருக்கிறோம்.



திருப்போருருக்கு அருகாமையில் உள்ள '' ஆலத்தூரில் '' மருந்துகள் தயாரிப்பதற்கென ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தி, 12 தொழிற்கூடங்களைக் கட்டி முடித்துள்ளோம். 13 மேம்படுத்தப் பட்ட மனைகள் ஒதுக்கீடு செய்ய தயார் செய்யப்பட்டுள்ளது. இவை போக, மேலும் 23 தொழிற்கூடங்களும், 27 மேம்படுத்தப் பட்ட மனைகளும், இரண்டாவது மூன்றாவது கட்டங்களில் ஒதுக்கித் தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

(முற்பகல் 1—50)

சிட்கோவினுடைய மற்றொரு சிறப்பு அம்சம் என்னவென் றால் மத்திய, மாநில அரசுகள் தருகின்ற மானியங்களைப் பெற்றுக் கொடுக்கிறது.

மத்திய அரசு பின்தங்கிய பகுதிகளை ஏ, பி, சி என்று மூன்று பகுதிகளாகப் பிரித்து மானியம் வழங்குகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏ—பிரிவு இடையாது. பி—பிரிவுக்கு 15 சதவீதம் மானியமும், சி—பிரிவுக்கு 10 சதவீதம் மானியமும் வழங்குகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பி—பிரிவில் ஏறத்தாழ 30 வட்டங்களையும், சி—பிரிவில் 62 வட்டங்களையும் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த சலுகைகள் மூலமாக ஏறத்தாழ 46,000 பேர் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். மத்திய உதவித் தொகையைப் பெறுவதிலே மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு தான் இன்றைக்கும் முதலிடம் வகிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசின் முதலீடு மானியம் 1975 முதல் 1985 வரையி லான 11 ஆண்டு காலத்தில் 3,222 சிறு தொழில்களுக்கு சுமார் 934 இலட்சம் ரூபாய் பட்டுவாடா செய்திருக்கிறோம். இந்த உதவி யின் காரணமாக ஏறத்தாழ 46,000 பேர் வேலைவாய்ப்பு பெற்றி ருக்கிறார்கள். 1985—86 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூ. 150 இலட்சம் ஒதுக்கப்பட்டு, வழங்கப்படும் என்று இன்றைக்கு அதை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 33 வட்டங்களை இப்படி பின்தங்கிய வட்டங்களாக அறிவித்திருக்கி றோம். அதன் மூலம் அங்கே தொழில் தொடங்க 15 சதவீதம் மானியத்தை மாநில அரசிடமிருந்து சிட்கோ நிறுவனம் பெற்றுத் தருகிறது. 1981 முதல் 1985 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு காலத்தில் 747 சிறு தொழில்களை தொடங்கி ஏறத்தாழ 182 இலட்சம் ரூபாயை மாநில அரசு மானியமாக வழங்கியிருக்கிறது. அதன் மூலம் 6,000 பேர் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

திரு. ஆனூர் பு. கோ ஜகதீசன்) [1985 ஜூலை 4

அது மட்டுமல்ல. மின்சார சலுகையையும் சிட்கோ வழங்குகிறது. தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் தொழில் தொடங்கினாலும் முதல் மூன்று ஆண்டுகளுக்கு இந்த சலுகை வழங்கப்படுகிறது. முதல் ஆண்டில் 30 சதவீதமும் இரண்டாவது ஆண்டில் 20 சதவீதமும், 3-வது ஆண்டில் 10 சதவீதமும் என்ற வகையில் முதல் மூன்று வருடங்களுக்கு மின்சாரக் கட்டணத்திலிருந்து சலுகை பெற்றுக்கொடுத்து, அந்தப் பணத்தை சிட்கோ இன்றைக்கு ஏற்று, வழங்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொழில்கள்—ஆட்டோமோபைல்ஸ், துணைத் தொழில்கள், மருந்து உற்பத்தித் தொழில்கள், மின் அணுத்தொழில்கள், சூரிய சக்தியைப் பயன்படுத்தும் தொழில்கள் ஆகிய இந்த நான்கு வகைத் தொழில்களுக்கும்—உருவாக்கப்பட்ட மூலதனத்தில், 10 சதவீதம் அல்லது சம்பந்தப்பட்ட தொழிலில் அமர்த்தப்பட்ட ஒரு தொழிலாளருக்கு 20,000 ரூபாய் என்ற விகிதத்தில் 10 இலட்சத்திற்கு மேற்படாமல் எந்த இடத்தில் தொழில் தொடங்கினாலும், சிட்கோ மானியம் வழங்கிவருகிறது. இது இந்த அரசின் புதிய திட்டம். தன் மூலம் 6 சிறு தொழில்கள் 7.72 இலட்சம் ரூபாய் மானியம் பெற்று பலன் அடைந்திருக்கின்றன.

அதோடு செய்யப்படுகிற பொருள்கள் விற்பனை ஆகாமல் இருந்த குறையைப் போக்க இன்றைக்கு சிட்கோ நிறுவனம் வேகமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை தடையில்லாமல் விற்பனை செய்ய சிட்கோ 1979 ஆம் ஆண்டு முதல், முயற்சி செய்து வருகிறது. இதன் மூலம் 1978–79 ஆம் ஆண்டில் பெற்றிருந்த ஆர்டர்கள் ஏறத்தாழ 26.3 இலட்சம் ரூபாய். கடந்த 7 ஆண்டு காலத்தில் படிப்படியாக வளர்ந்து, 1985–86 ஆம் ஆண்டில் அது ஏறத்தாழ 1,200 இலட்சம் ரூபாய்க்கான ஆர்டர்களை எதிர் பார்க்கிறது. அந்த அளவுக்கு வேகமாக சிட்கோ நிறுவனம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. மேலும் பல்வேறு நிறுவனங்கள் தொழில் செய்வதற்கு உதவி செய்துகொண்டிருக்கிறது.

அதன் அடிப்படையில் முதலமைச்சர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் பல்பொடி தயாரிக்கும் ஏறத்தாழ 47 தொழில் அமைப்புகள் அதன்மூலம் பயன்பெறுகின்றன. அதன்மூலம் ஏறத்தாழ 1,500 பேர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அதைப் போன்று குழந்தைகள் சத்துணவு மையங்களுக்கு சுமார் 13 இலட்சம் ரூபாய்க்கான கல்வித் துணைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 14 சிறுதொழில்கள் அதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. கல்வித் துறைக்கு ஆய்வுக்கூட சாதனங்கள், கரும்பலகைகள், பென்சில்கள் செய்து கொடுக்க சில தொழில் அமைப்புகளை ஏற்பத்தி, சுமார் 9 இலட்சம் ரூபாய்க்கான ஆர்டர்களைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது.



1985 ஜூலை 4] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்.]

அதைப்போலவே சமூக நலத்துறைக்கு ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாய்க்கும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஏறத்தாழ 410 இலட்சத்திற்கும் ஆர்டர்களைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. இப்படி அரசுத் துறைகளுக்குத் தேவைப்படுகிற பொருள்களை, என்ன என்ன தேவை இருக்கிறதோ, அதை சின்னஞ்சிறு தொழில்கள் மூலமாக இன்றைக்கு நிறைவேற்றி, அதற்கான உத்தரவுகளை வழங்கியிருக்கிறது. அதன் மூலம் செய்யப்படுகிற பொருள்கள் விலை ஆகவில்லை என்ற பேச்சுக்கு இடமில்லாமல் செய்யப்படுகிற பொருள்கள் எல்லாம் அரசு நிறுவனங்களுக்கும் பிற நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகிற முறையில் ஒழுங்காக தன்னுடைய பணியைச் செய்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1985–86 ஆம் ஆண்டில் டீ.ஜி., எஸ்.&டீ. விற்பனையாக ஏறக்குறைய 75 இலட்சம் ரூபாயை, இன்றைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலமாக சிட்கோவிடம் ஏறக்குறைய 1,300 சிறுதொழில்கள் பதிவு செய்யப்பட்டு பலன் அடைந்து வருகின்றன. ஏறக்குறைய 952 பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

அதேபோல வட்டியில்லாத விற்பனைக் கடன் என்ற அடிப்படையில் 1984-85 ஆம் ஆண்டு முடிய, 161 தொழில்களுக்கான 115 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 109 சிறு தொழில்களுக்கு 86.01 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

புதிய தொழில்களைத் தொடங்குவது எவ்வளவு அவசியமோ அதேபோல் நலிந்த தொழில்களுக்கும் உதவ வேண்டும் என்ற அடிப்படையில் சிட்கோ நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. வழக்கமாக ஒரு நலிந்த தொழிற் பிரிவு மீண்டும் புத்துயிர் பெற வேண்டுமென்றால், வங்கியிலே கடன் கேட்டால் முன்பணமாக ஏதாவது கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நலிந்த தொழில் முனைவோரால் அவ்வாறு செய்ய முடியாது. அவ்வாறு கட்ட வேண்டிய முன்பணத்தைக் கூட இன்றைக்கு இந்த நிறுவனம் 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரையில் தானே ஏற்றுக் கொண்டு, நலிந்த பிரிவுகளுக்கெல்லாம் வழங்கிக் கொண்டிருக்கின்றது. அதன் மூலமாக இன்றைக்கு 45 தொழில் பிரிவுகளுக்கு 71.93 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கியிருக்கின்றது, மிகக் குறைந்த வட்டியிலே.

மூலப் பொருட்களைப் பெற முடியாமல், சில சிறு தொழில்கள் சிரமப்பட்டுக்கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு இரும்பு, எஃகு, சுட்ட கரி, தீப்பெட்டி, மெழுகு, பேரகன் மெழுகு, பொட்டாசியம் க்ளோரைடு, துத்தநாகம், ஈயம் போன்ற பொருட்களை எல்லாம் இந்த அரசு சேமித்து தேவையான அளவுக்கு வற்புறுத்திப் பெற்று, இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த முறையில் இன்றைக்கு ஏறக்குறைய சிறு தொழில்களுக்குத் தேவைப்படுகிற பல்வேறு பொருட்களை ஒழுங்காகப் பெற்று வழங்குவதன் மூலமாக இன்றைக்குத் தட்டுப்பாடே இல்லாமல், அடுத்த ஆண்டு எந்தச் சிறுதொழிலும் இதனால் தடங்கல் ஏற்பட்டது என்று சொல்ல முடியாத அளவுக்கு சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. 1984—85-ல் மட்டும் சுமார் 19 கோடி ரூபாய் மதிப்புள்ள, 37,000 டன் மூலப்பொருட்கள் வினியோகிக்கப்பட்டன. இந்த ஆண்டு 25 கோடி மதிப்புள்ள 42,500 டன் மூலப்பொருட்களை வழங்க ஏற்பாடுகளை, அந்த சிட்கோ நிறுவனம் செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொத்தத்தில் சிட்கோ நிறுவனம் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனுடைய இலாபம் 1984—85 ஆம் ஆண்டு 48.07 இலட்சம்.

அடுத்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம். இதன் மூலமாக 30 இலட்சம் ரூபாய் வரையில் அதிகபட்சமாக இன்றைக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த நிறுவனத்தின் மூலமாக சுமார் 1,87,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு இடைத்திருக்கும் என்று நம்புகிறேன். டிக் தொடங்கப்பட்டது, 1949 ஆம் ஆண்டில். 1978 ஆம் ஆண்டு வரையில் உள்ள ஏறத்தாழ 30 ஆண்டுக் காலத்தில் ஏறக்குறைய 74 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1978—79 முதல் கடந்த 6 ஆண்டுக் காலத்தில் அவர்களுடைய பணி சிறப்பாக இருந்ததன் காரணத்தால் 233 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் பெற்று 158 கோடி ரூபாயை இன்றைக்கு எந்தெந்தத் தொழிலைத் தொடங்க முன் வருகிறார்களோ, அந்தத் தொழில்களுக்கெல்லாம் வழங்கியிருக்கிறோம் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். டிக் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அது ஆரம்பிக்கப்பட்டபோது நடுத்தர சிறு தொழில்களுக்குக் கடன் கொடுப்பதற்காகத்தான் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். ஆனால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் நடுத்தரத் தொழில்களைவிட சிறு தொழில்களுக்குத் தான் ஏராளமாக உதவி செய்து இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிட முடியாது. அந்த அளவில் இன்றைக்கு இந்த 7 ஆண்டுக் காலத்தில் ஒப்புதல் கொடுக்கப்பட்ட 301 கோடி ரூபாயில் 246.63 கோடியை சிறு தொழில்களுக்குக் கொடுத்திருக்கின்றது. சராசரியாக 90 சதவீதம் கடன் உதவியைச் சிறு தொழில்களுக்குச் செய்து, சிறு தொழில்கள் வேகமாக முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தோடு அது பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. அந்தக் கழகமும் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. 1983—84 ஆம் ஆண்டு அதனுடைய இலாபம் 133 இலட்சமாகும். தொழில் நடத்துவதற்காக பல்வேறு பணிகளை அது மேலும் செய்கின்றது.



(பிற்பகல் 2—00)

போக்குவரத்து வாகனங்கள் வாங்குவதற்கும், ஜெனரேட்டர்கள் வாங்குவதற்கும், இயந்திர படகுகள் வாங்குவதற்கும், ஓட்டல்கள் வைப்பதற்கும் மிகக் குறைந்த அளவு வட்டி விகிதத்திலே கடன் கொடுத்து வருகிறது. மேலும் ஆதிதிராவிட மக்களுக்கும், மலை வாழ் மக்களுக்கும் 10 1/4 சதவீதத்தில் குறைந்த வட்டியில் கடன் உதவி அளிக்கிறது. அதுவும் கொடுக்கின்ற கடனை மிக விரைவாக வழங்க வேண்டும் என்பதற்காக 45 நாட்கள் கால அளவுக்குள் முடிவு செய்யப்பட்டு, கடன் உதவி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஒரு இலட்சம் ரூபாய் அளவிலான கடன் மனுக்களை மாவட்ட அளவிலான கிளை மேலாளர்களும், 2 1/2 இலட்சம் ரூபாய் அளவிலான கடன் மனுக்களை ரீஜனல் மேலாளர்களும் பரிசீலனை செய்து, 45 நாட்களுக்குள்ளாக, சம்பந்தப்பட்ட மனுக்களைப் போட்டவர்கள் வரவில்லை என்று சொன்னால், இரண்டு மூன்று முறைகள் தொடர்ந்து நோட்டீஸ் அனுப்பி, எப்படியாவது ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக, அவர்கள் தரவேண்டிய சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை வாங்கி, முன் பணம் கட்ட வேண்டியவர்களுக்கு கட்டச் செய்து, என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளுக்கெல்லாம் உடனிருந்து செய்து கொடுத்து, எப்படியாவது அவர்கள் தொழிலை தொடங்க டும் என்பதற்காக, தேவையான உதவிகளையெல் லாம் செய்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, நிலுவையிலே இருந்த விண்ணப்பங்கள் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகின்றன. 31—3—1982-ல் 1,868 மனுக்கள் பைசல் ஆகாமல் இருந்தது, இன்றைக்குப் படிப்படியாக குறைந்து 31—3—1985-ல் 504 மனுக்கள் தான் நிலுவையிலே இருக்கிறது என்ற அளவிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அடுத்து 2 மாதங்களில் 60 நாட்களுக்குள்ளாக 160 மனுக்களை பரிசீலனை செய்து முடித்திருக்கிறார்கள்.

சில நேரங்களில் அந்த மனுக்களைப் போட்டவர்கள் திரும்ப வருவதே இல்லை, அல்லது முன் பணம் கட்டுவது இல்லை. அதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகளைக் கொடுப்பது இல்லை. அதுதான் இப்படி கொஞ்சம் அளவிற்குக் கூட நிலுவைகள் இருப்பதற்குக் காரணம். ஆகவே எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு முன்னுரிமை கொடுத்து, கடன்களைக் கொடுத்து, எப்படியாவது அவர்களை தொழில் துவங்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

1—4—85 முதல் 30—4—85 முடிய கடந்த 30 நாட்களில் வரப்பெற்ற மனுக்கள் 396. அதில் அந்த 30 நாட்களுக்குள்ளேயே 146 மனுக்களை பரிசீலனை செய்து முடித்து,

ஒப்புதலையும் கொடுத்து, கடன் வழங்குவதற்கு தயார் நிலையிலே வைத்திருக்கிறார்கள். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் வந்தார்களா என்று சொன்னால், இன்னும் வரவில்லை. எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கடன் கொடுத்து, எல்லா வழிவகைகளையும் செய்து கொடுத்து, எப்படியாவது அவர்கள் தொழிலை தொடங்க வேண்டும் என்பதற்கு ஊக்கப் படுத்தினால் கூட, சில நேரங்களில் விண்ணப்பம் செய்தவர்கள் சோர்வு அடைந்திருக்கிற காரணத்தினால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகிறது.

அத்தோடு, அவர்கள் மேலும் அபிவிருத்திப் பணிகளைச் செய்ய வேண்டும் என்றாலும் கூட, அதற்குரிய வகையில் என்னென்ன செய்ய வேண்டுமோ, அந்த ஏற்பாடுகளை அந்த டிக் நிறுவனம் செய்துக் கொடுக்கிறது. அந்த வகையில் 1985–86ஆம் ஆண்டிலே மட்டும் ஏறக்குறைய 60 கோடி ரூபாயை வினியோகிக்கவும், அவர்களிடமிருந்து அந்த வகையிலே பயன்படுத்தப்பட்ட பிறகு, 38 கோடி ரூபாயை, இந்த ஆண்டிலேயே வசூலிக்கவும் திட்டமிட்டிருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்த ஆண்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், நிர்வாக அமைப்பை ஏற்று, உலக வங்கியின் நிதி உதவியோடு சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடைய துணையோடு, புற நகர்ப்பகுதிகளிலே மேம்பாடு திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறது. இத் திட்டத்தின் முதல் நிலை 1977ஆம் ஆண்டு முதல் நிலையை ஏற்று, அன்றைக்கு சிட்கோ நிறுவனம், அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் போன்ற இடங்களில் தொழிற்கூடங்கள் கட்டி, அக்கூடங்கள் ஒதுக்கப்பட்ட தொழில் கைவினைஞர்களுக்கு இயந்திரம் வாங்குவதற்கு நிதி உதவி செய்வதற்கான முறையிலே ஏற்பாடு செய்திருக்கிறது. அந்த வகையில் அதற்கான மொத்த மதிப்பீடு ஏறத்தாழ 218 இலட்சம் ரூபாய்.

அடுத்து நடப்பு நிதி ஆண்டிலேயே இத்திட்டத்தின் இரண்டாவது நிலையாக பாடி, முகப்பேர் ஆகிய பகுதிகளில் 150 தொழில் நிறுவனங்களை மேம்படுத்த, நிலங்கள் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இதற்காக 1985–86ஆம் ஆண்டிலே 2 கோடி ரூபாயை ஒதுக்க திட்டமிட்டிருக்கிறது. அடுத்து தோல் வளர்ச்சி நிறுவனத்தைப் பற்றி இங்கே பலபேர் பேசினார்கள். தோல் வளர்ச்சியைப் பொறுத்த மட்டில், நம்முடைய தமிழகம் சிறப்பாக முன்னேறி இருக்கிறது. அந்த தோல் தொழிற்சாலையைப் பொறுத்த மட்டில் நம்முடைய உற்பத்தி 70 சதவீதம். அதே போல ஏற்றுமதியும் 65 விழுக்காட்டை எஞ்சியிருக்கிறது. ஏறத்தாழ 1 லட்சம் பேர்கள் அந்தத் தோல் தொழிலைச் செய்யக் கூடிய கைவினைஞர்கள்—ஆட்கள்—நம்முடைய நாட்டிலே இருக்கிறார்கள்.





ஆனாலும் கூட ஏறக்குறைய 20 சதவீதம் மட்டுமே தமிழ் நாட்டிலிருந்து தோல் பொருள்களை நாம் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். நமக்கு ஏதாவது தோல் சம்பந்தப்பட்ட பொருள்கள் வேண்டுமென்றாலும் கூட அதை வெளி மாநிலங்களிலிருந்து, கான்பூர் போன்ற இடங்களிலிருந்து இன்றைக்கும் தருவிக்கிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அப்படிப் பட்ட நிலைமை மாறவேண்டும் என்பதற்காக பலவேறு ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது.

அதற்காக இன்றைக்கு தனியாக ''டால்கோ'' என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி, அதற்கு ஒரு தலைவரையும் ஏற்படுத்தி இன்றைக்கு அந்தப் பணி ஒழுங்காக நடைபெற வேண்டும் என்பதற்காக எல்லா ஏற்பாட்டையும் அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

1985–86ஆம் ஆண்டில் பெரம்பூர், பல்லாவரம் ஆகிய இரு இடங்களில் தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு உற்பத்திக் கூடங்களை ஏற்படுத்தவும், திண்டுக்கல், ஈரோடு, ஆகிய இடங்களில் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் தயாரிக்க தேவைப்படும் மூலப் பொருட்களுக்கான வங்கிகள் ஏற்படுத்தவும், சென்னை, திண்டுக்கல், இராணிப்பேட்டை, ஈரோடு, வாணியம் பாடி ஆகிய ஐந்து இடங்களில் பெண்களுக்கான தோல் பொருட் கள் தயாரிக்கும் பயிற்சி நிலையங்களை அமைக்கவும், மேட்டுப் பாளையம், பம்மல், வேலூர், ஈரோடு, திண்டுக்கல், திருச்சி, வாணியம்பாடி ஆகிய இடங்களில் தோல் பொருட்கள் காலணி களுக்கான பொது நோக்கு சேவை மையங்கள் ஏற்படுத்தவும், பல்லாவரம், திருச்சி ஆகிய இடங்களில் தோல் பதனிடும் பொது நோக்கு சேவை மையங்களை அமைக்கவும், சுமார் 470 இலட்சம் மூலதனச் செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டு, பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். இதிலே ஏறக்குறைய 7,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அந்த 7,000 பேர்களில் ஏறக்குறைய 50 விழுக்காடு தோல் தொழில் கைவினைஞர்களாக ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். மேலும் அதன் மூலமாக 700 பெண்களுக்கு பூர்ணமாக பயிற்சி தருவதற்கான ஏற்பாட்டையும் செய்திருக்கிறது.

அடுத்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுநீர் மிகுந்த சுகாதாரக் கேடாக இருக்கிறது என்பதைப் பற்றி இங்கே தெளிவாக தெரிவித்தார்கள். அதற்காக பலவிதமான பணிகளை இன்றைக்கு நாம் மேற்கொண்டிருக்கிறோம். 'டால்கோ' என்ற நிறுவனம் இரண்டு கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆலோசனைப்படி வாணியம்பாடியில் தோல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை கூட்டுறவு

முறையில் நிறுவ இருக்கிறது. அதற்கான எல்லா பணிகளும் ஏற்பாடும் செய்யப்பட்டு இன்றைக்கு வெகு வேகமாக தொடங்கப் பட்டு நடந்து வருகின்றன.

அதன் மூலமாக வாணியம்பாடியில் இருக்கின்ற 47 தொழிற் சாலைகள் பலனடையக்கூடிய நிலல இருக்கிறது. அதே போல இந்த தோல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம இந்திய துணைக் கண்டத்திலே முதலாவது என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டத்தை மத்திய அரசுக்குச் சொந்தமான தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி கழகமும், மத்திய தண்ணீர் மாசகற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியமும் வெகுவாகப் பாராட்டி இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், அதனுடைய செலவில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதாக அங்கீகரித்திருக்கிறது. மைய அரசின் சுற்றுப்புற சுகாதார இலாகா எந்தெந்த வகையில் தங்களால் இந்தத் திட்டத் திற்கு உதவலாம், உதவமுடியும் என்று ஆராய ஒரு குழுவை நியமித்து இருக்கிறது. அந்தவகையில் இந்தத் திட்டம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு, முடியுமானால் மற்ற இடங்களுக்கும் இதனை விரிவாக்குவதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய முடி யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்தைப் பொறுத்த வரையில் 16 இடங்களில் அதன் மையங்கள் இருக்கின்றன. ஏற்கனவே 19 இடங்களில் விற்பனைக் கூடங்களை வைத்திருக் கிறோம். இன்றைக்கு அதனுடைய விற்பனை ஓரளவிற்கு சிறப்பாக இருக்கிறது. இங்கே பேசிய அருமை உறுப்பினர்கள் பலபேர்கள் அதன் விற்பனையில் லாபம் கொஞ்சம் குறைந்து வருகிறது என்று சொன்னார்கள். ஆனால் அது சரியானதல்ல. ஏறக்குறைய இந்த ஆண்டு 2·3 லட்சம் ரூபாய் அதன் மூலமாக லாபம் கிடைத்திருக்கிறது. ஆனாலும் கூட இன்றைக்கு லாபம் மட்டும் வரவேண்டுமென்று நாம் நினைப்போமானால், சில தொழில் பிரிவுகளை, நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருப்பவைகளை நாம் மூடிவிட்டால் நமக்கு ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய்க்கு லாபம் கிடைக்கும். இந்த அரசாங்கத்தின் எண்ணமெல்லாம் அந்தக் கைவினைஞர்கள் அத்தனைப் பேருக்கும் வேலைக் கொடுக்க வேண்டும் என்பது தான். வேலை இல்லாவிட்டாலும் கூட எதையாவது வேலை கொடுத்து அவர்களுக்கு சம்பளத்தை கொடுக்கவேண்டுமென்று தான் இன்றைக்கு செயல்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். அதன் காரணத்தால் பல இடங்களில் வேலை இல்லையென்றாலும் கைவினைஞர்களை விட்டு விட முடியாது என்ற நிலையில் இருக்கிறோம். ஒரு வாரத்திற்கு முன்னால் தஞ்சாவூருக்குப் போய் பார்த்தேன். அங்கே வாத்திய கருவிகள் செய்யும் 20, 30 கைவினைஞர்கள் இருக்கிறார்கள். அந்த வாத்தியக் கருவிகள் விலை போகவில்லை. அதனால் அவர்களை எப்படி விட்டுவிட முடியும்? ஆகவே அவர்களை காப்பாற்றும் வகையில் அவர்களுக்கும் சம்பளத்தைக் கொடுத்துக் கொண்டு இந்தக் கழகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.





(பிற்பகல் 2.10)

அதேபோல் தேர் செய்கின்ற ரதம் உற்பத்தி செய்கின்ற நிலையம் நாகர்கோவிலில் இருக்கிறது. இன்றைக்கு யாரும் ரத உற்பத்தி செய்வதற்கு முன் வருவதில்லை. இரண்டே இரண்டு ஆர்டர்கள் கிடைத்தன. அந்த ஆர்டர்கள் மூலமாக ஏறக்குறைய 57 மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்திருக்கிறோம். பல பேர்கள் அந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வாய்ப்பு கொடுத்தாக வேண்டும். அவர்களுக்கு எல்லாம் ஊதியத்தைக் கொடுத்தாக வேண்டும். அதற்காக அந்தத் தொழிலைச் செய்தாக வேண்டுமென்ற நிலையில், இன்றைக்கு நஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாலும் கூட அதைப்பற்றிக் கவலைப் படாமல், அந்தத் தொழிலை நாம் செய்யவேண்டிய ஒரு கட்டா யத்தில் இருக்கிறோம். இந்த ஆண்டு கூட 2.35 லட்சம் ரூபாய் நமக்கு லாபம் கிடைத்து இருப்பதைப் பற்றி மகிழ்ச்சியைத் தெரி வித்துக்கொள்கிறேன். அதற்காக பலவிதமான பணிகளை இன்றைக்கு இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு இருக்கிறது என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பட்டு உற்பத்தியைப் பற்றி, அதனுடைய வளர்ச்சி யைப்பற்றி இங்கே பல உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். பட்டு உற்பத்தியைப் பொறுத்தவரையில் நம்முடைய மொழி வழி மாநிலம் பிரிவதற்கு முன்னால் தமிழகம் ஒரு உயர்ந்த நிலையிலே இருந்தது. கொள்ளேகால் நம்முடைய பகுதியிலே இருந்து மைசூருக்கு மாற்றப்படுகின்ற வரையில் பட்டு உற்பத்தியிலே சிறந்த மாநிலமாக இருந்தோம். ஆனால் மாற்றப்பட்டதற்குப் பிறகு 1956-க்குப் பிறகு நம்முடைய ஹோசூரிலே தாளவாடி என்ற பகுதியிலே அரசு பண்ணைகளிலே ஒரு 500 ஏக்கர் பரப்பளவிலே முசுக்கொட்டை பயிரிட்டு, பட்டு உற்பத்தியைச் செய்து கொண்டி ருந்தோம். அது இன்றைக்கு கொஞ்சம் கொஞ்சமாக முன்னுக்கு வந்த காரணத்தால் இந்த அரசு பட்டு வளர்ச்சித் துறைக்கு வேக மாக அக்கறை காட்டியதன் காரணமாக இன்றைக்கு 1979ஆம் ஆண்டு கொஞ்சம் அபிவிருத்திக்கு வந்து 21 ஏக்கரிலே முசுக் கொட்டைச் செடி பயிரிடுகின்ற நிலைமையை ஏற்படுத்தி இருக் கிறோம். ஆகவே இன்றைக்குப் பலவாறாகப் பெருகி, 21 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டது, 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் கணக்கிட்டபோது 67 ஆயிரம் ஏக்கரிலே இன்றைக்கு முசுக் கொட்டை செடிகள் பயிரிடப்படுகிறது. ஹோசூரிலே மட்டும் தான் வரும், அங்கே குளிர்ச்சியாக இருக்கின்ற இடம், தகுந்த இடம் என்ற நிலைமை எல்லாம் மாறி, அது தஞ்சையாக இருந்தாலும் சரி, அல்லது ராமநாதபுரமாக இருந்தாலும் சரி, எந்த மாவட்டமாக இருந்தாலும் அந்த முசுக்கொட்டைச் செடியை முறைப்படி வளர்த்தால் வளரும்.

இன்னும் சொல்லப்போனால் இப்படிப்பட்ட இடங்களிலே
தான் இந்த புழுக்கள் சீக்கிரமாக பட்டு உற்பத்தியைப் பெருக்கு
கிறது. ஹோசூரிலே 24, 25 நாட்களிலே அந்தப் புழு பட்டு
உற்பத்தியை ஆரம்பிக்கிறது என்றால், மற்றப் பகுதிகளிலே, ராம
நாதபுரம் போன்ற பகுதிகளிலே 21 ஆம் நாள் தன்னுடைய
உடலைச் சுற்றி நூற்க ஆரம்பித்துவிடுகிறது. அப்படிப்பட்ட ஒரு
சிறப்பான நிலைமை தமிழகம் முழுவதும் இருக்கிறது. இதன்
மூலமாக கிராமப்புறங்களில் 3 லட்சத்து 35 ஆயிரம் பேர்களும்,
88 ஆயிரம் குடும்பங்களும் நல்ல பலனைப் பெறுகின்றன. பணப்
பயிர்களைவிட மிகுந்த லாபம் தரக்கூடிய ஒரு தொழிலாக
இன்றைக்கு இருக்கிறது. யாராவது ஒரு விவசாயி ஒரு ஏக்கர்
வைத்திருந்தாலும் கூட, தண்ணீர் வசதி மட்டும் இருந்தால்
போதும், அந்த புஞ்சை நிலத்திலே அந்த முசுக்கொட்டைச்
செடியை வளர்த்தால், சீக்கிரத்திலே வீட்டிலே இருக்கக்கூடிய
பெண்கள் கூட இந்தத் தொழிலைச் சிறப்பாக செய்து, ஒரு
மாதத்தில் ஏறக்குறைய 5 ஆயிரம் ரூபாய்க்கு பட்டு உற்பத்தியைச்
செய்கின்ற அளவிற்குச் செய்யலாம். அதற்கு 1,700 ரூபாய்
அளவிற்குச் செலவு என்றாலும் கூட, 3,300 ரூபாய் அந்தக் குடும்பத்
திற்குக் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது. எனவே மிக
வேகமாக வளர வேண்டிய, வளர்ச்சி பெற வேண்டிய,
தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்கு பெருமை தேடித் தந்து
இருக்கக்கூடிய துறை இந்தப் பட்டு வளர்ச்சித் துறை.

ஆனால் இதிலே என்ன நிலைமை என்று சொன்னால், நம்
முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், 2·7 கோடி ரூபாய்
அளவிற்கு கடன் பெற்றவர்கள் திருப்பிச் செலுத்தாமல் இருக்கின்ற
காரணத்தால், இந்தப் பட்டுப் புழு வளர்க்கின்ற அந்த விவசாயி
களுக்கு எல்லாம் ஒழுங்காகக் கடன் தர முடியவில்லை. அதற்குக்
காரணம் என்னவென்றால், பட்டு நூல் உற்பத்தி செய்கின்ற அந்த
சொசைட்டிகளிலே வழங்குவதற்காக என்று ஒரு இணையம் இருக்
கிறது. இந்த இணையம் காஞ்சிபுரத்திலே இருக்கிறது. அதன்
மூலமாக நாம் தருகிறோம். ஆனால் அந்தப் பட்டை எல்லாம்
வாங்கியவர்கள் அந்த சொசைட்டி மூலமாக திருப்பிச் செலுத்த
வேண்டும். அப்படி திருப்பிச் செலுத்தாமல், 2.7 கோடி ரூபாய்
தேக்க நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு
அப்படிப்பட்ட ஒரு சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. இந்த
நிலைமையை மாற்றவேண்டும் என்பதற்காக பெரு முயற்சி எடுத்து
கொண்டு இருக்கிறோம். அதற்காக இந்த உற்பத்தியை தடங்கல்
இல்லாமல் நடத்தவேண்டும் என்பதற்காக பல்வேறு வகைகளில்
இந்த பட்டு வளர்ச்சித் துறைக்கு உற்பத்தி செய்து, இன்றைக்கு
ஏறக்குறைய 600 டன், அதாவது 6 லட்சம் கிலோ பட்டு நூல்
நூற்புக்கான கூடுகள் அங்கே உற்பத்தியாகிறது. எனவே உற்
பத்தியாகிறவைகளை எங்கே விற்கிறார்கள் என்று சொன்னால்,
இங்கே இருக்கிற கூட்டுறவு இயக்கங்கள் அதைப் பெறுவதில்லை.
மாறாக மைசூர் மாநிலத்திற்கு கொண்டு செல்கிறார்கள். இங்கே



தேவையான, தரமான பட்டு கிடைத்தும் கூட பல்வேறு கிராமங்
களிலே அந்த சொசைட்டிகளிலே உள்ள சில பெரிய மனிதர்
களுடைய தேவைகளுக்காக இங்கே உற்பத்தியாகிற பட்டு தர
மில்லாத பட்டு என்று குறை சொல்லிவிட்டு, அதைவிட தரம்
குறைந்த பட்டை அங்கேயிருந்து வாங்கிக்கொண்டு வந்து இங்கே
உபயோகப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட நண்பர்கள் எல்லாம் கூட்டுறவு சங்கங்
களுக்கு சம்பந்தப்பட்டவர்கள். இந்த இயக்கம் வளரவேண்டும்
என்பதற்காக நம்முடைய தமிழகத்தில் பட்டு உற்பத்தி பெருக
வேண்டும் என்பதற்காக இவர்கள் எல்லாம் இங்கே வாங்குவதற்கு
முன்னுக்கு வரவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக
கேட்டுக்கொள்கிறேன். ஆனால் தரம் குறைந்தது என்று சிலபேர்
சொல்கிறார்களே ஒழிய நாம் ஏறக்குறைய 105 டன் விற்பனை
செய்கிறோம். 72 டன் தான் அந்த கூட்டுறவு சங்கங்கள்
வாங்குகிறது. 9 டன் கதர் வாரியம் வாங்குகிறது. சில தனிப்
பட்ட சங்கங்களும் பண கொடுத்து வாங்குகிறார்கள். காஞ்சி
புரத்தில் உள்ள முருகன் பட்டு கூட்டுறவு சங்கம், அண்ணா
பட்டு கூட்டுறவு சங்கம், திருவள்ளுவர் பட்டு கூட்டுறவு சங்கம்
இதுபோன்ற 7, 8 சங்கங்கள் நேரடியாக பணம் கொடுத்து
வாங்குகிறார்கள். பணம் கொடுத்து வாங்குகிற அத்தனை
பேரும் இந்த பட்டு பற்றி குறை சொல்லவில்லை. ஆனால்
கடனுக்கு வாங்குகிறவர்கள் இப்படிப்பட்ட குறையை சொல்லி
விட்டு கடன் பணத்தை நிறுத்திக்கொண்டு இருக்கிறார்கள்.
அப்படிப்பட்டவர்கள் எல்லாம் கடனை திருப்பி செலுத்தி இந்த
பட்டுத் துறையை மிகவும் சிறப்பாக இருப்பதற்கு உதவி செய்ய
வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.
இதற்காக ஏறக்குறைய 4 கோடி ரூபாயில் பல்வேறு விதமான
பணிகளை எல்லாம் நாம் மேற்கொண்டு இருக்கிறோம். பசி
நேரமாக இருப்பதால் அதைப்பற்றி முழுமையாக நான் சொல்ல
முடியவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, டான்சி. இதைப்பற்றி பல குறைகளை இங்கே
எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குறைகள் எதுவாக இருந்தாலும்
அவைகளை நிவர்த்திச் செய்ய இந்த அரசும், டான்சி நிறுவனமும்
கொஞ்சம் கூட தயங்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்
கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் 56
நிறுவனங்களும் நஷ்டத்தில் இயங்குகின்றனவா என்று சொன்னால்
அப்படி இல்லை. ஆனால் ஏறக்குறைய தொழிலாளர்கள் உட்பட
5,500 பேர் பணிபுரிகிறார்கள். 1965-66-ல் ரூபாய் 389 லட்சம்
மதிப்புள்ள பொருட்கள் அங்கே உற்பத்தி செய்யப்பட்டது.
ஆனால் இன்றைக்கு 1985-86-ல் 3,500 லட்சத்திற்கு உற்பத்தி
செய்யப்படுகிறது. ஆனால் என்ன நிலைமை என்று சொன்னால்
ஆட்கள் அதிகமாக பணிசெய்கிறார்கள். அவர்களை எல்லாம்

நிறுத்திவிட்டால் நிச்சயமாக லாபம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அது ஒரு சிறு அம்சம். அதை இல்லையென்று நான் மறுக்கவில்லை. அது ஒன்றும் மட்டும் முழுமையாக அதை காப்பாற்றும் என்று டான்சியோ அல்லது அரசோ நம்பவில்லை.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது அதிகாரிகள் அதிகம் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 8 தொழிற்சாலைகளில் தொடர்ந்து ஆரம்பக் கட்டத்திலிருந்து பல லட்சக்கணக்கான அளவு நஷ்டம் வந்துகொண்டு இருக்கிறது. இன்றைக்கு ஒருவர் இருவர் யாராவது குறுக்கு வழியில் பினாமியாக தொழில் செய்யக்கூடும், தவறு செய்யக்கூடும். சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். சமீபகாலமாக மிக வேகமாக செய்து கொண்டு இருக்கிறோம். ஆனாலும்கூட எல்லா தொழிற்சாலைகளிலும் அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறதா என்று சொன்னால் அப்படி இல்லை.

அதிலே மேட்டூர் அணையில் உள்ள டான்சி கட்டுமான மரம் அறுக்கும் தொழிற்சாலையில் மட்டும் ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு 80 லட்ச ரூபாய் நஷ்டத்தில் ஓடிக்கொண்டு இருக்கிறது. ஆனால் அதற்காக மாற்று வழிகளை எல்லாம் செய்து கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு மிகவும் வேகமாக செய்வதற்கு முனைந்து கொண்டு இருக்கிறோம். ஆனால் அப்படியும் முடியவில்லை என்று சொன்னால் என்ன தான் செய்வது என்ற நிலை வரும்போது பரிசீலனை செய்யவேண்டிய ஒரு கட்டாயத்திற்கு வருகிறோம். ஆனால் அதனாலேயே மூடிவிடப் போகிறோம். அங்கே இருக்கின்ற தொழிலாளர்களை எல்லாம் வேலையில் இருந்து நிறுத்திவிட போகிறோம் என்ற எண்ணத்தில் இந்த அரசு என்றைக்கும் இருந்தது இல்லை. தொழிலாளர் விரோத போக்கை இந்த அரசு என்றைக்கும் கடைப்பிடிக்காது.

தவறுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. அதிலே ஒன்று ஏறக்குறைய 45 லட்ச ரூபாய்க்கு குறைந்து உற்பத்தி செய்யும் தொழில் பிரிவுகள் தனியார் பிரிவாக இருந்தால் அவர்களுக்கு எல்லாம் ஆயத்தீர்வை கிடையாது. ஆனால் ரூபாய் 75 லட்சம் வரை தொழில் செய்பவர்களுக்கு விற்பனை செய்பவர்களுக்கு தனியாருக்கு ஓரளவுக்கு ஆயத்தீர்வை இருக்கிறது. ஆனால் நமக்கு இருக்கிற நிலைமை என்ன என்று சொன்னால் ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது ஆயத்தீர்வையாக மட்டும் 150 லட்ச ரூபாயை இன்றைக்கு செலவு செய்து கொண்டு இருக்கிறோம். தனியார் நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்ய முடியும்.



நம்மால் வரி ஏய்ப்பு செய்ய முடியாது. எவ்வளவு தொழில் நடத்துகிறோமோ அந்தத் தொழிலுக்கு ஏற்ற ஆயத்தீர்வை கட்டாயம் கட்டித்தான் ஆகவேண்டும், செலுத்தித்தான் ஆக வேண்டும். அப்படிப்பட்ட பெரிய பளு நமக்கு இருக்கிறது.

அதைபோலவே டான்சி சம்பந்தப்பட்ட பொருட்களை விற்கும்போது அனேகமாக அரசுத் துறை நிறுவனங்களுக்குத் தான் விற்கிறோம், கொடுக்கிறோம். மத்திய அரசு, மாநில அரசு, எந்த அரசாக இருந்தாலும் பெறுகிறவர்கள் அவர்கள் தான். அந்த வகையில் ஏறக்குறைய 400 லட்ச ரூபாய் இன்றைக்கு வரவேண்டிய, நிலுவைய்ல் இருக்கின்ற பணம் ஆகும்.

(பிற்பகல் 2–00)

அது என்றைக்கு வரும்? 6 மாதம் கழித்து வருமா, எத்தனை மாதம் கழித்து வரும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அந்த நிலுவையிலே இருக்கின்ற அந்த முடக்கப் பட்ட பணத்திற்கு மட்டும் 74 இலட்சம் ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு வட்டியாகக் கட்டிக்கொண்டு இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், டான்சியிலே இருக்கின்ற இயந்திரங்கள் எல்லாம் 20, 25 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்டவை. அப்போது பயிற்சி நிலையங்களாக அவை துவங்கப்பட்டன. அந்த 56-ல் ஒன்று கூட தொழிலுக்காகத் துவங்கப்படவில்லை.

எல்லாம் பயிற்சி தருவதற்காக, பயிற்சியாளர்களை உருவாக்குவதற்காக தொடங்கப்பட்ட நிறுவனம். அதில் பலன் இல்லாமல், தொழிற்சாலைகளாக மாற்றப்பட்டன. மாற்றப்பட்ட நேரத்தில், அன்றிலிருந்து இன்றுவரை அவை அனைத்தும் முழுக்க, முழுக்க பலன் இல்லாத மெஷின்களாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் மாற்றி ஆக வேண்டும்.

அதற்குக் காரணம் ஆரம்ப காலத்திலிருந்தே தேவைக்கு அதிகமான ஆட்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் சொல்கிற முறைப்படி அதிகாரிகள் மட்டும் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. அதிகாரிகளும் கூடுதலாக இருக் கிறார்கள். அங்கே இருக்கின்ற பணியாற்றுகிற தொழிலாளர் களும் கூடுதலாக இருக்கிறார்கள்.

இரண்டு தரப்பாருமே இருக்கிறார்கள். அதிலே யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அங்கே ஆட்களைக் குறைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தால் இரண்டு தரப்பிலே இருக்கின்றவர்களையும் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அந்த நிலைக்கு யாரும் இன்றைக்கு போகவில்லை. அதுபற்றியும்

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1985 ஜுலை 4

இன்றைக்கு யோசனை செய்யவில்லை. மாறாக, பல விவகாரங்களை மேற்கொண்டிருக்கிறோம். பல திட்டங்களை நாம் செயல்படுத்த முனைந்திருக்கிறோம்.

சென்ற ஆண்டு கூட புரட்சித் தலைவருடைய அரசு, அரசாங்க நிறுவனங்கள் எல்லாம் டான்சியிலிருந்துதான் வாங்க வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்தி, அந்தத் தொழில் கெட்டுப் போகக்கூடாது, ஏறத்தாழ 56 யூனிட்டுகள் கெட்டுப் போகக்கூடாது. 6 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். தொழிலாளர்களுக்கு எந்தவித குறையும் ஏற்படக்கூடாது என்று சீனியாரிட்டியிலே 5-வது இடத்திலே இருந்ததை, அதற்கு 4-வது இடமாகக் கொடுத்து—வரிசைக் கிரமத்திலே—அதைக் கண்டிப்பாக வாங்கவேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

ஆனால், அதே நேரத்தில், சில பிரிவுகள் பொருளாதார ரீதியில் ஒன்றுமே செய்யமுடியாது என்ற அளவில் இருக்கின்றன. இப்படிப் பல சிக்கல்கள் நிறைந்த இடமாக அந்த டான்சி நிறுவனம் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு அரசுக்கு செலுத்தவேண்டியது மட்டும் ஏறக்குறைய 1361 இலட்சம் ரூபாய். எப்படி என்று சொன்னால், ஒவ்வொரு ஆண்டும் நாம் நஷ்டத்திலே இயங்குகிறோம். ஒவ்வொரு ஆண்டும் நஷ்டத் திலே இயங்குகிறபோது, அரசாங்கம் அதற்கு அளித்து, அது கட்டிக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு நஷ்டப்பட்டும் கூட, 15, 20 நாட்களுக்கு முன்னாலே ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதன் மூலம் மட்டும், 40, 45 இலட்சம் ரூபாய்க்கு மேற்கொண்டு நாம் தருகிறோம். இந்த ஆண்டிலிருந்து இது கூடுதல் செலவு. ஆக, இன்றைக்கு 250 இலட்சம் ரூபாய் இழப்பு என்று சொன்னால் அடுத்த ஆண்டு இன்னும் கூடுதலாக அது ஆகும். இப்படி ஆகிக் கொண்டே போகிறது.

அதாவது, நஷ்டம் என்பது ஒரே துறையிலிருந்து ஒரு பகுதியிலிருந்து வருவது அல்ல. பல்வேறு பகுதிகளிலிருந்து வருவதால்தான் மிகவும் சிக்கலாக இருக்கிறது. ஆனாலும் கூட, 8 தொழிற்சாலைகளையும் திருத்தி மேம்பாடு செய்ய வேண்டும். நிர்வாக சீர்திருத்தத்திற்கு மறு பரிசீலனை செய்யவேண்டும். இன்றைக்கு தொழிற்சாலைகளுக்கு நிர்வாகச் சிக்கல் காரணமாக —சொல்லக் கூடாத விவரங்கள் எல்லாம் இருக்கிறது— அப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு, இழப்பிலே இருக்கிற அந்த 8 தொழிற்சாலையை கூடுமான வரையிலே மறு பரிசீலனை செய்ய வேண்டும்.



1985 ஜுலை 4] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

இழப்பைத் தவிர்க்கவேண்டும் என்றால் நிர்வாக வசதிக்காக, 4 தொழிற்சாலைகளை சிறு, சிறு பிரிவுகளாக ஆக்கி, 14 பிரிவு களாக மாற்றப்படும். இதனாலே பல நிலைமைகள் ஏற்படு கின்றன.

இப்படி எல்லாம் செய்தும் கூட, ஒன்றும் செய்ய முடிய வில்லை என்று சொன்னால், வேறு வழியில்லாமல் ஏதாவது ஒரு மறு பரிசிலனை செய்யவேண்டும் என்ற அளவுக்கு அரசாங்கமும், நிறுவனமும் வர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

ஆக, இவ்வளவு நஷ்டத்திலே இருந்தாலும் கூட, அந்தத் தொழிலாளர்கள் வேலை செய்யவில்லையா? அவர்கள் எல்லாம் பணி செய்யவில்லையா என்றால் அவர்களுக்கு போதிய வேலை இல்லை. அவர்கள் சொல்வது போல், போதிய ஆர்டர்கள் கிடைக்கவில்லை.

காரணம் நாம் ஒரு பொருளின் உற்பத்தி விலை 1 ரூபாய் என்றால் தனியார் அதை 80 பைசாவுக்கே செய்துதரத் தயாராக இருக்கிறான். ஏனென்றால் அவர்களுக்கு வரி கிடையாது. இங்கே கொடுப்பதைப்போல், கூலி உயர்வோ, நிரந்தரச் சம்பளமோ அங்கே கிடையாது. 10 நாட்கள் வேலைக்கு வைத்துக் கொள்வான். 10-வது நாள் துரத்தி விடுவார்கள். நமக்குள்ள சுமை அங்கு கிடையாது. நமக்கு அதிகச் சுமை இருக்கிறது.

எனவே, உற்பத்தியினுடைய விலை ஏறுகின்றது. ஏறுகின்ற போது, இங்கே யாரும் வரமாட்டேன் என்கிறார்கள். இவ்வளவு இருந்தும் கூட, இருக்கின்ற பல்வேறு நிறுவனங்கள் நம்மிடம் வாங்க வேண்டும் என்று தொடர்ந்து முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறோம்.

நம்முடைய இண்டி டான்சி நுண் கருவி அறைக் கூடம் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி நிலையத்திற்குத் தேவையான தொழில் நுட்பப் பொருட்களை ஏறத்தாழ 16 இலட்சம் ரூபாயிலே செய்து கொடுத்திருக்கிறது.

அதே போல், திருச்சியிலுள்ள டான்சி கட்டுமானப் பட் டறை, விண்வெளி நிலையத்திற்குத் தேவையான பொருட்களை 7·50 இலட்சம் மதிப்பிலே செய்து கொடுத்திருக்கிறது. அம்பத் தூரிலே இருக்கின்ற கட்டுமானப் பிரிவின் மூலம், விண்வெளி நிலையத்தில் ஏற்பட்ட கட்டுமான பாதிப்புக்களை சீர் செய்ய, 5 இலட்சம் ரூபாயிலே பொருட்களை கொடுத்து இருக்கிறது.

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1985 ஜூலை 4

வேலூரிலே இருக்கின்ற அந்தத் தொழிற்சாலை, ஸ்ரீஹரி கோட்டா விண்வெளி நிலையத்திற்குத் தேவையான எஃகு கன்சோல்களையும், நுண்ணிய கருவிகளையும் வைப்பதற்கு தேவையான சிறப்பு அடுக்குகளையும் 10 இலட்சம் ரூபாயிலே வழங்கி இருக்கிறது.

அம்பத்தூரில் உள்ள அந்த நிறுவனமும், மேட்டூரில் உள்ள டான்சி நிறுவனமும் சுமார் பத்து சர்க்கரை ஆலைகளுக்கும், ஆறு நூற்பாலைகளுக்கும் தேவையான சாமான்களை சுமார் 400 இலட்சம் ரூபாயிலே செய்து கொடுத்திருக்கிறது.

திருப்பாச்சூரிலே இருக்கின்ற டான்சி பொறியியல் கூடம் கிருஷ்ணா நதி திட்டத்திற்காக ஏறக்குறைய 15.5 இலட்சம் ரூபாய்க்கான பணிகளைச் செய்திருக்கிறது. இந்த ஆண்டு 5 இலட்சம் ரூபாய்க்கான ஆர்டர் கிடைத்திருக்கிறது.

நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களை ஒழுங்காகச் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் போதிய ஆர்டர்கள், நாம் எதிர் பார்க்கும் ஆர்டர்கள் கிடைக்கவில்லை. ஆகவேதான் நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட மிகமிக நுண்ணிய வேலைகளைக்கூட, நம்முடைய டான்சி நிறுவனம் செய்துகொண்டு இருக்கிறது. அதாவது, வெடிகுண்டுகள் வைப்பதற்கான சீல்கள், அதைப் போன்ற மற்ற நுண் பொருள்களையெல்லாம் கூட நம்முடைய டான்சி நிறுவனம் ஒழுங்காகச் செய்துகொண்டு, நல்ல பெயரோடு இன்றைக்குப் புகழோடு இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

இந்த முறை திடீரென்று எதிர்பார்க்காமல் இரண்டே மாதத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற ஒரு நிர்ப்பந்தம் வந்த பொழுது, இரண்டே மாத காலத்திலே தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், குஜராத், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கெல்லாம் ஓட்டுப் பெட்டிகளை நாம்தான் தயார் செய்து கொடுத்தோம்; டான்சி நிறுவனம்தான் இதைச் செய்து கொடுத்தது.

இவையெல்லாவற்றையும் விட இன்னொரு முக்கியமான நிகழ்ச்சி பற்றி உங்களுக்குத் தெரியும். செங்கற்பட்டு மாவட்டத் தைச் சேர்ந்த மதுராந்தகத்திலே ஒரே நேரத்திலே 85 பேர்கள் போட்டிபோட ஆரம்பித்து விட்டார்கள். அதற்குத் தனியாக பிரத்யேகமாக தனியான பெட்டிகளைத் தயாரிக்க வேண்டு மென்ற நிர்ப்பந்தம் வந்தபொழுது 15 நாட்களிலே அந்தப் பெட்டி களைத் தயார் செய்ய வேண்டிய ஒரு கட்டாயம் டான்சிக்குத் தரப்பட்டது. அதை ஒழுங்காக, திறமையாக அந்தப் பெட்டி களைத் தயார் செய்து கொடுத்தார்கள்.



1985 ஜூலை 4] [திரு. ஆனூர் பு. கோ ஜகதீசன்]

சத்துணவுக் கூடத்திற்கு, விரைவாகச் செய்ய வேண்டு மென்பதற்காக ஏறக்குறைய 234 உருப்படிகளை 378 ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஏறக்குறைய 649 இலட்சம் ரூபாயிலே செய்து கொடுக்கப்பட்டது.

சத்துணவுக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 217 இலட்சம் ரூபாய்க்கு, 1,200 கூடங்களுக்கு டான்சி நிறுவனம் செய்து கொடுத்து இருக்கிறது.

வறட்சிக்காலத்திலே, ஹேண்ட் பம்புகளை இந்த நாடே வியக்கும் அளவிற்கு மிகச்சிறப்பான முறையில், மற்ற நாடுகளி லிருந்து ஆர்டர் கிடைக்கும் அளவிற்கு அந்தக் கைப்பம்புகளை உருவாக்கிக் கொடுத்த பெருமை நம்முடைய டான்சி நிறுவனத்தையே சாரும்.

நம்முடைய அருமை அண்ணன் தொழிலாளர் நல அமைச் சரவர்களும், நிதியமைச்சரவர்களும் மிகுந்த அக்கறை எடுத்து, இவ்வளவு நஷ்டம் இருந்தாலும்கூட, கொஞ்சம்கூட குறைக்காமல் அந்தத் தொழிலாளர்கள் மனம் நிறையும் அளவிற்கு இந்த முறை ஊதிய உயர்வு ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அதற்காக மட்டும் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 42 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏறக்குறைய 14 திட்டங்களை நாம் இன்றைக்கு உருவாக்கித் தர இருக்கிறோம். அதற்காக 4 கோடிக்கு மேல் தேவைப் படுகிறது. நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகிக் கேட்ட பொழுது இப்படிப்பட்ட பணிகளையெல்லம் நிறைவேற்றினால் நிச்சயமாக இந்த நஷ்டத்தைக் குறைக்க முடியும், இலாபத்தை ஈட்ட முடியும் என்ற நிலையிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட திட்டங்களையெல்லாம், 14 திட்டங்களை, அதாவது நம் முடைய நாட்டிற்குத் தேவையானது, மற்றும் எங்கேயும் கிடைக்காத பொருள்களை நாம் செய்ய முடியும் என்று உறுதியாக இருப்பது, ஆர்டர்கள் நிச்சயமாக நமக்குக் கிடைக்கும் என்று சொல்லக் கூடிய ஏறக்குறைய 17 தொழில் பிரிவுகளை இப்பொழுது நடக்கும் அந்தத் தொழில் பிரிவுகளைக் கொண்டே, அந்தத் தொழிலாளர்களைக் கொண்டே செய்ய முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். அதற்காகக் ஏறக்குறைய 4 கோடி ரூபாயில் திட்டத்தை இன்றைக்குத் தீட்டி எதிர்பார்த்துக் கொண்டிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சில அறிவுப்புகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

சிறு தொழில் பிரிவுகளுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடனை அளிக்கும் பொருட்டு தொழில் வணிக இயக்குநரின் கீழ் இயங்கும் மாவட்டத் தொழில் மையங்கள் விண்ணப்பங்களைப் பெற்று, ஆய்வு செய்து, ஒப்பளிப்பு ஆணைகளை வழங்கி வந்தன.

அதன் மூலமாக, இன்றைக்கு இந்தத் தொழில் மையமே ஏற்று செய்யக்கூடிய ஒரு நல்ல ஏற்பாட்டை இந்த அரசு செய்திருக்கிறது.

சிறு தொழில்களுக்காக முதலீட்டு வரம்பை ரூ. 20 இலட்சத்திலிருந்து ரூ. 35 இலட்சமாகவும், துணைத் தொழில்களுக்கான முதலீட்டு வரம்பை ரூ. 25 இலட்சத்திலிருந்து ரூ. 45 இலட்சமாகவும் உயர்த்த ஏற்பாடு செய்திருக்கிறது இந்த அரசு.

(பிற்பகல் 2—30)

அடுத்து, தர நிர்ணயக் கட்டுப்பாடு கழகம் அளித்த சான்றிதழ்களுடன் அல்லது வேறு தர நிர்ணயச் சான்றிதழ்களுடன் நல்ல பொருள்களை உருவாக்கித் தருகிற சிறு தொழில் பிரிவுகளுக்கு ரூ. 2,000 ஊக்கத் தொகையாக தரப்படுகிறது.

மேற்கு ஜெர்மன் அரசின் தொழில் *நுட்ப ஒத்துழைப்புடன் கோயம்புத்தூரில் ரூ. 2·84 கோடி செலவில் பம்ப் மோட்டார், டீசல் எஞ்சின் தொழில் பொருள்களைத் தயாரிக்கும் முறைகளின் வளர்ச்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் ஒன்றை அமைத்திட வழி வகுத்திருக்கிறது இந்த அரசு.

திண்டுக்கல் பூட்டுத் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் பணிகளை நவீனப்படுத்த ரூ. 1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் எப்படித் தேயிலைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் சிறு அளவில் தேயிலை பயிரிடுவோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் மிகச் சிறப்பாக உள்ளதோ, அது போல் கூட்டுறவுச் சங்கம் அமைத்து கொடைக்கானலில் ஏறக்குறைய 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் 3,000 பேர்களுக்கு வேலை தருகின்ற ஒரு சிறந்த திட்டத்தை ரூ. 256 இலட்சத்திலே ஏற்பாடு செய்து, 1985—86-லே அந்தப் பணி துவங்க வழிவகை செய்யப் பட்டிருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் சின்னக்கோரை என்ற இடத்தில் ரூ. 60 இலட்சம் செலவில் தேயிலை தொழில் கூட்டுறவு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985—86-ல் ரூ. 7·62 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணி துவக்கப்பட இருக்கிறது.

கொடைக்கானலில் ஜெரேனியம் சாகுபடி செய்வதற்காக தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைக்க 1985—86-ல் ரூ. 1.12 இலட்சத்திற்குத் திட்டக் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது.

வட ஆற்காடு மாவட்ட சிறு தொழிற்சாலைகளில் கிடங்கு அமைக்க, ரூ. 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



கயிறு தொழிலில் பலவித முன்னேற்றங்கள் ஏற்படுத்துவதற்காக ரூ. 18.11 இலட்சத்தை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் முழு தேவைகளை நிறைவு செய்வதற்காக தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு ரூ. 25 இலட்சம், 1985—86-ல் ஆண்டு திட்டக் குழுவில் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

அதே போல், நீலகிரி மாவட்டத்தில் எரிமேடு என்ற கிராமத்தில் புதிதாக தொழிற் கூட்டுறவுத் தொழிற்சாலை அமைக்க, ரூ. 59 இலட்சத்திற்கு மத்திய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் நிதியுதவியளிக்க ஒப்புக்கொண்டுள்ளது.

திண்டுக்கல்லில் பன்னெடுங்காலமாக இருந்து வருகிற பூட்டுத் தொழிலை நவீனப்படுத்த மைய அரசு ரூ. 37 இலட்சம் செலவில் பொது வசதி நிலையம் ஒன்றை அமைத்திட இருக்கிறது. இதற்குரிய இட வசதியையும் மற்ற வசதிகளையும் மாநில அரசு செய்து தருகிறது.

வட ஆற்காடு மாவட்டத்திலேயுள்ள பேரணாம்பட்டு, ஆம்பூர் ஆகிய இடங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்களைச் சுத்தப்படுத்தும் நிலையம் அமைக்க 1985—86ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் திட்டக் குழுவினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏறக்குறைய ரூ. 2 கோடி மதிப்பீட்டில் வாணியம்பாடியில் கூட்டுறவு முறையிலே தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக, தோல் தொழிற்சாலைகளில் வெளிவரும் கழிவுநீரை சுத்திகரிக்கும் பொது நிலையம் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மைய அரசின் தேசிய ஆராய்ச்சி வளர்ச்சிக் கழகம் இந்தப் புதுமுறையான உத்திகளைப் பாராட்டி, எல்லாவிதமான சலுகைகளைச் செய்ய முன்வந்துள்ளது.

1985—86ஆம் ஆண்டில் 5,000 ஏக்கர் நிலத்தில் முசுக் கொட்டை செடி பயிரிடவும், பட்டுப்புழு வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ரூ. 21.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டான்சியிலே இருக்கிற 5 தோல் சம்பந்தப்பட்ட பிரிவுகளை தோல் வளர்ச்சிக் கழகத்தோடு சேர்க்கின்ற ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அப்படிச் செய்வதன் மூலமாக, அந்த டான்சி நிறுவனத்திற்கு இருக்கிற இழப்பு நீங்கும் என்று கருதுகிறோம்,

(திரு. ஆலூர் பு. கோ. ஜெகதீசன்) [1985 ஜூலை 4

பல பேர்கள் வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்தார்கள். இங்கே பேசிய பலருக்கெல்லாம் தனித்தனியாகப் பதில் சொல்ல முடியவில்லையென்றாலும், அத்தனை பேர்களுடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு மட்டும் அல்ல, முன்னால் இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் இது சம்பந்தமாகப் பேசியதை எல்லாம் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறோம். உறுப்பினர்கள் என்ன, என்ன பேசினார்கள் என்ற அந்தக் குறிப்புகள் அடிப்படையிலே, இங்கே பல நேரங்களிலே, கேள்விகளைக் கேட்டு பதில்களைப் பெற்றார்களே, அவற்றில், சிறு தொழில்களை முன்னேற்ற என்ன என்ன சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அவற்றையெல்லாம பார்த்து, எந்த அளவு முன்னேற்றம் காண முடியுமோ அந்த அளவுக்குச் செய்வோம் என்ற உறுதியைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,30,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.



1985 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,37,52,000-க்கு மேற்படாத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 5–7–1985 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

241. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 7–5–1985-ஆம் நாளிட்ட 446 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது ]

242. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 29–11–1984 ஆம் நாளிட்ட 1201 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

243. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

244. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*150.* தொழில் கொள்கையும் திட்டங்களும் (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்) *1985–86* (தமிழ், ஆங்கிலம்)

*151.* ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் *1985–86* (தமிழ், ஆங்கிலம்)

*152.* *1984–85* ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

*153.* பட்டுத் தொழிலில் சாதனை படைத்திட்ட விவசாயி களின் வெற்றிக் கதைகள் என்ற புத்தகம் (தமிழ்).

*154.* தமிழ்நாட்டில் சிறுதொழில்களின் சிறப்பான வளர்ச் சிக்கு ''சிட்கோ'' என்ற புத்தகம் (தமிழ்).



இணைப்பு.

*(44-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க)*

தொழில் கொள்கையும், திட்டங்களும்.

கிராமப் பகுதிகளில் தொழில்களை உருவாக்குவதன் மூலம் அங்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதே தமிழ்நாடு அரசின் கொள்கையாகும். மிகச் சிறிய தொழில்கள், வீட்டிலேயே செய்யும் தொழில்கள் உட்பட சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் உருவாக்கி அவற்றை மேன்மேலும் வளர்ச்சி பெறச் செய்ய அரசு தனி முக்கியத்துவம் அளிக்கிறது. கிராமப் பகுதிகளில் தற்போதுள்ள தொழில் பிரிவுகளுக்கு ஊக்கமளிப் பதற்கும், புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்குச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கவும் தனி திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தொழில் பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல், வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தல், மூலப் பொருள் வழங்கல், நிதி யுதவி அளித்தல், விற்பனை வசதி செய்து கொடுத்தல், நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்குப் புத்துயிரூட்ட தனித் திட்டம் வகுத்தல் போன்ற வழிகளில் அரசு உதவி செய்கிறது. கிராமங்களில் தொழில் கள் உருவாக தேவையான இடுபொருள்களை அளிப்பதற்குத் தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் போன்ற மாநில அரசு நிறு வனங்களும் மத்திய அரசின் சிறுதொழில் பணி நிறுவனம், நாட் டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவையும் இணைந்து செயல்படு கின்றன. இதனுடன், பட்டுப்புழு வளர்ப்பு இயக்குநரகமும் தமிழ் நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனமும் குறிப்பிட்ட பகுதி களில் உதவி செய்கின்றன. இந்நிறுவனங்கள் ஆற்றும் பணி பற்றி கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இம் முகவரமைப்புகள் செயல்படுத்தும் பல்வேறு பழைய புதிய திட்டங்கள் பின் வரும் அத்தி யாயங்களில் விரிவாக விவாதிக்கப்படுகின்றன.

தொழில் வணிக இயக்ககம் :

பொதுவாக தொழில்களை குறிப்பாக சிறு தொழில்களை மேம் படுத்துவதற்காகத் திட்டங்களை வகுத்து செயற்படுத்துவது தொழில் வணிக இயக்ககத்தின் பொறுப்பாகும். இதன் கள அமைப்பான மாவட்டத் தொழில் மையம் சிறு தொழில் முனைவர்களுக்கு உதவி அளிப்பதன் மூலம் கிராமத் தொழில்களை உருவாக்கும் முக்கிய முகவரமைப்பாகச் செயல்படுகிறது. மாவட்டத் தொழில் மையங்கள் புதிய தொழில் பிரிவுகளுக்கும், தற்போதுள்ள தொழில் முனைவோருக் கும் அதிக உதவி அளிக்க இயலும் வகையில் அவற்றை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. சிறு தொழில் வளர்ச்சியிலிருந்து இத்திட்டத்தின் வெற்றியை அறியலாம். தமிழ்நாட்டில் பதிவு செய் யப்பட்ட சிறு தொழில்களின் எண்ணிக்கை *1977* ஆம் ஆண்டில் *18,789*-லிருந்து *1984* மார்ச்-ல் *49,920* ஆக உயர்ந்து, *1985*

மார்ச்-ல் 60,259 ஆக அதிகரித்தது. இந்த இயக்ககத்தின் மற்றொரு பிரிவு, தொழில் கூட்டுறவு அமைப்புகளைக் கவனித்துக் கொள்கிறது. இக்கூட்டுறவுகளின் கீழ் தீப்பெட்டி தயாரித்தல், தேயிலை, தேங்காய் நார், பாலிதின் பைகள், ஆட்டோ முதலிய துறைகள் உள்ளன. நெடுங்காலமாக உள்ள இத்துறைகளில் தொழில் கூட்டுறவுகள் அமைப்பதைத் தவிர மின்னணுவியல் முதலிய நவீன துறைகளிலும் கூட்டுறவுகளை ஏற்படுத்தும் பணியை இத்துறை இந்த ஆண்டில் மேற்கொள்ளுள்ளது.

### தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) :

இந்நிறுவனம் சிறுதொழில்களுக்காகக் கொட்டகைகள் அமைத்தல், மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்குதல், இன்றியமையா மூலப் பொருள்களை வழங்குதல், விற்பனை உதவி முதலிய அடிப்படை வசதிகளை அளிப்பதன் மூலம் தொடர்ந்து உதவி அளிக்கிறது. இந்நிறுவனம், வட்டியில்லா விற்பனை வரிக் கடன் அளித்தல் தொடர்பாக நிதியுதவி அளிக்கும் திட்டம், நலிவுற்ற தொழில் பிரிவுகளை மீண்டும் புதுப்பிக்கும் திட்டம், மாநில, மத்திய அரசு அளிக்கும் மூலதன முதலீடு உதவித் தொகையை வழங்குதல், மாநில அரசு தொழில்களுக்கு அளிக்கும் ஏனைய ஊக்க உதவித் தொகைகளை வழங்குதல் ஆகியவற்றைச் செயல்படுத்துகிறது. சிறு தொழில் பிரிவுகளின் மாறி வரும் தேவைகளுக்கேற்ப வரும் ஆண்டுகளில் தன்னுடைய பணிகளைக் கணிசமான அளவுக்கு விரிவுபடுத்த நிறுவனம் திட்டமிடுகிறது.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் :

மாநில மட்டத்திலுள்ள முக்கியமான நிதி நிறுவனங்களில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஒன்றாகும். தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள சிறு மற்றும் மத்தியதர தொழில்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் நிதியுதவி அளிப்பது இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். நிலம், கட்டிடம், தளவாடங்கள், எந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்க கடன் வழங்குவதோடு, காலம்தாழ்த்தி செலுத்துவதற்குரிய உத்திரவாதத்தையும், பங்கு மூலதனத் தொகையையும் வழங்குகிறது. கடன் கேட்டு வரும் மனுக்களின் மீது விரைவில் தீர்வுகாண வேண்டும் என்று கருதி கடன் கேட்டு வரும் மனுக்களைப் பெற்ற 45 நாட்களுக்குள் முடிவு காண வேண்டும் என்று அரசு இந்நிறுவனத்திற்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

### தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) :

தற்போதுள்ள 56 உற்பத்தி மையங்களைத் தவிர கட்டுமானங்கள், தோல், வார்ப்படச்சாலை, எந்திரக் கருவிகள், மேசை நாற்காலிகள் முதலியவை போன்ற வேறுபட்ட தொழில்களில் டான்சி பல புதிய திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. இதனால் அதன் உற்பத்தி கணிசமான அளவிற்குப் பெருகும்.



### தமிழ்நாடு தோல் பொருள்கள் மேம்பாட்டு நிறுவனம் :

இந்நிறுவனம், தோல் தொழிலுக்கு அடிப்படை வசதிகள் அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் நுட்பம், நிதி உதவி, பணி முடிக்கப்பட்ட பொருள்களின் விற்பனை ஆகிய பணிகளுக்கு வகை செய்வதன் மூலம் இந்நிறுவனம், சிறு கைவினைஞர்களுக்கு உதவத் திட்டமிட்டுள்ளது. இது மேலும், தோல் தொழிலுக்கு இன்றியமையாத் தேவையான கழிவு நீரகற்றும் பிரிவை பொதுவான வசதியாக அமைத்து வருகிறது.

### தமிழ் நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம் :

கைவினைஞர்களுக்குத் தொழில் நுட்ப உதவி அளித்து பல விற்பனைக் கூடங்கள் வாயிலாக அவர்களுடைய உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு உதவி அளிப்பதன் மூலம் இம் மாநிலத்தில் கைத்திறத் தொழில்களை உருவாக்கி வளர்ச்சியடையச் செய்ய இந்நிறுவனம் 1973 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.

### பட்டுப்புழு வளர்ப்பு இயக்ககம் :

பட்டுப்புழு வளர்ப்பு அதிக அளவில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியதும், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டதுமான ஊரகத் தொழிலாகும். இம்மாநிலத்தில், இத்தொழில் நல்ல முறையில் வளர்ச்சியடைவதற்குத் தொடர்ந்து உதவி அளிக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, பல்வேறு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிதியுதவி அளித்தலும், தொழில் நுட்ப வசதிகள் அளித்தலும், இம்மாநிலத்தில் முசுக்கொட்டை பயிரிடப்பட்ட பகுதி 1979 ஏப்ரலில் 21,419 ஏக்கராக இருந்து 1985 மார்ச்சில் 67,062 ஏக்கராக உயர்ந்துள்ளது. இதன் பயனாக கச்சாப் பட்டு உற்பத்தி கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது.

### பண்டகக் கொள்முதல் கொள்கை :

கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களை கிராமப் புறங்களில் உருவாக்க ஊக்கமளிப்பதின் மூலம் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பினை உருவாக்குவது அரசு கொள்கையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இத்தொழில்கள் வளர்வதற்கு முக்கிய இடர்பாடு, இவைகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை வசதியின்மையாகும். இத்தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, அரசு துறைகள், வாரியங்கள், அரசு நிறுவனங்கள், தங்களுக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்வது பற்றி அரசு கொள்முதல் கொள்கை ஒன்றை

வகுத்துள்ளது. அதன்படி அரசு துறைகள், நிறுவனங்கள், வாரியங்கள், உள்ளாட்சி மன்றங்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை கீழ்க்கண்ட நிறுவனங்களிடம் முன்னுரிமை கொடுத்து வாங்க வேண்டும் :—

1. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தைச் சேர்ந்த மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள தொழில் அலகுகள்.

2. சிறை இளங்குற்றவாளிகளின் பள்ளி மற்றும் சிறைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தொழில் அலகுகள்.

3. முட்டுக்காட்டிலுள்ள நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம்.

4. அரசு நிறுவனங்கள் மற்றும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள்.

5. அரசு பங்குத்தொகை உதவி பெற்ற கூட்டுறவு நிறுவனங்கள்.

6. இதர கூட்டுறவு நிறுவனங்கள்.

7. இம்மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள்.

8. இதர மாநிலங்களிலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள்.

மேற்கூறிய முன்னுரிமை நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குத்தான் பொருந்தும். மற்றபடி கொள்முதல் செய்து, விநியோகம் செய்வதற்கு பொருந்தாது. அவ்வாறு நிறுவன முன்னுரிமை படி கொள்முதல் செய்யப்படும் பொருள்களின் மீது உற்பத்தி செய்த அந்தந்த நிறுவனங்களின் முத்திரை இருக்க வேண்டும். மேற்கூறிய நிறுவனங்களின் 1 முதல் 5 வரையிலும் நிறுவனங்களிடம் கொள்முதல் செய்யும் பொழுது, ஒப்பந்தப் புள்ளி பெற வேண்டியது இல்லை. இதர நிறுவனங்கள் (மேலே கூறப்பட்ட 6 முதல் 8 வரையிலும் உள்ள நிறுவனங்களிடம்) தற்பொழுது நடைமுறையிலுள்ள அரசு ஆணைகளின்படி ஒப்பந்தப் புள்ளி கோருவதோடு விலை முன்னுரிமையையும் அளித்து கொள்முதல் செய்யவேண்டும்.



## தொழில் வணிக இயக்ககம் :

முன்னர் குறிப்பிட்டவாறு, இந்த இயக்ககம் ஊரகத் தொழில்கள், மிகச் சிறிய தொழில் ஆகியவை உட்பட சிறு தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்நோக்கங்களை பின்வரும் வழியின் மூலம் எய்தக் கருதப்பட்டுள்ளது.

1. சிறுதொழில் முனைவோர்கள் அவர்கள் விரும்பும் தொழில் தொடங்குவதற்கு மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் தொழில் நுட்ப உதவியளித்தல். இதுபற்றிய தொழில்களின் பல்வேறு கூறுகள் அடங்கிய திட்ட அறிக்கைகள் பெருவாரியாகத் தயாரிக்கப்பட்டு தொழில் முனைவோருக்கு இலவசமாகக் கிடைக்கச் செய்யப் பெற்றுள்ளன.

2. தற்போதுள்ள மரபுவழி தொழிற்சாலைகளை வலுப்படுத்துவதற்கும், கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் தொழில் கூட்டுறவுகளுக்குத் தொழில் நுட்பம், நிர்வாகம், நிதி ஆகிய உதவியளித்தல்.

3. பரிசோதனை செய்தல், உற்பத்திப் பெருக்கம் ஆகியவற்றுக்கு வசதி செய்வதன் மூலம் மின்னணுவியல், இரசாயனத் தொழில்களுக்கு தனிக்கவனம் செலுத்துதல், மின்னணுத்தொழில்களுக்கென்றே சிறப்பான முறையில் இத்துறை அடிப்படை வசதிகளை அளித்துள்ளது.

இந்த நோக்கங்களை நிறைவேற்ற பின்வரும் நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது :—

### சிறுதொழில்கள்—ஊரகத் தொழில்கள் :

இத்துறையின் வளர்ச்சிக்கு] அரசு கொடுத்த முக்கியத்துவம் நல்ல பயனை அளித்துள்ளது. 1977 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதியில் 18,789 நிரந்தரமாக பதிவு செய்யப்பட்ட தொழில் பிரிவுகள் இருந்தன. இவை 1984 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்குள் 49,920 ஆக உயர்ந்துள்ளன. 1985 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் 60,259 ஆக மேலும் உயர்ந்துள்ளன. எட்டு ஆண்டுகளுக்குக் குறைவாக உள்ள காலத்தில் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 200 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்துள்ளன என்பதை இது காட்டுகிறது. 1984–85 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 1985ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதிக்குள் 10,958 ஆக உயர்ந்துள்ளன. இது சென்ற ஆண்டைவிட இரு மடங்குச் சாதனையாகும். இந்த ஆண்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

சிறு தொழில் துறைக்கு உதவியளிப்பதன் மூலம், மாவட்டத் தொழில் மையங்கள் பயனுள்ள வகையில் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. இதன் விவரங்கள் இணைப்பு 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. சிறுதொழில் நிறுவனங்கள் குறிப்பிட்ட முதலீட்டிற்கு அதிக வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பை அதிகரிக்கின்றன. இந்த தொழில் பிரிவுகளை கிராமப் பகுதிகளிலும் கணிசமான அளவிற்கு நிறுவப்பட்டுள்ளன. மாநில அரசு 1985-86-ஆம் ஆண்டில் சிறுதொழில் வளர்ச்சியை மேலும் விரைவு படுத்தும்.

**படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டம் :**

நடப்பு ஆண்டிலும் மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக மத்திய அரசு பொறுப்பேற்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1983–84-ஆம் ஆண்டு இலக்கைவிட சாதனை அதிகரித்த ஒரு சில மாநிலங்களில் நமது மாநிலமும் ஒன்றாகும். மாவட்டத் தொழில் மையங்களும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், தீவிரமாகவும் செயல் நோக்கிலும் உதவி புரிந்துள்ளதால் இத்திட்டத்தின்கீழ், இவ்வாண்டிலும் இலக்கு மீறப்பட்டுள்ளது. அதாவது 1984–85-ல் 21,700 நபர்களுக்கு உதவியளிக்க வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் மார்ச்சு இறுதிக்குள் 22,500 நபர்களுக்கு ரூ. 42.49 கோடி ஒப்பளிப்பு செய்து சாதனை புரியப்பட்டுள்ளது. 1984–85-ல் முன்னேற்றம் பற்றிய விவரங்கள் இணைப்பு 2-ல் தரப்பட்டுள்ளன. மாவட்டத் தொழில் மையங்களால் அமைக்கப்பட்ட பணிக்குழு, 1985-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் மத்தியில் ரூபாய் 57.46 கோடி தொகைக்கான 28,602 விண்ணப்பங்களுக்கு இதுவரையில் வங்கிகளுக்குப் பரிந்துரைத்துள்ளது. 1983-84-ல் இத்திட்டத்தின்கீழ் வணிக நடவடிக்கைகளுக்கு நிதியுதவி, அளித்திருக்க சொத்துக்களை ஏற்படுத்தும் வகையிலும் அதிக அளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கும் வகையிலும் இவ்வாண்டு தொழில்களுக்கு மட்டும் அதிக அளவு நிதி ஒதுக்கப்படுவது ஈண்டு குறிப்பிடுவது பொருத்தமாகும். கடந்த ஆண்டில் கடன் அனுமதிக்கப்பட்ட தொழில் பிரிவுகளில் 11,899 தொழில் பிரிவுகள் ஏற்கெனவே செயல்படத் தொடங்கியுள்ளன. எஞ்சியவை, பல்வேறு நிலைகளில் செயல்படத் தொடங்கியுள்ளன. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறும் திட்டங்களுக்கு மின்னிணைப்பு கொடுக்க முன்னுரிமை கொடுத்து அரசு ஆணைகளும் பிறப்பித்துள்ளது.

**நலிந்த சிறு தொழில்களுக்குப் புத்துயிர் அளித்தல் :**

ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகள் சுமூகமாக செயல்படுவதானது, புதிய தொழில் பிரிவுகளை உருவாக்குவதைப் போல் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இச்சூழ்நிலையில்



நலிந்த சிறு தொழில் பிரிவுகளை மீண்டும் தொடங்கி அவற்றிற்குப் புத்துயிர் அளிக்கும் திட்டத்தை மாநில அரசு உருவாக்கியுள்ளது. வழக்கமாக ஒரு நலிந்த தொழில் பிரிவானது மீண்டும் செயல்படத் தொடங்க அதற்குக் கூடுதல் நிதியுதவி தேவைப்படும்போது தொழில் முனைவர்கள் ஓரளவு தொகையை வங்கியில் செலுத்துமாறு வங்கிகள் வற்புறுத்துகின்றன. ஆனால், நிதி திரட்டும் நிலையில் அவர்கள் இருப்பதில்லை. மறு நிதியுதவிக்காக வங்கி எதிர்பார்க்கும் தொகையில் 50 சதவீதம்வரையில் நிதியுதவி அளிக்க அரசு முன்வந்துள்ளது. குறிப்பிட்ட ஒரு சில இனங்களில் அரசின் பங்கு 75 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த முன்வரம்பு உதவித் தொகைக்கு வட்டி கிடையாது. தொழில் துறை ஆணையர்—அரசுச் செயலாளர் தலைமையில் செயல்படுகின்ற மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு இவ்வாறு நிதியுதவியை அளித்துவருகிறது. இதுவரை 45 தொழில் பிரிவுகளுக்கு 71.92 இலட்சம் ரூபாய் வரையில் முன் வரம்பு தொகை உதவியாக அளிக்கப்பட்டுள்ளது.

**நிதி நிறுவனங்கள் பிரிவுக் குழு :**

தொழில் முனைவோர் வங்கிகளிடமிருந்து காலமுறைக் கடன்களையும் நடைமுதல் மூலதனக் கடன்களையும் பெறும் பொருட்டு, முதன்மை நிலையிலான குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிதி நிறுவனங்கள் துறையின் ஆணையர்—அரசுச் செயலாளர் இதன் தலைவராவார். துறைத் தலைவர்கள் இதன் உறுப்பினர்களாவர்.

வங்கிகளிடமிருந்து போதிய அளவுக்கு நடைமுறை மூலதனத்தைப் பெறுவதில் இன்றி, அம்பத்தூர் தொழில்பேட்டை தொழில் முனைவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர் தலைமையில் மற்றொரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**ஒரே கூரையின் கீழ் தடைகளை நீக்கி அனுமதியளிக்கும் முறை :**

தொழில் முனைவர், தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுவதற்கு முன்பு, அவருக்குத் தேவைப்படும் அனுமதிகளுக்கு வெவ்வேறு துறைகளிடமிருந்து விரைவில் இசைவு பெறும் பொருட்டு மாநில மாவட்ட அளவுகளில் "ஒரே கூரையின் கீழ் தடைகளை நீக்கி அனுமதியளிக்கும் முறை" குறித்த குழு ஒன்றை அமைக்க வேண்டி கடந்தாண்டு முக்கியமான நடவடிக்கை ஒன்றை அரசு மேற்கொண்டது. மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட நிலையிலான குழுக்களின் தலைவராகவும் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் அமைப்பாளராகவும் உள்ளனர். மேலும், இக்குழுவில் மின்வாரியம், காற்றுத் தூய்மை கேடு தடுப்பு போன்ற சம்பந்தப்பட்ட துறைகளின் பிரதிநிதிகள் உள்ளனர். தொழில்களுக்கு விரைவில் அனுமதி பெறுவதற்காக இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (இவை 1,611 இனங்களில்,

906 இனங்களில் தீர்வு சாணப்பட்டுள்ளது.) மாவட்டக் குழுக்களின் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் தலைமையிலான மாநில அளவிலான குழு முறையான கால இடைவெளிகளில் கூடுவதோடு விரைவில் இசைவளிக்க வேண்டி கொள்கை அளவில் சில மாற்றங்களைச் செய்யுமாறும் கூறுகிறது.

சிறு தொழில்களுக்காக அமைக்கப்பட்ட ''ஒரே கூரையின் கீழ் தடை நீக்கி இசைவளிக்கும் முறை'' பற்றிய குழு வெற்றிகரமாகச் செயல்படுவதைக் கருத்தில் கொண்டு நடுத்தர, பெரிய தொழில் பிரிவுகளுக்கும் இதுபோன்ற பயன்களை அளிக்கும் பொருட்டு தொழில் துறை ஆணையர்—அரசுச் செயலாளர் தலைமையில் உயர் அதிகாரிகள் குழு ஒன்றை அரசு தற்போது நியமித்துள்ளது.

இத்தொழில் பிரிவுகள், உள்ளூரில் தயாரிக்கப்பட்டவையும் இறக்குமதி செய்யப்பட்டவையுமான மூலப் பொருட்களைப் பெறும் வகையில் இயக்குநர் அலுவலகம் இவற்றிற்கு உதவி புரிகின்றன. தொழில் பிரிவுகளுக்கு தேவைப்படும் மூலப் பொருள்கள் அனைத்தும் போதியளவுக்குக் கிடைக்கிறது. நிலக்கரி, கல்கரி, மெழுகு முதலிய மூலப் பொருள்களை அட்டைகள் (கார்டுகள்) மூலம் பெறுவதற்காக சிறுதொழில் பிரிவுகளுக்குக் கார்டுகள் வழங்கும் முறை சீரமைக்கப்பட்டுள்ளது. முன்பு கார்டுகள் ஆண்டுக்கொருமுறை புதுப்பிக்கப்பட்டு வந்தன. இம்முறைக்கு மாறாக, தொழில் பிரிவுகள், தங்களது கார்டுகளைப் புதுப்பிக்க நான்கு ஆண்டுகளுக்கொருமுறை இயக்குநர் அலுவலகத்தை அணுகவேண்டுமென இப்பிரிவுகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

## தொழில் கூட்டுறவுகள் :

இவ்வாண்டில் ஏற்கனவே செயல்பட்டு வந்துள்ள சங்கங்களை ஒருங்கிணைத்து, அவற்றை வலுப்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தேயிலைத் தொழில், கூட்டுறவுத் தொழிற்சாலைகள் செயல்படுவது கணிசமான அளவுக்கு முன்னேறியுள்ளது. கூடலூரில் முதன் முதலாக நிறுவப்பட்ட தேயிலைத் தொழிற்சாலையை 17.40 இலட்சம் ரூபாய்ச் செலவில் நவீனப்படுத்தும் திட்டத்தை இத்துறை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொராண்டும் இரு தொழிற்சாலைகள் என்ற வீதத்தில் பிற தொழிற்சாலைகளை நவீனப்படுத்தும் திட்டம் குறித்து மாநில அரசு பரிசீலித்து வருகிறது. நீலகிரியில் சின்ன கோரை என்னுமிடத்தில் 60 இலட்சம் ரூபாய் செலவில் தேயிலைத் தொழில் கூட்டுறவுத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கோடைக்கானலில் 258



இலட்சம் ரூபாய் செலவில் தேயிலை தொழில் கூட்டுறவு எஸ்டேட் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

## தென்னை நார்த் தொழில் :

இரண்டு ஆண்டுகளாக நிலவி வந்த கடும் வறட்சியின் காரணமாக தேங்காய் மட்டைகள் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்ட போதும் தென்னை நார்த் தொழில் சங்கங்களின் உற்பத்தியானது 1982–83-ல் 33.48 இலட்சம் ரூபாயிலிருந்து 1985 மார்ச் வரையில் 65 84 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

தென்னை நார்பிரிக்கும் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் உற்பத்தியை தொடங்கும்போது, கயிறு தயாரிக்கும் சங்கங்களின் உற்பத்தி ஒரே ஆண்டில் இரண்டு மடங்காகிவிடும். கயிற்று பொருள்களுக்கு விற்பனை வசதி அளிக்கும் பொருட்டு, தலைமை விற்பனைச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு செயற்படத் தொடங்கியுள்ளது. சங்கங்கள் தயாரிக்கும் கயிற்றுப் பொருள்களை விற்கும் முகவரமைப்பாகச் செயற்பட தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களின் விற்பனை நிலையங்களைத் தொடங்கக் கருதப்படுகிறது. கயிறு தயாரிக்கும் சங்கங்களின் மேம்பாட்டிற்காக, அவற்றை கயிறு தயாரிக்கும் தொழில் தொகுதியாக மாற்றக் கருதப்பட்டுள்ளது. கயிறு தயாரிக்கும் சங்கங்கள் தற்போது நடத்தி வரும் கயிறு முறுக்கேற்றும் பணியுடன் தென்னை நார் பிரிக்கும் சங்கங்களின் பணி சேர்க்கப்படும். கயிறு தயாரிப்புத் தொழில் தொகுதி கிராமப் பகுதிகளின் விற்பனை நிலையங்களைத் தொடங்குவதுடன் உற்பத்திக்கும் வேலை வாய்ப்பிற்கும் வகை செய்யும். 1985–86-ல் கயிறு முறுக்கேற்றும் 5 சங்கங்களையும் தென்னை நார் பிரிக்கும் 3 சங்கங்களையும் 5 நூற்புச் சங்கங்களையும் விற்பனைச் சங்கம் ஒன்றையும் அமைக்கக் கருதப்படுகிறது.

## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) :

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு தனியார் நிறுவனமாக 1970-ம் ஆண்டு நிறுவப்பட்டு பின்னர் தமிழ்நாட்டில் உள்ள சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு உதவும் முக்கிய குறிக்கோளுடன் 1971-ம் ஆண்டில் இந்நிறுவனம் ஒரு பொது நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு :—

(1) சிறுதொழில்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.

(2) சிறு தொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல்.

(3) முக்கிய மூலப்பொருட்கள் விநியோகம் செய்தல்.

(4) மத்திய மாநில முதலீட்டு மானியம் வழங்குதல்.

(5) சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்குதல்.

(6) நலிவுற்ற சிறு தொழில்களின் மறு வாழ்விற்கு முன் வரம்புத் தொகை உதவி அளித்தல்.

(7) சிறு தொழில்களுக்கு குறைந்த அழுத்த மின் கட்டண மானிய உதவி அளித்தல்.

**சிறு தொழில்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.**

சிறு தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைவதற்கு அடிப்படை வசதிகள் மிகவும் இன்றியமையாததாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திலிருந்தே இத்திட்டத்தை சிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ், நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் மூலம் இத்திட்டத்தை சிட்கோ செயல்படுத்துகிறது. 27 இடங்களில் 1,035 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. முதற் பகுதியில் ஆலத்தூரில் மருந்துத் தொழில்களுக்காக கட்டப்பட்டுள்ள 12 தொழிற் கூடங்கள் உள்ளிட்டு மொத்தம் 100 தொழிற் கூடங்கள் 1984–85-ம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன. ஆலத்தூரில் மருந்துத் தொழில்களுக்காக 12 தொழிற் கூடங்கள் கட்டப்படுவது நீங்கலாக கப்பலூர், குறிச்சி, அம்பத்தூர் முதலிய இடங்களில் 126 தொழிற்கூடங்களைக் கட்டுவதற்கு தீவிர முயற்சி எடுக்கும். 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான முதலீடு ரூ. 300.00 இலட்சமாகும்.

அரசு தொழிற்பேட்டைகளையும், சீரமைக்கப்பட்ட தொழிற் பேட்டைகளையும் அரசின் முகவராக சிட்கோ நிறுவனம் நிர்வகித்து வருகிறது. தொழிற்கூடங்களை தவணை முறையில் வழங்கும் திட்டத்தின்கீழ் 714 சிறுதொழில்களுக்கு இசைவுக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 166 சிறுதொழில் நிறுவனங்கள் தொழிற்கூடத்தின் விலை முழுவதையும் செலுத்தியுள்ளன. அரசுத் தொழிற்பேட்டைகளில் பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்களை அபிவிருத்தி செய்து சீரமைக்கப்பட்ட மனைகளாக மாற்றி தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய சிட்கோ தீர்மானித்துள்ளது.



**சிறுதொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல் :**

அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை சிறுதொழில் நிறுவனங்கள் வழங்குவதற்கு வகை செய்யும் பொருட்டு, சிறுதொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுக்கும் திட்டம் 1978–79 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தில் கணிசமான அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1984–85 மற்றும் 1985–86 ஆம் ஆண்டுகளில் விற்பனை அளவு முறையே ரூ. 8.5 கோடி மற்றும் ரூ. 10 கோடி அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விநியோகம் மற்றும் பட்டுவாடா துறை பொது இயக்குநரின் (DGS&D) விலை ஒப்பந்தத்தின்படி பார்சோப், அமோனியா, அச்சு இயந்திரங்கள், ஆழ்கிணறு பம்புகள், குளிர்சாதனப் பெட்டிகள் முதலியவைகளும், பொது நலம் மற்றும் மருத்துவக் கல்வி மற்றும் கல்வித்துறைக்கு தேவைப்படும் கல்வி ஆய்வுச் சாதனங்கள், பற்பொடி பண்டங்கள் முதலியவைகளும் இத்திட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருள்களில் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1,300 சிறுதொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 952 பல்வேறு பொருள்கள் மாநில மற்றும் மத்திய அரசுத் துறைகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

**முக்கிய மூலப்பொருட்கள் விநியோகம் :**

சிறுதொழில் நிறுவனங்களுக்கு மூலப்பொருள்கள் விநியோகம் செய்வதில், சிட்கோ நிறுவனம் சிறுதொழில்களுக்கு தொடர்ந்து சேவை செய்து வருகிறது. இரும்பு மற்றும் எஃகு, கல்கரி, தீப்பெட்டி மெழுகு, பாரபின் மெழுகு, பொட்டாசியம் குளோரேட், மட்டன்டாலோ, துத்தநாகம், ஈயம் போன்ற பொருள்களை சிட்கோ விநியோகித்து வருகிறது. கல்கரி, மெழுகு மற்றும் குளோரேட் விநியோகம் இந்நிறுவனத்தின் விற்பனைத் திட்டத்தில் பெரும் பகுதியாகும். 1984–85 ஆம் ஆண்டில் விற்பனை ரூ. 18.42 கோடி மதிப்புள்ள 36,800 டன்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டில் பொருள்களின் விநியோகம் ரூ. 25.00 கோடி மதிப்புள்ள 42,500 டன்கள் அளவிற்கு எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மத்திய மாநில முதலீட்டு மானியம் வழங்குதல் :**

15 சதவீதம் முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டுள்ள 33 வட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழில்களுக்கு மத்திய முதலீட்டு மானியமும் 24 வட்டங்களில் மாநில முதலீட்டு மானியமும் 1984–85 ஆம் ஆண்டில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. திருத்தப்பட்ட மத்திய முதலீட்டு மானியத் திட்டம் 92 வட்டங்களிலும் மாநில முதலீட்டு மானியத் திட்டம் 34 வட்டங்களிலும் (நிலையூர் 1 கிராமம் உட்பட)

செயல்படுத்தப்பட்டு வருகிறது. 22 வட்டங்கள் இரண்டு திட்டங்களிலும் அடங்கியுள்ளன. 1984–85 ஆம் ஆண்டில் சிட்கோ செலவு ஈட்டுத் தொகையாக ரூ. 200 இலட்சம் பெறும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெறும் சிறுதொழில் நிறுவனங்கள் சம்பந்தமாக சிட்கோ செய்து வந்த வேலைகள் அக்டோபர் 1983-லிருந்து தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. எனினும் 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 150.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய முதலீட்டு மானியம் வழங்குவதில் இம்மாநிலம் தொடர்ந்து முதல் இடத்தில் இருக்கும்.

மாநில முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் 1983–84 ஆம் ஆண்டில் 123 சிறுதொழில்களுக்கு மானியமாக ரூ. 29.08 இலட்சம் சிட்கோ நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் 112 சிறு தொழில்களுக்கு மானியமாக ரூ. 29.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 60 இலட்சமாகும்.

மோட்டார் வாகன உதிரி உறுப்புக்கள், மருந்துப்பொருள்கள், மின்னணுப் பொருட்கள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களுக்கென்று நிலையான சொத்தில் 10 சதவீதம் மானியம் வழங்கும் திட்டத்தை சமீபத்தில் அரசு அறிவித்தது. 1984–85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த அரசு சிட்கோவிற்கு ரூ. 20 இலட்சம் வழங்கியுள்ளது.

**சிறுதொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்குதல் ;**

மக்கள் தொகை மூன்று இலட்சத்திற்கு அதிகமாக உள்ள நகரங்கள் சென்னை நகர எல்லைக்குள் 15 கிலோ மீட்டர் பகுதி, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் நகர எல்லைக்குள் 8 கிலோ மீட்டர் பகுதி தவிர இம்மாநிலத்தில் மற்ற பகுதிகளில் புதிதாக ஆரம்பிக்கப்படும் சிறுதொழில்கள் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கு தகுதியுடையனவாகும். 1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த சிட்கோவிற்கு ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் 57 சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடனாக ரூ. 50.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 60 இலட்சம்.

**நலிவுற்ற சிறுதொழில்களின் மறுவாழ்விற்கு முன் வரம்புத் தொகை உதவி அளித்தல்:**

நலிவுற்ற சிறுதொழில்களின் மறுவாழ்விற்காக முன்வரம்புத் தொகை வழங்கும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் சிறு அளவில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் சீரான முன்னேற்றம் அடைந்துள்ளது. இம்மாநிலத்தில் சிறு தொழில்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நலிவுறும் சிறுதொழில்களின் எண்ணிக்கையும் அதிகமாகலாம். 1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை சிட்கோ மூலம் செயல்படுத்த ரூ. 55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**சிறுதொழில்களுக்கு குறைந்த அழுத்த மின் கட்டண மானிய உதவி அளித்தல்;**

சிறு தொழில்களுக்கு மின் கட்டண மானியம் வழங்கும் திட்டம் சிட்கோ மூலம் செயல்படுத்தப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் வழங்கப்படவிருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 12 இலட்சம் வழங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

**இலாப நிலை ;**

சிட்கோ நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இலாபமாக ரூ. 39.23 இலட்சம் ஈட்டியுள்ளது. இதேநிலை வரும் காலத்தில் தொடர்ந்து இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்).

**I. தோற்றுவாய் ;**

கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 1949 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான முதன்மை நிதி உதவி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்) 1951 ஆம் ஆண்டு மாநில நிதி உதவி நிறுவனச் சட்டத்தின் செயல் வரம்புக்குள் செயல்படுகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள சிறிய நடுத்தர தொழில்களுக்குத் தேவைப்படும் நீண்ட கால கடன் குறித்து நிதி உதவி அளிப்பதே அதன் முக்கிய நோக்கமாகும்.

மாநிலத்தில் அதிக அளவு வேலை வாய்ப்பு வசதிகளை பெருக்கும் பொருட்டு, சிறிய, மிகச் சிறிய தொழில் பிரிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிலம், கட்டிடம், தளவாடம், இயந்திரம், கருவிகள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்க இக்கழகம் கால முறைக் கடன்களை வழங்குகிறது. புதிய தொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கு மட்டுமின்றி ஏற்கனவே உள்ள பிரிவுகளை விரிவுபடுத்துதல், பல் திறப்படுத்தல், நவீனப்படுத்தல் ஆகியவற்றுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. ரூ. 500 முதல் ரூ. 30 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படுகிறது.

II. நிதி ஆதாரங்கள் :

தமிழ்நாடு அரசும், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியும் அளித்த பங்கு மூலதன உதவி, இந்திய தொழில் வளர்ச்சி வங்கி அளித்த மறு நிதி உதவி, பத்திரங்கள் முதலியவை இக்கழகத்தின் நிதி ஆதாரங்களில் அடங்கும். 31–3–1984 அன்றுள்ளவாறும் 31–3–1985 அன்றுள்ளவாறும் உள்ள நிலைமை வருமாறு :—

| | 31–3–84 | 31–3–85 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்) | |
| பங்கு மூலதனம், மூலதனத்திற்கு பதிலாகக் கடன் .. .. .. | 29.99 | 33.99 |
| பத்திரங்கள் .. .. .. | 39.31 | 52.23 |
| இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி உதவி .. .. | 86.42 | 105.78 |
| | 155.72 | 192.00 |

III. நடவடிக்கைகளின் சிறப்பு அம்சங்கள் :

1949–79 (30 ஆண்டுகள்) வரை உள்ள கால அளவிற்கும், 1979–85 வரை உள்ள கால அளவிற்கும் பின்வருமாறு அளிக்கப்பட்ட நிதி உதவி, சிறிய, மிகச்சிறிய தொழில் பிரிவுகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து இக்கழகம் அளித்த கூடுதல் நிதி உதவியை தெளிவாகக் காட்டுகின்றது.

| கால அளவு/ ஆண்டு 1949–79 | மொத்த அனுமதி. | சிறிய தொழில் பிரிவுகளுக்கு அனுமதி. | வழங்கப் பட்ட தொகை. | வசூல். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்.) | | |
| 30 ஆண்டுகள் | 130.83 | 39.68 | 83.56 | 49.20 |
| 1979—80 | 17.19 | 8.86 | 10.67 | 10.55 |
| 1980—81 | 36.90 | 22.68 | 32.59 | 11.47 |
| 1981—82 | 52.13 | 44.44 | 35.07 | 13.75 |
| 1982—83 | 55.87 | 48.59 | 39.56 | 19.85 |
| 1983—84 | 59.74 | 53.53 | 41.11 | 25.23 |
| 1984—85 (தற்காலிக மானது) | 67.97 | 62.73 | 48.65 | 32.40 |
| | 289.80 | 240.83 | 197.65 | 113.25 |



IV. சுயவேலை வாய்ப்பைப் பெருக்குதல் :

சிறப்புத் திட்டங்கள் மூலமாக சுய வேலை வாய்ப்பு வசதி
களைப் பெருக்க இக்கழகம் தாராளமாக நிதி உதவி
வழங்குகிறது. அவர்களுக்கு சுயவேலை வாய்ப்பு வசதியை அளிக்கும்
பொருட்டு, லாரிகள், டிரக்குகள், சுற்றுலா டாக்சிகள், டெம்
போக்கள், வேன்கள் போன்ற போக்குவரத்து வண்டிகளை வாங்க
கடன்கள் வழங்கப்படுகின்றன. 1984–85-ல் (1985 மார்ச் வரை)
கடன் கேட்டு விண்ணப்பித்த 1,092 பேர்களுக்கு மொத்தத்தில்
சுமார் ரூ. 13.09 கோடி தொகையை இக்கழகம் வழங்கியுள்ளது.
முதன் முதலில் முயற்சிகளை மேற்கொள்கிற தொழில் முனைவர்
களுக்கும், தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், தொழில் பிரிவு
களை அமைத்து சுய வேலை வாய்ப்பைப் பெறும் பொருட்டு
ரூ. 2 இலட்சம் அளவிற்குக் குறைந்த வட்டிக் கடன்கள் வழங்
கப்படுகின்றன, கடந்த மூன்றாண்டுகளில் குறைந்த வட்டிக்
கடன் வழங்கு திட்டத்தின் கீழ் தொழில் முனைவர்களுக்கு
வழங்கப்பட்ட நிதி உதவி விவரம் வருமாறு :—

| ஆண்டு. | | | தொகை. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1982–83 | .. | .. | 24.00 |
| 1983–84 | .. | .. | 59.00 |
| 1984–85 (தற்காலிகமானது). | .. | .. | 90.00 |

இடைத்த வேலை வாய்ப்பு (ஐந்தாண்டுகளில்).—

கடந்த ஐந்தாண்டுகளில் இக்கழகம் நிதி உதவி அளித்த தொழல் பிரிவுகள் மூலம் 1,87,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

சிறு தொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி.—

சிறு தொழிற் பிரிவுகளுக்கு நிதி உதவி அளிப்பது தொடர்பாகவே 'டிக்' நிறுவனத்தின் பெரும்பாலான நடவடிக்கைகள் அமைந்துள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து இது தெரியவரும்.

| ஆண்டு. | | | சிறுதொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி. (ரூபாய் இலட்சத்தில்) | மொத்த அனுமதிக்கும் சதவீதம். | |
|---|---|---|---|---|---|
| | | | | எண்ணிக்கை. சதவீதம். | தொகை. சதவீதம். |
| 1981–82 | .. | .. | 4,444 | 99 | 85 |
| 1982–83 | .. | .. | 4,859 | 99 | 87 |
| 1983–84 | .. | .. | 5,353 | 99 | 90 |
| 1984–85 31–3–85 வரை.) | .. | .. | 4,805 | 99 | 92 |

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் அளித்த சராசரி கடன் தொகை ரூ. 1.70 இலட்சமாகும்.

V. சில வகை தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக உள்ள கட்டுப்பாடுகளை நீக்குதல் :—

தகுதியுள்ள சிறு தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதன் அவசியத்தையும் பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை வளர்ப்பதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டும் தனித்தியங்க வல்ல தன்மை காரணமாக சில வகைப் பிரிவுகளிடமிருந்து வரும் கூடுதல் தேவையைச் சமாளிக்கும் பொருட்டும் சில வகை தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதைப் பரிசீலிப்பது குறித்து விதிக்கப்பட்ட தற்காலிகத் தடையை நீக்குவதென முடிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக, மிதியச்சுப் பிரிவுகள், மாவு ஆலைகள், எண்ணெய் பிழியும் ஆலைகள், மரம் அறுக்கும் ஆலைகள் ஐஸ் கட்டி தயாரித்தல் போன்ற வாலாயமான தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

VI. தொழில் மயமாக்கும் சிறப்புத் திட்டம், சென்னை நகர்புற மேம்பாட்டுத் திட்டம் II :—

1985—86-ல் உலக வங்கி உதவியுடன் கூடிய சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் III (MUDP) நிலை II) என்று அழைக்கப்படும் திட்டத்தை தமிழ் நாடு அரசு மூலம் செயல்படுத்த இக்கழகம் நிர்வாக அமைப்பாகவும் செயல்படுகிறது. 1985 டிசம்பருக்குள் முடிக்கப்பட வேண்டிய இத்திட்டம் சிறு தொழில்களுக்கு உற்பத்தி அடிப்படை வசதிகளை அளிப்பதற்கு வகை செய்கிறது.

VII. ஊக்கமுள்ள தொழில் முனைவர்களுக்கு விரைந்து நிதி உதவி அளிக்கவும், தனித்தியங்கவல்ல திட்டங்களைச் செயல்படுத்த அவர்களுக்கு உதவவும் இக்கழகம் தொடர்ந்து முயற்சி மேற்கொள்கிறது.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி).—

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், 56 தொழில் பிரிவுகளைக் கொண்ட பல்வேறு வகையான பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனமாகும். இத்தொழிற் பிரிவுகள், தொழில்-வணிகத் துறையால் பணி-பயிற்சி நிலையங்களாக தொடங்கப்பட்டு, பின்னர் பொருளாதார ரீதியில் ஆதாயத்துடன் செயல்படச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் 1—12—1965 முதல் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டவைகளாகும்.



இந்நிறுவனத்திலுள்ள 56 தொழிற் பிரிவுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:—

(1) கட்டுமானப் பட்டறைகள்.

(2) கருவிகள் பிரிவு-இணைந்த தொழில் பிரிவுகள்.

(3) பொறியியல் தொழில் பட்டறைகள்.

(4) கட்டுமானப் பணிப் பிரிவுகள்.

(5) வார்ப்படத் தொழிற் பிரிவுகள்.

(6) தச்சுத் தொழிற் பிரிவுகள்.

(7) தோல் பொருள் தயாரிப்புப் பிரிவுகள்.

(8) சிறப்பு வகையிலான பல்வகைத் தொழிற் பிரிவுகள்.

டான்சி நிறுவத்தின் பெரும்பாலான தொழில் பிரிவுகள், அரசுத் துறைகளிடமிருந்தும், இரயில்வே, மின் வாரியங்கள், அஞ்சல், தந்தித்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்தும் வரும் பணிகளையும், தனியார் நிறுவனங்கள் கேட்கின்ற பணிகளையும் நிறைவேற்றி வருகின்றன.

1983-84 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் உற்பத்தியின் மதிப்பு இதுவரையில்லாத அதிக அளவான ரூ. 2,514 இலட்சமாகும்.

1984-85 ஆம் ஆண்டில் டான்சி நிறைவேற்றிய சில முக்கிய பணிகள் வருமாறு :

(1) கிருஷ்ணா நீர் திட்டத்திற்குத் தேவையான டித்த தகடுகள் மற்றும் வார்ப்பட பெட்டிகள்.

(2) ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு ஏவுகணைகளை செலுத்துவதற்குத் வேவைப்படும் பானல் போர்டுகள் மற்றும் சில துணை பாகங்களைத் தயாரித்து வழங்கியது.

(3) பம்பாயிலுள்ள மத்திய இரயில்வேய்க்கு துத்தநாகம் பூசப்பட்ட கட்டுமானங்கள் தயாரித்து வழங்கியது.

(4) பாதுகாப்புத் துறைக்குத் தேவையான மின்னரி இழைகளைத் (ப்யூஸ்) தயாரித்து வழங்கியது.

(5) சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலைக்கு எஃகு கட்டுமனப் பணிகள்.

1984 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குத தேவையான ஓட்டுப் பெட்டிகள், கான்வாஸ் மற்றும் பாலிதீன் பைகள் ஆகியவற்றை ரூபாய் 1 கோடி அளவிற்குத் தயாரித்து குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கியது. இது 1984–85-ல் டான்சி நிறைவேற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

20 அம்ச திட்டத்தின் கீழ், பகுதி அளவிலான தானியங்கும் தறிகளை (நேபாளி) அறிமுகப்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கு டான்சி தயாரித்துள்ள இம்மாதிரியான 10 தறிகளுக்கு கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இவைகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டு பெருமளவு தேவை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1983–84 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு ரூபாய் 211.29 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. டான்சியின் செயலாக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் இழப்பை குறைக்கவும் நிறுவனத்தின் பிரிவுகளில் மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. இவைகளைத் தவிர உற்பத்தியை பல்வகைப்படுத்தவும், மேம்பட்ட தொழில் நுட்பம் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்யவும் உயர் தொழில் நுட்பம் வாய்ந்த பணிகளை ஏற்று நிறைவேற்றவும் 1985–86-ல் பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன :—

| திட்டங்களின் பெயர். | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. விண்ணமங்கலத்திலுள்ள டான்சி தோல் பதனிடும் தொழில் பிரிவை நவீனப்படுத்துதல் | 29.00 |
| 2. மேட்டூர் அணையிலுள்ள துத்தநாகம் பூசும் தொழிற்சாலையை நவீனப்படுத்துதல் .. | 14.00 |
| 3. ஈரோட்டிலுள்ள வார்ப்பட மற்றும் கனரகத் தொழிற்சாலையில் சுழல் உலைக்கலன் அமைத்தல் .. .. .. .. | 14.00 |
| 4. சூரிய சக்தி மூலம் மரம் பக்குவப்படுத்த சூளை அமைத்தல் .. .. .. .. .. | 0.70 |
| 5. இராணிப்பேட்டையிலுள்ள டான்சி இயந்திரக் கருவி பிரிவில் தனிப்பணி இயந்திரத்திற்குத் தலைமை பிரிவை அமைத்தல் .. .. | 8.00 |
| 6. திருச்சி டான்சி கட்டுமானப் பணிப் பிரிவில் அழுத்தக் கலன்கள் தயாரித்தல் .. .. | 20.00 |



| திட்டங்களின் பெயர். | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 7. பால் பண்ணை சாதனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களைத் தயாரித்தல் .. .. | 26.00 |
| 8. 400 கி. வா. மின் கடத்தி கோபுரங்கள் தயாரிப்பை நவீனப்படுத்தல் மற்றும் விரிவுப் படுத்தல் .. .. .. .. .. | 66.00 |
| 9. மின் அழுத்த மாற்றிகள் தயாரிப்பை நவீனப் படுத்தலும், விரிவுபடுத்தலும் .. .. | 27.50 |
| 10. கன்வேயர் தொகுப்புகளை உற்பத்தி செய்யும் திட்டம் ... .. .. .. .. | 24.50 |
| 11. எண்ணெய்க் கிணறு தோண்டும் சாதனங்களையும், துணைப் பாகங்களையும் இறக்குமதி செய்வதற்கு பதிலாக உற்பத்தி செய்தல் .. | 59.50 |
| 12. சூரிய சக்தியால் இயங்கும் சாதனங்களைத் தயாரித்தல் .. .. .. .. .. | 12.50 |
| 13. கையால் செய்யப்படும் காகிதம் தயாரிக்கும் சிறிய இயந்திரங்களைத் தயாரித்தல் .. | 10.50 |
| 14. சிறிய அளவு நெசவு இயந்திரங்களைத் தயாரித்தல் .. .. .. .. | 10.50 |
| 15. தாரை சேமித்து வைப்பதற்கான சாதனங்களைத் தயாரித்தல் .. .. .. .. | 26.00 |
| 16. பயன்பாட்டிலுள்ள இயந்திரக் கருவிகளை பழுதுபார்த்தல் .. .. .. .. | 26.00 |
| 17. இயந்திரக் கருவிப் பிரிவை நவீனப்படுத்தல் .. | 30.00 |

## தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனம்.

தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனம், டான்சியின் துணை நிறுவனமாக 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மொபட்களுக்கு போதிய கிராக்கி இன்மையாலும், பொருளாதார ரீதியில் சாத்தியப்படக் கூடிய வகையில் இவற்றை உற்பத்தி செய்ய முடியாததாலும் மொபட் வாகன உற்பத்தியை இந்நிறுவனம் நிறுத்தி விட்டு, உலோகத் தகடுகளை உருவாக்கல் மற்றும் இதர பணிகளை செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் வருங்கால செயற்பாடு குறித்து அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ).

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டில் தோல் தொழிலை பலதுறைகளிலும் வளர்ச்சியுறச் செய்ய ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1983ஆம் ஆண்டு ஜுன் திங்களிலிருந்து இயங்கி வருகிறது.

2. தமிழ்நாட்டில் தோல் தொழில் குறித்து விரிவான ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை அளிக்கவும், டால்கோ நிறுவனம் மேற்கொள்ளக்கூடிய திட்டங்களை வகைப்படுத்தி தெரிவிக்கவும் வல்லுநர் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு தனது ஆய்வுப்பணிகளை முடித்துவிட்டது. அதன் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

3. டால்கோவின் முக்கிய குறிக்கோள்கள் இரண்டு வகைப்படும். முதலாவதாக தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதும்; மதிப்பு வாய்ந்த தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் ஏற்றுமதியை ஊக்குவிப்பதும் ஆகும். இரண்டாவதாக, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், தொழில் நுட்பம், நிதி உதவி, விற்பனை வசதி ஆகிய அனைத்து வசதிகளை ஒருங்கிணைந்த முறையில் அளிப்பதாகும்.

4. 1985–86ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.—

(1) தோல் பொருட்கள், காலணிகளைத் தயாரிப்பதற்குத் தேவையான நவீன இயந்திரங்களைக் கைவினைஞர்களுக்கு நியாயமான விலையில் வழங்கப் பொது வசதி மையம் அமைத்தல்.

(2) சிறிய அளவில் தோல் பதனிடுவோர்க்கு உதவுவதற்காக மிக நுணுக்கமான இயந்திரங்களைக் கொண்ட தோல் பதனிடும் பொது வசதி மையங்களை அமைத்தல்.

(3) தோல் தொழிலுக்கெனத் தனியாக ஒரு தொழிற்பேட்டையை திண்டுக்கல் அருகில் நிறுவி, தோல் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு உதவும் பொது வசதி மையங்கள், மூலப் பொருட்கள் வங்கி, நவீன வடிவமைப்புக் கூடம் ஆகிய அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின்கீழ் பெற ஏற்பாடு செய்தல்.

(4) கைவினைஞர்கள் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கைவினைஞர்களுக்கு,



வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் கிடைக்க பல்லாவரம், பெரம்பூர் ஆகிய இடங்களில் உற்பத்தி வசதி மையங்களை அமைத்தல்.

(5) வேலூர், திண்டுக்கல் ஆகிய இடங்களில் ஆதி திராவிட வகுப்பு மகளிருக்கு தோல் பொருட்களைத் தயாரிப்பதில் பயிற்சி அளிக்க இரு பயிற்சி நிலையங்கள் நிறுவுதல்;

(6) ஈரோடு மற்றும் பல்லாவரம் ஆகிய இடங்களில் மூலப் பொருட்கள் வங்கிகள் அமைத்து அதன் மூலம் சிறு தோல்பதனிடு வோர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் தேவையான மூலப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை நியாயமான விலையில் வழங்குதல்.

(7) காலணி மேல் பாகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுதல்.

5. தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள், கழிவு நீரினால், சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கப்படுகிறது. இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் டால்கோ நிறுவனம் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் கூடிய ஒர் மைய சுற்றுப்புறச் சூழல் மையத்தைத் (Nucleus Environment Cell) தோற்றுவித்துள்ளது:—

(1) தோல் கழிவுப் பொருட்கள், கழிவுநீரைப் பதப்படுத்துவதற்கான பொது இயந்திரங்களை அமைக்கத் தேவையான வடிவமைப்பு, விரிவான பொறியியல் திட்ட அறிக்கை தயாரித்தல், நிதி வசதி, இயந்திரங்களை நிறுவுதல் மற்றும் அவைகளைப் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு டால்கோ ஒரு செயலாண்மை முகவராகச் செயல்படும்.

(2) சிறு தோல் பதனிடுவோர்க்கு கழிவுப்பொருட்கள், கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பம், மத்திய தோல் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒத்துழைப்புடன் வழங்கப்படும். நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிபெற்றுத் தரப்படும். இப்பணிகளை ஒரு வழிக்காவல் சேவையாக (Esoort Servic.s) அளிக்கப்படும்.

6. மேற் கூறிய அனைத்துத் திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ. 4.70 கோடி ஆகும். இத் திட்டங்களைக் செயல்படுத்துவதன் மூலம் சுமார் 6,920 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அதில் 50 விழுக்காடு தோல் தொழில் கைவினைஞர்களாக இருப்பர்.

**தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்.**

கைவினைஞர்களுக்கு தொழில் நுட்ப உதவி, தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளிப்பதன் மூலமும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதன் மூலமும், இம் மாநிலத்தில் கைத்திறப் பொருட்களின் வளர்ச்சிக்கும், அதன் விரிவாக்கத்திற்கும் தனியானதோர் எழுச்சியையும், புதிய வழிமுறைகளையும் உருவாக்கி கைத்திறன் தொழில் மேம்பாட்டு வளர்ச்சி அடையச் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இதற்காக தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி நிறுவனம் 1973-ல் நிறுவப்பட்டது.

இந் நிறுவனத்தின் கொள்கைகளில் ஒன்றின் அடிப்படையில் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைத்திறன் பொருள்களை தமிழ்நாட்டிலும், மற்றும் இதர மாநிலங்களிலும் உள்ள விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்வற்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் சாதனைகள் கீழ்வருமாறு :

**விற்பனை :**

1983-84 ஆம் ஆண்டில் விற்பனை தொகை ரூ. 224 இலட்சமாக இருந்தது. 1984-85-ல் விற்பனைத் தொகை ரூ. 230 இலட்சம். 1985-86 ஆம் ஆண்டிற்கான விற்பனை குறியீட்டுத் தொகை ரூ. 275 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விற்பனை குறியீட்டை அடைவதற்கு இந்நிறுவனம் புதிய விற்பனை நிலையங்களை துவக்குவதற்கும், குறிப்பிட்ட கைவினைப் பொருட்களின் பொருட்காட்சிகளையும் மற்றும் எல்லா கைவினைப் பொருட்களுக்கான பொருட்காட்சிகளையும் முக்கிய பெருநகரங்களில் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இதைத் தவிர, அதிகமான வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில் விற்பனை நிலையங்களைப் படிப்படியாக அழகு படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் தமிழ்நாட்டிலும் மற்றும் வெளி மாநிலங்களிலும் பல பொருட்காட்சிகளை, விற்பனை தொகையை பெருக்குவதற்குமட்டுமல்லாயல் மற்ற மாநிலங்களில் தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களின் சிறப்பை வெளிப்படுத்துவதற்காகவும் நடத்தியுள்ளது. இதைத் தவிர இந்நிறுவனம் பல்வேறு இடங்களில் அரசுத் துறை மற்றும் உள்ளாட்சித் துறையினரால் நடத்தப்பட்ட பொருட்காட்சிகளிலும் கலந்து கொண்டது.

1984-85 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் திருப்பதியில் ஒரு புதிய விற்பனை நிலையத்தைத் துவக்கியது. தற்போது இந் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் இல்லாத பிற மாநிலத்



தலைநகரங்களிலும் படிப்படியாக புதிய விற்பனை நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசினுடைய அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்), அவர்களிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவியைக் கொண்டு சென்னை மற்றும் மதுரையில் உள்ள விற்பனை நிலையங்கள் புதுப்பிக்கப் படுகின்றன.

**உற்பத்தி :**

உற்பத்தி நடவடிக்கைகளில் சீரான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 68 இலட்சமாக இருந்த உற்பத்தி அளவு 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 70 இலட்சமாக உயர்ந்தது. இந்நிறுவனம் 1985-86 ஆம் ஆண்டில் உற்பத்தியை ரூ. 80 இலட்சத்திற்கு உயர்த்த திட்டமிட்டிருக்கிறது. இந் நிறுவனத்தின் உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளின் மூலம் சுமார் 250 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் படுகிறது.

**பயிற்சி :**

தற்பொழுது செய்யப்படுகிற கைவினைத் தொழில்கள் அழியாமல் இருக்கவும், நலிந்த கைவினைத் தொழில்களை உயிரூட்டுவதற்கும் வேண்டிய பயிற்சி அளிப்பது இந்நிறுவனத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாக விளங்குகிறது. இந்த பயிற்சித் திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதி உதவி கொணடு திருச்சியில் பிரம்பு மற்றும் அறைகலன் ஆகியவற்றில் 30 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக வைரம் வெட்டும் கலையில், சூரத்திலுள்ள இந்திய வைர நிறுவனத்தில் பயிற்சி அளிக்க அரசு ரூ. 1 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. தற்போது சூரத்தில் 16 கைவினைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி காலம் ஓராண்டாகும். பயிற்சியாளர்களுக்கு பிரதி மாதமும் உதவித் தொகை ரூ. 250 அளிக்கப்படுகிறது.

இதுவரை பல்வேறு கைத்திறத் தொழில்களில் 1,196 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1984–85-ல் 67 நபர்கள் இதுவரை பயிற்சியை முடித்துள்ளனர். மேலும் 38 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம், நிறுவப் பட்ட சமயத்தில் அரசிடமிருந்து இந்நிறுவனத்திற்கு மாற்றப் பட்ட உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிப் பதனால் ஏற்படும் இழப்பை நேர் செய்வதற்காக பிரதி ஆண்டிற்கும் ரூ. 5.50 இலட்சம் வரையிலும் தமிழக அரசு நிதி உதவி அளிக்கிறது.

நிதி நிலை :

1982–83 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ. 3.95 இலட்சத்தை நிகர லாபகரமாக ஈட்டியது. 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் இந் நிறுவனத்தின் லாபம் ரூ. 2 லட்சம் அளவில் (தோராயமாக) இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனை மற்றும் நிர்வாகச் செலவுகள் அதிகரிப்பதால் 1985–86 ஆம் ஆண்டின் நிகர இலாபம் குறைந்த அளவில் இருக்கும்.

அரசு நிதி உதவி :

இந்நிறுவனத்தின் திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசு மற்றும் மத்திய அரசினுடைய அபிவிருத்தி ஆணையர் (கைத்திறப் பொருட்கள்) ஆகியோரிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு அரசிடமிருந்து பங்கு மூலதனமாக ரூ. 99.19 இலட்சமும் மானியம் மற்றும் உதவித் தொகையாக அரசு ஒப்பளிப்பாய் ரூ. 52.66 இலட்சமும் பெறப்பட்டுள்ளது. இதேபோல் மத்திய அரசின் அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அவர்களிடமிருந்து ரூ. 54.50 இலட்சம் பங்கு மூலதனமாக நிதி உதவி பெறப்பட்டது.

எதிர்கால நடவடிக்கைகள் :

இந்நிறுவனம் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரூ. 200 இலட்சம் செலவினத்தில் சில திட்டங்களை செயல்படுத்த உத்தேசித்துள்ளது. அவற்றுள் கீழ்க் காணும் திட்டங்கள் முக்கிய மானவை.

1. மூலப் பொருட்கள் கிடங்கு நிறுவுதல்.

2. கைத்திறப் பொருட்கள் அருங்காட்சியகம் அமைத்தல்.

3. கைவினைஞர்களுக்கு வீடுகட்டும் திட்டம்.

4. புது விற்பனை நிலையங்கள் திறத்தல்.

5. கைவினைஞர்களிடமிருந்து பொருட்களை நேரடியாக கொள்முதல் செய்தல்.

6. கைத்திறப் பொருட்கள் பிரிவுகளை பதிவு செய்தல்.

7. ஆதிதிராவிடர்களுக்கும், ஆதிதிராவிட பழங்குடியின ருக்கும் ஒருங்கிணைந்த திட்டம்.

1985–86 ஆம் ஆண்டில் ரூ. 30 இலட்சம் செலவினத்தில் கீழ்க்கண்ட திட்டங்களை செயற்படுத்த உத்தேசித்துள்ளது :

1. பித்தளை மற்றும் வெங்கல பொருட்களை கொள் முதல் செய்து அவற்றை கைவினைஞர்களுக்கு விநியோகிக்க கொள்முதல் நிலையங்களை அமைக்க ஒரு சுழல் நிதி உருவாக் குதல் ;



2. கோயம்புத்தூர், திருநெல்வேலி, பெங்களூர் மற்றும் புது டில்லியிலுள்ள விற்பனை நிலையங்களை புதுப்பித்தல் ;

3. கைவினைஞர்களிடமிருந்து கைத்திறப் பொருட்களை நேரிடை கொள்முதல் செய்தல் ;

4. வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்;

5. உலோகத் தகட்டு கலையில் பயிற்சி அளிக்க மதுரையில் ஒரு பயிற்சி நிலையம் அமைத்தல் ;

6. தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் கைத்திறன்களை பற்றி ஆய்வு செய்தல் ; மற்றும்

7. புது விற்பனை நிலையங்கள் துவக்குதல்.

## பட்டு வளர்ச்சித் துறை.

பட்டு வளர்ப்பு, வேளாண்மைத் தொழில் சார்ந்த கிராமப் புறங்களில் அதிக வேலை வாய்ப்பளிக்கக் கூடிய ஒரு தொழிலாக இருப்பதால், இம்மாநிலத்தில் இத்தொழில் வளர்ச்சிக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட முன்னோடி வசதித் திட்டங் களின் பலனாகவும், தொழில் நுட்ப உதவி மற்றும் நிதியுதவி பரவலாக்கப்பட்டதின் விளைவாகவும் 1979 , தம் 21,419 ஏக்கர் அளவில் இருந்த முசுக்கொட்டைச் செடி பயிர் பரப்பளவு 1985 மார்ச் மாதம் 67,062 ஏக்கர் அளவிற்கு அதி கரித்துள்ளது. முசுக்கொட்டைச் செடி பரப்பளவை அதிகப் படுத்தும் திட்டமும், பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டமும் 1985–86ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடைப்பிடிக்க உள்ளது. 1985–86ஆம் ஆண்டில் 5,000 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டை செடி பயிரிட உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இதைத் தவிர மலைப்பகுதியில் மானாவாரிப் பயிராக 500 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டைச் செடி பயிரிட திட்ட மிடப்பட்டுள்ளது. மலைப் பகுதியிலுள்ள பட்டு விவசாயிகளுக்கு வேரூன்றிய முசுக்கொட்டை விதைச் செடிகள் இலவசமாக விநியோகிக்கப்பட உள்ளன.

2. துரிதமான பிரச்சாரம் மற்றும் விளம்பரங்களின் விளை வாக, பட்டு வளர்ப்பு விவசாயிகளிடையே பட்டு வளர்ப்பு பற் றிய ஒரு பொதுவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, 1985–86 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சித் திட்ட கால அளவு 2 மாதத்திலிருந்து ஒரு மாதமாகக்

குறைக்கப்பட்டு ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 100 உதவித் தொகை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1984–85ஆம் ஆண்டில் 3,000 விவசாயிகளுக்கு பட்டுவளர்ப்பில் நவீன முறை மற்றும் தொழில் நுணுக்கங்கள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டில் 1,500 விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பு பற்றி பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

3. மத்திய பட்டு வாரியத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட உயர்மட்ட தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பட்டு வித்து முட்டை உற்பத்தியை இம்மாநிலத்தில் சீரமைக்கும் திட்டம் 1985–86 ஆம் ஆண்டின் ஒரு முக்கிய திட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தை செயல் படுத்துவதன் மூலம் மைசூரில் உள்ள மத்திய பட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் ஆராய்ச்சிகளின் மூலம் புதியதாக கண்டுபிடிக்கப்படுகிற புதிய பட்டுப்புழு இனங்களை அபிவிருத்தி செய்து விவசாயிகளுக்கு செவ்வனே விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இதனால் தரமான பட்டு முட்டைகள் உற்பத்தி செய்வது உறுதிப்படுகிறது. இந்த நடவடிக்கைகளின் முக்கிய ஒரு செயலாக சில, அரசுப் பட்டுப் பண்ணைகளுக்குத் தேவையான சில கூடுதல் வசதிகள் செய்து தரப்படும்.

4. நியூயார்க்கிலுள்ள போர்டு பவுண்டேசன் எனும் நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத் துறையில் பெண்களுக்காக சுயவேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டத்திற்கு அரசு 1984-ல் ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் கால அளவு 3 ஆண்டுகளாகும். இத்திட்டத்திற்கான போர்டு பவுண்டேசன் நிறுவனத்தின் நிதி உதவி 2,80,000 அமெரிக்க டாலர்கள் ஆகும். (ரூ. 26.82 இலட்சம்) இத்திட்டத்தின் கீழ் 200 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் தற்போது சரகங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 100 விவசாய பெண்கள் பயிற்சியும் உதவியும் பெற்றுள்ளனர்.

5. 1985–86 ஆம் ஆண்டில் கூட்டுறவு அடிப்படையில் மேலும் மூன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகள் செய்து பட்டு நூற்புத் தொழில் பலப்படுத்தப்பட உள்ளது.

6. 1985–86 ஆம் ஆண்டுக்கு பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு ரூ. 170.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

ஆவணக்காப்பக
136413
N85-11-4